# 1

# பொருளாதார, விலை மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு, தோற்றப்பாடு மற்றும் கொள்கைகள்

## 1.1 பொதுநோக்கு

*பணவீக்க அழுத்தங்கள் சராசரியாக மட்டுப்படுத்தப்பட்டதாகவிருந்த வேளையில், பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டு வழிமுறைகள் வெளிநாட்டுத்துறை சமமின்மைகளைத் திருத்துவதற்கு ஓரளவிற்கு துணைபுரிந்த போதிலும் 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் உண்மைப் பொருளாதார வளர்ச்சி நியதிகளில் இலங்கையின் மோசமான செயலாற்றம் தொடர்ந்தது. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் சுற்றுலாத் துறை மீது ஒரு கடுமையான தாக்கத்தினைக் கொண்டிருந்ததுடன் அவற்றின் பாதகமான கசிவுத்தாக்கங்கள் பொருளாதாரம் முழுமையிலும் உணரப்பட்டு பொருளாதாரத்தின் மந்தமான வளர்ச்சியை மோசமடையச் செய்து வியாபார நம்பிக்கையை மேலும் தளர்வடையச் செய்தன. சென்மதி நிலுவை மற்றும் செலாவணி வீதம் மீதான அழுத்தங்களைக் குறைப்பதனை இலக்காகக் கொண்ட கொள்கை வழிமுறைகள் 2019இல் தொடர்ந்தன. இவை பொருளாதாரத்தை மீட்சியடையச் செய்வதற்காக எடுக்கப்பட்ட படிமுறைகளுடன் இணைந்து இறைத்துறையின் குறிப்பிடத்தக்களவிலான நழுவல்களுக்கு பங்களிப்புச் செய்தன. தீவிரமான வானிலை நிலைமைகளும் அதன் விளைவான உள்நாட்டு உணவு வழங்கல்களிற்கான இடையூறுகளும் நுகர்வோர் விலைகளில் சில தளம்பலுக்குக் காரணமானதெனினும் குறைவான கேள்வி நிலைப்பாடுகள் ஆண்டு காலத்தில் தாழ்ந்த பணவீக்கத்தின் தொடர்ச்சிக்கு அனுமதித்தன. மந்தமான பொருளாதார செயற்பாடு மற்றும் பலயீனமான வியாபார நம்பிக்கை போன்றவற்றினால் வழிநடத்தப்பட்டு தனியார் துறைக்கான கொடுகடன் வளர்ச்சி விரைவாகக் குறைவடைந்து நிதியியல் துறையின் செயலாற்றத்தினைப் பாதித்தது. மட்டுப்படுத்தப்பட்ட பணவீக்கம், நன்கு உறுதிநிலைப்படுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்க்கைகள் மற்றும் வெளிநாட்டுத் துறையில் நலிவடைந்த அழுத்தங்களுக்கு மத்தியில் மந்தமான பொருளாதார செயற்பாட்டிற்கு ஆதரவளிக்க வேண்டிய தேவையினைக் கருத்திற் கொண்டு மத்திய வங்கி ஒரு தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டினைப் பின்பற்றியதுடன் சந்தை வட்டி வீதங்களைக் குறைப்பதனை இலக்காகக் கொண்டு நாணயக் கொள்கை வழிமுறைகளினை பொருளாதாரத்திற்கு ஊடுகடத்துவதனை விரைவுபடுத்துவதற்கான படிமுறைகளை எடுத்தது.*

*பொருளாதாரத்தினை மீட்சியடையச் செய்வதற்கு எடுக்கப்பட்ட கொள்கை வழிமுறைகளுக்கு ஆரம்பப் பதிலிறுப்புக்களை உள்நாட்டுப் பொருளாதார செயற்பாடு காட்டத் தொடங்கியதுடன் வியாபார மனப்பாங்குகள் 2020ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மேம்படுகின்ற பொழுது கொவிட்-19 உலகளாவிய நோய்த் தொற்றுப்பரவல், இலங்கை உட்பட அனைத்து நாடுகளாலும் பின்பற்றப்பட்ட கட்டுப்பாட்டு வழிமுறைகள் மற்றும் அதன் விளைவான உலகப் பொருளாதாரத்தின் எறிவுசெய்யப்பட்ட சுருக்கம் 2020இல் நாட்டில் பொருளாதாரச் செயலாற்றம் மீது மேலும் நிச்சயமற்றதன்மைகளைத் தூண்டியுள்ளன. குறுங்காலத்தில், பொருளாதாரம் அதன் வளர்ச்சி, இறை, வெளிநாட்டு மற்றும் நிதியியல் துறைச் செயலாற்றம் என்பனவற்றின் நியதிகளில் தீவிரமாகப் பாதிப்படையக்கூடிய அதேவேளையில் பொருளாதாரத்தின் அனைத்து ஆர்வலர்களது இன்னல்களுக்கும் காரணமாகக்கூடும். தாழ்ந்த பணவீக்கச் சூழலின் நியதிகளில் நாணயக் கொள்கை*

1

அட்டவணை 1.1

**பேரண்டப்பொருளாதார செயலாற்றம் (2015-2019)**

| குறிகாட்டி | அலகு | 2015 | 2016 | 2017 | 2018 (அ) | 2019 (ஆ) |
|---|---|---|---|---|---|---|
| **உண்மைத்துறை (இ)** | | | | | | |
| உண்மை மொ.உ.உ. வளர்ச்சி | % | 5.0 | 4.5 | 3.6 (அ) | 3.3 (ஆ) | 2.3 |
| நடைமுறை சந்தை விலையில் மொ.உ.உ. | ரூ.பில் | 10,951 | 11,996 | 13,328 (அ) | 14,366 (ஆ) | 15,016 |
| தலைக்குரிய மொ.உ.உ. (ஈ) | ஐ.அ.டொ. | 3,842 | 3,886 | 4,077 (அ) | 4,079 (ஆ) | 3,852 |
| **வெளிநாட்டுத்துறை** | | | | | | |
| வர்த்தக நிலுவை (இ) | மொ.உ.உ. இன் % | -10.4 | -10.8 | -11.0 (அ) | -11.7 | -9.5 |
| நடைமுறை கணக்கு நிலுவை (இ) | மொ.உ.உ. இன் % | -2.3 | -2.1 | -2.6 | -3.2 | -2.2 |
| திரண்ட இறை நிலுவை | ஐ.அ.டொ.மில் | -1,489 | -500 | 2,068 | -1,103 | 377 |
| வெளிநாட்டு அலுவர்சார் ஒதுக்குகள் | ஐ.அ.டொ.மில் | 7,304 | 6,019 | 7,959 | 6,919 | 7,642 |
| **இறைத்துறை (இ) (உ)** | | | | | | |
| நடைமுறை கணக்கு நிலுவை | மொ.உ.உ. இன் % | -2.3 | -0.6 | -0.7 | -1.2 | -2.7 |
| முதன்மை நிலுவை | மொ.உ.உ. இன் % | -2.9 | -0.2 | 0.02 | 0.6 | -0.8 |
| திரண்ட நிலுவை | மொ.உ.உ. இன் % | -7.6 | -5.3 | -5.5 | -5.3 | -6.8 |
| மத்திய அரச படுகடன் (ஊ) | மொ.உ.உ. இன் % | 78.5 | 79.0 | 77.9 | 83.7 | 86.8 |
| **நாணயத்துறை மற்றும் பணவீக்கம்** | | | | | | |
| விரிந்த பண வளர்ச்சி ($M_{2b}$) (எ) | % | 17.8 | 18.4 | 16.7 | 13.0 | 7.0 |
| தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சி ( $M_{2b}$ இல்)(எ) | % | 25.0 | 21.6 | 14.7 | 15.9 | 4.3 |
| ஆண்டுச்சாராசரிப் பணவீக்கம் (ஏ) | % | 2.2 | 4.0 | 6.6 | 4.3 | 4.3 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) தரவானது தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் மொ.உ.உ மதிப்பீடுகள் (அடித்தள ஆண்டு 2010) அடிப்படையாகக் கொண்டது
(ஈ) அண்மைய குடித்தொகை எண்ணிக்கைகளுடன் புதுப்பிக்கப்பட்ட மதிப்பீடுகள்
(உ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் 2019 மார்ச்சு 31 கிடைக்கப்பெற்ற 2017 மற்றும் 2018ற்கான திருத்தப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளின் அடிப்படையிலானவை
(ஊ) கூட்டுறவு மொத்தவிற்பனை ஸ்தாபனத்திற்கு 2003 நவம்பரில் வழங்கப்பட்ட ரூ. 4,397 மில்லியன் பெறுமதியான அரசின் திறைசேரி முறிகள் (2016 நவம்பரில் முதிர்ச்சியானது) மற்றும் 2013 மார்ச்சில் சிறிலங்கன் எயர்லைனசிற்கு முதலீடு வழங்குவதற்காக வழங்கப்பட்ட ரூ. 13,125 மில்லியன் (2018 யூன் 01 முதிர்ச்சியானது) மற்றும் 2012 சனவரியில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு வழங்கிய ரூ. 78,441 மில்லியன் (இதில் ரூ. 21,778 மில்லியன் 2017 சனவரி 01 அன்று முதிர்ச்சியானதுடன் 2019 இறுதியில் வெளிநின்றது ரூ. 56,662 மில்லியனதாகும்) என்பவை உள்ளடங்கலாக.
(எ) ஆண்டிறுதி பெறுமதிகளின் அடிப்படையிலான ஆண்டுக்காண்டு வளர்ச்சி
(ஏ) கொ.வி.சு. (2013=100) அடிப்படையாகக் கொண்டவை

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

*இடைவெளி மற்றும் கைத்தொழில் விதிமுறைகளுக்கு மேலாக மூலதன மற்றும் திரவத்தன்மை தாங்கிருப்புக்கள் பேணப்படுவதனால் உருவாக்கப்பட்ட வங்கித்தொழில் துறை இடைவெளி போன்றவை வியாபாரங்கள் மற்றும் தனிநபர்கள் மீதான சுமைகளைக் குறைப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கு மத்திய வங்கியை இயலச்செய்தன. உலகளாவிய நோய்த் தொற்றுப்பரவலினால் எழுந்த தற்காலிகப் பின்னடைவுக்குப் புறம்பாக, நீண்ட கால அமைப்பியல் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்கும் ஏற்றுமதிச் சார்பினை மேம்படுத்துவதற்கும், வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்வதற்கும், புத்துருவாக்கத்திற்கு வசதியளிப்பதற்கும் காரணி உற்பத்தித்திறன் மற்றும் செயற்றிறனை மேம்படுத்துவதற்கும், கொள்கை தாங்கிருப்புக்களை மேம்படுத்துவதற்குமான வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் சீர்திருத்தங்கள், காலதாமதமின்றி நடைமுறைப்படுத்தப்படுமாயின், எதிர்வரும் காலப்பகுதியில் நீடித்துநிலைத்திருப்பதும் சமத்துவமானதுமான பொருளாதார வளர்ச்சியை அடைவதும் சுபீட்சம் மிக்கதொரு நாடாக மாறுகின்றதுமான விரும்பப்பட்ட விளைவினை அடைவதற்கு இலங்கையை இயலச்செய்யும்.*

## 1.2 2019இல் பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள்


### உண்மைத் துறை அபிவிருத்திகள் மற்றும் பணவீக்கம்

**உலக வங்கியின் நாடுகளின் பகுப்பாய்வின்படி தலைக்குரிய மொத்த தேசிய வருமானத்தின் நியதிகளில் இலங்கை 2019ஆம் ஆண்டில் உயர் நடுத்தர வருமான நாடு என்ற அந்தஸ்திற்கு உயர்த்தப்பட்டிருக்கிறது.** நடைமுறைச் சந்தை விலைகளில் நாட்டின் மொ.உ.உற்பத்தியின் பெறுமதி 2018இன் ஐ.அ.டொலர் 88.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இல் ஐ.அ.டொலர் 84.0 பில்லியனாகக் காணப்பட்டது. நடைமுறைச் சந்தை விலைகளில் தலைக்குரிய மொ.உ.உற்பத்தியும் தலைக்குரிய மொத்தத் தேசிய வருமானமும் முன்னைய ஆண்டின் முறையே ஐ.அ.டொலர் 4,079 மில்லியன் மற்றும் ஐ.அ.டொர் 3,968 மில்லியனுடனும் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 3,852 மில்லியனாகவும் ஐ.அ.டொலர் 3,741 மில்லியனாகவும் காணப்பட்டன. குறைவடைந்த பொருளாதார வளர்ச்சி, 2018இன் இறுதிப்பகுதியில் காணப்பட்ட இலங்கை ரூபாவின் கடுமையான தேய்வுடன் இணைந்து 2019இல் சராசரி செலாவணி வீதத்தில் கணிசமான தேய்வினை ஏற்படுத்தியமையானது, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019இல் இக்குறிகாட்டிகளில் வீழ்ச்சி ஏற்படக் காரணமாயிற்று.

### சிறப்புக்குறிப்பு 1
### உயர் நடுத்தர வருமான நாடு என்ற படிநிலைக்கு இலங்கையின் உயர்வு

2019 யூலையில் வெளியிடப்பட்ட நாடுகள் தொடர்பான உலக வங்கியின் வகைப்படுத்தலின்படி, இலங்கை உயர் நடுத்தரளவு வருமான நாடொன்றாக உயர்ந்திருக்கிறது. உலக வங்கி தலைக்குரிய மொத்தத் தேசிய வருமானத்தின் அடிப்படையில் நாடுகளைக் *குறைந்த வருமானம், குறைந்த நடுத்தர வருமானம், உயர் நடுத்தர வருமானம்* மற்றும் *உயர் வருமானம்* கொண்ட வருமான வகைகளின் அடிப்படையில் வகைப்படுத்தியிருக்கிறது[1]. இவ்வகைப்படுத்தலின்படி, இலங்கை குறைந்த வருமான நாடென்ற நிலையிலிருந்து 1997இல் தாழ்ந்த நடுத்தர வருமான நாடென்ற அந்தஸ்திற்கு நிலை மாறிக் கொண்டது. அதிலிருந்து 2004இன் சுனாமி பேரனர்த்தம், 2009 வரை அதிகரித்தளவில் காணப்பட்ட உள்நாட்டு மோதல்கள், தீவிரமான வானிலை நிலைமைகள் மற்றும் அதனுடன் தொடர்பான இயற்கை அனர்த்தங்கள் மற்றும் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மாற்றங்கள் உள்ளிட்ட சவால் நிறைந்த காலங்களுக்கூடாக நாடு முன்னேற்றம் கண்டு வந்திருக்கிறது. பேரண்டப் பொருளாதாரத்தின் மீது அத்தகைய இடையூறுகளின் மோசமான தாக்கம் காணப்பட்டமைக்கிடையிலும், நாடு தாழ்ந்த நடுத்தர வருமான நாடு என்ற அந்தஸ்தினைப் பெற்றதிலிருந்து சராசரியாக மொ.உ.உற்பத்தியில் ஐந்து சதவீதத்திற்கு மேலான வளர்ச்சியைப் பதிவுசெய்ததுடன் உயர்ந்த நடுத்தர வருமான நாடு என்ற நிலையினை அடைந்திருக்கிறது. எனினும், இலங்கை தாழ்ந்த நடுத்தர வருமான நாடென்ற நிலையிலிருந்து அடுத்த கட்டத்திற்கு உயர்வடைவதற்கு 21 ஆண்டுகளைச் செலவிட வேண்டியிருந்திருக்கிறது. தோற்றம்பெற்று வருகின்ற மற்றைய சில நாடுகளுடன் ஒப்பிடுகையில் இக்காலம் ஒப்பீட்டு ரீதியில் நீண்டதொரு செலவிடல் காலமேயாகும். இத்தகையதொரு பின்னணியில் எதிர்வரும் காலத்தில் நடுத்தர வருமான மட்டத்தில் அதாவது *நடுத்தர வருமான பொறியில்*[2] சிக்குண்டு நீண்ட காலம் தேக்க நிலையொன்றில் இருக்கும் சாத்திய நிலையினை தவிர்க்கும் விதத்தில் எதிர்வரும் காலத்தில் நீடித்துநிலைத்திருக்கும் வலுவான வளர்ச்சி உத்வேகத்தினை உறுதிப்படுத்தும் விதத்தில் சரியான நேரக் கட்டமைப்புடன் கூடிய அவசியமான அமைப்பியல் சீர்திருத்தங்களை இலங்கை அறிமுகப்படுத்துவது இன்றியமையாததாகும். அட்டவணை சி.கு. 1.1 தெரிந்தெடுக்கப்பட்ட நாடுகள் உயர் நடுத்தர வருமான

வரைபடம் சி.கு 1.1
தெரிவுசெய்யப்பட்ட பொருளாதாரங்களின் மொத்தத் தேசிய வருமானம் மற்றும் உலக வங்கியின் வருமான வகைப்படுத்தல் மட்டங்களின் பரிமாணங்களும்




*மூலம்:* உலக வங்கி தரவுகள்

அட்டவணை சி.கு. 1.1
உயர் நடுத்தர வருமானத்திலிருந்து உயர் வருமான மட்டங்களுக்கு நகர்வதற்கு தெரிவுசெய்யப்பட்ட பொருளாதாரங்களுக்குத் தேவைப்பட்ட ஆண்டுகளின் எண்ணிக்கை

| நாடு | உயர் நடுத்தர வருமான வகை அந்தஸ்த்தை அடைந்த ஆண்டு | உயர் வருமான வகை அந்தஸ்த்தை அடைந்த ஆண்டு | உயர் நடுத்தர வருமான வகையிலிருந்த ஆண்டுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| ஹொங்கொங், சீனா | 1976 | 1983 | 7 |
| கொரியாக் குடியரசு | 1988 | 1995 | 7 |
| யப்பான் | 1968 | 1977 | 9 |
| சிங்கப்பூர் | 1978 | 1988 | 10 |
| பிரான்ஸ் | 1960 | 1971 | 11 |
| ஒஸ்ரியா | 1964 | 1976 | 12 |
| பெல்ஜியம் | 1961 | 1973 | 12 |
| ஜேர்மனி | 1960 | 1973 | 13 |
| சிலி | 1992 | 2005 | 13 |
| நோர்வே | 1961 | 1975 | 14 |
| சுவீடன் | 1954 | 1968 | 14 |
| டென்மார்க் | 1953 | 1968 | 15 |
| பின்லாந்து | 1964 | 1979 | 15 |
| அயர்லாந்து | 1975 | 1990 | 15 |
| இத்தாலி | 1963 | 1978 | 15 |
| நெதர்லாந்து | 1955 | 1970 | 15 |
| ஸ்பெயின் | 1973 | 1990 | 17 |
| இஸ்ரேல் | 1969 | 1986 | 17 |
| போர்த்துக்கல் | 1978 | 1996 | 18 |
| கிரேக்கம் | 1972 | 2000 | 28 |
| ஆஜர்ன்ரீனா | 1970 | 2010 | 40 |

*மூலம்:* பிலிப், அப்டொன், குமாரின் மதிப்பீடுகள் (2012)

*குறிப்பு:* இவ்வாய்விலுள்ள வருமான குழுக்கள் உலக வங்கியின் பகுப்பாய்விலிருந்து வேறுபடுகின்றன

1 2018இற்கான வகைப்படுத்தலுக்காக பயன்படுத்தப்பட்ட தரவு, உலக வங்கி நாடுகளை அவற்றின் மொத்தத் தேசிய வருமானத்தின் அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தியிருக்கிறது. குறைந்த வருமானம் - ஐ.அ.டொலர் 1,025 அல்லது அதற்கும் குறைய, தாழ்ந்த நடுத்தர வருமானம் - ஐ.அ.டொலர் 1,026 மற்றும் ஐ.அ.டொலர் 3,995 இற்குமிடையில், உயர் நடுத்தர வருமானம் ஐ.அ.டொலர் 3,996 மற்றும் ஐ.அ.டொலர் 12,375 இற்குமிடையில், உயர் வருமானம் - ஐ.அ.டொலர் 12,376 அல்லது அதற்கும் மேல் இவ்வளவுகளை உலக வங்கி ஒவ்வோராண்டும் யூலை மாதத்தில் இற்றைப்படுத்தி வருகிறது. கூடுதலான தகவல்களுக்குத் தயவுசெய்து பார்க்கவும் https://datahelpdesk.worldbank.org/knowledgebase/articles/906519-world-bank-country-and-lending-groups உலக வங்கி, நாட்டின் பணவீக்கத்திற்கும் பன்னாட்டு பணவீக்கத்திற்குமிடையிலான வேறுபாடுகளுக்கான சீராக்கங்களைச் செய்த பின்னர், செலாவணி வீதத்தின் மூன்றாண்டு அசையும் சராசரிகளின் அடிப்படையில் கணிக்கப்பட்ட அற்லஸ் மாற்றல் காரணிகளைப் பிரயோகிப்பதன் மூலம் தேசிய நாணயத்திலான மொத்தத் தேசிய வருமானத்தினை ஐ.அ.டொலருக்கு மாற்றுவதற்கு அட்லஸ் முறையினைப் பயன்படுத்துகின்றது

2 சில பகுப்பாய்வுகளின்படி, இலங்கை நடுத்தர வருமானப் பொறி என அழைக்கப்படும் பொறிக்குள் சிக்குண்டு இருக்கிறது. பொருளியலாளர்கள், நடுத்தர வருமான மட்டங்களுக்குள் மிக விரைவாக நகர்ந்து கொண்ட நாடுகள் உயர் வருமான மட்டத்தினை அடைந்து கொள்ளும் விதத்தில் அத்தகைய வளர்ச்சி உத்வேகத்தினைத் தொடர்வதற்கு தவறி வருகின்ற நிலைமையினை எடுத்துக்காட்டுவதற்கே இப்பதத்தினை பயன்படுத்துகின்றனர். நடுத்தர வருமானப் பொறி என்ற வரைவிலக்கணம், நடுத்தர வருமானப் பொறிக்குள் சிக்குண்ட நாடுகள் என அங்கீகரிக்கப்பட்ட நாடுகளின் எண்ணிக்கையினைத் தருகின்ற விதத்தில் வேறுபட்ட ஆசிரியர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் உடன்பட்ட தன்மைகள் காணப்படவில்லை. எடுத்துக்காட்டாக, புறுச்நிக் மற்றும் சோவிஷார் (2017) நடுத்தர வருமானப் பொறி ஆய்வில் அத்தகைய வேறுபாட்டுப் பங்களிப்புக்களை ஒப்பீடு செய்தமையின் மூலம் இரண்டு ஆய்வுகளின்படி இலங்கை நடுத்தர வருமானப் பொறிக்குள் சிக்குண்டு இருப்பதனையும் அத்தகைய தேக்க நிலையினைத் தவிர்ப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய வழிமுறைகளையும் எடுத்துக்காட்டியிருக்கின்றனர்.

1

மட்டத்திலிருந்து உயர் வருமான மட்டங்களுக்கு உயர்ந்து கொள்வதற்கு எடுத்த காலப்பகுதியைத் தெளிவாகக் காட்டுகிறது. இக்காலம் 7 ஆண்டுகளிலிருந்து 40 ஆண்டுகள் வரையிலான வீச்சினைக் கொண்டிருக்கிறது[3]. நடுத்தர வருமான மட்டத்திற்குள் நாடுகள் ஏன் சிக்கிக் கொண்டுள்ளன என்பதற்கான காரணங்கள் தொடர்பில் ஒருமித்த கருத்துக்கள் காணப்படாத போதும், மோசமானளவிற்குப் பொருளாதாரம் பன்முகப்படுத்தப்படாமை, நெகிழ்ச்சித்தன்மையற்ற, வினைத்திறனற்ற தொழிற்சந்தை, முன்னேற்றம் கண்ட உட்கட்டமைப்பு கிடைக்காததன்மை பலயீனமான நிறுவனங்கள், புத்தாக்கங்கள் குறைந்த மட்டத்தில் காணப்படும் தன்மை போன்ற காரணங்களே உற்பத்தியாக்கத்தின் மெதுவான தன்மைக்குப் பங்களித்த முக்கிய காரணிகளாகக் குறிப்பிடப்பட்டு வருகின்றன. எடுத்துக்காட்டாக, புறுச்நிக் மற்றும் சோவிஷார் (2017) மெதுவான வளர்ச்சியுடன் பொதுவாக இணைந்து காணப்படும் ஏழு காரணிகளைத் துலாம்பரமாகக் குறிப்பிடுகின்றனர். அவையாவன: சாதகமற்ற மக்கள் தொகையியில், குறைந்தமட்ட பொருளாதார பன்முகப்படுத்தல், வினைத்திறனற்ற நிதியியல் சந்தைகள், முன்னேற்றம் கண்ட உட்கட்டமைப்பு போதியளவில் இல்லாமை, குறைந்த மட்டத்திலான புத்தாக்கம், பலயீனமான நிறுவனங்கள் மற்றும் வினைத்திறனற்ற தொழிலாளர் சந்தைகள். புறுச்நிக் மற்றும் சோவிஷார் (2017)இன் பகுப்பாய்வின்படி, இலங்கை பொருளாதார பன்முகப்படுத்தல் மற்றும் தொழிற்சந்தை வினைத்திறனின் மட்டங்களில் 20 சதவீதம் கொண்ட அடிமட்டத்திலேயே தொடர்ந்தும் காணப்படுகிறது. இத்தகைய பின்னணியொன்றில், இத்துறைகளிலிருந்து எழுகின்ற சவால்களைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான வழிமுறைகளை மேற்கொள்கின்ற அதே வேளையில் வருமான சமமின்மைகள், வறுமை ஒழிப்பு போன்ற பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதனை வலியுறுத்தவேண்டும். இதன் மூலம், எதிர்காலத்தில் நீடித்துநிலைத்திருக்கும் வலுவான வளர்ச்சியும் பகிரப்பட்ட சுபீட்சம் என்பன உறுதிசெய்யப்படும்.

3 மூலம்: Felipe, Abdon and Kumar (2012)


**உசாத்துணைகள்**

1. Felipe, J., Abdon, A. and Kumar, U. (2012) Tracking the middle-income trap: What is it, who is in it, and why?, *Levy Economics Institute, Working Paper No. 715.*

2. Pruchnik, K. and Zowczak, J. (2017) Middle-income trap: Review of the conceptual framework, ADBI Working Paper No. 760.

**தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தற்காலிக மதிப்பீடுகளின்படி, இலங்கையின் பொருளாதாரம் 2018இன் 3.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 2.3 சதவீதம் கொண்ட குறைந்த வளர்ச்சியைப் பதிவுசெய்தது.** பொருளாதாரத்தின் அனைத்து முக்கிய துறைகளும் நேர்க்கணிய வளர்ச்சியைப் பதிவுசெய்தனவெனினும் அவை மிதமான வளர்ச்சி வீதங்களைக் கொண்டிருந்தன. வேளாண்மைத் துறை 2018இன் 6.5 சதவீதமான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 0.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது. தேயிலைப் பயிர்ச்செய்கை, இறப்பர் பயிர்ச்செய்கை, கடல்மீன்பிடி மற்றும் நீரியல்வளத் துறைகள், காடாக்கல் மற்றும் மரம் தறித்தல் நடவடிக்கைகளும் குறிப்பிடத்தக்க சுருக்கத்தினைப் பதிவுசெய்தமையுடன் மோசமான வானிலை நிலைமைகள் 2019இல் வேளாண்மைத் துறையினைப் பாதித்தன. மறுபுறத்தில் எண்ணெய் பசையுள்ள பழவர்க்கங்களின் பயிர்ச்செய்கை, காய்கறிகளின் பயிர்ச்செய்கை, பழவர்க்கங்களின் பயிர்ச்செய்கை மற்றும் விலங்குவளர்ப்பு என்பன இத்துறையின் பெறுமதிகூட்டலின் வளர்ச்சிக்கு முக்கியமாக உதவிபுரிந்தன. அதேவேளை, கைத்தொழில் துறை முன்னைய ஆண்டின் 1.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 2.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது. கைத்தொழில் துறையின் வளர்ச்சிக்கு முக்கியமாகப் புடவைகள், அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகள் மற்றும் கட்டடவாக்கம், சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தலின் மீளெழுச்சி என்பன ஆதரவாக அமைந்தன. அதேவேளை, சுற்றுலாவுடன் தொடர்பான நடவடிக்கைகள் மீதான உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் காரணமாக பணிகள் துறையின் வளர்ச்சி 2018இன் 4.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 2.3 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தன. 2019இல் தங்குமிட வசதி, உணவு மற்றும் குடிபான பணிகள் நடவடிக்கைகள் சுருக்கத்தினைப் பதிவுசெய்தன. மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகத்தின் நடவடிக்கைகள், பிரதானமாகப் பணிகள் துறையின் வளர்ச்சிக்குப் பங்களித்த

வரைபடம் 1.1
மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சிக்கு நடவடிக்கை வாரியான பங்களிப்பு





*மூலம்* : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

வேளையில் தொலைத்தொடர்பூட்டல் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டப்படுத்தல் ஆலோசனைகள் மற்றும் தொடர்பான நடவடிக்கைகளும் தொடர்ந்தும் இரட்டை இலக்க வளர்ச்சியைப் பதிவுசெய்தன.

**செலவின அணுகுமுறையின் அடிப்படையிலான மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளின்படி 2019இன் வளர்ச்சி நுகர்விலான வளர்ச்சி மற்றும் பண்டங்களின் மற்றும் பணிகளின் வெளிநாட்டு நிலுவையிலான முன்னேற்றம் போன்றவற்றினால் உந்தப்பட்டது.** நடைமுறை விலையில் மொ.உ.உற்பத்தியில் நுகர்வுச் செலவினத்தின் பங்கு முன்னைய ஆண்டின் 77.0 சதவீதத்திலிருந்து 2019இல் 78.7 சதவீதத்திற்கு அதிகரித்தது. வீட்டுத்துறை நுகர்வுச் செலவு மற்றும் அரச நுகர்வுச் செலவு போன்றவை முறையே 2.9 சதவீதம் மற்றும் 9.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்ததன் இணைந்த தாக்கத்தின் விளைவாக உண்மை நியதிகளில் நுகர்வுச் செலவு 3.5 சதவீதத்தினால் ஆண்டு காலப்பகுதியில் வளர்ச்சியடைந்தது. உண்மை நியதிகளில் பண்டங்கள் மற்றும் பணிகளின் தேறிய வெளிநாட்டுக் கேள்வி 23.2 சதவீதத்தினால் மேம்பாடடைந்ததுடன் நடைமுறை விலைகளில் மொ.உ.உற்பத்தியில் அதன் பங்கும் 2018இல் -7.4 சதவீதத்திலிருந்து 2019இல் -6.1 சதவீதத்திற்கு மேம்பட்டது. இதேவேளை, நடைமுறை விலைகளில் மொ.உ.உற்பத்தியில் முதலீட்டின் பங்கு கடந்த ஆண்டின் 30.4 சதவீதத்துடன் ஒப்பிடுமிடத்து 2019இல் 27.4 சதவீதத்திற்கு விரைவாக வீழ்ச்சியடைந்து முதலீட்டில் 9.5 சதவீதமான எதிர்க்கணிய உண்மை வளர்ச்சியைப் பதிவுசெய்தது. நடைமுறை விலைகளில் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக உள்நாட்டுச் சேமிப்புக்கள் 2018இன் 23.0 சதவீதத்திலிருந்து 2019இல் 21.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் உலகின் ஏனைய பாகங்களிலிருந்தான தேறிய முதன்மை வருமானத்தின் தொடர்ச்சியான வீழ்ச்சியின் காரணமொன்றாக மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக தேசிய சேமிப்புக்கள் கடந்த ஆண்டின் 27.3 சதவீதத்திலிருந்து 2019இல் 25.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. எனினும், முதலீட்டுச் செலவினத்தின் உயர்ந்த சுருக்கத்தினால் உள்நாட்டு சேமிப்பு - முதலீட்டு இடைவெளி அத்துடன் தேசிய சேமிப்பு - முதலீட்டு இடைவெளி 2018இல் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக முறையே 7.4 சதவீதம் மற்றும் 3.1 சதவீதத்திலிருந்து 2019இல் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக முறையே 6.1 சதவீதம் மற்றும் 2.1 சதவீதத்திற்கு சுருக்கமடைந்தன.

**வேளாண்மைத் துறை 2018இன் 6.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 0.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்து ஆண்டின் பெரும்பாலான மாதங்களில் அவதானிக்கப்பட்ட கடுமையான வானிலை நிலைமைகளின் தாக்கத்தினைப் பிரதிபலித்தது.** 2019இல், எண்ணெய் பசையுள்ள பழவர்க்கங்களின் பயிர்ச்செய்கை, குறிப்பாக தெங்கு உற்பத்தி, 18.2 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியுடன்

வரைபடம் 1.2
சேமிப்பு, முதலீடு மற்றும் சேமிப்பு-முதலீடு இடைவெளி
(மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக)




*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

மேம்பட்ட செயலாற்றத்தினைப் பதிவுசெய்தமைக்கு 2018இன் பிற்பகுதியில் நிலவிய சாதகமான வானிலை நிலைமைகளின் காலம்கடந்த தாக்கமே முக்கிய காரணமாகும். அதேவேளை 2019இல் நெல் உற்பத்தி 4.6 மில்லியன் மெ.தொன்களுக்கு, அதாவது 2.9 மெ.தொன் அரிசிக்குச் சமமானளவிற்கு அதிகரித்தது. இது ஏறத்தாழ 14 மாதங்களுக்கான உள்நாட்டுக் கேள்வியைப் பூர்த்திசெய்யப் போதுமானதாக இருக்குமென மதிப்பிடப்பட்டிருந்தது. இதன் விளைவாக, 2018இல் அரிசி இறக்குமதி 248,901 மெ.தொன்களிலிருந்து 2019இல் 24,193 மெ.தொன்களுக்குக் குறிப்பிடத்தக்களவிற்கு குறைவடைந்தது. எனினும், வரண்ட வானிலை நிலைமைகளின் காரணமாக முன்னைய சிறுபோகத்தின் உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 2019இன் சிறுபோகத்தில் நெல் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. மேலும், 2019/2020 பெரும்போகத்தில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் அபரிமிதமான அறுவடை பதிவுசெய்யப்பட்ட முன்னைய பெரும்போகத்துடன் ஒப்பிடுகையில் மெதுவடைந்து காணப்பட்டமையானது, 2019இன் நான்காம் காலாண்டுப்பகுதியில் நெல் நடவடிக்கைகளின் வளர்ச்சியில் சுருக்கத்தினை ஏற்படுத்தியது. ஒட்டுமொத்தமாக, 2019 சிறுபோகம் 2019/2020 பெரும்போக பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஏற்பட்ட சுருக்கம் 2019இல் நெல் துணைத் துறையினது வளர்ச்சியின் பெறுமதிகூட்டலில் 0.3 சதவீதம் கொண்ட எதிர்க்கணியமான வளர்ச்சியைத் தோற்றுவித்தது. அதேவேளை, தேயிலை பயிர்ச்செய்கையும் 2019இல் 1.3 சதவீதம் கொண்ட எதிர்க்கணியமான வளர்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு ஆண்டின் முதலரைப்பகுதியில் நிலவிய வரண்ட வானிலை நிலைமைகள், தேயிலைத் துறையில் காணப்பட்ட கூலியுடன் தொடர்பான தொழிற்சங்க பிணக்குகளின் காரணமாக தொழிலாளர் வழங்கலில் காணப்பட்ட இடையூறுகள், ஆண்டின் இறுதிப்பகுதியில் நிலவிய பாரிய மழைவீழ்ச்சியின் காரணமாக தேயிலைக் கொழுந்து பறித்தல் நடவடிக்கைகள் மெதுவடைந்தமை என்பன காரணங்களாக அமைந்தன. மேலும், இறப்பர் உற்பத்தி 2019இல்

1

அட்டவணை 1.2
நடைமுறை சந்தை விலைகளில் கூட்டுக் கேள்வியும் சேமிப்பு - முதலீட்டு இடைவெளியும் (அ)(ஆ)

| விடயம் | ரூ.பில்லியன் | | வளர்ச்சி (%) | | மொ.உ.உ இன் சதவீதமாக | |
|---|---|---|---|---|---|---|
| | 2018(இ) | 2019 | 2018(இ) | 2019 | 2018(இ) | 2019 |
| **1. உள்நாட்டு கேள்வி** | **15,428.0** | **15,935.6** | **8.0** | **3.3** | **107.4** | **106.1** |
| 1.1 நுகர்வு | 11,055.6 | 11,822.9 | 9.7 | 6.9 | 77.0 | 78.7 |
| தனியார் | 9,745.0 | 10,405.9 | 9.0 | 6.8 | 67.8 | 69.3 |
| பொது | 1,310.7 | 1,417.0 | 15.2 | 8.1 | 9.1 | 9.4 |
| 1.2 முதலீடு (மொத்த உள்நாட்டு மூலதன உருவாக்கம்) | 4,372.4 | 4,112.7 | 3.8 | -5.9 | 30.4 | 27.4 |
| **2. தேறிய வெளிநாட்டு கேள்வி** | **-1061.9** | **-919.4** | **-10.3** | **13.4** | **-7.4** | **-6.1** |
| பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதி | 3,292.4 | 3,472.3 | 13.2 | 5.5 | 22.9 | 23.1 |
| பொருட்களினதும் பணிகளினதும இறக்குமதி | 4,354.3 | 4,391.7 | 12.4 | 0.9 | 30.3 | 29.2 |
| **3. மொத்தக் கேள்வி (மொ.உ.உ.) (1+2)** | **14,366.1** | **15,016.1** | **7.8** | **4.5** | **100.0** | **100.0** |
| **4. உள்நாட்டு சேமிப்புகள் (3-1.1)** | **3,310.5** | **3,193.3** | **1.9** | **-3.5** | **23.0** | **21.3** |
| தனியார் | 3,480.2 | 3,603.5 | 4.1 | 3.5 | 24.2 | 24.0 |
| பொது | -169.7 | -410.3 | -76.5 | -141.7 | -1.2 | -2.7 |
| **5. வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானம் (ஈ)** | **-389.6** | **-432.2** | **-10.4** | **-10.9** | **-2.7** | **-2.9** |
| **6. வெளிநாட்டிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல்கள்** | **999.5** | **1,030.7** | **3.6** | **3.1** | **7.0** | **6.9** |
| **7. தேசிய சேமிப்புக்கள் (4+5+6)** | **3920.4** | **3,791.7** | **1.6** | **-3.3** | **27.3** | **25.3** |
| **8. சேமிப்பு முமலீடு இடைவெளி** | | | | | | |
| உள்நாட்டு சேமிப்புக்கள் - முதலீடு (4-1.2) | -1061.9 | -919.4 | | | -7.4 | -6.1 |
| தேசிய சேமிப்புக்கள் - முதலீடு (7-1.2) | -452.0 | -321.0 | | | -3.1 | -2.1 |
| **9. வெளிநாட்டு நடைமுறை கணக்கு நிலுவை (2+5+6) (ஈ)** | **-452.0** | **-321.0** | | | **-3.1** | **-2.1** |

(அ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் (2010 தள ஆண்டை) அடிப்படையாகக் கொண்ட மொ.உ.உ மதிப்பீடுகள் அடிப்படையாகக் கொண்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது
(ஈ) சென்மதி நிலுவை மதீப்பீடுகளின் வேறுபாடுகளிற்கு தொகுப்பில் ஏற்படுகின்ற காலதாமதமே காரணமாகும்

*மூலங்கள் :* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி


வரலாற்றிலேயே குறைந்த 74.8 மில்லியன் கி.கிறாமிற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு இறப்பர் நடவடிக்கைகளின் வளர்ச்சி 9.5 சதவீதத்தினால் சுருக்கமடைந்தமையே காரணமாகும். ஆண்டின் பிற்பகுதியில் காணப்பட்ட சாதகமற்ற வானிலை நிலைமைகள் மற்றும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் காணப்பட்ட குறைந்த விலைகளின் காரணமாக பாலெடுத்தல் நடவடிக்கைகள் கைவிடப்பட்டமையும் 2019இல் இறப்பர் துறை நடவடிக்கைகள் சுருக்கமடையப் பங்களித்தன. 2019இன் பெரும்பாலான காலப்பகுதியில் நிலவிய சூறாவளி மற்றும் பாரிய மழைவீழ்ச்சி போன்ற கொந்தளிப்பான வானிலை நிலைமைகளினால் கடல்மீன் உற்பத்தி பாதிக்கப்பட்டமையானது கடல் மீன்பிடி மற்றும் கடல் நீரியல் துணைத் துறையின் உற்பத்தியில் 5.5 சதவீதம் கொண்ட சுருக்கத்தினைத் தோற்றுவித்தது. மேலும், காடாக்கல் மற்றும் மரம் தறித்தல் நடவடிக்கைகளும் 2019இல் 4.8 சதவீதம் கொண்ட சுருக்கத்தினைப் பதிவுசெய்தன.

**2019இல் கைத்தொழில் துறையின் செயலாற்றம் ஓரளவு முன்னேற்றமடைந்து 2018இன் 1.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் 2.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது.** கட்டடவாக்கம், சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் துணைத் துறைகள் 2018இல் பதிவுசெய்யப்பட்ட முறையே 2.5 சதவீதம் மற்றும் 5.2 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2019இல் முறையே 4.0 சதவீதம் மற்றும் 2.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து அரசின் உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் ஆதரவினை முக்கியமாகப் பிரதிபலித்தன. அதேவேளை, மொ.உ.உற்பத்தியில் 15.6 சதவீதத்திற்கு வகைகூறும் தயாரிப்புத் துறை நடவடிக்கைகள் முன்னைய ஆண்டின் 3.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 1.9 சதவீதம் கொண்ட குறைவடைந்த வளர்ச்சியைப் பதிவுசெய்தன. புடவைகள், அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள் தயாரிப்புத் துணைத் துறை 2018இன் 3.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 3.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களுக்கான கேள்வியில் காணப்பட்ட படிப்படியான மீட்சியே காரணமாகும். அதேவேளை, உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை தயாரிப்பு துணைத் துறையின் வளர்ச்சி முன்னைய ஆண்டின் 4.0 சதவீதத்திலிருந்து 2019இல் 3.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை உடனடுத்து உள்நாட்டுக் கேள்வியில் காணப்பட்ட தளர்வின் தாக்கத்தினைப் பிரதிபலித்தது. கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் துணைத் துறை 2018இன் 8.2 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2019இல் 23.4 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வளர்ச்சியடைந்தமைக்கு பேணல் நோக்கங்களுக்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சுத்திகரிப்புநிலையம் தற்காலிகமாக மூடப்பட்டமையே காரணமாகும்.

**2019இல் பணிகள் துறையின் வளர்ச்சி 2018 உடன் ஒப்பிடுகையில் 2.3 சதவீதத்திற்கு அரைப்பங்கினால் குறைவடைந்தமைக்கு உயிர்த்த ஞாயிறுத் தாக்குல்களின் காரணமாக பெரும்பாலான துணைத் துறைகளின் நடவடிக்கைகள் மெதுவடைந்தமையே காரணமாகும்.** மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட துணைத் துறையான தங்குமிட வசதி, உணவு மற்றும் குடிபான நடவடிக்கைகள் துணைத் துறை 2018இன் 5.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 4.6 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் கசிவுத்தாக்கத்தினையும் பொருளாதார நடவடிக்கையில் காணப்பட்ட பொதுவான மெதுவான போக்கினையும் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2019இல் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம் (3.0 சதவீதம் கொண்ட வளர்ச்சி), களஞ்சியப்படுத்தல் உட்பட பொருட்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்து (1.4 சதவீதம் கொண்ட வளர்ச்சி), நிதியியல் பணி நடவடிக்கைகள் மற்றும் துணை நிதியியல் பணிகள் (2.0 சதவீதம் கொண்ட வளர்ச்சி), வதிவிடச் சொத்துடமை மற்றும் ஏனைய தனியாள் பணிகள் உள்ளிட்ட உண்மைச் சொத்து நடவடிக்கைகள் (2.4 சதவீதம் கொண்ட வளர்ச்சி) என்பன உட்பட மற்றைய பல துணைத் துறைகளின் நடவடிக்கைகளில் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. அதேவேளை, பொது நிருவாகம் மற்றும் பாதுகாப்பின் நடவடிக்கைகள் 2018இன் 0.6 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2019இல் 2.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. 2019இல் தொலைத்தொடர்பூட்டல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துணைத் துறை முறையே 17.2 சதவீதம் மற்றும் 13.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பெற்றமையின் மூலம் உத்வேகம் மிக்க செயலாற்றத்தினை எடுத்துக்காட்டியது.

**குறைவடைந்த பொருளாதார நடவடிக்கைகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் தொழிலின்மை வீதம் 2018இன் 4.4 சதவீதத்திலிருந்து 2019இல் 4.8 சதவீதத்திற்கு அதிகரித்தது.** ஆண்கள் மற்றும் பெண்களின் தொழிலின்மை வீதங்கள் முன்னைய ஆண்டின் முறையே 3.0 சதவீதம் மற்றும் 7.1 சதவீதத்திலிருந்து 2019இல் முறையே 3.3 சதவீதத்திற்கும் 7.4 சதவீதத்திற்கும் அதிகரித்தன. அதேவேளை, தொழிற்படைப் பங்கேற்பு வீதம் 2018இன் 51.8 சதவீதத்திலிருந்து 2019இல் 52.3 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தமைக்கு பெண்களின் தொழிற்படைப் பங்கேற்பு வீதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். இதற்கமைய, பெண்களின் தொழிற்படைப் பங்கேற்பு வீதம் 2018இன் 33.6 சதவீதத்திலிருந்து 2019இல் 34.5 சதவீதத்திற்குச் சிறிதளவால் அதிகரித்தது. எனினும், ஆண்களின் தொழிற்படைப் பங்கேற்பு வீதம் 2019இல் 73.0 சதவீதத்தில் மாற்றமின்றிக் காணப்பட்டது. தொழிலின்மை வீதத்தில் அதிகரிப்புக் காணப்பட்ட போதும் தொழில்புரியும் குடித்தொகை, உயர்வான தொழிற்படைப் பங்கேற்பு வீதத்துடன் 2019இல் 8.181 மில்லியனுக்கு 2.1 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, பொருளாதாரத்தின் மிகப்பெரும் துறையான பணிகள் துறை 2019இன் மொத்த தொழில்நிலையில் 47.1 சதவீதத்திற்குப் பங்களித்ததுடன் அதனைத் தொடர்ந்து கைத்தொழில் மற்றும் வேளாண்மைத் துறைகள் மொத்த தொழில்நிலையில் முறையே 27.6 சதவீதத்திற்கும் 25.3 சதவீதத்திற்கும் பங்களித்தன. தொழில்நிலை அந்தஸ்து நியதிகளில் அரச துறை ஊழியர்கள், தனியார் துறை ஊழியர்கள், தொழில்தருநர்கள், சொந்த தொழில்புரிவோர் மற்றும் சம்பளமற்ற குடும்ப வேலையாட்கள் ஆகியோரின் பங்குகள் 2019இல் முறையே 14.9 சதவீதம், 43.0 சதவீதம், 2.6 சதவீதம், 32.5 சதவீதம் மற்றும் 7.0 சதவீதமாகக் காணப்பட்டன.

வரைபடம் 1.3
தொழிலின்மை வீதம்



*மூலம்* : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

**தற்காலிகமான வழங்கல்பக்க இடையூறுகள் காணப்பட்ட போதும் முதன்மை மற்றும் மையப் பணவீக்கம் இரண்டும் 2019இல் விரும்பத்தக்க வீச்சான 4 - 6 சதவீத வீச்சிற்குள் நகர்ந்தமைக்கு குறைவடைந்த கேள்வி நிலைமைகளும் நன்கு நிறுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்ப்புக்களுமே முக்கிய காரணங்களாகும்.** கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட அசைவுகளின் மூலம் (2013=100) அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம் வீட்டுவாடகை மற்றும் கல்விக் கட்டணம் என்பனவற்றிற்கான அளவீட்டினை அடிப்படையாகக் கொண்ட மேல் நோக்கிய சீராக்கங்களுடன் 2019இன் தொடக்கத்தில் விரைவடைந்தது. நிருவாக ரீதியில் தீர்மானிக்கப்பட்ட விலைத் திருத்தங்கள், குறிப்பிட்ட உணவு மற்றும் உணவல்லா விடயங்கள் மீதான வரி விதிப்பு என்பனவற்றின் காரணமாக கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கம், 2019 ஓகத்து வரையான மூன்று மாத காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 3.4 சதவீத தளர்விற்கு முன்னதாக 2019 சனவரியிலிருந்து 2019 மே வரையான காலப்பகுதியில் 3.7 சதவீதத்திலிருந்து 5.0 சதவீதம் வரையில் அதிகரித்தன. எனினும், அதன் பின்னர் ஏற்பட்ட மோசமான வானிலை நிலைமைகளின் காரணமாகத் தோன்றிய உயர்ந்த உணவுப் பணவீக்கம் 2019இல் முதன்மைப் பணவீக்கம் 2019 ஒத்தோபரில் 5.4 சதவீதத்திற்கு

1

அட்டவணை 1.3

நிலையான விலைகளில் (2010) கைத்தொழில் மூலத்தின்படி மொத்தத் தேசிய வருமானம் (அ)(ஆ)

| பொருளாதார நடவடிக்கை | ரூ.மில்லியன் | | மொ.உ.உ இன் பங்கு (%) | | வளர்ச்சி (%) | | மாற்றத்திற்கான பங்களிப்பு (%) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2018 (இ) | 2019 | 2018 (இ) | 2019 | 2018 (இ) | 2019 | 2018 (இ) | 2019 |
| **வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடி** | **683,816** | **687,857** | **7.1** | **7.0** | **6.5** | **0.6** | **13.5** | **1.8** |
| வேளாண்மை மற்றும் காடாக்கல் | 565,337 | 574,472 | 5.8 | 5.8 | 7.9 | 1.6 | 13.4 | 4.1 |
| மீன்பிடித்தொழில் | 118,479 | 113,386 | 1.2 | 1.1 | 0.2 | -4.3 | 0.1 | -2.3 |
| **கைத்தொழில்** | **2,540,315** | **2,608,211** | **26.3** | **26.4** | **1.2** | **2.7** | **10.0** | **30.8** |
| சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும் | 225,505 | 231,893 | 2.3 | 2.3 | -5.2 | 2.8 | -4.0 | 2.9 |
| தயாரிப்பு | 1,512,800 | 1,540,969 | 15.6 | 15.6 | 3.6 | 1.9 | 16.8 | 12.8 |
| மின்வலு,எரிவாயு,நீர் மற்றும் கழிவு கையாளல் | 144,940 | 151,978 | 1.5 | 1.5 | 6.0 | 4.9 | 2.7 | 3.2 |
| கட்டடவாக்கம் | 657,070 | 683,371 | 6.8 | 6.9 | -2.5 | 4.0 | -5.5 | 11.9 |
| **பணிகள்** | **5,555,303** | **5,680,757** | **57.5** | **57.4** | **4.6** | **2.3** | **78.2** | **56.8** |
| மொத்த மற்றும் சில்லறை வியாபாரம், போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல், மற்றும் குடியிருப்பு மற்றும் உணவுப்பணிகள் நடவடிக்கைகள் | 2,234,394 | 2,273,836 | 23.1 | 23.0 | 3.5 | 1.8 | 24.6 | 17.9 |
| தகவல் மற்றும் தொடர்பூட்டல் | 63,421 | 73,378 | 0.7 | 0.7 | 9.6 | 15.7 | 1.8 | 4.5 |
| வதிவிட உரிமை உள்ளடங்கலாக நிதியில், காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்து நடவடிக்கைகள் | 1,366,490 | 1,400,468 | 14.1 | 14.2 | 9.6 | 2.5 | 38.6 | 15.4 |
| தொழிற்தகமை பணிகள் மற்றும் ஏனைய தனியார் பணிகள் நடவடிக்கைகள் | 1,104,097 | 1,128,115 | 11.4 | 11.4 | 2.9 | 2.2 | 10.2 | 10.9 |
| பொது நிர்வாகம், பாதுகாப்பு, கல்வி, மனித நலம் மற்றும் சமூக வேலை நடவடிக்கைகள் | 786,902 | 804,959 | 8.1 | 8.1 | 1.2 | 2.3 | 3.0 | 8.2 |
| **அடிப்படை விலையில் மொத்த பெறுமதி கூட்டல்** | **8,779,434** | **8,976,825** | **90.8** | **90.8** | **3.7** | **2.2** | **101.6** | **89.4** |
| மானியங்கள் நீங்கலாக உற்பத்தி மீதான வரி | 889,166 | 912,553 | 9.2 | 9.2 | -0.6 | 2.6 | -1.6 | 10.6 |
| **சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி** | **9,668,600** | **9,889,379** | **100.0** | **100.0** | **3.3** | **2.3** | **100.0** | **100.0** |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானம் | -264,507 | -281,083 | | | -6.0 | -6.3 | | |
| **சந்தை விலையில் மொத்த தேசிய வருமானம்** | **9,404,093** | **9,608,296** | | | **3.2** | **2.2** | | |

(அ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் (2010 தள ஆண்டை அடிப்படையாகக்) கொண்ட மொ.உ.உ மதிப்பீடுகள் அடிப்படையாகக் கொண்டது


(ஆ) தற்காலிகமானது

(இ) திருத்தப்பட்டது

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளவிபரத் திணைக்களம்

உயர்வடையக் காரணமாகியதுடன் அதனைத் தொடர்ந்து முதன்மைப் பணவீக்கம் ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியில் 5.0 சதவீதத்திற்கும் குறைவாகக் காணப்பட்டது. இதன்படி, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கம் 2018 திசெம்பரின் 2.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2019 திசெம்பரில் 4.8 சதவீதத்தினைப் பதிவுசெய்தது. அதேவேளை, உணவு விடயங்களுக்கான உயர்ந்த நிறைகளைக் கொண்ட தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட (2013=100) முதன்மைப் பணவீக்கம் குறிப்பிடத்தக்களவிற்குக் குறைவாகவே காணப்பட்ட போதும் 2019இன் முதலரைப்பகுதியில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட பணவீக்கத்தின் போக்கினைப் பின்பற்றி காணப்பட்டது. இருப்பினும் கூட, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கம் 2019இன் பின்னரைப்பகுதியில் விரைவடைந்து, நிரம்பல்பக்க தடைகளின் தாக்கத்தினைப் பிரதிபலித்ததுடன் 2018 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 0.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2019 திசெம்பரில் 6.2 சதவீதத்தினை அடைந்தது. அதேவேளையில், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினையும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினையும் அடிப்படையாகக் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கம் 2020இன் தொடக்கத்தில் விரைவடைந்தமைக்கு தொடர்ச்சியாகக் காணப்பட்ட உயர்ந்த உணவுப் பணவீக்கம் முக்கிய காரணமாகும். ஆகவே, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கம் 2020 பெப்புருவரியில் 6.2 சதவீதத்தினை அடைந்த வேளையில் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கம் 2020 பெப்புருவரியில் 8.1 சதவீதம் கொண்ட உச்சமட்டத்தில் காணப்பட்டது. எனினும், கொவிட்-19 தொற்றுப் பரவலின் காரணமாக இடையூறுகள் காணப்பட்டமைக்கிடையிலும் உணவுப் பணவீக்கம் தளர்வடைந்ததும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினையும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினையும் அடிப்படையாகக் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கம் 2020 மாச்சில் முறையே 5.4 சதவீதத்திற்கும் 4.0 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, தளம்பலடையும் உணவு, வலு மற்றும் போக்குவரத்து வகைகளை முதன்மைப் பணவீக்கத்திலிருந்து விலக்குகின்ற மையப்பணவீக்கம் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் கூடையில் வீட்டு வாடகை மற்றும் கல்விக் கட்டணங்களில் செய்யப்பட்ட திருத்தத்தின் தாக்கம் காரணமாக 2019இன் ஆரம்பத்தில் உயர்வினைப் பதிவுசெய்ததுடன் ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியிலும் உயர்ந்த மட்டத்திலேயே காணப்பட்டது. இதன்படி, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு மையப் பணவீக்கம் 2018

வரைபடம் 1.4
முதன்மைப் பணவீக்கம் (ஆண்டுக்காண்டு)




*மூலம்* : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

திசெம்பரில் இரண்டு சுட்டெண்களினாலும் பதிவுசெய்யப்பட்ட 3.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் முறையே 4.8 சதவீதத்திலும் 5.2 சதவீதத்திலும் தொடர்ந்தும் காணப்பட்டன. 2020இன் முதற் காலாண்டுப்பகுதியில் பெருமளவில் தளத்தாக்கம் காரணமாக கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட மையப் பணவீக்கம் வீழ்ச்சியடைந்து. 2020 மாச்சில் முறையே 2.9 சதவீதம் மற்றும் 5.2 சதவீதத்தினைப் பதிவுசெய்தது.

## வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகள்

**இறக்குமதிச் செலவினத்தினைக் கட்டுப்படுத்துவதற்கான கொள்கைகள் வர்த்தக மற்றும் நடைமுறைக் கணக்கு நிலுவைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைத் தோற்றுவித்து இது நிதியியல் கணக்கிற்கான கணிசமான உட்பாய்ச்சல்களுடன் சேர்ந்து மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை வலுப்படுத்தவும் செலாவணி வீதத்தினை உறுதிப்படுத்தவும் உதவின.** வர்த்தக நிலுவையில் ஏற்பட்ட முன்னேற்றத்திற்கு வணிகப்பொருள் இறக்குமதிகளில் சுருக்கத்தினைத் தூண்டிய கொள்கைகளின் காரணமாக இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட குறைப்பு முக்கிய காரணமாக இருந்த வேளையில் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட மிதமான வளர்ச்சியும் 2019இல் குறைந்த வர்த்தகப் பற்றாக்குறைக்குப் பங்களித்தது. 2019இல் பணிகள் கணக்கின் மிகை மிதமடைந்தமையானது சுற்றுலா வருவாய்களின் மீதும் வான் பயண பயணிகளிடமிருந்தான பெறுகைகளின் மீதும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் கொண்டிருந்த பாதகமான தாக்கத்தினைப் முக்கியமாகப் பிரதிபலித்தது. நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளின் பங்கிலாபக் கொடுப்பனவுகள், மீள்முதலீட்டு வருவாய்கள் அதிகரித்தமையின் காரணமாக முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறை இவ்வாண்டுப்பகுதியில் விரிவடைந்த வேளையில் சொத்துப்பட்டியல் முதலீடு மீதான வட்டிக் கொடுப்பனவுகளும் 2019ஆம் ஆண்டுப்பகுதியில் சிறிதளவால் உயர்வடைந்தன. அதேவேளை, 2019இல் இரண்டாந்தர வருமானங்களின் மிகை மேலும் குறுக்கமடைந்து, கடந்த ஒரு சில ஆண்டுகளுக்கும் மேலாக அவதானிக்கப்பட்ட தொழிலாளர் பணவனுப்பல்களின் மெதுவான போக்கு தொடர்வதனை எடுத்துக்காட்டுகிறது. ஒட்டுமொத்தமாக, வணிகப்பொருள் பணிகளிலுள்ள வர்த்தகம் மற்றும் இரண்டாந்தர வருமானத்தில் காணப்பட்ட மிதமான தன்மை அதேபோன்று முதலாந்தர வருமானப் பற்றாக்குறை விரிவடைந்தமை என்பனவற்றினை வர்த்தக நிலுவையில் காணப்பட்ட முன்னேற்றம் விஞ்சியதன் காரணமாக 2019இல் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் பெறுகைகள் மற்றும் ப.நா.நிதிய விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் பெறப்பட்ட இரண்டு தொகுதிகள் என்பனவற்றை உள்ளடக்கி நிதியியல் கணக்கு 2019இல் குறிப்பிடத்தக்க உட்பாய்ச்சலைப் பதிவுசெய்தது. எனினும், உள்முக வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மிதமடைந்த வேளையில் அரச பிணையங்கள் சந்தையிலும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையிலும் காணப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் 2019இல் தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தன. அதேவேளை, 2019இல் இரண்டு நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் தீர்ப்பனவு மற்றும் கூட்டுக்கடன் வசதிகள் மீதான அட்டவணையிடப்பட்ட மீள்கொடுப்பனவுகள் என்பனவற்றை உள்ளடக்கி அரசாங்கம் குறிப்பிடத்தக்க மீள்கொடுப்பனவுகளைப் பதிவுசெய்தது. அரசாங்கத்தினால் பெருமளவான வெளிநாட்டு நாணயப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அரசாங்கத்திற்கும் மத்திய வங்கிக்குமான குறிப்பிடத்தக்க வெளிநாட்டு நாணயங்களின் உட்பாய்ச்சல்கள் 2019இன் இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை வலுப்படுத்தின. இது 2019இல் சென்மதி நிலுவையில் காணப்பட்ட திரண்ட மிகையினைப் பிரதிபலித்தது. அதேவேளை, 2019இல் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 2018இல் பதிவுசெய்யப்பட்ட குறிப்பிடத்தக்க தேய்வுடன் ஒப்பிடுகையில் 0.6 சதவீதம் கொண்ட சிறிதளவு அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலினை உடனடுத்து உள்நாட்டு வெளிநாட்டுச் செலவாணிச் சந்தையில் காணப்பட்ட அழுத்தம் மற்றும் 2019இன் பின்னரைப்பகுதியில் அரச பிணையங்கள் சந்தையிலிருந்தான முதலீடுகளின் வெளிப்பாய்ச்சல்கள் என்பனவற்றிற்கு மத்தியிலும், நாணயத்தில் ஏற்பட்ட இவ்வுயர்வு வர்த்தகப் பற்றாக்குறையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க சுருக்கத்தின் தாக்கத்தினை முக்கியமாகப் பிரதிபலித்தது. இவ்வாண்டுப்பகுதியில் செலாவணி வீதத்தினை நிர்ணயிப்பதில் மத்திய வங்கி நெகிழ்ச்சித்தன்மையினைப் பேணிய வேளையில் இலங்கை ரூபாவின் அளவுக்கதிகமான தளம்பல்களைக் கட்டுப்படுத்துவதற்கும் ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்கும் மட்டுமே சந்தையில் தலையிட்டது. குறுக்கு நாணயச் செலாவணி வீதத்தில் ஏற்படும் அசைவுகளுடன் சேர்ந்து பல

1

முக்கிய வர்த்தகப் பங்காளர்களின் நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் பெயரளவு உயர்வினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதம் மற்றும் உண்மைத்தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் இரண்டும் உயர்வடைந்தன.


**கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட வளர்ச்சி வேளாண்மை மற்றும் கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட சுருக்கத்தினால் ஓரளவு எதிரீடு செய்யப்பட்டமையின் விளைவாக 2018 உடன் ஒப்பிடுகையில் 2019இல் வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் சிறிதளவால் அதிகரித்தன.** இதன்படி, வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2018இன் ஐ.அ.டொலர் 11,890 மில்லியனிலிருந்து 2019இல் ஐ.அ.டொலர் 11,940 மில்லியனுக்கு 0.4 சதவீதத்தினால் அதிகரித்தன. மொத்த ஏற்றுமதி வருவாய்களில் ஏறத்தாழ 79 சதவீதத்திற்கு வகைகூறும் கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2019இல் 1.8 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 9,426 மில்லியனுக்கு அதிகரித்தன. கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்க்கு புடவைகள் மற்றும் ஆடைகள் (5.2 சதவீதம்), இரத்தினக்கல், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் (10.0 சதவீதம்), போக்குவரத்துக் கருவிகள் (21.3 சதவீதம்), அடிப்படை உலோகம் மற்றும் அதன் பொருட்கள் (6.7 சதவீதம்) என்பனவற்றின் வருவாய்களில் ஏற்பட்ட வளர்ச்சியே ஆதரவாக அமைந்தது. எனினும், பெற்றோலிய உற்பத்திகள் (16.2 சதவீதம்), தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணிகள் (30.3 சதவீதம்), பொறிகள் மற்றும் எந்திர துணைப்பொருட்கள் (8.0 சதவீதம்) என்பனவற்றை உள்ளடக்கி 2019இல் கைத்தொழில் ஏற்றுமதிகளின் குறிப்பிட்ட வகைகள் வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 21 சதவீதத்திற்கு வகைகூறும் வேளாண்மை ஏற்றுமதிகள் 2019இல் ஐ.அ.டொலர் 2,462 மில்லியனுக்கு 4.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து பெரும்பாலான துணை வகைகளில், குறிப்பாக, தேயிலை (5.7 சதவீதம்), வாசனைத்திரவியங்கள் (13.2 சதவீதம்) என்பனவற்றிலிருந்தான குறைந்த வருவாய்களைப் பிரதிபலித்தன. எனினும், தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் மற்றும் உள்ளீடு அல்லாத உற்பத்திகள் இரண்டினதும் ஏற்றுமதிகள் அளவுகளின் நியதிகளில் அதிகரித்தமையின் காரணமாக தெங்கு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களை 6.0 சதவீதத்தினால் அதிகரித்தன. அதேவேளை, 2019இல் கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 1.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. ஐக்கிய அமெரிக்கா இலங்கையின் ஏற்றுமதிகளில் 26.3 சதவீதத்திற்கு வகைகூறி முக்கிய ஏற்றுமதி நாடாகத் தொடர்ந்தும் விளங்கியது. ஐக்கிய இராச்சியம் (8.4 சதவீதம்), இந்தியா (6.4 சதவீதம்), ஜேர்மனி (5.4 சதவீதம்), இத்தாலி (4.4 சதவீதம்) என்பன முக்கிய நாடுகளாக விளங்கின. ஏற்றுமதி அளவுச் சுட்டெண் 7.2 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் அலகுப் பெறுமதிச் சுட்டெண் 6.3 சதவீதத்தினால வீழ்ச்சியடைந்து, 2018 உடன் ஒப்பிடுகையில் 2019இல் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட குறைந்த வளர்ச்சிக்கு குறைந்த விலைகளே காரணமாக அமைந்தமையினைச் சுட்டிக்காட்டுகிறது.

**வணிகப்பொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் 2019இல் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்து, அத்தியாவசியமல்லாத இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடைமுறைக்கிடப்பட்ட கொள்கை வழிமுறைகளின் தாக்கத்தினைப் பிரதிபலித்த வேளையில், குறைந்த இறக்குமதி விலைகளும் இவ்வீழ்ச்சிக்குப் பங்களித்தன.** இதன்படி, இறக்குமதிகள் மீதான செலவினம் 2018இன் ஐ.அ.டொலர் 22,233 மில்லியனிலிருந்து 2019இல் ஐ.அ.டொலர் 19,937 மில்லியனுக்கு 10.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, எரிபொருள் அல்லாத இறக்குமதிகள் மீதான செலவினம் 2019இல் ஐ.அ.டொலர் 16,045 மில்லியனுக்கு 11.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மொத்த இறக்குமதிகளில் 57 சதவீதத்திற்கு வகைகூறும் இடைநிலைப்பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 2019இல் 9.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு தங்கம் (99.4 சதவீதம்), எரிபொருள் (6.3 சதவீதம்), அடிப்படை உலோகம் (17.6 சதவீதம்) மற்றும் வளமாக்கி (15.4 சதவீதம்) என்பனவற்றின் செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி வழியமைத்தது. எனினும், 2019இல் கனிப்பொருள் உற்பத்திகள் (34.0 சதவீதம்), புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள் (1.8 சதவீதம்) என்பன மீதான இறக்குமதிச் செலவினத்தில் அதிகரிப்பொன்று பதிவுசெய்யப்பட்டது. மொத்த இறக்குமதிகளில் ஏறத்தாழ 20 சதவீதத்திற்கு வகைகூறும் நுகர்வுப்பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 2019இல் ஐ.அ.டொலர் 3,957 மில்லியனுக்கு 20.5 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்து உணவு மற்றும் குடிபானம் மற்றும் உணவல்லா நுகர்வுப்பொருட்கள் இரண்டின் மீதுமான செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியைப் பிரதிபலித்தது. உணவு மற்றும் குடிபானங்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 11.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு அரிசி (88.0 சதவீதம்), சீனி மற்றும் இனிப்பு (19.4 சதவீதம்), பண்ணை உற்பத்திகள் (6.1 சதவீதம்) என்பன மீதான குறைந்த செலவினம் காரணமாயமைந்த வேளையில் கடலுணவு (8.8 சதவீதம்), காய்கறிகள் (2.0 சதவீதம்), வாசனைத்திரவியங்கள் (1.3 சதவீதம்) என்பன மீதான செலவினத்தில் அதிகரிப்பு பதிவுசெய்யப்பட்டது. அதேவேளை, 2019இல் உணவல்லா நுகர்வுப்பொருட்கள் மீதான செலவினம் 2018 உடன் ஒப்பிடுகையில் 25.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இக்குறிப்பிடத்தக்க குறைப்பிற்கு 2019இல் தனியாள் ஊர்திகளின் இறக்குமதிகள் ஐ.அ.டொலர் 816 மில்லியனுக்கு 48.2 சதவீதத்தினால் குறைவடைந்தமையே முக்கிய காரணமாகும். இதற்கு 2018இன் பிற்பகுதியில் நடைமுறைக்கிடப்பட்ட கொள்கை வழிமுறைகளும் 2019

மாச்சில் சமர்ப்பிக்கப்பட்ட 2019ஆம் ஆண்டிற்கான அரச வரவு செலவுத்திட்டத்தில் தனியாள் உந்து ஊர்திகள் இறக்குமதியில் பெரும்பாலான வகைகளின் மீதான அதிகரித்த வரி அமைப்பும் உதவியாக அமைந்தன. எனினும், 2019இன் இறுதிப்பகுதியில் ஊர்திகளின் இறக்குமதியில் ஓரளவு அதிகரிப்புக்கள் அவதானிக்கப்பட்டமைக்கு அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சலுகை அடிப்படையிலான அனுமதிப்பத்திரங்களின் மீதான இறக்குமதிகள் மீண்டும் ஆரம்பமானமையே காரணமாகும். தெரிவுசெய்யப்பட்ட அத்தியாவசியமல்லாத நுகர்வுப்பொருட்களின் மீது 2018இல் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளும் 2019 மாச்சில் நீக்கப்பட்டன. இருப்பினும் கூட, பெரும்பாலான அத்தியாவசியமல்லாத நுகர்வுப்பொருட்களின் மீதான செலவினம் 2019இல் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்த வேளையில் மருந்து மற்றும் மருந்தாக்கற்பொருட்கள், வீட்டுப்பொருட்கள் மற்றும் தளபாடப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்தது. மந்தமான பொருளாதார வளர்ச்சியின் காரணமாக, மொத்த இறக்குமதிச் செலவினத்தில் ஏறத்தாழ 23 சதவீதத்திற்கு வகைகூறும் முதலீட்டுப்பொருட்கள் மீதான செலவினம் 2019இல் ஐ.அ.டொலர் 4,603 மில்லியனுக்கு 1.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இலங்கையின் இறக்குமதிச் செலவினத்தில் நாடுகளின்படியான பங்கீட்டு நியதிகளில் சீனா 20.2 சதவீதம் கொண்ட மிகப்பெரும் பங்கிற்கு வகைகூறிய வேளையில் அதனையடுத்து இந்தியா (19.6 சதவீதம்), ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (8.4 சதவீதம்), சிங்கப்பூர் (4.8 சதவீதம்) மற்றும் யப்பான் (4.4 சதவீதம்) என்பன காணப்பட்டன. இறக்குமதி அளவுச் சுட்டெண்ணும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்ணும் 2019இல் முறையே 5.8 சதவீதம் மற்றும் 4.8 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்து, இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி 2018 உடன் ஒப்பிடுகையில் குறைந்த இறக்குமதி அளவு மற்றும் விலைகள் இரண்டும் இணைந்ததன் விளைவாக ஏற்பட்டமையினை எடுத்துக்காட்டின. அதேவேளை, சென்மதி நிலுவையின் மீதான கொவிட்-19 தொற்றுப் பரவலினால் ஏற்படக்கூடிய சாத்தியமான தாக்கத்தினைப் பரிசீலனையில் கொண்டு மூன்று மாத காலப்பகுதிக்கு உந்து ஊர்திகள் மற்றும் குறிப்பிட்ட அத்தியாவசியமல்லா நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிகளை இடைநிறுத்துவதற்காக 2020 மாச்சில் வழிமுறைகள் நடைமுறைக்கிடப்பட்டன.

**2019இல் வர்த்தக நிலுவை குறிப்பிடத்தக்களவிற்கு மேம்பட்டு 2013இற்குப் பின்னர் மிகக் குறைந்த பற்றாக்குறையினைப் பதிவுசெய்தது.** இதற்கு வெளிநாட்டுத் துறை அழுத்தங்களின் காரணமாக அத்தகைய இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்காக 2018இல் அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கை வழிமுறைகளுக்குப் பதிலிறுத்தும் விதத்தில் 2019இல் உந்து ஊர்திகள் மற்றும் தங்கத்தின் இறக்குமதிகளில் ஏற்பட்ட குறைப்பினால் இறக்குமதிச் செலவில் ஏற்பட்ட

வரைபடம் 1.5
சென்மதி நிலுவை




கடுமையான சுருக்கமே காரணமாகும். அதேவேளை 2019இன் முதலரைப்பகுதியில் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்த ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், ஆண்டின் பின்னரைப்பகுதியில் மிதமடைந்து 2019இல் மிதமான வளர்ச்சியை மாத்திரம் பதிவுசெய்தது. 2019இல் வர்த்தகப் பற்றாக்குறை ஐ.அ.டொலர் 7,997 மில்லியனைப் பதிவுசெய்து, 2018இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 10,343 மில்லியன் கொண்ட பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 2,346 மில்லியன் கொண்ட வீழ்ச்சியைக் காட்டியது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வர்த்தகப் பற்றாக்குறை 2018இன் 11.7 சதவீதத்திலிருந்து 2019இல் 9.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**வர்த்தகப் பற்றாக்குறையில் காணப்பட்ட சுருக்கத்தின் முக்கிய தூண்டுதல் காரணமாக, முதலாந்தர வருமானப் பற்றாக்குறை விரிவடைந்தமை மற்றும் பணிகள் மற்றும் இரண்டாந்தர வருமான நிலுவைகளில் காணப்பட்ட மிதமான தன்மை என்பனவற்றிற்கிடையில் 2019இல் நடைமுறைக் கணக்கு நிலுவை குறிப்பிடத்தக்களவிற்கு மேம்பட்டது.** பணிகள் கணக்கின் மிகை 2018இன் ஐ.அ.டொலர் 3,766 மில்லியனிலிருந்து 2019இல் ஐ.அ.டொலர் 2,849 மில்லியனுக்கு நலிவடைந்தமைக்கு உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் மிதமடைந்தமையே முக்கிய காரணமாகும். இத்தாக்குதலின் விளைவாக சுற்றுலா வருகைகள் முன்னைய ஆண்டின் 2.3 மில்லியனிலிருந்து 2019இல் 1.9 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறை, முன்னைய ஆண்டின் ஐ.அ.டொலர் 2,385 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இல் ஐ.அ.டொலர் 2,426 மில்லியனுக்கு விரிவடைந்தமைக்கு நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளின் அதிகரித்த பங்கிலாபக் கொடுப்பனவுகளும் மீள்முதலீடு செய்யப்பட்ட வருவாய்களும் காரணங்களாக அமைந்த வேளையில் வட்டிக் கொடுப்பனவுகளும் 2019இல் சிறிதளவால் அதிகரித்தன. அதேவேளை, 2019இல்

1


தொழிலாளர் பணவனுப்பல்கள் தொடர்ந்தும் மிதமடைந்தமையின் காரணமாக இரண்டாந்தர வருமானக் கணக்கின் மிகை 2018இன் ஐ.அ.டொலர் 6,163 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இல் ஐ.அ.டொலர் 5,766 மில்லியனுக்குக் குறைவடைந்தது. இதன் விளைவாக, 2018இன் 3.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை ஐ.அ.டொலர் 1,808 மில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவிற்கு குறுக்கமடைந்து மொ.உ.உற்பத்தியின் 2.2 சதவீதமாகவிருந்தது.

**சொத்துப்பட்டியல் முதலீட்டில் வெளிப்பாய்ச்சலும் பாரிய படுகடன் மீள்கொடுப்பனவுகளும் காணப்பட்டமைக்கிடையிலும் நிதியியல் கணக்கு முக்கியமாக அரசாங்கத்திற்கான குறிப்பிடத்தக்க உட்பாய்ச்சலைப் பதிவுசெய்தது.** 2019 மாச்சிலும் யூனிலும் இடம்பெற்ற ஐ.அ.டொலர் 4.4 பில்லியன் கொண்ட இரண்டு நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்கல் ஐ.அ.டொலர் 327 மில்லியன் கொண்ட ப.நா. நிதிய விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் ஆறாவது மற்றும் ஏழாவது தொகுதிகளின் பெறுகைகள் என்பனவற்றின் மூலம் நிதியியல் கணக்கு வலுவடைந்தது. எனினும், வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019இல் மிதமடைந்த வேளையில், வெளிநாட்டு முதலீடுகள் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை மற்றும் அரச பிணையங்கள் சந்தையிலிருந்து தேறிய வெளிப்பாய்ச்லைப் பதிவுசெய்தமைக்கு உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களை உடனடுத்து முதலீட்டாளர் மனோபாவம் தளர்வடைந்தமையும் 2019இன் பின்னரைப்பகுதியில் உலகளாவிய சந்தையில் காணப்பட்ட நிச்சயமான தன்மைகளும் தூண்டுதலாக அமைந்தன. கூட்டுக் கடன்களின் அட்டவணையிடப்பட்ட கொடுப்பனவுகளுக்குப் புறம்பாக ஐ.அ.டொலர் 1.5 பில்லியன் கொண்ட இரண்டு நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் முதிர்ச்சியடைந்தமையின் காரணமாக 2019இல் வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளின் பேரிலான நிதியியல் பாய்ச்சல்கள் அதிகரித்தன. வங்கித்தொழில் துறை, தனியார் துறை மற்றும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் என்பன தொடர்பிலான நிதியியல் பாய்ச்சல்கள் தேறிய நிதியியல் பாய்ச்சல்களைப் பதிவுசெய்து, 2019இல் அதிகரித்த படுகடன் மீள்கொடுப்பனவுகளை முக்கியமாகப் பிரதிபலித்தது. கொவிட்-19 தொற்றின் பரவலின் காரணமாக உலகளாவிய நிதியியல் சந்தைகளில் காணப்பட்ட அதிகரித்தளவிலான நிச்சயமற்ற தன்மைகள் காணப்பட்டமைக்கிடையிலும் குறிப்பாக, அரச பிணையங்கள் சந்தையிலிருந்தான வெளிப்பாய்ச்சல்கள் 2020இன் முதற் காலாண்டிலும் தொடர்ந்தன.

**2019இல் அரசாங்கத்தினால் பாரியளவு வெளிநாட்டு நாணயப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டமைக்கிடையிலும் அரசாங்கம் மற்றும் மத்திய வங்கிக்கான குறிப்பிடத்தக்கப் உட்பாய்ச்சல்களின் உதவியுடன் 2019 இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மேம்பட்டன.** மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2018 இறுதியின் ஐ.அ.டொலர் 6.9 பில்லியனிலிருந்து 2019 இறுதியில் ஐ.அ.டொலர் 7.6 பில்லியனுக்கு அதிகரித்தன. இரண்டு நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்கலிலிருந்தான பெறுகைகள், ப.நா.நிதிய விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் இரண்டு தொகுதிகள் கிடைக்கப்பெற்றமை மற்றும் உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தையிலிருந்து மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவு என்பன 2019 இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் அதிகரிப்பதற்கு முக்கியமாகப் பங்களித்தன. 2019 இறுதியில் நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஏறத்தாழ 4.6 மாத இறக்குமதிகளுக்கும் குறுங்கால பொறுப்புக்களில் ஏறத்தாழ 57 சதவீதத்திற்கும் போதுமானதாக இருந்தன. மேலும், மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வைப்புக் கூட்டுத்தாபனங்களின் வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த பன்னாட்டு ஒதுக்குகள் 2019 இறுதியில் ஐ.அ.டொலர் 10.4 பில்லியனுக்கு அதிகரித்து 6.3 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகவிருந்தன.

**2019 இறுதியில் இலங்கையின் வெளிநாட்டுப் படுகடன் மேலும் உயர்வடைந்தமைக்கு அரசாங்கத்தின் வெளிநாட்டுப் படுகடன் அதிகரித்தமையே முக்கிய காரணமாகும்.** 2019 இறுதியில் நாட்டின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் ஐ.அ.டொலர் 55.9 பில்லியனுக்கு அதிகரித்தது. இது 2018 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 59.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொ.உ.உற்பத்தியின் 66.6 சதவீதத்திற்குச் சமமானதாகக் காணப்பட்டது. சந்தைப் பெறுமதியின் அடிப்படையில், நாட்டிற்கான பன்னாட்டு முறியின் வெளிநின்ற நிலுவை 2019 இறுதியில் ஐ.அ.டொலர் 15.2 பில்லியனுக்கு அதிகரித்து புதிய நாட்டிற்கான முறிகளின் வழங்கல்கள் மற்றும் முதிர்ச்சியின் தேறிய தாக்கத்தினைப் பிரதிபலித்தது. வதிவற்றோரின் திறைசேரி முறிகளினது உடமைகளின் வெளிநின்ற நிலுவை 2019இல் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் வதிவற்றோரின் திறைசேரி உண்டியல் உடமைகள் இவ்வாண்டுப்பகுதியில் சிறிதளவு அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. அதேவேளையில், அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன்களின் வெளிநின்ற நிலுவை 2019இல் காணப்பட்ட தேறிய மீள்கொடுப்பனவின் காரணமாக சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. ப.நா.நிதிய விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் தொகுதியின் பெறுகை, ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்திற்கான பொறுப்புக்களில் ஏற்பட்ட சிறிதளவான அதிகரிப்பு என்பனவற்றின் காரணமாக 2019 இறுதியில் மத்திய வங்கியின் வெளிநின்ற வெளிநாட்டுப் பொறுப்புக்கள் அதிகரித்தன. எனினும், வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுப் பொறுப்பின் நிலைமை வீழ்ச்சியடைந்தமைக்கு தேசிய சேமிப்பு வங்கியினால் வழங்கப்பட்ட பன்னாட்டு முறிகளின் முதிர்ச்சியும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின்

வரைபடம் 1.6
உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் தலையீடும் செலாவணி வீதமும்




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

வெளிநின்ற கடன் பொறுப்புக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியுமே காரணமாகும். நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளின் கம்பனிகளுக்கிடையிலான கடன்பாடுகள் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தமையானது கம்பனிகளுக்கிடையிலான கடன்களில் ஏற்பட்ட அதிகரிப்பினையும் அதேபோன்று 2019 இறுதியில் முக்கிய கம்பனிகளின் பங்குதாரரால் முற்பணங்களையும் பிரதிபலித்தது.

**உள்நாட்டு மற்றும் உலகளாவிய அபிவிருத்திகளுக்குப் பதிலிறுத்தும் விதத்தில் சொத்துப்பட்டியல் முதலீடுகளின் வெளிப்பாய்ச்சல் காரணமாக சில தற்காலிகமான தளம்பல்கள் காணப்பட்டமைக்கிடையிலும் நடைமுறைக் கணக்கில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களின் காரணமாக 2019 காலப்பகுதியில் செலவாணி வீதம் பரந்தளவிற்கு உறுதியாகக் காணப்பட்டது.** வர்த்தகப் பற்றாக்குறை குறிப்பிடத்தக்களவிற்கு சுருக்கமடைந்தமை மற்றும் நிதியியல் உட்பாய்ச்சல்களில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பனவற்றின் விளைவாக 2019இன் முதல் நான்கு மாத காலப்பகுதியில் செலாவணி வீதம் வலுவடைந்தது. எனினும், செலாவணி வீதம், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களினை உடனடுத்தும் வெளிநாட்டவர்களின் சொத்துப்பட்டியலின் முதலீடுகள் சில மீளப்பெறப்படுவதற்கும் காரணமாகிய உலகளாவிய சந்தைகளில் காணப்பட்ட அதிகளவு நிச்சயமற்ற தன்மைகளின் தாக்கத்தினை பிரதிபலித்து 2019 இறுதிப்பகுதியிலும் சில அழுத்தங்களைக் கொண்டிருந்தது. இருப்பினும் கூட, 2019இன் பெரும்பாலான காலப்பகுதியில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் நிலவிய சாதகமான திரவத்தன்மை நிலைமைகள் 2019இல் தேறிய அடிப்படையில் ஐ.அ.டொலர் 387 மில்லியனை ஈர்த்துக் கொள்வதற்கு மத்திய வங்கியை இயலுமைப்படுத்தியது. ஒட்டுமொத்தமாக, இலங்கை ரூபா, ஐ.அ.டொலருக்கெதிராக 2018இன் 16.4 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க தேய்வுடன் ஒப்பிடுகையில் 2019இல் 0.6 சதவீதத்தினால் உயர்வடைந்தது. பல முக்கிய வர்த்தகப் பங்காளர்களின் நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் பெயரளவு உயர்வினை அணிப்படுத்தியமையும் குறுக்கு நாணயச் செலாவணி வீதங்களின் அசைவுகளை ஒன்றுசேர்த்தமையும் பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீதம் மற்றும் உண்மைத்தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் இரண்டையும் 2019இல் உயர்வடையச் செய்தன. எனினும், உண்மைத்தாக்கமுள்ள செலாவணி வீதம் தொடர்ந்தும் தள ஆண்டின் மட்டத்திற்குக் கீழே விளங்கி, செலாவணி வீத நியதிகளில் நாட்டின் போட்டித்தன்மையினைப் பிரதிபலித்தது. சந்தை அடிப்படைகளை அடிப்படையாகக் கொண்டு செலாவணி வீதத்தினை நிர்ணயிப்பதில் நெகிழ்ச்சித்தன்மையினைத் தொடர்ந்தும் மத்திய வங்கி அனுமதித்த வேளையில், உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தையில் தலையிடுதல், இலங்கை ரூபாவின் மிகையான தளம்பலைத் தடுப்பதற்கும் ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்கும் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அதேவேளையில், 2020 மாச்சு இரண்டாம் வாரம் வரை உறுதியாகக் காணப்பட்ட செலாவணி வீதம் கொவிட்-19 தொற்றின் பரவலின் காரணமாக குறிப்பிடத்தக்க அழுத்தத்தினை எடுத்துக்காட்டிய வேளையில், சந்தைப் பங்கேற்பாளர்களினதும் வெளிநாட்டு முதலீட்டாளர்களினதும் ஊகங்களும் நாணயத்தின் உறுதிப்பாட்டின் மீது அழுத்தத்தினை ஏற்படுத்தின. வெளிநாட்டுத் துறையின் மீதான மிகையான அழுத்தத்தினைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் பல வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்ட வேளையில், பிராந்திய நாடுகளின் நாணயங்களுடன் இசைந்துசெல்லும் விதத்தில் ரூபா தேய்வடைவதற்கு அனுமதிக்கப்பட்டது.

## இறைத் துறை அபிவிருத்திகள்


**அரச அரசிறையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சி மற்றும் அரச செலவினத்தில் ஏற்பட்ட உயர்வு என்பனவற்றின் காரணமாக 2019இல் இறைத்திரட்சி செய்முறை குறிப்பிடத்தக்களவிற்கு சவால்நிறைந்ததாகக் காணப்பட்டது.** 2018ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டில் காணப்பட்ட அரசியல் நெருக்கடியின் காரணமாக 2019ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தினைச் சமர்ப்பிப்பது 2019 மாச்சு வரை தாமதப்படுத்தப்பட்டதுடன் இறைத் தொழிற்பாடுகள் 2019 சனவரியிலிருந்து ஏப்பிறல் வரை கணக்கு வாக்கெடுப்பின் மீது மேற்கொள்ளப்பட்டன. வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை 2018இன் மொ.உ.உற்பத்தியின் 5.3 சதவீதத்திலிருந்து 2019இல் மொ.உ.உற்பத்தியின் 4.4 சதவீதத்திற்குக் குறைப்பதனை இலக்காகக் கொண்ட 2019இன் வரவு செலவுத்திட்டம் 2019 ஏப்பிறல் 5ஆம் நாளன்று ஒப்புதல் வழங்கப்பட்ட வேளையில், நடைமுறைக் கணக்கிலும் ஆரம்ப நிலுவையிலும் மிகைகள் 2019இல் முறையே மொ.உ.உற்பத்தியில் 0.2 சதவீதத்திலும் 1.5 சதவீதத்திலும் இலக்கிடப்பட்டன. எனினும், கணிசமானளவு

1

இறக்குமதிச் சுருக்கம், குறிப்பாக உந்து ஊர்திகளின், காரணமாக அரச அரசிறையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சி, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் காரணமாக மேலும் மோசமாகிப்போன சராசரிக்கும் குறைவான பொருளாதார நடவடிக்கை, அதேபோன்று உதவுதொகை மற்றும் மாற்றல்கள், சம்பளங்கள் மற்றும் கூலிகள் என்பனவற்றின் பேரில் முக்கியமாக ஏற்பட்ட மீண்டெழும் செலவினத்தின் உயர்வு என்பனவற்றின் காரணமாக 2019இல் இறைச் செயலாற்றம் மேலும் மோசமடைந்தது. மேலும், அரசின் 2019இன் வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்ட குறிப்பிட்ட அரசிறை வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதில் காணப்பட்ட தாமதமும் 2019இல் பலயீனமான செயலாற்றத்திற்குப் பங்களித்தது. இதன் விளைவாக, முக்கியமான இறைக் குறிகாட்டிகள் 2019இன் வரவு செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட மட்டங்களிலிருந்தும் 2018இன் ஒப்பீடுகளிலிருந்தும் பிறழ்வடைந்து காணப்பட்டன. இதன்படி, வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை 2018இன் மொ.உ.உற்பத்தியின் 5.3 சதவீதத்திலிருந்து 2019இல் மொ.உ.உற்பத்தியின் 6.8 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. அரசின் குறைச் சேமிப்பினைப் பிரதிபலிக்கின்ற நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை முன்னைய ஆண்டின் 1.2 சதவீதத்திலிருந்து 2019இல் மொ.உ.உற்பத்தியின் 2.7 சதவீதத்திற்கு அதிகரித்ததுடன் திரண்ட வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையிலிருந்து வட்டிக் கொடுப்பனவுகளை நீக்குகின்ற ஆரம்ப நிலுவை 2018இன் மொ.உ.உற்பத்தியின் 0.6 சதவீதம் கொண்ட மிகையுடன் ஒப்பிடுகையில் 2019இல் மொ.உ.உற்பத்தியின் 0.8 சதவீதம் கொண்ட பற்றாக்குறையினைப் பதிவுசெய்தது. இதன் விளைவாக மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மத்திய அரசாங்கப் படுகடன் 2018 இறுதியின் 83.7 சதவீதத்திலிருந்து 2019 இறுதியில் 86.8 சதவீதத்திற்கு உயர்வடைந்து, வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை நிதியிடுவதற்கு காணப்பட்ட உயர்ந்த தேறிய கடன்பாடுகளின் தாக்கத்தினையும் 2019இன் பெயரளவு மொ.உ.உற்பத்தியின் ஒப்பீட்டு ரீதியில் மிதமான வளர்ச்சியையும் பிரதிபலித்தது.

**மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக அரச அரசிறை 2018இன் 13.4 சதவீதத்திலிருந்து 2019இல் 12.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.** மறைமுக வரிகளிலிருந்தான அரசிறையில், முக்கியமாக உந்து ஊர்திகள் மீதான கலால் தீர்வை, பெறுமதிசேர் வரி, செஸ்தீர்வை, துறைமுகங்கள் மற்றும் வானூர்திநிலையங்கள் தீர்வை, இறக்குமதித் தீர்வைகள் என்பனவற்றிலிருந்தான அரசிறை 2019இன் வரி அரசிறையில் குறைந்த செயலாற்றத்தினை தோற்றுவித்த போதும் வருமான வரிச் சேகரிப்பில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. பெயரளவு நியதிகளில் அரச அரசிறை முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.1,920.0 பில்லியனிலிருந்து 2019இல் ரூ.1,890.9 பில்லியனுக்கு 1.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் வரி அரசிறை 2019இல் ரூ.1,734.9 பில்லியனுக்கு 1.3 சதவீதத்தினால் சிறிதளவால் அதிகரித்தது. இதற்கு, வருமான வரி அரசிறையில், குறிப்பாக புதிய உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழான கம்பனி வரிகள் மற்றும் படுகடன் மீள்கொடுப்பனவுத் தீர்வை என்பனவற்றில் ஏற்பட்ட அதிகரிப்புக்களே காரணமாகும். மாறாக, வரியல்லா அரசிறை பெயரளவு நியதிகளிலும் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாகவும் 2019இல் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு கட்டணம் மற்றும் விதிப்புக்களிலிருந்தான குறைவான அரசிறை, மத்திய வங்கியிலிருந்தான பங்கிடத்தக்க இலாபம் கிடைக்காமல் போனமை மற்றும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளிலிருந்தான இலாபம் மற்றும் பங்கிலாப மாற்றல்கள் குறைவடைந்தமை என்பன காரணங்களாயின.

வரைபடம் 1.7
இறைத்துறை செயலாற்றத்தின் திரட்டு
(மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக)




*மூலம்:* நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு


**மொத்தச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் 2018இன் 18.7 சதவீதத்திலிருந்து 2019இல் மொ.உ.உற்பத்தியின் 19.4 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு மீண்டெழும் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு மூலதனச் செலவினத்திலும் தேறிய கடன்வழங்கலிலும் ஏற்பட்ட வீழ்ச்சியை விஞ்சிக் காணப்பட்டமையே காரணமாகும்.** மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மீண்டெழும் செலவினம் 2018இன் 14.5 சதவீதத்திலிருந்து 2019இல் 15.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. பெயரளவு நியதிகளில், இது, 2018இன் ரூ.2,089.7 பில்லியனிலிருந்து 2019இல் ரூ.2,301.2 பில்லியனுக்கு 10.1 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். பெயரளவு நியதிகளில், மொத்த வட்டிச் செலவினம் 2018இன் ரூ.852.2 பில்லியனிலிருந்து 2019இல் ரூ.901.4 பில்லியனுக்கு 5.8 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில், வெளிநாட்டு வட்டிக் கொடுப்பனவுகள் மீதான செலவினம் 2019இல் ரூ.248.6 பில்லியனுக்கு 16.9 சதவீத்தினால் அதிகரித்தது. வட்டி வீதங்கள் உள்நாட்டு ரீதியாகவும் உலகளாவிய ரீதியாகவும் வீழ்ச்சியடைந்தமைக்கு மாறாக குறிப்பாக, திறைசேரி உண்டியல் மற்றும் வெளிநாட்டு வர்த்தகக் கடன்களின் பேரிலான

வெளிநின்ற படுகடனின் அதிகரிப்பு இவ்வாண்டுப்பகுதியில் வட்டிச் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பிற்குப் பங்களித்தது. எனினும், மூலதனச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் 2018இன் மொ.உ.உற்பத்தியின் 4.2 சதவீதத்திலிருந்து 2019இல் மொ.உ.உற்பத்தியின் 4.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. பெயரளவு நியதிகளில் மூலதனச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் 2018இன் ரூ.603.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இல் ரூ.614.1 பில்லியனுக்கு 1.8 சதவீதத்தினால் அதிகரித்தன. அரச முதலீடு முன்னைய ஆண்டின் மொ.உ.உற்பத்தியின் 4.4 சதவீதத்திலிருந்து (ரூ.625.0 பில்லியன்) 2019இல் மொ.உ.உற்பத்தியின் 4.2 சதவீதத்திற்கு (ரூ.631.2 பில்லியன்) வீழ்ச்சியடைந்தது.

**வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை 2019ஆம் ஆண்டுப்பகுதியில் உள்நாட்டு மூலங்களினூடாகவே பெருமளவிற்கு நிதியிடப்பட்டது.** இதன்படி, வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையில் 69.1 சதவீதம் உள்நாட்டு நிதியிடலின் மூலம் பூர்த்திசெய்யப்பட்ட வேளையில் மிகுதி வெளிநாட்டு மூலங்களினூடாக நிதியிடப்பட்டது. பெயரளவு நியதிகளில், உள்நாட்டு மூலங்களிலிருந்தான தேறிய நிதியிடல் 2018இன் ரூ.437.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இல் ரூ.702.4 பில்லியனுக்கு 60.6 சதவீதத்தினால் அதிகரித்து வங்கி மற்றும் வங்கியல்லா மூலங்கள் இரண்டிலுமிருந்தான கடன்பாடுகளில் ஏற்பட்ட அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. வங்கித்தொழில் துறையிலிருந்தான கடன்பாடுகள், 2018இன் ரூ.73.1 பில்லியன் கொண்ட தேறிய மீள்கொடுப்பனவுடன் ஒப்பிடுகையில் 2019இல் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் ரூ.312.6 பில்லியன் பெறுமதி திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் தேறிய கொள்வனவுகளில் பிரதிபலிக்கப்பட்டவாறு 2019இல் ரூ.193.1 பில்லியனுக்கு 76.4 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தன. அதேவேளை, மத்திய வங்கிக்கான ரூ.108.1 பில்லியன் கொண்ட தேறிய மீள்கொடுப்பனவுகள் 2019இல் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் ரூ.301.2 பில்லியன் கொண்ட தேறிய நிதியிடலின் அதிகரிப்பின் ஒரு பகுதியை எதிரீடு செய்தன. வங்கியல்லா மூலங்களினூடான தேறிய நிதியிடல் 2018இன் ரூ.327.8 பில்லியனிலிருந்து 2019இல் ரூ.509.3 பில்லியனுக்கு அதிகரித்தது. எனினும், வெளிநாட்டு மூலங்களிலிருந்தான தேறிய நிதியிடல் 2018இன் ரூ.323.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இல் ரூ.314.1 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தமைக்கு ரூ.83.5 பில்லியன் கொண்ட வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதிகளின் மீள்கொடுப்பனவுகளே முக்கிய காரணமாகும். நாட்டிற்கான பன்னாட்டு முறிகளினூடான தேறிய கடன்பாடுகள் இவ்வாண்டுப்பகுதியில் ரூ.461.4 பில்லியனாக[1] விளங்கின. அதேவேளை, வெளிநாட்டு செயற்றிட்டக் கடன்கள் 2019இல் ரூ.15.2 பில்லியன் கொண்ட தேறிய மீள்கொடுப்பனவினைப் பதிவுசெய்தன.

வரைபடம் 1.8

மத்திய அரச படுகடன்
(மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக)




*மூலம்* : நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

**மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மத்திய அரசாங்கப் படுகடன் 2018 இறுதியின் 83.7 சதவீதத்திலிருந்து 2019 இறுதியில் 86.8 சதவீதத்திற்கு அதிகரித்தது.** இவ்வதிகரிப்பிற்கு, வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை நிதியிடுவதற்கான உயர்ந்த தேறிய கடன்பாடுகளும் 2019இல் பெயரளவு மொ.உ.உற்பத்தியில் ஏற்பட்ட ஒப்பீட்டு ரீதியில் மிதமான வளர்ச்சியுமே முக்கிய காரணங்களாகும். பெயரளவு நியதிகளில், மத்திய அரசாங்கப் படுகடன் 2018 இறுதியின் ரூ.12,030.5 பில்லியனிலிருந்து 2019 இறுதியில் ரூ.13,031.5 பில்லியனுக்கு அதிகரித்தது. மொத்த வெளிநின்ற உள்நாட்டுப் படுகடன் ரூ.6,629.1 பில்லியனுக்கு 9.2 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் மொத்த வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடனின் ரூபாப் பெறுமதி 2019 இறுதியில் ரூ.6,402.4 பில்லியனுக்கு 7.4 சதவீதத்தினால் அதிகரித்தது. வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடனின் பெயரளவு அதிகரிப்பிற்கு, படுகடன் இருப்பிலுள்ள சில குறித்துரைக்கப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபா தேய்வடைந்தமை ஓரளவிற்குக் காரணமாக இருக்க முடியும். வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட வெளிநின்ற படுகடன் இருப்பு, வெளிநாட்டுச் செலாவணி அசைவுகளின் காரணமாக ரூபாப் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்களைக் கருத்தில் கொள்ளாது வெளிநாட்டு நாணய நியதிகளில் மாற்றமின்றிக் காணப்படுமென்பது குறிப்பிடத்தக்கதொன்றாகும் என்பதுடன் பொதுவாக அரசாங்கத்திற்கான வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்களைப் பயன்படுத்தி தீர்ப்பனவு செய்யப்படுவதனால் இது செலாவணி வீத அசைவுகளை முக்கியமற்றதாக்குகின்றது.

1 இது நாட்டிற்கான பன்னாட்டு முறிகளினூடான ரூ.782.5 பில்லியன் (ஐ.அ.டொலர் 4.4 பில்லியன்) கொண்ட கடன்பாடுகளையும் 2019இல் ரூ.269.8 பில்லியன் கொண்ட மீள்கொடுப்பனவுகளையும் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ரூ.51.4 பில்லியன் கொண்ட பயன்படுத்தப்படாத நிலுவையினையும் உள்ளடக்கியிருந்தது.

1

**2019 இறுதியில் சனாதிபதி தேர்தலின் பின்னர் பொருளாதாரத்தினை புத்தெழுச்சிப்படுத்துவதற்காக, இறைக் கொள்கைப் பணிப்புரைகளுக்குச் செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க சீராக்கங்களைத் தொடர்ந்து, கொவிட்-19 தொற்று பரவத் தொடங்கியமையின் காரணமாக 2020இன் முதற் காலாண்டுப்பகுதியில் அரசாங்கம் பல இறை வழிமுறைகளை அறிவித்தது.** 2019 இறுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட வழிமுறைகள் செலவிடத்தக்க வருமானத்தினை அதிகரிப்பதனையும் தனியார் துறை நுகர்வினையும் முதலீடுகளையும் ஊக்குவிப்பதனையும் இலக்காகக் கொண்டு மற்றைய சீர்திருத்தங்களுடன் வரிச் சலுகைகளின் தொடரை உள்ளடக்கியிருந்தது. 2020இன் முதற்காலாண்டுப் பகுதியில் கொவிட்-19 தொற்றுப் பரவலினையடுத்து நாடு முடக்குதலுக்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளமையினால் அமைச்சரவை பல்வேறு நோக்கங்களுக்காக அவசர அடிப்படையில் நிதிகளை ஒதுக்கீடு செய்தது. அவை சிறிய மற்றும் நடுத்தரளவு ஒப்பந்ததாரர்களின் நிலுவையிலுள்ள கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்வதற்கான ரூ.5 பில்லியன், மருந்தாக்கற்பொருட்களைக் கொள்வனவு செய்தமையின் பேரில் தனியார் துறை நிறுவனங்களுக்கான அரசின் நிலுவைகளைத் தீர்ப்பனவு செய்வதற்கான ரூ.10 பில்லியன், வளமாக்கிக் கொள்வனவு நிலுவையைத் தீர்ப்பனவு செய்வதற்கான ரூ.3 பில்லியன் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. மேலும், அரசாங்கம் தடுப்பு நடவடிக்கைகளுக்காக ரூ.500 மில்லியனை ஒதுக்கியது. தாழ்ந்த பன்னாட்டு எரிபொருட்களின் விலைகளைப் பயன்படுத்தி 6 மாத காலப்பகுதிக்குள் ரூ.200 பில்லியனை திரட்டிக் கொள்ளும் நோக்கத்துடன் எரிபொருள் விலை சமநிலைப்படுத்தல் நிதியமொன்றினை உருவாக்குவதற்கான வழிமுறைகளும் முன்னெடுக்கப்பட்டன. அரசாங்கம் பெறுமதிசேர் வரி மற்றும் வருமான வரிகள் மற்றும் ஓட்டுநர் உரிமம் புதுப்பித்தல் கட்டணம் என்பனவற்றைச் செலுத்தும் இறுதித் திகதி ஏப்பிறல் 30ஆம் திகதிவரை நீடித்தது. அண்மைய ஆட்சேர்ப்பின் போது தெரிவுசெய்யப்பட்ட அனைத்துப் பட்டதாரிகளுக்கும் 2020 மாச்சு மாதத்திற்கான ரூ.20,000 பயிற்சிப்படி வழங்கப்பட்டது. *அக்ரஹாரா* காப்புறுதி நன்மைகள், கொவிட்-19 பரவலைக் கட்டுப்படுத்துவதில் ஈடுபட்டுள்ள நலத்துறை, பொலிஸ், சிவில் பாதுகாப்பு மற்றும் அனைத்து அரச ஊழியர்களுக்கும் இரண்டு மடங்காக்கப்பட்டது. லங்கா சதொச மற்றும் கூட்டுறவுக் கடைகளை பெறுமதிசேர் வரி மற்றும் ஏனைய உள்நாட்டு வரிகள் மற்றும் கட்டணங்களிலிருந்து விலக்களிப்பதற்கான வழிமுறைகள் முன்னெடுக்கப்பட்டன. சமுர்த்தி மற்றும் குறைந்த வருமானக் குடும்பங்களுக்கு வாராந்த அடிப்படையில் ஊட்டச்சத்து மிக்க உணவு வகைகளை வழங்கும் பொருட்டு உரித்துச் சான்றிதழ்களை அத்தகைய குடும்பங்களுக்கு வழங்குமாறு சமுர்த்தி அதிகாரசபைக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது. தேவையான நலக்கவனிப்பு மற்றும் நிவாரண வழிமுறைகளுக்கு வசதியளிக்கும் விதத்தில் கொவிட்-19 நலக்கவனிப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு நிதியமொன்று ஆரம்பிக்கப்பட்ட வேளையில் இந்நிதியத்திற்கான பங்களிப்புக்கள் தொடர்பில் வரிகள் மற்றும் வெளிநாட்டுச் செலவாணிக் கட்டுப்பாடுகளை நீக்குவதற்கு வழிமுறைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், இப்பிராந்தியத்தில் கொவிட்-19 பரவுவதனைத் தடுப்பதற்காக சார்க் கொவிட் - 19 அவசரகால நிதியத்தினை உருவாக்குவதற்காக ஐ.அ.டொலர் 5 மில்லியனை வழங்க அரசாங்கம் உறுதியளித்திருக்கிறது. அரசாங்கம் குறைந்த வருமானம் பெறுவோர், பாதிக்கப்படக்கூடிய குடும்பங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கான ஒரே தடவையிலான படியாக ரூ.5,000 கொண்ட காசுப்படியினை வழங்குவதனையும் நடைமுறைப்படுத்தியது.

**அதேவேளை, 2019இல் இலங்கையின் தோற்றப்பாடு கீழ் நோக்கித் திருத்தப்பட்ட போதும் இலங்கையின் நாட்டிற்கான தரமிடல் முக்கியமான பன்னாட்டு தரமிடல் முகவர்களினால் உறுதிப்படுத்தப்பட்டது.** பிட்ஜ் றேட்டிங் மற்றும் ஸ்டான்டட் அன்ட் புவர்ஸ் இலங்கையின் தரமிடல் “B” இல் உறுதிப்படுத்திய வேளையில் தோற்றப்பாட்டினை 2019 திசெம்பரிலும் 2020 சனவரியிலும் முறையே ‘உறுதியான தன்மை’ இலிருந்து ‘எதிர்க்கணியத்திற்கு’ திருத்தின. தோற்றப்பாட்டின் திருத்தம் முக்கியமாக நாட்டின் இறை நிலைமையின் சாத்தியமான பலயீனத்திலிருந்து தோன்றக்கூடிய இடர்நேர்வினை பிரதிபலிப்பதாக இருந்தது. எனினும், மூடி இன்வெஸ்டர் சேர்விஸ் 2019இற்கான அதன் தரமிடல் “B2” இல் பேணியதுடன் ‘உறுதியானது’ என்ற தோற்றப்பாட்டில் மாற்றம் எதனையும் செய்யவில்லை[2].

## நாணயத் துறை அபிவிருத்திகள்


**குறைவான கேள்வியினால் தூண்டப்படும் பணவீக்க அழுத்தங்கள் மற்றும் நன்கு உறுதிநிலைப்படுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்ப்புக்கள் காணப்படும் சூழ்நிலையொன்றில், இலங்கை மத்திய வங்கி பொருளாதார நடவடிக்கைகளின் புத்தெழுச்சிக்கு உதவுவதற்கும் தனியார் துறைக்கான கொடுகடன் வழங்கலில் காணப்படும் மந்தமான வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்குமாக 2019இல் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலையினைப் பின்பற்றியது.** நடுநிலையான நாணயக் கொள்கை நிலைக்குள், மத்திய வங்கி உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் அனைத்து ரூபா வைப்புப் பொறுப்புக்களின் மீதும் ஏற்புடைத்தான நியதி ஒதுக்கு விகிதத்தினை 2018 நவெம்பரிலும் 2019 மாச்சிலும் மொத்தமாக 2.50 சதவீதப் புள்ளியினால் குறைத்தமையின் மூலம் உள்நாட்டுப் பணச்சந்தையில் காணப்பட்ட விடாப்பிடியான திரவத்தன்மைப் பற்றாக்குறை கட்டுப்படுத்தப்பட்டது. இதன் விளைவாக, சந்தைத் திரவத்தன்மை 2019 ஏப்பிறல்

2 2020 ஏப்பிறல் 17இல் மூடி இலங்கையின் தரமிடலை ‘தரமிறக்குதலுக்கான மீளாய்வில்’ வைத்திருப்பதாக அறிவித்தது.

நடுப்பகுதியிலிருந்து மிகை மட்டத்திற்கு மாற்றமடைந்தது. எனினும், சந்தைத் திரவத்தன்மையில் முன்னேற்றங்கள் காணப்பட்ட போதும் சந்தை வட்டி வீதங்கள் கீழ் நோக்கி குறைவதில் நெகிழ்ச்சியற்ற தன்மை காணப்பட்டது. இதன் காரணமாக நிதியியல் முறைமைக்கூடாக நாணயக் கொள்கை ஊடுகடத்தலை விரைவுபடுத்தும் நோக்குடன் மத்திய வங்கி 2019 ஏப்பிறலில் உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் வைப்புச் சாதனங்களின் மீது வட்டி வீத உச்சஎல்லையொன்றினை விதித்தது. மேலும், தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலை ஆரம்பமானதுடன் மத்திய வங்கி சந்தைக் கடன்வழங்கல் வீதங்களைக் குறைப்பதனையும் தனியார் துறைக்கான கடன்பாய்ச்சலை உத்வேகப்படுத்துவதனையும் நோக்கமாகக் கொண்டு கொள்கை வட்டி வீதங்களை 2019 மேயிலும் ஓகத்திலும் மொத்தமாக 100 அடிப்படைப் புள்ளிகளினால் குறைத்துக் கொண்டது. இவ்வழிமுறைகளுக்கு பதிலிறுத்தும் விதத்தில் வைப்பு வீதங்கள் குறிப்பிடத்தக்களவிற்கு கீழ் நோக்கிச் சீராக்கப்பட்ட வேளையில் சந்தைக் கடன்வழங்கல் வீதங்களின் சீராக்கம் பொதுவாகவே போதுமானதாக இருக்கவில்லை. இதன் விளைவாக, மத்திய வங்கி 2019 செத்தெம்பரில் சந்தைக் கடன்வழங்கல் வீதங்களின் மீது உச்சஎல்லையொன்றில் விதித்த வேளையில், உரிமம்பெற்ற வங்கிகளின் மீது விதிக்கப்பட்டிருந்த வைப்பு வீத உச்சஎல்லையினை புறக்கீடு செய்தது. இது, ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியில் சந்தைக் கடன்வழங்கல் வீதங்கள் தொடர்ந்தும் கீழ் நோக்கிச் சீராக்கப்படுவதற்கு வழிவகுத்தது. எனினும், பொருளாதார நடவடிக்கையின் மெதுவான வளர்ச்சியைப் பரிசீலனையில் கொண்டு, மத்திய வங்கி கொள்கை வட்டி வீதங்களை 2020 சனவரியில் 50 அடிப்படைப் புள்ளிகளினால் மேலும் குறைத்தது. மேலும், நாட்டின் கொவிட்-19 தொற்றுப் பரவலினைப் பரிசீலனையில் கொண்டும் அதன் உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கையிலும் நிதியியல் சந்தைகளிலும் கொண்டிருக்கக்கூடிய தாக்கத்தினையும் பரிசீலனையில் கொண்டும் மத்திய வங்கி, அவசரகால நடவடிக்கையொன்றாக 2020 மாச்சிலும் ஏப்பிறலிலும் மொத்தமாக 50 அடிப்படைப் புள்ளிகளினாலும் நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டினை 2020 மாச்சில் 1.00 சதவீதப் புள்ளியினால் 4.00 சதவீதத்திற்கும் குறைத்துக் கொண்டது. இதன்படி, 2020 ஏப்பிறல் 3ஆம் திகதி வியாபாரம் மூடப்படும் நேரத்திலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் முறையே 6.00 சதவீதமாகவும் 7.00 சதவீதமாகவும் இருக்கும்.

வரைபடம் 1.9

துணைநில் வீத வீச்சு மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட சந்தை வட்டி வீதங்கள்




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

**மத்திய வங்கியின் நாணயக் கொள்கை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளின் விளைவாக 2019ஆம் ஆண்டுப்பகுதியில் சந்தை வட்டி வீதங்கள் வீழ்ச்சியடைந்தன.** 2018 செத்தெம்பரிலிருந்து கொள்கை வட்டி வீத வீச்சின் மேல் எல்லையில் காணப்பட்ட சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம், திரவத்தன்மை நிலைமைகள் மேம்பட்டமையின் காரணமாக, 2019 மாச்சிலிருந்து படிப்படியாக குறைவடையத் தொடங்கி அதன் பின்னர் கொள்கை வீத வீச்சின் ஏறத்தாழ நடுப்பகுதியில் அசையத் தொடங்கியது. 2019 ஏப்பிறலில் வைப்பு வட்டி வீதங்களின் மீது விதிக்கப்பட்ட உச்சஎல்லை, மேம்பட்ட திரவத்தன்மை நிலைமைகள், கொள்கை வட்டி வீதங்கள் குறைவடைந்தமை போன்றவற்றிற்கு பதிலிறுத்தும் விதத்தில் 2019 மேயிலிருந்து வைப்பு வட்டி வீதங்கள் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமை அவதானிக்கப்பட்டது. இதற்கமைய, சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் 2019ஆம் ஆண்டுப்பகுதியில் 61 அடிப்படைப் புள்ளிகளினால் 8.20 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மத்திய வங்கியின் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை வழிமுறைகளுக்கு மத்தியிலும் கீழ்நோக்கிச் சீராக்கப்படுவதற்கு நெகிழ்ச்சித்தன்மையற்றுக் காணப்பட்ட சந்தைக் கடன்வழங்கல் வீதங்கள், 2019 செத்தெம்பரில் கடன்வழங்கல் வீதங்கள் மீது விதிக்கப்பட்ட உச்சஎல்லையுடன் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தன. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் அவர்களது முதன்மை வாடிக்கையாளர்களுக்கு வார காலத்தில் வழங்கப்படும் குறுங்காலக் கடன்கள் மற்றும் முற்பணங்களுக்குப் பிரயோகிக்கப்படும் வட்டி வீதங்களை அடிப்படையாகக் கொண்ட வாராந்த சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதம் 2019ஆம் ஆண்டுப்பகுதியில் 235 அடிப்படைப் புள்ளிகளினால் 9.74 சதவீதத்திற்குக் குறைவடைந்தது. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்டு வெளிநிற்கும் அனைத்துக் கடன்கள் மற்றும் முற்பணங்களின் வட்டி வீதங்களை அடிப்படையாகக் கொண்ட சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதம் 2019ஆம் ஆண்டுப்பகுதியில் 13.59 சதவீதத்திற்கு 81 அடிப்படைப் புள்ளிகளினால் குறைவடைந்தன. எனினும், 2019ஆம் ஆண்டுப்பகுதியில் சந்தைக் கடன்வழங்கல் வீதங்களின் குறைப்பு எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க குறைவாகவே காணப்பட்டது.


1

அதேவேளை, தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கையினை பிரதிபலிக்கின்ற விதத்தில் அரச பிணையங்கள் மீதான விளைவு 2019இல் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியைக் காட்டியபோதும் அரசாங்கத்தின் நிதியிடல் தேவைப்பாடுகள் அதிகரிக்கக்கூடிய சாத்தியங்கள் தொடர்பில் மோசமான சந்தை ஊகங்களின் காரணமாக 2019 இறுதியில் திறைசேரி உண்டியல் மீது சிறிதளவு உயர்வு அவதானிக்கப்பட்ட போதும் 2019 ஆண்டுப்பகுதியில் அரச பிணையங்கள் மீதான விளைவில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சிகள் அவதானிக்கப்பட்டன. எனினும், 2019 காலப்பகுதியில் முதலாந்தரச் சந்தை திறைசேரி உண்டியல் மீதான விளைவுகள் 197 - 275 அடிப்படைப் புள்ளிகளினால் வீழ்ச்சியடைந்தன. முதலாந்தரச் சந்தையில் திறைசேரி முறிகள் மீதான விளைவுகளும் 2019ஆம் ஆண்டுப்பகுதியில் கணிசமாக வீழ்ச்சியடைந்த வேளையில், அரசாங்கம் போட்டித்தன்மை வாய்ந்த விளைவுகளில் இலங்கை அபிவிருத்தி முறிகளை வெளியிட்டது. அரச பிணையங்களின் இரண்டாந்தரச் சந்தை விளைவு வளையி, குறுங்காலத்திலிருந்து நடுத்தர காலம் வரையான விளைவுகளில் செய்யப்பட்ட பாரிய சீராக்கத்துடன் 2019 காலப்பகுதியில் கீழ் நோக்கிப் பெயர்ந்தது. 2019இன் தொடக்கத்தில் உயர்வடைந்து காணப்பட்ட கம்பனிப் படுகடன் சாதனங்கள் மீதான ஏற்புடைத்தான வட்டி வீதங்கள் 2019 இறுதியில் படிப்படியாக வீழ்ச்சியடைந்தன. உலகளாவிய வட்டி வீதங்களில் வீழ்ச்சி காணப்பட்ட போதும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுடன் பேணப்படும் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீது பிரயோகிக்கத்தக்க வட்டி வீதம் 2019இல் பெருமளவிற்கு மாற்றமின்றிக் காணப்பட்டு போட்டித்தன்மை வீதங்களில் வெளிநாட்டு நாணயத்தில் உள்நாட்டு முதலீடுகளை மேற்கொள்ளும் வாய்ப்பு காணப்படுவதனைப் பிரதிபலித்தது. அதேவேளை, கொவிட்-19 தொற்றின் பரவலினால் தோன்றும் உலகளாவிய சந்தைத் தளம்பல்களின் காரணமாக 2020இன் முதற்காலாண்டில் உலகளாவிய வட்டி வீதங்கள் விரைவாக வீழ்ச்சியடைந்த வேளையில் கொவிட்-19 பரவலினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கும் பொருளாதார நடவடிக்கைக்கு புத்துயிரளிப்பதனை இயலச்செய்யும் விதத்தில் உள்நாட்டு வட்டி வீதங்களின் கீழ்நோக்கிய அசைவும் விரைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**2019ஆம் ஆண்டுப்பகுதியில் ஒதுக்குப் பணம் சுருக்கமொன்றினைப் பதிவுசெய்து, 2019 மாச்சில் நியதி ஒதுக்குத் தேவைப்பாடு குறைக்கப்பட்டமையின் தாக்கத்தினை பிரதிபலித்தது.** இதன்படி, ஒதுக்குப் பணம் 2018 இறுதியின் 2.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இன் இறுதியில், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 3.0 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. உண்மை நியதிகளில், ஒதுக்குப் பணம் முன்னைய ஆண்டின் ரூ.21.3 பில்லியன் கொண்ட விரிவுடன் ஒப்பிடுகையில் 2019 இறுதியில் ரூ.932.6 பில்லியனுக்கு ரூ.28.5 பில்லியனால் சுருக்கமடைந்தது. பொறுப்புக்கள் பக்கத்திலிருந்து நோக்குகையில், 2019 மாச்சில் செய்யப்பட்ட நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டின் குறைப்புக் காரணமாக மத்திய வங்கியுடனான வர்த்தக வங்கிகளின் வைப்புக்களின் வீழ்ச்சி ஒதுக்குப் பணத்தின் சுருக்கத்திற்குப் பங்களித்த வேளையில் சுற்றோட்டத்திலுள்ள நாணயம் 2019இல் மிதமாக அதிகரித்தது. சொத்துக்களின் நியதிகளில், 2019 காலப்பகுதியில் ஒதுக்குப் பணத்தின் சுருக்கம் மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் விரிவினை விஞ்சிக் காணப்பட்ட மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்களின் குறிப்பிடத்தக்க குறைப்பில் முக்கியமாகப் பிரதிபலிக்கப்பட்டது. இதன்படி, மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் 2018இல் ரூ.169 பில்லியன் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2019 இறுதியில் ரூ.36.6 பில்லியனுக்கு ரூ.173.9 பில்லியனால் சுருக்கமடைந்தமைக்கு மத்திய வங்கி வசமிருந்த அரச பிணையங்களின் உடமையில் (மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல் நீங்கலாக) ஏற்பட்ட குறைப்பினால் பிரதிபலிக்கப்பட்டவாறு மத்திய வங்கியின் அரசிற்கான தேறிய கொடுகடனில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாகும். அதேவேளை, மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 2018இன் ரூ.95.6 பில்லியன் கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.145.5 பில்லியனால் அதிகரித்தது. தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட விரிவாக்கம், நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் பெறுகைகள் மாற்றப்பட்டமை, உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவு செய்யப்பட்டமை மற்றும் மத்திய வங்கியின் நிலையான வருமான பிணையங்களிலான முதலீட்டில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பனவற்றின் காரணமாக மத்திய வங்கியின் வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பின் விளைவாகும். மத்திய வங்கியின் வெளிநாட்டுப் பொறுப்புக்களில் ஏற்பட்ட சுருக்கத்திற்கு மத்தியிலும் இது ஏற்பட்டிருக்கிறது.

**வங்கித்தொழில் முறைமையின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட மிதமான வளர்ச்சியின் காரணமாக, 2019ஆம் ஆண்டுப்பகுதியில் விரிந்த பணத்தின் வளர்ச்சி ($M_{2b}$) தொடர்ந்தும் குறைவடைந்தது.** இதன்படி, $M_{2b}$ இன் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி 2018 இறுதியின் 13.0 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019 திசெம்பர் இறுதியில் 7.0 சதவீதத்திற்கு குறைவடைந்தது. 2019ஆம் ஆண்டுப்பகுதியில் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் மிதமடைந்தமைக்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் தனியார் துறைக்கான கொடுகடனில் காணப்பட்ட மந்தமான வளர்ச்சி பெருமளவிற்குக் காரணமாக இருந்த வேளையில் அரசாங்கம் மற்றும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் உட்பட அரச துறையினால் பெறப்பட்ட கொடுகடனின் வளர்ச்சியும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மிதமடைந்தது. உண்மை நியதிகளில்

வரைபடம் 1.10
விரிந்த பண வளர்ச்சி மற்றும் பங்களிப்பு





வங்கித்தொழில் முறைமையின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் 2018இன் ரூ.1,008.8 பில்லியன் கொண்ட குறிப்பிடத்தக்க விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் 2019இல் ரூ.300.6 பில்லியனால் அதிகரித்தது. வங்கித்தொழில் முறைமையின் அரசிற்கான தேறிய கொடுகடன் 2018இன் ரூ.348.2 பில்லியன் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2019இல் ரூ.250.4 பில்லியனால் அதிகரித்தது. அரசிற்கான தேறிய கொடுகடனிற்குள், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிலிருந்தான கொடுகடன் விரிவடைந்த வேளையில் மத்திய வங்கியின் அரசிற்கான தேறிய கொடுகடன் இவ்வாண்டுப்பகுதியில் சுருக்கமொன்றினைப் பதிவுசெய்தது. அதேவேளை, அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் கடன்பாடுகள் 2018இன் ரூ.218.4 பில்லியன் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2019இல் 62.6 பில்லியன் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 2018இன் ரூ.188.5 பில்லியன் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2019இல் ரூ.195.3 பில்லியனால் அதிகரித்து, மத்திய வங்கி மற்றும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் இரண்டினதும் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட உயர்வினைப் பிரதிபலித்தன.

**நாணயக் கொள்கையினைத் தளர்த்துவதற்கு மத்திய வங்கியினால் எடுக்கப்பட்ட வழிமுறைகளின் உதவியுடன் ஆண்டின் இறுதியில் உண்மைக் கொடுகடன் பகிர்ந்தளிப்புக்களில் மீட்சியொன்று அவதானிக்கப்பட்ட போதிலும் இவ்வாண்டுப்பகுதியில் உயர்ந்த வட்டி வீதங்கள், கொள்கை நிச்சயமற்றதன்மை, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களைத் தொடர்ந்து வியாபார நம்பிக்கை குறைவடைந்தமை மற்றும் குறைவடைந்த பொருளாதார நடவடிக்கைகள் என்பனவற்றின் காரணமாக 2019இல் தனியார் துறைக்கான கொடுகடனில் வளர்ச்சி கடுமையான வீழ்ச்சியைப் பதிவுசெய்த போதும், தனியார் துறைக்கான கொடுகடனின் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி 2018 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 15.9 சதவீதத்திலிருந்து 2019 திசெம்பர் இறுதியில் 4.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.** உண்மை நியதிகளில், தனியார் துறைக்கான கொடுகடன் விரிவாக்கம் 2018இன் ரூ.762.1 பில்லியன் கொண்ட விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் 2019இல் ரூ.236.8 பில்லியனாகக் காணப்பட்டது. 2019இன் முதலரைப்பகுதியில் கொடுகடன் வளர்ச்சியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மெதுவான போக்கிற்கு உயர்ந்த சந்தைக் கடன்வழங்கல் வீதங்கள், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் காரணமாக மோசமடைந்த குறைந்த பொருளாதார நடவடிக்கைகளின் காரணமாக கொடுகடனுக்கான கேள்வி குறைவடைந்தமை மற்றும் வங்கித்தொழில் முறைமையின் செயற்படாத முற்பணங்கள் என்பனவே காரணங்களாக அமைந்தன. இருப்பினும் கூட, உண்மை நியதிகளில், கொடுகடன்பாய்ச்சல் 2019 ஓகத்திலிருந்து உத்வேகமடைந்தமைக்கு நாணய நிலைப்பாடுகள் தளர்த்தப்பட்டமையே ஆதரவாக அமைந்தது. துறைவாரியான பகுப்பாய்வு நியதிகளில், வேளாண்மை மற்றும் மீன்பிடித் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சி குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்து ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், 2018 இறுதியில் 14.0 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019 இறுதியில் 0.2 சதவீதத்தினைப் பதிவுசெய்தது. கைத்தொழில் துறை மற்றும் பணிகள் துறைக்கான கொடுகடன் வளர்ச்சி 2018 இறுதியின் முறையே 15.3 சதவீதம் மற்றும் 17.8 சதவீதத்திலிருந்து 2019 இறுதியில் 3.1 சதவீதத்திற்கு மெதுவடைந்தன. கடந்த அண்மைக் காலத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைத் தொடர்ச்சியாகப் பதிவுசெய்த தனியாள் கடன்களும் முற்பணங்களும் 2018 இறுதியின் 20.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019 இறுதியில் 11.9 சதவீதத்திற்கு மிதமடைந்தன.

**அதேவேளை, பொருளாதாரத்தின் நிதியியல் அழத்தின் குறிகாட்டியொன்றாக விளங்கும் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக கொடுகடன் 2019இல் கலப்பான செயலாற்றமொன்றினைக் காட்டியது.** மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக உரிமம்பெற்ற

வரைபடம் 1.11
தனியார் துறைக்கு வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட கொடுகடன்



1

வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் 2013இன் 26.4 சதவீதத்திலிருந்து 2018இல் 38.7 சதவீதத்திற்கு தொடர்ச்சியான அதிகரிப்பினைக் கொண்டிருந்த கொடுகடன் 2019இல் 38.6 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்குப் புறம்பாக உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளையும் உள்ளடக்கிய $M_4$ நாணயக் கூட்டில் தனியார் துறைக்கான கொடுகடனும் இதே போக்கினைத் தொடர்ந்து முன்னைய ஆண்டின் 52.2 சதவீதத்திலிருந்து 2019இல் மொ.உ.உற்பத்தியின் 51.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இவ்வாண்டுப்பகுதியில் அரச துறைக்கான கொடுகடனில் ஏற்பட்ட உயர்வினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக $M_{2b}$ மற்றும் $M_4$ தொடர்பில் உள்நாட்டுக் கொடுகடன் தொடர்ந்தும் அதிகரித்து 2018இல் முறையே 61.5 சதவீதம் மற்றும் 79.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2019 இறுதியில் முறையே 62.5 சதவீதத்தினையும் 80.4 சதவீதத்தினையும் பதிவுசெய்தது.

## நிதியியல் துறை அபிவிருத்திகள்

**சவால்நிறைந்த உள்நாட்டு மற்றும் உலகளாவிய சந்தை நிலைமைகளுக்கு மத்தியிலும் இலங்கையின் நிதியியல் முறைமை உறுதியானதாகவும் தாக்குப்பிடிக்கக் கூடியதாகவும் காணப்படுகின்றது.** எனினும், சொத்துக்களின் அடிப்படை, கொடுகடன் தரம் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் இலாபத்தன்மை என்பனவற்றின் நியதிகளில், நிதியியல் துறையின் செயலாற்றம் மிதமடைந்தமைக்கு குறைவடைந்த பொருளாதார வளர்ச்சி, நிச்சயமற்ற கொள்கைகள் மற்றும் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் காரணமாக முதலீட்டாளர் மனோபாவம் மோசமடைந்தமை என்பனவற்றினால் உருவான சவால்மிக்க சூழலே காரணமாகும். நிதியியல் துறையில் ஆதிக்கம் செலுத்தும் வங்கித்தொழில் துறை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் மிதமான விரிவாக்கத்தினை எடுத்துக்காட்டி கொடுகடனுக்கான குறைந்த கேள்வியின் தாக்கத்தினையும் மோசமடைந்த கொடுகடன் தரத்தின் சூழ்நிலையினைக் கருத்திற்கொண்டு இறுக்கமான கொடுகடன் நடைமுறைகளையும் பிரதிபலித்தன. 2019இல் தனியார் துறைக்கான கொடுகடன் பாய்ச்சலில் காணப்பட்ட மிதமான தன்மை வங்கிகள் கூடுதலான நிதியினை இடர்நேர்வற்ற அரச பிணையங்களை நோக்கி திருப்பவும் இது வங்கித்தொழில் துறையின் மூலதனமும் திரவத்தன்மை மட்டங்களும் மேம்படவும் காரணமாகின. கொடுகடனின் தரம் மோசமடைந்தமையானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019இல் செயற்படாக் கடன் விகிதம் அதிகரித்தமையில் பிரதிபலிக்கப்பட்டது. நிதியிடலின் முக்கிய மூலமாகத் தொடர்ந்தும் இருந்துவரும் வைப்புக்கள் 2019இல் வளர்ச்சியடைந்ததெனியும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மெதுவான வேகத்தில் காணப்பட்ட வேளையில் கடன்பாடுகள் இலங்கை ரூபா நியதிகளிலும் வெளிநாட்டு நாணய நியதிகளிலும் சுருக்கமடைந்தன. அதேவேளை, சொத்துக்களின் மீதான வருவாய் மற்றும் பங்குரிமை மூலதனம் மீதான வருவாய் என்பனவற்றின் அசைவுகளில் பிரதிபலிக்கப்பட்டவாறு 2019இல் இத்துறையின் இலாபத்தன்மை மோசமடைந்தமைக்கு உயர்ந்த தொழிற்பாட்டுச் செலவுகள், கடன் இழப்பு ஒதுக்கங்களில் அதிகரிப்பு மற்றும் வரிகள் என்பனவே காரணங்களாகும். அதேவேளை, நிதியியல் நடவடிக்கை செயலணிக்குழு 2019 ஒத்தோபரில் அதன் சாம்பல் நிறப்பட்டியலிலிருந்து இலங்கையை நீக்கியதுடன் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் என்பனவற்றை முன்னேற்றுவதில் இலங்கை அடைந்த கணிசமான முன்னேற்றங்களையும் அங்கீகரித்தது.

**சாதகமற்ற சந்தை நிலைமைகள் மற்றும் துறையின் பலயீனங்களின் காரணமாக, ஆண்டு காலப்பகுதியில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினதும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் செயலாற்றம் தேய்வடைந்தது.** எதிர்கணியமான கொடுகடன் வளர்ச்சி, வீழ்ச்சியடைந்து செல்லும் இலாபத்தன்மை, செயற்படாக் கடன்களின் அதிகரிப்பு என்பன 2019இல் இத்துறையின் பலயீனமான செயலாற்றத்திற்குப் பங்களித்தன. இத்துறையின் நீண்ட கால உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்தவும் வைப்பாளர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதனை எதிர்பார்த்தும் 2019ஆம் ஆண்டுப்பகுதியில் மத்திய வங்கி பல கடுமையான ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளையும் பாதுகாப்பு வழிமுறைகளையும் மேற்கொண்டது. துறையின் மொத்தச் சொத்துத்தளம் இவ்வாண்டுப்பகுதியில் சிறிதளவால் விரிவடைந்த வேளையில், இத்துறையின் கொடுகடன் வளர்ச்சி 2019இல் தொடர்ந்தும் எதிர்க்கணியமாகக் காணப்பட்டது. முதலீட்டுச் சொத்துப்பட்டியல் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவுசெய்தமைக்கு கொடுகடனுக்கான மட்டுப்படுத்தப்பட்ட கேள்வி மற்றும் கடன்வழங்கல் முறைமையின் எச்சரிக்கையுடன் கூடிய அணுகுமுறை என்பனவற்றிற்கு மத்தியிலும் அரச பிணையங்களின் பங்குரிமை மூலதனங்கள், கூறுகள் மற்றும் ஏனைய படுகடன் சாதனங்கள் மற்றும் உண்மைச் சொத்துக்கள் என்பனவற்றின் அதிகரித்த முதலீடுகள் காரணமாக இருந்தன. துறையின் சொத்துக்களின் தரம் மோசமடைந்தமை 2019இல் செயற்படாக் கடன் விகிதம் அதிகரித்தமையின் மூலம் பிரதிபலிக்கப்பட்டது. அதேவேளை, துறையின் வரிக்குப் பின்னரான இலாபம் 2018இல் பதிவுசெய்யப்பட்ட இலாபத்துடன் ஒப்பிடுகையில் கணிசமான வீழ்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு வட்டியல்லா செலவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பும் உயர்ந்த கடன் இழப்பு ஒதுக்கங்களுமே காரணமாகும். இலாபத்தன்மை மீதான அழுத்தத்தின் அறிகுறிகள், சொத்துக்கள் மீதான வருவாய் மற்றும் பங்குரிமை மூலதனம் மீதான வருவாய் என்பனவற்றில் ஏற்பட்ட வீழ்ச்சியின் மூலம் பிரதிபலிக்கப்பட்டது. காப்புறுதித் துறை 2019ஆம் ஆண்டுப்பகுதியில் மிதமாக விரிவடைந்து

சிறப்புக்குறிப்பு - 2

## கொவிட் - 19 உம் இலங்கையும்: சவால்கள், கொள்கை பதிலிறுத்தல்கள் மற்றும் தோற்றப்பாடு

2019ஆம் ஆண்டின் பிந்திய பகுதியில் முதன் முதலில் சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட கொவிட் - 19 தொற்றுநோய்ப் பரவலானது 2020 மாச்சு நடுப்பகுதியளவில் உலகம் முழுவதும் துரிதமாகப் பரவி 'உலகளாவிய தொற்றுநோய்' ஆக அதனை பிரகடனப்படுத்துவதற்கு உலக சுகாதார அமைப்பினைத் நிர்ப்பந்தித்தது. உலகளாவிய தொற்றுநோயானது இன்றுவரை அனைத்து நாடுகளிலும் மனிதாபிமான மற்றும் பொருளாதாரம் இரண்டின் பாதிப்புக்களின் முன்னர் எதிர்பார்க்கப்படாத சுவடொன்றினை விட்டுச் சென்றுள்ளது. ஏப்பிறல் நடுப்பகுதியளவில் 2.5 மில்லியன் மக்கள் நோய்த்தொற்றுக்குள்ளாகியதுடன் 150,000 இற்கும் மேற்பட்ட மரணங்களை விளைவித்ததுடன் தற்போதுள்ள 'பெரும் முடக்கல்' தாக்கத்தின் பொருளாதார எதிரொலியானது 2007-08 காலத்தின் 'உலகளாவிய நிதி நெருக்கடி' இனைக் கூட சிறியதொன்றாக காண்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பல எண்ணிக்கையான நிச்சயமின்மைகளுக்கு மத்தியில் இத்தொடர் நெருக்கடியினை சமாளிப்பதற்கு உலகெங்குமுள்ள கொள்கை வகுப்பாளர்கள் போராடுகின்றனர். நோய்ப்பரப்பலைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்கு பின்பற்றப்பட்ட முன்கூட்டிய வழிமுறைகளின் விளைவாக இதுவரையில் உள்நாட்டில் நோய்ப்பரவலை முறியடிப்பதில் இலங்கை ஒப்பீட்டளவில் வெற்றிகரமாக இருந்துவருகின்ற அதேவேளை, கட்டுப்பாட்டு வழிமுறைகள் போன்றவற்றிலிருந்து தோற்றம்பெறுகின்ற உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைக்கான பின்னடைவுகளின் விளைபயன்கள், உலகளாவிய பொருளாதாரத்திலிருந்தான கசிவுத் தாக்கங்கள் என்பன ஆண்டுகாலப்பகுதியில் இலங்கையின் பொருளாதாரத்தின் மீது குறிப்பிடத்தக்க தாக்கமொன்றினைக் கொண்டிருக்கும் சாத்தியம் காணப்படுகின்றது.

### இலங்கையில் கொவிட் - 19 பரவலும் கட்டுப்பாடும்

இலங்கையில் 2020 மாச்சு 11 வரை நோய்த்தொற்றுக்குள்ளானவர் தனியொருவராக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. ஆயினும், அதன் பின்னர் 50 நோயாளராக துரிதமாக உயர்வடைந்து 2020 ஏப்பிறல் நடுப்பகுதியில் 7 மரணங்களுடன் 300இற்கும் மேற்பட்ட உறுதிப்படுத்தப்பட்ட நோயாளர்களாகக் காணப்பட்டுள்ளன. மாச்சு ஆரம்பப்பகுதி வரை எதுவிதமான நோய்ப்பரவல்களைத் தடுக்கக்கூடிய முறையில் விழிப்புணர்வு வழிமுறைகளை அறிமுகப்படுத்தப்பட்டபோதிலும் சுற்றுலாப் பயணிகளின் தொடர்ச்சியான வருகைகள், வைரஸினால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்த நாடுகளிலிருந்து இலங்கையர்கள் திரும்பியமை மற்றும் 2020 மாச்சு நடுப்பகுதியிலிருந்து விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டு வழிமுறைகளை கடைப்பிடிக்காமை போன்றன நோய்ப்பரம்பலுக்கு தூண்டுதலளித்தது. எது எவ்வாறாயினும், நாட்டில் பொலிஸ் ஊரடங்கினை அமுல்படுத்துவதன் வாயிலாக மக்களின் நடமாட்டத்தினைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகள், 2020 மாச்சு 19 தொடக்கம் விமான நிலையங்கள் மூடப்பட்டமை மற்றும் வெளிநாடுகளிலிருந்து திரும்பியவர்களை தனிமைப்படுத்துவதற்கான நடவடிக்கை என்பன பரவுதலை பெருமளவுக்கு கட்டுப்படுத்தின - மேல் மாகாணத்தின் சில பகுதிகளிலும் புத்தளம், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களே இந்த இனங்காணப்பட்ட சிறு கூட்டங்கள் கொத்தாக காணப்படுகிறன. கொவிட் - 19 உலகளாவிய தொற்றுநோய்ப்பரவலை முறியடிக்கின்ற அதேவேளை, நடமாட்டம் மீது விதிக்கப்பட்ட தடைகளுக்கு மத்தியில் பொதுமக்கள் எதிர்கொண்ட இன்னல்களை எளிதாக்குவதற்கு அரசாங்கம் இரு உயர்மட்டப் பிரிவுகளைத் தாபித்தது. அதற்கமைய, கொவிட் - 19 நோய்ப்பரம்பலினைத் தடுப்பதற்கான தேசிய நடவடிக்கை நிலையமானது நோய்ப்பரம்பலின் தடுப்பு மற்றும் முகாமைத்துவ வழிமுறைகளை ஒருங்கிணைக்கின்ற அதேவேளை, பொதுமக்களுக்கு சுகாதாரக் கவனிப்பு மற்றும் ஏனைய பணிகளை வழங்குவதை உறுதிசெய்கின்றது. சனாதிபதி செயலணியானது சமூகத்திலுள்ள குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களுக்கும் பாதிக்கப்படக்கூடிய நபர்களுக்கும் விசேட கவனம் செலுத்தி அத்தியாவசிய சேவைகள் தொடர்ச்சியாக வழங்கப்படுவதற்கு பணிப்புரைகளை விடுத்து, ஒருங்கிணைத்துக் கண்காணிக்கின்றது.

உள்நாட்டுப் பொருளாதாரத்தைப் பாதுகாப்பதற்கான தேவையினை உரியவாறு பரிசீலித்து ஓர் வெளியேறல் திட்டமொன்று நாடுமுழுவதும் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது. இவ்வழிமுறைகள், ஊரடங்குக் காலத்தின் நேர அளவினைக் குறைத்தல், பணியிடங்கள் மற்றும் வியாபார தளங்களை ஆகக்குறைந்த அலுவலர்களுடன் தொழிற்படுதல், சாத்தியமான வரையில் அதிகமாக தொலைத்தொடர்பு ஊடாக இல்லத்திலிருந்து பணியாற்றுவதனை தொடர்ந்தும் முன்னெடுத்தல் மற்றும் வீதி அத்துடன் புகையிரதப் போக்குவரத்துச் சேவைகளை எச்சரிக்கையுடன் மீளத்தொடங்குதல் போன்றவற்றை உள்ளடக்குகின்றது. பாரியளவில் மக்கள் ஒன்றுகூடுதல் மீதான தடை சில காலத்திற்கு தொடர்ந்தும் அமுலிலிருக்கும் சாத்தியம் உள்ளது.

### இலங்கை மீதான கொவிட் - 19 உலகளாவிய தொற்றுநோயின் பொருளாதார ரீதியான தாக்கம்

பின்பற்றப்பட்ட கட்டுப்பாட்டு வழிமுறைகள் நோய்ப்பரவலை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்கு உதவியளித்த அதேவேளை, உள்நாட்டு பக்கத்தில் பொருளாதார நடவடிக்கை மீத இவை கணிசமான எதிர்மறையான தாக்கத்தினை கொண்டிருந்தன. விடுமுறைகளை பிரகடனப்படுத்தல், ஊரடங்கு, மட்டுப்படுத்தப்பட்ட பொது சேவைகள் மற்றும் பயணிகள் போக்குவரத்திற்காக விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களை மூடுதல் உள்ளடங்கலாக மனித நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கான ஏனைய வழிமுறைகள் என்பனவும் பல முக்கிய பொருளாதார துறைகளுக்கு பாதிப்புகளை ஏற்படுத்தும். சமூகத்தின் பாரிய பகுதியினர் வருமானம் மற்றும் வாழ்வாதாரங்களை இழக்க நேரிடுவதனால் இதனது சமூக-பொருளாதாரத் தாக்கமும் விரிவானதாகவிருக்கும். தொழில்புரிவோரில் ஏறத்தாழ 60 சதவீதமானோர் முறைசாராத் துறையில் ஈடுபட்டுள்ளதுடன் 1.9 மில்லியன் நபர்கள் நாளாந்தக் கூலி உழைப்பாளிகள் என மதப்பிடப்படும் வேளையில், பாரியளவு எண்ணிக்கையிலான வீட்டலகுகள் ஓர் இடர்செறிந்த நிலையில் இருக்கும் சாத்தியம் காணப்படுகின்றது.. வயது முதிர்ந்தோர் மற்றும் வறுமை மட்டத்திற்கு சற்றுமேல் வாழும் பாரியளவு எண்ணிக்கையிலான மக்கள் போன்ற சனத்தொகையின் ஏனைய பாதிக்கப்படக்கூடிய

1

பகுதியினர் இந்நிகழ்வினால் சரியானவிகிதங்களுக்கு மேலதிகமாக பாதிக்கப்படுவர். முனைப்பான தணிப்பு வழிமுறைகள் காரணமாக பொதுச் சுகாதார முறைமை மீது அதிகளவிலான அழுத்தம் இலங்கை கண்டிராத போதிலும் நோய்ப்பரவலின் எதிர்பாராத ஏதேனும் அதிகரிப்பு என்பது முறைமையின் மட்டுப்படுத்தப்பட்ட இயலளவின் மீது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தலாம்.

உலகப் பொருளாதாரமானது 1930 களின் பொருளாதார பெரும் மந்தத்தின் பின்னர்ரான மிக மோசமான பின்னடைவினை தற்போது அனுபவிக்கின்றது. ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், யூரோ வலயம் மற்றும் யப்பான் போன்ற பல முன்னேற்றம் கண்ட பொருளாதாரங்கள் 2020ஆம் ஆண்டுகாலப்பகுதியில் பொருளாதார வீழ்ச்சியனை அனுபவிக்கும். சீனா மற்றும் இந்தியா உள்ளடங்கலாக இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளர்களும் குறிப்பிடத்தக்களவான மெதுவடைதலொன்றினை காண்பார்கள் என எறிவுசெய்யப்பட்டுள்ளது. உலகம் முழுவதும் 2020இல் உலகளாவிய வணிகப் பொருள் வர்த்தகம் 32 சதவீதம் வரையில் வீழ்ச்சியடையக்கூடுமென உலக வர்த்தக அமைப்பு எதிர்வுகூறுகின்றது. பலவீனமடைந்த கேள்வியின் காரணமாக முக்கிய வர்த்தகப் பங்காளர்களின் குறைவான பொருளாதாரச் செயலாற்றமானது இலங்கையில் ஏற்றுமதி வருவாய்கள் மீது நேரடியாகத் தாக்கம் செலுத்தும் அதேவேளை, பரவலை குறைக்கும் விதமாக உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் விதிக்கப்பட்ட பல்வேறு வழிமுறைகள் மற்றும் நோய்ப்பரவலின் குறுகிய காலப் பொருளாதாரத் தாக்கம் என்பன வழங்கல் சங்கிலி இடைத்தடங்கல்களைத் தோற்றுவிக்கக்கூடும். இதன்மூலம் நாட்டில் தற்கால மற்றும் எதிர்கால ஏற்றுமதி இயலளவை பாதிப்படையச் செய்யும்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களிலிருந்து தற்போது துரிதமான மீட்சிபெறுகின்றமைக்கு மத்தியில் சுற்றுலாக் கைத்தொழிலானது தற்போது பரவுகின்ற உலகளாவிய தொற்றுநோயினால் மாத்திரமின்றி நீண்டகாலம் நீடித்து விடாப்பிடியாக இருந்துவரக்கூடிய அதன் பாதிப்பின் தாக்கத்தினை அனுபவிக்கக்கூடும். உலகளாவிய பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த சரிவு மற்றும் சீனா, இந்தியா மற்றும் ஐரோப்பா உள்ளடங்கலாக பாரம்பரியமாக சுற்றுலாப் பயணிகளை இலங்கை கவருகின்ற நாடுகளின் மற்றும் பிராந்தியங்களின் பொருளாதார சிக்கல் நிலைமைகள் சுற்றுலாத் துறை மீட்சியடைவதனை தடைப்படுத்தும். மேலும், உலகளாவிய சுகாதார கொள்கை வகுப்பாளர்கள் நோய்ப்பரவலின் 'இரண்டாவது அலைகள்' இன் சாத்தியம் பற்றி ஒருமித்து கரிசனைகளை எழுப்புவதுடன் இதனால் உலகளாவிய தொற்றுநோய் பரப்பல் மறைந்தாலும் பல மாதங்களுக்கு 'ஆட்களுக்கிடையில் இடைவெளி' பேணுவதற்கான தேவைப் பற்றி வலியுறுத்துகின்றனர். எனவே, பயணம் மற்றும் ஓய்வு என்பவை தொடர்பில் வாடிக்கையாளரின் மனோபாவத்தில் ஏதேனும் எதிரான குறிப்பிடத்தக்க மாற்றமொன்று காணப்பட்டால் தற்போதைய சுற்றுலாக் கைத்தொழிலின் இவ் ஸ்தம்பித்த நிலைமையானது நீண்டகாலத்திற்கு நீடிக்கலாம்.

இலங்கையின் வெளிநாட்டுத் துறையினை தாக்கங்களில் இருந்து காக்கின்ற வெளிநாட்டு பணவனுப்பல்களில் ஏற்படுகின்ற வீழ்ச்சி உலகப் பொருளாதாரத்தின் எதிர்மறையான வளர்ச்சியின் மற்றுமொரு முக்கிய கசிவுத்தாக்கமாகும். அண்மைய ஆண்டுகளில் தொழிலாளர் பணவனுப்பல்களின் முக்கிய பங்குகள் மத்திய கிழக்கு, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் தூர கிழக்காசிய நாடுகளிலிருந்து கிடைத்துவருகின்றன. ஐரோப்பாவும் தூர கிழக்காசியாவும் அவற்றின் தொடர்புடைய பிராந்தியங்களில் கொவிட் - 19 தொற்றுநோய்ப்பரவல் மூலம் கணிசமமாக பாதிக்கப்பட்டுள்ள அதேவேளை மத்திய கிழக்கு பிரதேசமானது உலகளாவிய தொற்றுநோயினால் மாத்திரமின்றி பலவீனமடைந்த உலகளாவிய கேள்வியிலிருந்து தோன்றிய பன்னாட்டு மசகெண்ணெய் விலைகளில் திடீர் வீழ்ச்சி மற்றும் அதனைத் தொடர்ந்து பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு பிளஸ் கூட்டமைப்பின் (ஓபெக்+) முறிவு காரணமாகவும் பாதிக்கப்பட்டுள்ளது. குறைவடைந்த எரிபொருள் இறக்குமதிச் செலவுகள் வர்த்தகப் பற்றாக்குறை மீதான சுமையினைத் தளர்த்தக்கூடியதாயினும் வணிகப் பொருள் மற்றும் பணிகள் வர்த்தகம் அத்துடன் வெளிநாட்டிலிருந்தான பணவனுப்பல்கள் போன்றவற்றின் தற்கால நிலைமைகளில் இருந்து தோன்றுகின்ற வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு மீதான ஒட்டுமொத்த தாக்கம் 2020இல் எதிர்மறையாக அமையக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இப்பொருளாதார பலவீனமான நிலைமைகளுக்கு மத்தியில், நிதியியல் துறை ஊடாக போதிய திரவத்தன்மை வழங்கல் வீட்டலகுகளுக்கும் நிறுவனங்களுக்கும் செலுத்தப்படுவதை உறுதிசெய்வதற்கு நாடுகள் அதிகளவில் தளர்வுமிக்க நாணயக் கொள்கை நிலையினைப் பின்பற்றிவருவதுடன் மரபுசாரா நாணயக் கொள்கைகளை மேற்கொண்டு வருகின்றன. இதன் விளைவான குறைந்த மட்ட உலகளாவிய வட்டி வீதங்கள், இலங்கை போன்ற நாடுகளின் படுகடன் மீளக்கொடுப்பனவுகளுக்கு மீள்நிதியிடல் செலவுகளில் சாத்தியமான இலகுபடுத்தலை உணர்த்தக்கூடும். எனினும், அத்தகைய சாதகமான தாக்கங்கள், இலங்கை உள்ளடங்கலாக வளர்ந்துவரும் சந்தைப் பொருளாதாரங்கள் முழுவதிலும் காணக்கூடியதாகவிருந்து உள்நோக்கிய மூலதன பாய்ச்சல்களின் வெளித்திரும்பல்கள் என்பவற்றினால் இத்தகைய நன்மைகள் கிடைக்கப்பெறாதுள்ளன. குறுகியகால மூலதனப் பாய்ச்சல்களுக்கு இலங்கை ஆட்படுகின்றதன்மை மிகச்சிறிதாகக் காணப்படுகின்ற போதிலும் இது வேறு வளர்ச்சியடைந்துவரும் சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களில் காணப்பட்டவாறு நாட்டிற்கான பன்னாட்டு முறி விளைவுகளில் சடுதியான உயர்வினைத் தோற்றுவித்துள்ளது. இதற்குமேலதிகமாக, உலகம் முழுவதும் உலகளாவிய தொற்றுநோயினால் தோற்றுவிக்கப்பட்ட நிச்சயமின்மைகளினால் வெளிநாட்டு நேரடி முதலீட்டுப் பாய்ச்சல்கள் பாதிக்கப்படக்கூடியவையாகக் காணப்படுகின்றன. இதுவும், அண்மைக் காலத்தில் படுகடனைத் தோற்றுவிக்காத மூலதனப் பாய்ச்சல்களை ஈர்ப்புக்கொள்கின்ற இலங்கையின் தோற்றப்பாட்டிற்கு தாக்கத்தை ஏற்படுத்தும்.

எனவே, பொருளாதார நடவடிக்கைக்கு ஆதரவளிப்பதற்கான தற்போது முன்னெடுக்கப்படுகின்ற மேலதிக நிதியியல் வளங்களின் திசைமாற்றங்கள் உள்ளடங்கலாக பல்வேறு நேரடி மற்றும் நேரடியற்ற வழிகளினால் கொவிட் - 19 உலகளாவிய தொற்றுநோயானது பொருளாதார வளர்ச்சியில் மீட்சிபெறுதலுக்கான முன்னைய எதிர்பார்க்கைகளுக்கு முரணாக ஆண்டின் போது பொருளாதாரத்தின் முன்னேற்றத்தை மோசமாகப் பாதிக்கும். அதற்கமைய, உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியானது நடுத்தரகாலத்தில் அதன் உள்ளாற்றலை

எய்துவதற்கு மீண்டும் துரிதமாக மீட்சிபெறுவதற்கு முன்னர் 2020இல் ஏறத்தாழ 1.5 சதவீதத்திற்கு மெதுவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**புத்துயிரளித்தல் வழிமுறைகளை நடைமுறைப்படுத்தல்**

கொவிட் - 19 உலகளாவிய தொற்றுநோயினையும் அதன் தாக்கங்களையும் கையாளுவதற்கு உலகம் முழுவதுமுள்ள ஏனைய நாடுகளைப் போன்று இலங்கையும் மூன்று வகையான கொள்கைகளை பயன்படுத்தியுள்ளது. அவையாவன, அ) எல்லைக் கட்டுப்பாடு மற்றும் சுகாதாரத் துறை கொள்கைகள், ஆ) இறை வழிமுறைகள், இ) மூலதன பாய்ச்சல் முகாமைத்துவம் உள்ளடங்கலாக நாணய மற்றும் நிதியியல் துறைசார்ந்த வழிமுறைகள். எல்லைக் கட்டுப்பாடும் சுகாதாரத் துறைக் கொள்கைகளும் உலகளாவிய தொற்றுநோயின் பரவலினைக் கட்டுப்படுத்துவதற்கு எத்தனிக்கின்ற அதேவேளை அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் பின்பற்றப்படும் ஏனைய கொள்கைகள் உலகளாவிய தொற்றுநோய் மூலம் பாதிக்கப்பட்ட வர்த்தகங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் நிவாரணம் வழங்குவதற்கும் அத்துடன் தோற்றம்பெறும் பேரண்டப் பொருளாதாரக் கரிசனைகளை நிவர்த்திசெய்வதற்கும் முனைகின்றன.

நாணய வழிமுறைகள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியானது, இதுவரையிலும் முக்கிய கொள்கை வட்டி வீதங்களை, அதாவது துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் என்பவற்றை மூன்று குறைப்புகள் மூலம் மொத்தமாக 100 அடிப்படைப் புள்ளிகளால் குறைத்துள்ளது. இதில் இரண்டு குறைப்புக்கள் 2020 மாச்சு மற்றும் ஏப்பிறல் மாதங்களில் அவசர மீளாய்வுகளின் போது மேற்கொள்ளப்பட்டன. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் அனைத்து ரூபா வைப்புப் பொறுப்புகள் மீதுமான நியதி ஒதுக்கு விகிதம் 1.00 சதவீதப் புள்ளியினால் குறைக்கப்பட்டது. இதன்மூலம் சந்தைக்கு ஏறத்தாழ ரூ. 65 பில்லியன் பெறுமதியான நிரந்தர திரவத்தன்மை உட்செலுத்தப்பட்டது. பொருளாதாரத்தில் அவசர நிதியியல் தேவைப்பாடுகளுக்கு வசதியளிப்பதற்கு நிதியியல் நிறுவனங்களை இயலச்செய்வதற்கு அந்நிறுவனங்களுக்காக போதிய திரவத்தன்மை கிடைக்கச்செய்யும் பொருட்டு பல்வேறு வகையான மற்றும் முதிர்ச்சிகளைக் கொண்ட திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் ஊடாக உள்நாட்டுப் பணச் சந்தையில் பாரிய மிகையொன்று பேணப்படுகிறது. அதேவேளை, 2020 ஏப்பிறலில் மத்திய வங்கியானது வங்கி வீதத்தினைக் 15 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக 500 அடிப்படைப் புள்ளிகளால் குறைத்தது. இந்த வங்கி வீதமானது அவசரகாலப்பகுதியில் பயன்படுத்தக்கூடிய் நிர்வாக ரீதியான நிர்ணயிக்கப்பட்ட வீதமொன்றாகும்.

தொற்றுநோய் மற்றும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருதல் வழிமுறைகளிலிருந்து தோன்றுகின்ற வியாபாரங்களுக்கான மற்றும் தனிப்பட்டவர்களுக்கான சுமையினை தளர்த்துவதற்கு நிதியியல் துறை முழுவதும், பல்வேறு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சுற்றுலா, பெருந்தோட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் அத்துடன் ஆடைத் துறைகள், தொடர்புபட்ட ஏற்பாட்டுச் சேவை வழங்குநர்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் போன்றவற்றிற்கென பரந்தளவிலான படுகடனை மீளச்செலுத்தும் கால நீடிப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வர்த்தகங்கள் பணியாற்று மூலதனக் கடன்களையும் முதலீட்டு நோக்கத்திற்கான கடன்களையும் சலுகை வீதங்களில் பெற்றுக்கொள்ளவுள்ளன. முச்சக்கரவண்டி குத்தகைக் கடன்களுக்காகவும் சிறிய பெறுமதியுடைய தனிப்பட்ட வங்கித்தொழில் மற்றும் குத்தகைக் கடன்கள் மீதும் படுகடன் மீளசெலுத்தல் கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, செயலாற்றமற்ற கடன்களை மீள அட்டவணைப்படுத்தவதற்கும் நிதியியல் நிறுவனங்கள் கோரப்பட்டுள்ளன. இச்சலுகைகளை வழங்குவதனை வசதிப்படுத்துவதற்கு குறைந்த வட்டி வீதங்களில் திரவத்தன்மை கிடைக்கப்பெறச் செய்கினறமைக்கு மேலதிகமாக குறைவான மூலதன மாற்றல் பாதுகாப்பு தாங்கியிருப்பு தேவைப்படுத்தல்களும் கடன் வகைப்படுத்தல் விதிகளின் தளர்த்தலும் அறிவிக்கப்பட்டுள்ளன. மேற்கொள்ளப்பட்ட ஏனைய முக்கிய முயற்சிகளுக்குள் 'சௌபாக்கியா கொவிட் - 19 மறுமலர்ச்சி வசதி' இன் அறிமுகப்படுத்தலும் உள்ளடங்கும். இது மோசமாகப் பாதிக்கப்பட்ட வர்த்தகங்களுக்காக தமது செயற்பாடுகளுக்கு புத்துயிரளிப்பதற்கு பணியாற்று மூலதனத்தை வழங்குகின்றது. உரிமம்பெற்ற வங்கிகள் ஊடாக 'புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம்' உதவுதொகைத் திட்டத்தின் கீழ் வேளாண்மையாளர்களுக்கு துணைக் கடன்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கு மேலதிகமாக, சென்மதி நிலுவை மற்றும் செலாவணி வீதம் என்பன மீதான அழுத்தத்தினைக் குறைப்பதற்கு வழிமுறைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதற்கமைய, பல்வேறு வகையான உந்து ஊர்திகளினதும் ஏனைய அத்தியாவசியமற்ற பொருட்களினதும் இறக்குமதியினை வசதிப்படுத்துவதனை இடைநிறுத்துவதற்கு உரிமம்பெற்ற வங்கிகளுக்கு பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன. வெளிமுக முதலீட்டை இடைநிறுத்தல் மற்றும் வர்த்தக வங்கிகள் மூலம் இலங்கையர் நாட்டிற்கான முறிகளைக் கொள்வனவு செய்வது மீதான தடைவிதித்தல் என்பன ஊடாக மூலதன வெளிப்பாய்ச்சல்களை தற்காலிகமாகக் கட்டுப்படுத்துவதற்கு பல வழிமுறைகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், வெளிநாட்டில் வாழுகின்ற இலங்கையரிடமிருந்தும் நலன்விரும்பிகளிடமிருந்து வெளிநாட்டு நாணய வைப்புக்களின் உட்பாய்ச்சலினை வசதிப்படுத்தும் நோக்குடன் 'சிறப்பு வைப்புக் கணக்கு' அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, பொருளாதாரத்தில் மந்தமான பொருளாதார நடவடிக்கைக்கு புத்துயிரளிக்கும் நோக்குடன் சனாதிபதித் தேர்தலின் பின்னர் வர்த்தகங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கென முன்னர் அறிவிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க வரிச்சலுகைகளுக்கு மேலதிகமாக 2020 மாச்சின் போது வர்த்தகர்களுக்கும் தனிப்பட்டவர்களும் பல்வேறு நிவாரண வழிமுறைகளையும் அரசாங்கம் அறிவித்தது. அவை, முக்கியமாக சுற்றுலா, புடவை மற்றும் ஆடைகள் அத்துடன் மொத்த மற்றும் சில்லறை வர்த்தகத் துறைகளில் ஈடுபட்டுள்ள வர்த்தகங்களுக்கான பல்வேறு சலுகைகள், அத்துடன் பருப்பு, தகரத்திலடைத்த மீன், இறைச்சிக் கோழி, சோளம், பெரிய வெங்காயம் மற்றும் சில மருந்துப் பொருட்கள் போன்ற தெரிவுசெய்யப்பட்ட நுகர்வோர் பொருட்களுக்கான உயர்ந்தபட்ச சில்லறை விலைகளை அறிமுகப்படுத்தல் மற்றும் குறைந்த வருமானம் பெறுகின்ற மற்றும் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்கள் அத்துடன் தனிப்பட்டவர்களுக்காக ஒரு தடவையிலான மொத்தக் கொடுப்பனவாக ரூ.5,000 பண மானியத்தை அறிமுகப்படுத்தல்

1

என்பவற்றை உள்ளடக்கியிருந்தன. மேலும், சகல நலத்துறை, பாதுகாப்பு மற்றும் பொதுப் பாதுகாப்பு ஊழியர்களினது மற்றும் கொவிட் - 19 பரம்பலின் பரப்பலை கட்டுப்படுத்துவது தொடர்பில் பணியாற்றும் சகல அரச ஊழியர்களுக்கான அக்ரகார காப்புறுதி நன்மைகள் இருமடங்காக்கப்பட்டன. அதேவேளை, அரசாங்கமானது வைரஸை முறியடிக்கும் முயற்சிகளுக்கு தேவையான நிதியங்கள் கிடைக்கப்பெறும் தன்மையினை உறுதிசெய்கின்ற அதேவேளை நீண்டகாலமாக செலுத்தவேண்டிய நிலுவைக் கொடுப்பனவுகளால் பாதிக்கப்பட்ட வர்த்தகங்களுக்கான திரவத்தன்மையினையும் உறுதிசெய்வதற்கு அவசர அடிப்படையொன்றில் பல வழிமுறைகளைத் தொடங்கியது. இவ்வழிமுறைகள், மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காகவும் வளமாக்கிகளைக் கொள்வனவு செய்வதற்குமான பெறுகை கொடுப்பனவுகளை தீர்ப்பனவு செய்வதற்காகவும் சிறிய மற்றும் நடுத்தரளவிலான ஒப்பந்ததாரர்களினதும் தனியார் நிறுவனங்களினதும் கொடுப்பனவு நிலுவைகளை தீர்ப்பனவு செய்வதற்கான ஒதுக்கீடுகளை உள்ளடக்கியிருந்தது. மேலும், உலகளாவிய தொற்றுநோயின் தடுப்பு வழிமுறைகளுக்காக அரசாங்கம் மேலதிகமாக ரூ.500 மில்லியன் ஒதுக்கீடு செய்தது. அவசியமான சுகாதார மற்றும் நிவாரண வழிமுறைகளின் வழங்கலுக்கு உதவுவதற்கு ஒரு கொவிட்-19 சுகாதார மற்றும் சமூக பாதுகாப்பு நிதி நிறுவப்பட்டதுடன், சனாதிபதியின் நிதியினால் ஒரு சிறப்பு வங்கிக் கணக்கு திறக்கப்பட்டு இதில் தொடக்கத்தில் ரூ. 100 மில்லியன் வைப்பிடப்பட்டது. இது உலகளாவிய நோய் பரப்பலின் பரவலை தடுப்பது தொடர்பான செய்பணிகளுக்கு பயன்படுத்துவதற்கானதாகும். அரசாங்கமானது பன்னாட்டுச் சந்தைகளில் கணிசமமாக குறைவான பெற்றோலிய விலைகளிலிருந்து நன்மையடைந்து 6 மாதங்களைக் கொண்ட காலப்பகுதியொன்றினுள் ஏறத்தாழ ரூ.200 பில்லியன் கொண்ட தொகையொன்றினைத் திரட்டிக்கொள்ளும் நோக்குடன் எரிபொருள் விலை நிலைநிறுத்தல் நிதியமொன்றினை நிறுவியது. நிறுவனங்கள் மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரிச் சுமைக்கு உரிய கவனம் செலுத்தி 2020 பெப்புருவரி மற்றும் மாச்சு மாதங்களுக்காக ஒன்றுசேர்கின்ற பெறுமதிசேர் வரியின் கொடுப்பனவுக்கு ஏப்பிறல் 30ஆம் திகதிவரை சலுகைக்காலம் வழங்கப்பட்டது. அரசாங்கத்திற்குக் கிடைக்கப்பெறுகின்ற மட்டுப்படுத்தப்பட்ட இறை இடவசதிக்கு மத்தியில், தாழ்ந்த பணவீக்கத்தினைப் பேணுவதனால் நாணயக் கொள்கை தொடர்பில் நிலவும் வசதிகள், மற்றும் நிதியியல் துறையில் தொழில்துறை நியமங்களுக்கு மேலதிகமாக பேணப்பட்ட மூலதன மற்றும் திரவத்தன்மை தாங்கியிருப்புக்கள் என்பவற்றைக கருத்திற்கொள்ளும்போது தேசிய நலனைக் கருத்திற்கொண்டு மேலே எடுத்துரைக்கப்பட்ட நிவாரண வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஆதரவளிக்கின்ற அதேவேளை அரசாங்கத்திற்கு நேரடி நிதியளித்தலை வழங்குவதற்கு மத்திய வங்கியினை இயலச்செய்துள்ளது.

**தோற்றப்பாடு**

தற்போது பரவுகின்ற கொவிட் - 19 உலகளாவிய தொற்றுநோயின் தன்மையானது இலங்கையின் பொருளாதாரத்தின் செயலாற்றம் பல்வேறு நிச்சயமற்ற காரணிகள் மீது தொங்கிநிற்கின்ற நிலையினை ஏற்படுத்தியுள்ளது. இவை, உலகளாவிய தொற்றுநோய் மேலும் வியாபித்தல், தணிப்பு வழிமுறைகளின் தீவிரம் மற்றும் வினைத்திறன், நிரம்பல் சார்ந்த குழப்பங்களின் அளவு மற்றும் நடத்தைசார் மாற்றங்கள மற்றும் ஏனைய பொருளாதார படிவங்களின் நிலைத்திருக்கும் தன்மை என்பவை யாவினதும் உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதாரங்கள் இரண்டுக்கும் தொடர்புடையவாறானவை இக் காரணிகளுக்குள் உள்ளடக்கப்படுகிறன. உலகளாவிய பொருளாதார நடவடிக்கையின் மீட்சி மெதுவானவொரு வழிமுறையாக இருக்கும் சாத்தியம் இருந்தபோதிலும், இலங்கையின் திரண்ட கேள்வியில் கணிசமான பகுதிக்கு உள்நாட்டுக் கேள்வி வகிபாகம் கொண்டிருப்பதனால் உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்பும் முகமான வழிமுறைகள் என்பன இலங்கையின் விரைவான மீட்சியை இயலச்செய்யும்.

அதன் சொத்துக்கள் தளத்தில் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. ஊழியர் சேம நிதியத்தினாலும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தினாலும் ஆதிக்கம் செலுத்தப்படும் ஒப்பந்த ரீதியான சேமிப்பு நிறுவனங்கள் மிதமான செயலாற்றத்தினைப் பதிவுசெய்த வேளையில் உறுப்பினர்களுக்கு நியாயமான நேர்க்கணிய வருவாய்களையும் வழங்கின.

**2019ஆம் ஆண்டுப்பகுதியில் நிதியியல் சந்தைகள் திரவத்தன்மையுடன் விளங்கியதுடன் மத்திய வங்கி ஆண்டு முழுவதும் திரவத்தன்மையினை பொருத்தமான விதத்தில் முகாமைப்படுத்தியது.** 2019 ஏப்பிறல் நடுப்பகுதி வரை பற்றாக்குறை மட்டத்தில் காணப்பட்ட உள்நாட்டுப் பணச் சந்தையின் திரவத்தன்மை 2019 ஒகத்திலும் செத்தெம்பரிலும் ஒரு குறுகிய காலம் தவிர, மற்றைய காலத்தில் மிகையான தன்மைக்கு மாறியது. மாச்சில் நியதி ஒதுக்கு விகிதத்தில் செய்யப்பட்ட கீழ் நோக்கிய திருத்தம், நாட்டிற்கான பன்னாட்டு நிதியத்தின் பெறுகைகள் மாற்றப்பட்டவை, மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயக் கொள்வனவுகள் என்பன 2019இல் மிகையான திரவத்தன்மை பேணப்பட உதவின. வெளிநாட்டு நாணய பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் மத்திய வங்கியினால் வைத்திருக்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் முதிர்ச்சியடைந்தமை, இரண்டாந்தரச் சந்தையிலிருந்தான திறைசேரி முறிகளின் உடனடிக் கொள்வனவுகளூடாக நிரந்தர அடிப்படையில் உள்நாட்டுப் பணச் சந்தைக்கு திரவத்தன்மை உள்ளீடு செய்யப்பட்டமையின் மூலம் கட்டுப்படுத்தப்பட்டன. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களைத் தொடர்ந்து செலாவணி வீதத்தின் மீதான குறுங்கால அழுத்தம் மற்றும் அரச பிணையங்கள் சந்தையிலிருந்தான வெளிப்பாய்ச்சல்களுக்கு மத்தியிலும் 2019இல் இலங்கை ரூபா சிறிதளவால் உயர்வடைந்தமைக்கு

நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்கல் உட்பட நிதியியல் கணக்கிற்கான முக்கிய உட்பாய்ச்சல்கள் ஆதரவாக விளங்கின. 2019ஆம் ஆண்டுப்பகுதியில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை கலப்பான செயலாற்றத்தினைக் காட்டியமைக்கு உள்நாட்டு மற்றும் உலகளாவிய சூழ்நிலையில் அவதானிக்கப்பட்ட மோசமான நிகழ்வுகளே காரணமாகும். கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை சந்தை மூலதனமயமாக்கல், விலை வருவாய் விகிதம் மற்றும் திரண்ட பங்கு விலைகள் ஆகியவற்றின் நியதிகளில் முன்னேற்றங்களைப் பதிவுசெய்த வேளையில், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையிலிருந்தான தேறிய வெளிநாட்டு வெளிப்பாய்ச்சல்கள் இவ்வாண்டுப்பகுதியில் தொடர்ந்தபோதும் 2018 உடன் ஒப்பிடுகையில் இது மெதுவான வேகத்திலேயே காணப்பட்டது. அதேவேளை, நாட்டின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் தொழிற்பாடுகள் இவ்வாண்டுப்பகுதியில் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகளின் உட்கட்டமைப்பின் பாதுகாப்பில் முக்கியமான தடங்கல்களோ கரிசனைகளோ இல்லாமல் ஒழுங்கான அடிப்படையில் பேணப்பட்டதுடன் நாட்டில் டிஜிட்டல் கொடுப்பனவு முறையைத் தீவிரமாக ஊக்குவிப்பதற்கான படிமுறைகள் எடுக்கப்பட்டன. கொவிட்-19 தொற்றிலிருந்து எழுகின்ற நிதியியல் சந்தை நடவடிக்கைகளுக்கு ஏற்படக்கூடிய தடங்கல்களைப் பரிசீலனையில் கொண்டு உள்நாட்டு நிதியியல் சந்தைகளில் போதுமான திரவத்தன்மையினைப் பேணுவதற்கு அநேக நடவடிக்கைகளை மத்திய வங்கி மேற்கொண்ட வேளையில் நாணயத்தின் கிடைப்பனவும் அதேபோன்று மற்றைய அனைத்துக் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளும் உறுதிப்படுத்தப்பட்டன. பொருளாதார நடவடிக்கைக்கு தற்போது இடம்பெற்றுவரும் இடையூறுகளின் காரணமாக வியாபாரங்களினாலும் பொதுமக்களினாலும் எதிர்நோக்கப்படும் இடர்ப்பாடுகளைத் தளர்த்துவதற்காக நிதியியல் துறையின் உதவியுடன் அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், சவால்மிக்க காலப்பகுதியில் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினையும் ஆற்றல்வாய்ந்த தன்மையினையும் உறுதிப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## 1.3 உலகளாவிய பொருளாதாரச் சூழலும் தோற்றப்பாடும்

**பாரிய பொருளாதாரங்களுக்கிடையிலான அதிகரித்த வர்த்தகம்சார் பதற்றங்கள், புவிசார் அரசியல் பதற்றங்கள் மற்றும் முக்கிய தோற்றம் பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களின் மந்தமான உள்நாட்டுக் கேள்வி என்பவற்றின் தாக்கத்தை பிரதிபலித்து உலகளாவிய பொருளாதார வளர்ச்சி 2018 உடன் ஒப்பிடுகையில் 2019இல் மெதுவடைந்தது.** பன்னாட்டு நாணய நிதியத்தினால் 2020 ஏப்பிறலில் வெளியிடப்பட்ட உலகப் பொருளாதார தோற்றப்பாடடின்படி உலகளாவிய பொருளாதார வளர்ச்சி 2018இன் 3.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2019இல் 2.9 சதவீதமாக குறைவாகக் காணப்பட்டது. ஐக்கிய இராச்சியம் மற்றும் யப்பான் போன்ற பொருளாதாரங்களின் மேம்பட்ட வளர்ச்சி செயலாற்றத்திற்கு மத்தியிலும், ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய பிரதேசத்தின் மிதமான வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் வகையில் முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களின் வளர்ச்சி கடந்த ஆண்டின் 2.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2019இல் 1.7 சதவீதமாக மதிப்பிடப்பட்டது. அதேவேளையில், தோற்றம்பெற்றுவரும் சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களின் வளர்ச்சி 2018இல் 4.5 சதவீதத்திலிருந்து 2019இல் 3.7 சதவீதத்திற்கு மிதமடைந்தது. இது, பெருமளவில் உள்நாட்டு கேள்வி மீது நாடுகள் சார்ந்த குறிப்பிட்ட அதிர்வுகளினால் ஏற்பட்ட தாக்கங்களின் விளைவாகும். முக்கிய தோற்றம்பெற்றுவரும் பொருளாதாரங்களில், சீனா, இந்தியா, ருசியா மற்றும் பிறேசில் ஆகியவையின் வளர்ச்சி சென்ற ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019இல் மிதமடைந்தது குறிப்பிடத்தக்கதாகும். உலகளாவிய ரீதியில் மந்தமான பொருளாதார நடவடிக்கைகளை பிரதிபலிக்கும் வகையில், பண்டங்களின் வர்த்தகம் மற்றும் பணிகள் மீதான வர்த்தகத்தின் அளவின் வளர்ச்சி 2018இல் 3.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 0.9 சதவீமாக குறிப்பிடத்தக்களவினால் மிதமடைந்தது. வர்த்தகம் மற்றும் தயாரிப்பு கணிசமான அளவினால் மெதுவடைந்ததனால், பண்டங்களின் விலைகள் 2019இல் ஓர் கணிசமான வீழ்ச்சியை பதிவுசெய்தன. இது பெற்றோலிய விலைகள் 2018இல் 29.4 சதவீதத்தினால் உயர்வடைந்ததுடன் ஒப்பிடுமிடத்து 2019இன் 10.2 சதவீத வீழ்ச்சியில் பிரதிபலிக்கப்பட்டது. தாழ்வான வலு விலைகள் மற்றும் குறைந்தளவிலான நடவடிக்கைகளினால் ஆதரவுபெற்று முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களில் நுகர்வோர் விலைப் பணவீக்கம் 2018 இல் 2.0 சதவீதத்திலிருந்து 2019இல் 1.4 சதவீதமாக மெதுவடைந்தது. இருப்பினும், தோற்றம்பெற்றுவரும் சந்தை மற்றும் அபிவிருந்தியடைந்துவரும் பொருளாதாரங்களில் நுகர்வோர் விலை பணவீக்கம் 2018இல் 4.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2019 இல் 5.0 சதவீதமாக சற்று விரைவடைந்து இந்தப் பொருளாதாரங்களில் காணப்படும் மட்டுப்படுத்தப்பட்ட கேள்வி அழுத்தங்களுக்கு மத்தியிலும் காணப்பட்ட நிரம்பல் சார் குழப்பங்களின் தாக்கத்தினை நுகர்வோர் விலைப் பணவீக்கம் பிரதிபலித்தது.

**பொருளாதார மற்றும் அரசியல் சார்ந்த எதிர்மறையான விசைகளுக்கு மத்தியில் ஓர் கடினமான மீட்சிப் பாதையில் காணப்பட்ட உலகளாவிய பொருளாதாரம் கொவிட்-19 உலகளாவிய நோய்த் தொற்றுப்பரவலினால் ஓர் பாரிய பின்னடைவின் அறிகுறிகளை காண்பித்தது.** பன்னாட்டு நாணய நிதியத்தினால் 2020 ஏப்பிறலில் வெளியிடப்பட்ட உலகப் பொருளாதார தோற்றப்பாடு 2020இல் உலகளாவிய பொருளாதாரம் 'பெரும் பொருளாதார மந்தநிலைக்கு'

1

அட்டவணை 1.4

**உலக பொருளாதார அபிவிருத்திகளும் தோற்றப்பாடும் (அ)**

| விடயம் | 2018 | 2019 | 2020 (எறிவு) | 2021 (எறிவு) |
|---|---|---|---|---|
| **உலக வெளியீடு** | **3.6** | **2.9** | **-3.0** | **5.8** |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் | 2.2 | 1.7 | -6.1 | 4.5 |
| ஐக்கிய அமெரிக்கா | 2.9 | 2.3 | -5.9 | 4.7 |
| யூரோ பகுதி | 1.9 | 1.2 | -7.5 | 4.7 |
| ஐக்கிய இராச்சியம் | 1.3 | 1.4 | -6.5 | 4.0 |
| யப்பான் | 0.3 | 0.7 | -5.2 | 3.0 |
| தோற்றம்பெற்று வரும் சந்தைகள் மற்றும் அபிவிருத்தி அடைந்துவரும் பொருளாதாரங்கள் | 4.5 | 3.7 | -1.0 | 6.6 |
| தோற்றம்பெற்று வரும் அபிவிருத்தி அடைந்துவரும் ஆசியா | 6.3 | 5.5 | 1.0 | 8.5 |
| சீனா | 6.7 | 6.1 | 1.2 | 9.2 |
| இந்தியா | 6.1 | 4.2 | 1.9 | 7.4 |
| **உலக வர்த்தக அளவு (பொருட்கள் மற்றும் பணிகள்)** | **3.8** | **0.9** | **-11.0** | **8.4** |
| **விலை அசைவுகள்** | | | | |
| நுகர்வோர் விலைகள் | | | | |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் | 2.0 | 1.4 | 0.5 | 1.5 |
| தோற்றம் பெற்றுவரும் மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்கள் | 4.8 | 5.0 | 4.6 | 4.5 |
| பண்டங்களின் விலைகள் (ஐ.அ.டொ.) | | | | |
| எண்ணெய் | 29.4 | -10.2 | -42.0 | 6.3 |
| எரிபொருள் அல்லாதவை | 1.3 | 0.8 | -1.1 | -0.6 |
| **ஐ.அ.டொ வைப்புக்கள் மீதான ஆறுமாத இலண்டன் வங்கிகளுக்கு இடையிலான வழங்கல் வீதம் (சதவீதம்)** | **2.5** | **2.3** | **0.7** | **0.6** |

(அ) வேறுவிதமாகக் குறிப்பிட்டாலன்றி ஆண்டு சதவீத மாற்றம்

*மூலம் :* உலகப் பொருளாதாரத் தோற்றப்பாடு (ஏப்பிறல் 2020), ப.நா.நிதியம்

பின்னரான மிக மோசமான ஓர் மந்தத்தை காணும் எனவும் 2007/08 உலகளாவிய நிதி நெருக்கடியை விஞ்சுமெனவும் எறிவுசெய்கிறது. உலகளாவிய நிதியியல் நெருக்கடியை விஞ்சுமெனவும் கொவிட்-19 உலகளாவிய நோய்த் தொற்றுப்பரவலின் விளைவான இந்த ‘பெரும் முடக்கல்’ காலப்பகுதி 2020இல் உலகளாவிய பொருளாதாரத்தில் ஓர் கணிசமான சுருக்கத்தை விளைவிக்கும் சாத்தியமுள்ளதுடன் இதற்குப் பின்னர் 2021இல் ஓர் பகுதியளவிலான மீட்சி ஏற்படலாம். இதற்கேற்ப, 2020இல் உலகளாவிய வளர்ச்சி 3.0 சதவீதத்தினால் சுருக்கமடைந்து, இதனைத் தொடர்ந்து 2021 இல் 5.8 சதவீத விரிவாக்கமடையுமென எறிவுசெய்யப்படுகிறது. இது பன்னாட்டு நாணய நிதியத்தின் உலகப் பொருளாதாரத் தோற்றப்பாட்டின் சனவரி மாத இற்றைப்படுத்தல் வெளியீட்டில் காணப்பட்ட உலகப் பொருளாதாரம் 2020 மற்றும் 2021இல் முறையே 3.3 சதவீதத்தினாலும் 3.4 சதவீதத்தினாலும் வளரும் என எறிவுசெய்யப்பட்டதிலிருந்து ஓர் குறிப்பிடத்தக்க விலகலாகும். ஐக்கிய அமெரிக்கா, யப்பான், ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி மற்றும் ஸ்பெயின் உள்ளடங்கலான பெருமளவான முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களின் சுருக்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு 2020இல் முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களின் வளர்ச்சி 6.1 சதவீதத்தினால் சுருக்கமடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. நலன் சார்ந்த நெருக்கடியுடன் பாரிய வெளிநாட்டுக் கேள்வி அதிர்வு மற்றும் இறுக்கமடையும் உலகளாவிய நிதியியல் நிலைமைகள் என்பவற்றினால் தோற்றம்பெற்றுவரும் சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்கள் பாதிக்கப்படும். இதற்கேற்ப, தோற்றம்பெற்றுவரும் சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்களின் வளர்ச்சி 2020இல் 1.0 சதவீதத்தினால் சுருக்கமடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. உலகப் பொருளாதாரத் தோற்றப்பாட்டின் சனவரி மாத இற்றைப்படுத்தலில் காணப்பட்ட 5.8 சதவீதத்திலிருந்து கீழ்நோக்கி திருத்தப்பட்டபோதிலும் தோற்றம்பெற்றுவரும் ஆசியா என்பது 2020 இல் 1.0 சதவீத நேர்மறையான வளர்ச்சி எதிர்பார்க்கப்படும் ஒரே பிராந்தியமாகும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த குழுவில் காணப்படும் சீனா, இந்தியா மற்றும் தாய்லாந்து போன்ற பொருளாதாரங்கள் 2020இல் மிதமாக வளருமென எதிர்பார்க்கப்படுகிறது. இதே வேளையில், கொவிட்-19 பரவலுக்கு முன்னர் காணப்பட்ட மேம்பட்ட பொருளாதாரத் தோற்றப்பாடு எதிர்பார்ப்புகள், பெற்றோலியம் உள்ளடங்கலான பண்ட விலைகளை அதிகரிக்கச்செய்தது. இருப்பினும், கட்டுப்பாட்டு வழிமுறைகள் என்பன உலகளாவிய கைத்தொழில் நடவடிக்கையில் ஓர் பாரிய வீழ்ச்சியை விளைவித்து, கொவிட்-19 உலகளாவிய நோய்த் தொற்றுப்பரவலினால் இந்த போக்கு நேர்மாறாகியது.

**அதிகரித்த வர்த்தக பதற்றங்களுக்கு மத்தியில் பல பாரிய உலகளாவிய பொருளாதாரங்கள் 2019 நடுப்பகுதியிலிருந்து தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டைப் பின்பற்றத் தொடங்கிய வேளையில் கொவிட்-19 நோய்த் தொற்றுப்பரவலின் கசிவுத்தாக்கங்கள் நாணயக் கொள்கைத் தளர்த்தலின் மேலும் விரைவான வேகத்தினையும் அதிகரித்தளவில் முக்கியத்துவம் வாய்ந்த இறை ஊக்குவிப்பையும் வேண்டிநிற்கின்றன.** அட்டவணைப்படுத்தப்பட்ட பெடரல் திறந்த சந்தைச் செயற்குழு குழுமங்களுக்கிடையில் (2007 / 08இன் உலகளாவிய நிதியியல் நெருக்கடிக்குப் பின்னரான முதலாவது அவசரகால நடவடிக்கை) மார்ச்சின் முன்னைய பகுதியில் பெடரல் நிதிகளின் வீதத்தின் இலக்கு எல்லையை அரை சதவீதப் புள்ளியினால் குறைத்த பின்னர், ஐக்கிய அமெரிக்காவின் பெடரல் றிசேர்வ் வங்கி தனது பெடரல் நிதிகளின் வீதத்தின் இலக்கு வீச்சினை 0.0 சதவீதத்திலிருந்து 0.25 சதவீதத்திற்கு ஒரு சதவீதப் புள்ளியினால் தொடர்ந்து குறைத்தது. கொவிட்-19 உலகளாவிய நோய்த் தொற்றுப்பரவல் பொருளாதாரத் தோற்றப்பாட்டிற்கு புதிய இடர்கள் மற்றும் சவால்களை ஏற்படுத்தியதனை பெடரல் றிசேர்வ் ஒப்புகொண்டதுடன் அண்மைக்கால நிகழ்விலிருந்து பொருளாதாரம் மீண்டுள்ளது என நம்பிக்கை ஏற்படும் வரை இந்த வட்டி வீதம் பேணப்படும் என குறிப்பிட்டது. வீட்டுடமையாளர் மற்றும் வியாபாரங்களுக்கான கொடுகடன் பாய்ச்சல்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் பெடரல் றிசேர்வ் பல்வேறு புதிய வழிமுறைகளையும் அறிவித்தது. இதேவேளையில், சீன மக்கள் வங்கி அதனது அளவுக்குறியீடு வழங்கல் வீதமான

கடன்களுக்கான முதன்மை வீதம் மற்றும் அதனது நடுத்தர கால கடன்வழங்கல் வீதம் இரண்டினையும் 30 அடிப்படைப் புள்ளிகளினால் குறைத்தது. நோய்த் தொற்றுப்பரவலினால் பாதிக்கப்பட்ட வியாபரங்களுக்கு ஆதரவளிப்பதற்காக குறிப்பிட்ட கொள்கை வழிமுறைகளை அறிவித்ததுடன் நுண்பாக வியாபாரங்கள் மற்றும் பொருளாதாரத்தின் பாதிப்படையக்கூடிய ஏனைய பகுதியினருக்கான கொடுகடன் உட்பாய்ச்சல்களை இயலச்செய்வதற்கு குறிப்பிட்ட வங்கிகளுக்கான ஒதுக்குத் தேவைப்பாடுகளையும் சீன மக்கள் வங்கி குறைத்த அதேவேளையில் வங்கித்தொழில் துறையின் சுமுகமான தொழிற்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு தாழ்ந்த வட்டி வீதங்களில் திரவத்தன்மையை உட்புகுத்துகின்றது. நிறுவனங்கள் மற்றும் வீட்டுடமையாளர்களுக்கு வங்கிக் கடன் வழங்கலுக்கு ஆதரவளிப்பதற்கு இலக்கிடப்பட்ட நீண்டகால மீள்நிதியிடல் நடவடிக்கைகளை ஐரோப்பிய மத்திய வங்கி தொடங்கியதுடன் நாணயக் கொள்கை ஊடுகடத்தல் பொறிமுறைக்கான கணிசமான இடர்நேர்வுகளை முறியடிப்பதற்காக தனியார் மற்றும் அரச துறை பிணையங்களை கொள்வனவுசெய்தற்காக உலகளாவிய நோய்த் தொற்றுப்பரவல் அவசரகால கொள்வனவு நிகழ்ச்சித்திட்டத்தினையும் தொடங்கியது. இத்துடன் திரவத்தன்மையை வழங்கும் நடவடிக்கைகளில் பங்கேற்பதனை வசதியளிப்பதற்கான தற்காலிக பிணை தளர்த்தல் வழிமுறைகள் கொண்ட தொகுதி அண்மையில் மேற்கொள்ளப்பட்டது. மனப்பாங்குகளைப் பாதுகாப்பதற்கும் நிதியியல் சந்தைகளில் உறுதிப்பாட்டினை பேணுவதற்கும் நாணய தளர்த்தல் வழிமுறைகளை யப்பான் வங்கி மேற்கொண்டது. உலகளாவிய நோய்த் தொற்றுப்பரவலின் தொடக்கத்திலிருந்து அவுஸ்திரேலிய ரிசேர்வ் வங்கி தனது அளவுக்குறியீடு வீதத்தினையும் இரண்டு முறைகளாக வரலாற்றிலேயே குறைந்த மட்டமான 0.25 சதவீதத்திற்கு குறைத்தது. சீனாவின் பொருளாதார நடவடிக்கை மீது அதிகம் தங்கியிருக்கும் அவுஸ்திரேலிய பொருளாதாரத்தின் மீது வைரஸின் கணிசமான தாக்கத்தை நேரடியாக சுட்டிக்காட்டி இந்த குறைப்பை மேற்கொண்டது. பல இலக்கிடப்பட்ட நிவாரண வழிமுறைகளுக்கு மேலதிகமாக, பாங் நிகாரா மலேசியா உலகளாவிய பொருளாதார நிலைமைகளின் நலிவு மற்றும் பிராந்தியத்திற்குள் பொருளாதார நடவடிக்கைகளிலான குழப்பங்களை கருத்திற்கொண்டு ஓரிரவு கொள்கை வீதத்தினை 50 அடிப்படைப் புள்ளிகளினால் 2.50 சதவீதத்திற்கு குறைத்ததுடன் நியதி ஒதுக்குத் தேவைப்பாடு விகிதத்தினை 1 சதவீத புள்ளியினால் குறைத்தது. ஏனைய பிராந்திய மத்திய வங்கிகளில் இந்திய ரிசேர்வ வங்கி தனது கொள்கை மீள்கொள்வனவு வீதத்தினை 75 அடிப்படைப் புள்ளிகளினால் 4.40 சதவீதத்திற்கு குறைத்துடன் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதத்தினை 115 அடிப்படைப் புள்ளிகளினால் 3.75 சதவீதத்திற்கு குறைத்தது. அத்துடன், பொருளாதாரத்திற்கு புத்துயிரூட்டுவதற்கு அவசியமுள்ள காலம் வரைக்கும் கொவிட்-19 உலகளாவிய நோய்த் தொற்றுப்பரவலின் தாக்கத்தினை மட்டுப்படுத்துவதற்கும் இந்த தளர்த்தப்பட்ட நிலைப்பாடு பேணப்படும் என்றும் அறிவித்தது. பாங்கோ சென்டிரால் பிலிபினாஸ் தனது ஓரிரவு நேர்மாற்றும் மீள்கொள்வனவு வீதத்தினை மூன்று முறைகளில் 125 அடிப்படைப் புள்ளிகளினால் 2.75 சதவீதத்திற்கு 2020இன் இதுவரையிலான காலப்பகுதியில் குறைத்ததுடன் வங்கிகளின் மீதான ஒழுங்குவிதிகளைத் தற்காலிகமாகத் தளர்த்தியதுடன் ஒதுக்குத் தேவைப்பாட்டினை 2 சதவீதப் புள்ளிகளால் குறைத்தது. உலகளாவிய ரீதியில், கனடா வங்கி, இங்கிலாந்து வங்கி, யப்பான் வங்கி, ஐரோப்பிய மத்திய வங்கி, ஐக்கிய அமெரிக்காவின் பெடரல் ரிசேர்வ் மற்றும் சுவிஸ் தேசிய வங்கி என்பன துணைநில் ஐக்கிய அமெரிக்க டொலர் திரவத்தன்மை பரஸ்பர பரிமாற்றல் ஒழுங்குகள் மூலம் திரவத்தன்மை வழங்கலை மேம்படுத்துவதற்கு ஓர் ஒருங்கிணைக்கப்பட்ட நடவடிக்கையை அறிவித்தன. இவை உலகளாவிய நிதிச் சந்தைகளில் உள்ள அழுத்தங்களை இலகுபடுத்துவதற்கான ஓர் முக்கிய திரவத்தன்மை சார்ந்த ஆதரவாக செயற்படும் என எதிர்பார்க்கப்படுவதுடன் உலகம் முழுவதிலுமுள்ள வீட்டுடமையாளர் மற்றும் வியாபாரங்களுக்கான கொடுகடன் நிரம்பல் மீதான இவ்வகையான அழுத்தங்களின் தாக்கத்தை மட்டுப்படுத்த உதவும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. நீண்ட கால வட்டி வீதங்கள் தாழ்வாக இருப்பதை உறுதிசெய்வதற்கு நாணயக் கொள்கை தளர்ந்ததாக தொடரவேண்டும் என்பது தொடர்பில் ஓர் பரந்தளவிலான கொள்கை ஒருமைப்பாடு உள்ளது. நாணயக் கொள்கை தளர்விற்கான கொள்கை இடைவெளி பெரும்பாலான பாரிய பொருளாதாரங்களுக்கு இருந்தாலும், ஐரோப்பிய பிரதேசம் மற்றும் யப்பான் போன்ற எதிர்கணிய வட்டி வீதங்களைக் கொண்ட பொருளாதாரங்கள் சராசரியை விடக் குறைந்த வளர்ச்சி மற்றும் இலக்கிற்குக் கீழான பணவீக்கம் போன்ற சவால்களைத் தீர்ப்பதற்கு மரபுசாரா நாணயக் கொள்கை வழிமுறைகளை தொடர்ந்தும் மேற்கொள்ளவேண்டும். தாழ்ந்த வட்டி வீதச் சூழலானது குறுங்காலக் கேள்வியினை வலுப்படுத்துவதற்கு இறைக்கொள்கையின் தீவிரமான இடையீட்டிற்கும் வழிவகுக்கும். தொழில்நிலை தொடர்பான இழப்புக்களுக்கு முகங்கொடுக்கும் வீட்டுடமையாளர் மற்றும் கேள்வியில் ஓர் திடீர் வீழ்ச்சிக்கு முகங்கொடுக்கும் நிறுவனங்கள் போன்றவற்றின் குறுங்கால பாதிப்படையக்கூடிய தன்மைகளை நேரடியாகத் தீர்ப்பதற்கு இறை வழிமுறைகள் அதிக செயற்றிறனுடையவையாக இருக்கும் சாத்தியமுண்டு. விருப்பு அடிப்படையிலான ஓரளவான இறை தளர்த்தலை மேற்கொள்ள பல முன்னேற்றமடைந்த பொருளாதாரங்கள் உறுதியளித்துள்ளதனால், படுகடனின் நீடித்துநிலைத்திருக்கும் கரிசனைகளை பாதிக்காத முறையில் மேலும் வழிமுறைகள் மேற்கொள்ளப்படலாம். தோற்றம் பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களில் இறை சாந்த வலுவற்ற தன்மைகள் இருந்தபோதிலும், குறைந்த வருமானமுடைய குழுக்களுக்கான சமூக மாற்றல்கள் மற்றும் முதலீட்டிற்கான ஆதரவு

தொடரவேண்டியது எதிர்க்கணிய பேரண்டப் பொருளாதார பாதிப்புக்கள் அரசியல், பொருளாதார மற்றும் சமூக விளைவுகளைக் கொண்ட பொருளாதார சமமின்மைகளாக விளைவிப்பதனைத் தடுக்கும். இதேவேளையில், பல்புடை நிதியியல் நிறுவனங்களை உள்ளடக்கிய உலகளாவிய சமூகமென்பது தாழ்ந்த வருமான பொருளாதாரங்கள் மற்றும் ஏனைய பாதிப்படையக்கூடிய பொருளதாரங்களுக்கு படுகடனின் சட்ட ரீதியான இசைவுத்தாமதம் மற்றும் படுகடன் மீள்கட்டமைத்தல் போன்ற ஏனைய நிவாரணத்துடன் சலுகையான நிதியிடலையும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. உலகளாவிய நோய்த் தொற்றுப்பரவலின் தாக்கத்தினை சமாளிக்க இயலச்செய்வதுடன் மருத்துவத் தேவைப்பாடுகள் மற்றும் சமூகப் பாதுகாப்பு வலையமைப்புக்களை வலுப்படுத்துவதற்கான அதிகரிக்கும் இறைத் தேவைகளை பூர்த்திசெய்வதற்கும் இவை வசதிபடுத்தும்.

**உலகளாவிய வளர்ச்சி உத்வேகத்திற்கு கணிசமான கீழ் நோக்கிய இடர்நேர்வுகளுள்ளன.** உலகளாவிய நோய்த் தொற்றுப்பரவல் தொடர்பில், பரவலின் செறிவு முதல் கட்டுப்பாடு முயற்சிகள் மற்றும் அவற்றின் எதிரொலிகள், மனப்பாங்குகள் மற்றும் நடத்தையில் ஏற்படக்கூடிய நிரந்தமான மாற்றங்களின் சாத்தியம் என்ற பல விடயங்கள் தொடர்பில் கணிசமான நிச்சயமற்றதன்மைகள் காணப்படுவதனால் இந்த பொருளாதார வீழ்ச்சியின் அளவினை கணிப்பிடுவதனை கடினமாக்கின்றன. உலகளாவிய வளர்ச்சிக்கு ஓர் கணிசமான கீழ்நோக்கிய திருத்தம் செய்யப்பட்டபோதிலும், தோற்றப்பாட்டிற்கான இடர்நேர்வுகளும் கீழ் நோக்கியதாகவுள்ளன. மேலும் விடாப்பிடியான தன்மையைக்கொண்ட உலகளாவிய நோய்த் தொற்றுப்பரவலை முக்கிய இடர்நேர்வுகள் உள்ளடக்குவதுடன் இதனால் பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் நிதியியல் சந்தைகள் மீதான தாக்கம் கணிசமாகவும் இன்னும் நீண்ட காலமுடையதாகவும் இருக்கலாம். கட்டுப்பாட்டு வழிமுறைகளிலிருந்து அவசரமாக பின்வாங்கும் பட்சத்தில் எஞ்சியுள்ள கொத்தணிகளிலிருந்து வைரஸ் பரவலாம் என்பதனால் பரவலின் ஓர் “இரண்டாம் அலை” ஏற்படும் கரிசனையுமுள்ளது. வெளிநாட்டிலிருந்து வரும் நபர்களிடமிருந்தும் இது ஏற்படலாம். ஆகவே, விடாப்பிடியான மற்றும் இடையிடையான இரு தன்மைகளையும் கொண்ட பரவல்களினால் மீட்சி தடைப்படலாம் என்பதனால் விடாப்பிடியான இடையூறுகளை ஏற்படுத்தலாம். வைரஸ் பரவல் மெதுவடைந்தாலும், நோய்பரவுதல் பற்றிய விடாப்பிடியான நிச்சயமற்றதன்மை, வியாபார நம்பிக்கையின் போதுமானதும் நேரகாலத்துடனுமான மீள்நிறுத்தப்படுதல் போதாமை, குடியிருப்பாளர் மற்றும் நிறுவனங்களின் நடத்தையில் அமைப்பியல் சார்ந்த மாற்றங்கள் போன்ற நீண்ட காலத்திற்கான பாதிப்புக்களை ஏற்படுத்தலாம் என்ற கரிசனையுமுண்டு. இவை யாவும், இன்னும் நீண்ட காலத்திற்கான நிரம்பல் சங்கிலி சார்ந்த குழப்பங்கள் மற்றும் திரண்ட கேள்வியின் வீழ்ச்சி போன்றவற்றை உச்சமடையச் செய்யலாம். தாழ்ந்த எண்ணெய் விலைகளுடன் நலிவான உலகளாவிய கேள்வி என்பது குறுங்காலத்தில் பணவீக்கத்தின் மிதமடைதலை விளைவிக்கும் சாத்தியமிருந்தபோதிலும், தற்போது மேற்கொள்ளப்படும் அதிகரித்த திரவத்தன்மை ஆதரவு, இறைத் தூண்டல் மற்றும் சமூக பாதுகாப்பு வழிமுறைகள் என்பன உலகளாவிய நோய்த் தொற்றுப்பரவலின் மறைதல் மற்றும் கேள்வியின் மீட்சியுடன் பணவீக்க அழுத்தங்களை ஏற்படுத்தலாம். நலிவான கேள்வியினால் இருப்புக்களின் திரட்டப்படுவதனால் உற்பத்தியாளர்களுக்கு சேமிப்பது சார்ந்த தடைகள் இருப்பதனால் குறுங்காலத்தில் எண்ணெய் விலைகள் சார்ந்த இடர்நேர்வுகள் கீழ்நோக்கியே சார்புடையவையாகும். ஒபெக் + ஒப்பந்தத்தின் வலுவூட்டல் மற்றும் உலகளாவிய நோய்த் தொற்றுப்பரவலின் விரைவான கட்டுப்பாடு உள்ளடங்கலான மேல்நோக்கிய இடர்நேர்வுகளுடன் நடுத்தர காலத்தில் இடர்நேர்வுகள் சமநிலையானவையாகக் காணப்படுகின்றன. இருப்பினும், ஒபெக் + கூட்டணியின் குலைவுடன் உலகளாவிய பொருளாதார நடவடிக்கையின் விரைவான மெதுவடைதல் ஓர் முக்கிய கீழ்நோக்கிய இடர்நேர்வாக இருக்கக்கூடும். வைரஸின் விரைவான பரவலின் போதான முதலீட்டாளர்களின் இடர்நேர்வு தவிர்ப்பென்பது தோற்றம்பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களிலிருந்து ஓர் மூலதன வெளிப்பாய்ச்சலை விளைவுபடுத்தியதுடன் இந்த வெளிப்பாய்ச்சல்களின் அளவு 2007/08இன் உலகளாவிய நிதியியல் நெருக்கடியின்போது அவதானிக்கப்பட்டதைவிட உயர்வாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வகையான உச்சமான உலகளாவிய இடர்நேர்வு கொண்ட காலப்பகுதியின்போது, டொலர் நிதியிடல் பெறுவதில் உள்ள சிரமம் என்பது ஓர் மூலதன உட்பாய்ச்சல்களின் வீழ்ச்சி அதனைத் தொடர்ந்து விரைவான செலாவணித் தேய்மானம் போன்ற சுயபூர்த்தியுள்ள தீர்க்கதரிசனத்திற்கு வழிவகுத்து மூலதனப்பாய்ச்சலில் திரும்பல்களைத் தூண்டக்கூடும்.

**நாட்டிற்குள் கொவிட்-19 நோய்த் தொற்றுப்பரவலின் பாரிய பரவலை இலங்கை கட்டுபடுத்தக்கூடியதாக இருந்தபோதிலும், உலக பொருளாதாரத்தின் ஒன்றுடன் ஒன்று தொடாபுடைய தன்மையினால் உலகளாவிய நோய்த் தொற்றுப்பரவலிலிருந்தான கசிந்த விளைவுகளை இலங்கை அனுபவிக்கும்.** கிருமி 2019இன் பின்னய பகுதியிலிருந்து வைரஸ் பரவத்தொடங்கிய சீனாவுடன் இலங்கை நெடுங்கால பொருளாதார தொடர்புகளை கொண்டுள்ளது. ஆகவே, குறுங்காலத்தில் சுற்றுலாத்துறை, கட்டடவாக்கம் மற்றும் ஆடைகள் போன்ற பல துறைகளின் மூலம் சீனப் பொருளாதாரத்தின் மந்தம் இலங்கை மீது ஓர் கணிசமான தாக்கத்தினை கொண்டிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நோய்த் தொற்றுப்பரவலின் பரவலான தன்மையின் விளைவினால் உலகளாவிய சுற்றுலாப் பயணிகளின் வீழ்ச்சியினால் உணவு குடிபானங்கள் மற்றும் போக்குவரத்து உள்ளடங்கலான

உள்நாட்டு சுற்றுலாத்துறைக் கைத்தொழிலுள்ள பெறுமதிச் சங்கிலிகள் எதிர்கணியமாக பாதிக்கப்படலாம். இருப்பினும், அண்மைக்கால எண்ணெய் விலை அசைவுளினால் பிரதிபலிக்கப்பட்டவாறு நலிவான உலகளாவிய கேள்வி என்பது தாழ்ந்த பண்ட விலைகளினை விளைவிப்பதனால் இதிலிருந்து சில நன்மைகள் கிடைக்கப்பெறலாம். மேலும், உலகளாவிய ரீதியில் அதிகளவிலான தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலையிலிருந்து இலங்கை நன்மை பெறலாம் என்பது குறிப்பிடத்தக்கது என்பதோடு இது குறைவான நிதியிடல் செலவினை ஏற்படுத்தலாம். இந்த எதிர்பார்ப்புகள் இருந்தபோதிலும், திரவத்தன்மை மற்றும் தரத்தினை நோக்கி மூலதனத்தில் விரைவான திரும்பலுக்கு மத்தியில் தோற்றம்பெற்றுவரும் சந்தைகளின் நாட்டிற்கான முறி விளைவுகளின் அதிகரிப்பென்பது ஓர் முக்கிய கரிசனையாகயிருக்கும். பொருளாதாரத்தை நிலைத்திருக்கச்செய்யும் அதேவேளையில் உலகளாவிய நோய்த் தொற்றுப்பரவலினை கட்டுப்படுத்துவதற்கு முன்னோக்கிய கொள்கை வழிமுறைகள் ஏற்கனவே நடைமுறைபடுத்தப்பட்டிருந்தாலும், கொள்கை வகுப்பாளர்கள் அபிவிருத்திகள் தொடர்பில் தொடர்ச்சியாக விழிப்பாகவும் உள்வரும் தரவுகளை உன்னிப்பாக கண்காணிக்கவும் வேண்டும். தற்போதுள்ள சவாலான சூழலுக்கு மத்தியில் இலங்கைப் பொருளாதாரத்தின் வளர்ச்சிப் பாதையினை நிலைத்திருக்கச்செய்வதற்கு முன்மதியுடைய வகையில் குறுங்காலம் மற்றும் நடுத்தரக்காலம் இரண்டினையும் கரிசனையில்கொண்டு இலக்கிடப்பட்ட மற்றும் முன்னோக்கிய கொள்கைத் தலையீடுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

## 1.4 நடுத்தரகால பேரண்டப் பொருளாதாரத் தோற்றப்பாடு

**மேம்படுத்தப்பட்ட வியாபார நம்பிக்கையுடன் 2020ஆம் ஆண்டைத் தொடங்கிய இலங்கைப் பொருளாதாரம், கொவிட்-19இன் உலகளாவிய நோய்த் தொற்றுப்பரவல் மற்றும் உள்நாட்டுப் பரவுகையானது வியாபாரங்களையும் தனிநபர்களையும் ஒரே மாதிரியாக கடுமையாக பாதிக்கும் வரை, முதல் இரண்டு மாதங்களில் செயற்பாட்டில் ஒரு முன்னேற்றத்தை பதிவுசெய்திருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.** உலகளாவிய பொருளாதாரத்தில் ஒரு குறிப்பிடத்தக்க சுருக்கம் எதிர்பார்க்கப்பட்டிருந்தாலும், கொவிட்-19இன் உலகளாவிய பரவல் குறுங்கால பொருளாதாரத் தாக்கத்தின் அளவு பெரும்பாலும் நாடு சார்ந்ததாகவே காணப்படுகிறது. ஏனெனில், இது உலகளாவிய ரீதியில் அரசாங்கங்கள் பரம்பலைச் சமாளிப்பதற்கு எவ்வாறு விரைவாகவும் காத்திரமாகவும் தீர்வு நடவடிக்கைகளை எடுக்கின்றன என்பதைப் பொறுத்துள்ளது. சமூக இடைவெளியை உறுதிசெய்வதற்கும் அதன் மூலம் வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்கும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பொருளாதார செயற்பாடுகளில் குறிப்பிடத்தக்க தாக்கங்களை கொண்டிருக்கக்கூடுமென்பதனால் குறுங்காலத்தில் கொவிட்-19 பரவலின் நேரடி மற்றும் கசிவுத்தாக்கங்களிற்கு இலங்கையும் பாதிக்கப்படக்கூடியதாகக் காணப்படுகிறது. பரவலின் ஆரம்ப நிலைகளிலிருந்து அரசாங்கம் மேற்கொண்ட முன்னேற்பாடான நடவடிக்கைகள் ஏனைய பல நாடுகளின் அனுபவங்களுடன் ஒப்பிடும்போது உள்நாட்டுப் பரவலை பெருமளவில் கட்டுப்படுத்துகின்ற நியதிகளில் நம்பிக்கைக்குரிய விளைவுகளைக் காட்டியது. சுயாதீன இலங்கையின் வரலாற்றில் முன்னொரு போதும் இடம்பெற்றிராத இந்நிகழ்வின் மூலம் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிநபர்கள் மீதான சுமையை அரசாங்கம் மற்றும் மத்திய வங்கியால் அறிவிக்கப்பட்ட நிவாரண நடவடிக்கைகள் எளிதாக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இது உலகளாவிய மற்றும் உள்நாட்டு பொருளாதார வெளியீடுகளில் மற்றும் கொள்கை பதிலிறுத்தல்களில் அதிகளவிலான நிச்சயமற்ற தன்மையுடன் உருவாகிவரும் சூழ்நிலையொன்று என்றாலும், 2020ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டின் முடிவிலிருந்து உள்நாட்டுப் பொருளாதார செயற்பாடுகள் படிப்படியாக முன்னேற்றமடையும் மற்றும் உலகளாவிய பொருளாதார நடவடிக்கை ஆண்டின் நான்காம் காலாண்டிலிருந்து வேகமடையுமென்ற அடிப்படைத் தோற்றப்பாடொன்று, பேரண்டப் பொருளாதார எறிவுகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. இதன்படி, உள்நாட்டில் விதிக்கப்பட்டுள்ள சமூக இடைவெளி நடைமுறைகள் இரண்டாம் காலாண்டின் இறுதியளவில் பெருமளவுக்கு தளர்த்தப்பட்டிருக்குமென அனுமானிக்கப்படுகிறது. இது ஆண்டின் மூன்றாம் காலாண்டில் உள்நாட்டு பொருளாதார செயற்பாட்டின் மிகச் சிறியளவிலான மீட்சிக்கு இயலுமைப்படுத்தும். இதனைத் தொடர்ந்து ஏற்கனவே நடைமுறையிலுள்ள இறை மற்றும் நாணயத் தூண்டல் நடவடிக்கைகளால் ஆண்டின் நான்காம் காலாண்டில் பெரும்பாலான உள்நாட்டுச் செயற்பாடுகள் இயல்புநிலையொன்றுக்கு திரும்புவதுடன் உலகளாவிய பொருளாதார நிலைமைகள் மேம்படுவதால், சுற்றுலா, ஏற்றுமதி சார்ந்த உற்பத்தி போன்ற வெளிநாடு சார்ந்த கைத்தொழில்களின் மீட்சி சிலவற்றாலும் ஆதரவளிக்கப்படும். இதற்கிணங்க, கொவிட்-19 நோய்த் தொற்றுப்பரவலால் ஏற்படுத்தப்படும் குறுங்காலத் தாக்கங்களானது, உறுதியான வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் பொருளாதாரத்தின் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையை மேம்படுத்துவதற்குமான கொள்கைகளை அமுல்படுத்துவதற்குரிய பொருத்தமான நடவடிக்கைகளினால் பொருளாதாரத்தில் நடுத்தரகால தோற்றப்பாடுகளில் குறிப்பிடத்தக்க தாக்கமொன்றைக் கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படவில்லை.

**மேலே விபரிக்கப்பட்ட கருதுகோள்களின் அடிப்படையில் அதன்பின்பு எதிர்பார்க்கப்பட்ட உயர் வளர்ச்சிப் பாதைக்கு திரும்புவதற்கு முன், வருடாந்த உண்மைப் பொருளாதார வளர்ச்சி**

அட்டவணை 1.5

## நடுத்தரகால பேரண்டப்பொருளாதாரக் கட்டமைப்பு (அ)

| குறிகாட்டி | அலகு | 2018 (ஆ) | 2019 (இ) | எறிவுகள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
| **உண்மைத்துறை (ஈ)** | | | | | | | | |
| உண்மை மொ.உ.உ. வளர்ச்சி | % | 3.3 (இ) | 2.3 | 1.5 | 4.5 | 6.0 | 6.2 | 6.5 |
| நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உ. | ரூ.பில் | 14,366 (இ) | 15,016 | 15,925 | 17,466 | 19,443 | 21,690 | 24,245 |
| தலைக்குரிய மொ.உ.உ. | ஐ.அ.டொ. | 4,079 (இ)(உ) | 3,852 | 3,940 | 4,166 | 4,473 | 4,813 | 5,190 |
| மொத்த முதலீடு | மொ.உ.உ. இன் % | 30.4 (இ)(ஊ) | 27.4 | 26.8 | 27.3 | 27.8 | 28.1 | 28.4 |
| உள்நாட்டு சேமிப்புகள் | மொ.உ.உ. இன் % | 23.0 (இ)(ஊ) | 21.3 | 20.7 | 21.3 | 22.5 | 23.6 | 24.5 |
| தேசிய சேமிப்புகள் | மொ.உ.உ. இன் % | 27.3 (இ)(ஊ) | 25.3 | 23.7 | 24.7 | 25.6 | 26.2 | 26.8 |
| **வெளிநாட்டுத்துறை** | | | | | | | | |
| வர்த்தக இடைவெளி (ஈ) | மொ.உ.உ. இன் % | -11.7 | -9.5 | -7.7 | -9.8 | -9.7 | -9.5 | -9.2 |
| ஏற்றுமதிகள் | ஐ.அ.டொ.மில் | 11,890 | 11,940 | 8,740 | 11,117 | 12,421 | 13,594 | 15,380 |
| இறக்குமதிகள் | ஐ.அ.டொ.மில் | 22,233 | 19,937 | 15,415 | 20,135 | 22,092 | 23,815 | 26,135 |
| நடைமுறை கணக்கு நிலுவை (ஈ) | மொ.உ.உ. இன் % | -3.2 | -2.2 | -3.1 | -2.6 | -2.2 | -1.9 | -1.6 |
| வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகள் | இறக்குமதி மாதங்கள் | 3.7 | 4.6 | 5.6 | 4.6 | 4.6 | 4.6 | 4.6 |
| **இறைத் துறை (ஈ)** | | | | | | | | |
| மொத்த அரசிறை மற்றும் கொடைகள் | மொ.உ.உ. இன் % | 13.5 (எ) | 12.6 | 9.8 | 11.8 | 13.5 | 14.1 | 14.5 |
| செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கல் | மொ.உ.உ. இன் % | 18.7 (எ) | 19.4 | 17.7 | 18.6 | 19.1 | 19.2 | 19.4 |
| நடைமுறை கணக்கு நிலுவை | மொ.உ.உ. இன் % | -1.2 (எ) | -2.7 | -5.1 | -3.6 | -2.1 | -1.5 | -1.0 |
| முதன்மை நிலுவை | மொ.உ.உ. இன் % | 0.6 (எ) | -0.8 | -2.8 | -1.0 | 0.5 | 0.7 | 1.1 |
| திரண்ட வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை | மொ.உ.உ. இன் % | -5.3 (எ) | -6.8 | -7.9 | -6.8 | -5.6 | -5.2 | -4.9 |
| மத்திய அரச படுகடன் | மொ.உ.உ. இன் % | 83.7 (எ) | 86.8 | 92.4 | 89.4 | 84.3 | 80.5 | 76.3 |
| **நாணயத் துறை மற்றும் பணவீக்கம்** | | | | | | | | |
| விரிந்த பண வளர்ச்சி ($M_{2b}$) (ஏ) | % | 13.0 | 7.0 | 9.3 | 12.9 | 12.7 | 12.5 | 12.5 |
| தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சி ($M_{2b}$ இல்) (ஏ) | % | 15.9 | 4.3 | 4.0 | 10.0 | 12.2 | 13.0 | 13.0 |
| ஆண்டுச்சராசரிப் பணவீக்கம் (ஐ) | % | 4.3 | 4.3 | 4.5 | 5.0 | 5.0 | 5.0 | 5.0 |

(அ) 2020 மார்ச்சு வரை கிடைக்கத்தக்கதாகவிருந்த தகவல்களை அடிப்படையாக கொண்டது
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது
(ஈ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது (2010 அடியாண்டு)
(உ) அண்மைய குடித்தொகை எண்ணிக்கைகளுடன் புதுப்பிக்கப்பட்ட மதிப்பீடுகள்
(ஊ) 2018இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மொத்த முதலீடு, உள்நாட்டு சேமிப்புக்கள் மற்றும் தேசிய சேமிப்புக்கள் என்பனவற்றை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் முறையே 28.6%, 21.2% மற்றும் 25.4% ஆக திருத்தியமைத்துள்ளது.
(எ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் 2020 மார்ச்சு 31இல் வெளியிடப்பட்ட 2018 இற்கான திருத்தப்பட்ட மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது.
(ஏ) ஆண்டிறுதி பெறுமதிகளின் அடிப்படையிலான ஆண்டுக்காண்டு வளர்ச்சி
(ஐ) கொ.நு.வி.சுட்டெண் (2013=100) அடிப்படையிலானது

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

**2020இல் மேலும் குறைவடையுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது.** எதிர்பார்க்கப்படும் வளர்ச்சிப் பாதை அரசாங்கத்தின் கொள்கை நிகழ்ச்சிநிரலை காத்திரமாக நடைமுறைப்படுத்தல், பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டைப் பேணுதல், நிலையான வளர்ச்சிக்கு தடைகளாகவுள்ள அமைப்பியல் சிக்கல்களைத் தீர்த்தல், மற்றும் நடுத்தரகாலத்தில் உலகப் பொருளாதாரத்தின் மீட்சி ஆகியவற்றில் தங்கியுள்ளது. 2019இன் இறுதிக் காலப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட நேரடி மற்றும் மறைமுகமான வரி நிவாரண நடைமுறைகள் தனிநபர்களின் கொள்வனவுச் சக்தியை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படும் அதேவேளையில் தனியார் துறையின் இலாபம் அதிகரிப்பதோடு அதன்மூலம் உள்நாட்டு முதலீடு ஊக்குவிக்கப்படுகிறது. குறைவான பெயரளவு மற்றும் உண்மை வட்டி வீதங்களும் தனியார் முதலீட்டை அதிகரிப்பதோடு, பொருளாதார வளர்ச்சிக்கான உத்வேகத்தை வழங்குகின்றன. வேளாண்மைத் துறையில் அரசாங்கத்தின் அதிகரிக்கப்பட்ட கவனமானது இத்துறையின் பெறுமதிகூட்டலை ஊக்குவிக்கவும், வேளாண்மை பொருட்களுக்கான சந்தைகளை மேம்படுத்தவும் மற்றும் வேளாண்மையாளர்களுக்கு தொழில்முயற்சியத் திறன்களைக் கட்டியெழுப்புதலை இயலுமைப்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இதன்மூலம் வேளாண்மை மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கான உயர்ந்த மட்டத்திலான வருமானத்தை உறுதிசெய்கின்றது. இதேவேளையில், உள்நாட்டு கேள்வியில் எதிர்பார்க்கப்படும் அதிகரிப்பு மற்றும் உலகப் பொருளாதாரத்தின் படிப்படியான மீட்சி என்பவற்றால் ஆதரவளிக்கப்படும் தயாரிப்புத் துறையின் வளர்ச்சி காரணமாக கைத்தொழில் துறை நடுத்தரகாலத்தில் மீளெழுச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. துறைமுக நகரத்திற்கான முதலீட்டைப் பெறுதல் மற்றும் நெடுஞ்சாலை அபிவிருத்திச் செயற்றிடங்களை அமுல்படுத்தல் ஆகியவற்றிற்கான அரசாங்கத் திட்டங்கள் நடுத்தரகாலத்தில் முதலீட்டை புதுப்பிப்பதற்கு உதவும். இவ்வுட்கட்டமைப்புச் செயற்றிட்டங்கள் கட்டடவாக்கச் செயற்பாடுகளை அதிகரிப்பதோடு கைத்தொழில் துறையில் பெறுமதிகூட்டலை மேம்படுத்தும். இதேவேளை, வீட்டுடமையாளர்களின் அதிகரித்த கொள்வனவுச் சக்தி பணிகள் துறைக்கு, குறிப்பாக மொத்த

மற்றும் சில்லறை வர்த்தகம், தங்குமிட வசதிகள், உணவு மற்றும் குடிபானம், போக்குவரத்து, தொலைத்தொடர்பூட்டல் மற்றும் நிதியியல் பணிகள் துணைத் துறைகளுக்கு ஆதரவளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. உயர் பொருளாதார வளர்ச்சியை நிலைபெற வைக்க உள்நாட்டுக் கேள்வி போதுமானதாக இல்லாததால், கொவிட்-19 உலகளாவிய நோய்த் தொற்றுப்பரவலின் தாக்கத்துடன்கூடிய மந்தமான உலகப் பொருளாதார செயலாற்றுகையின் காரணமாக இத்துறைகளில் சாத்தியமான குறுங்கால பின்னடைவுகளுக்கு மத்தியில், நடுத்தர காலத்தில் வணிகப்பொருள் மற்றும் பணிகளிலான ஏற்றுமதிகளின் விரிவாக்கத்திற்கு நடவடிக்கைகள் ஆதரவளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இறை மற்றும் நாணயக் கொள்கை நடைமுறைகளினால் வழங்கப்படும் தூண்டல்கள் பொருளாதாரத்தில், குறிப்பாக வலுத்துறை மற்றும் தொழிலாளர், நிலம் மற்றும் மூலதனச் சந்தைகளில் காணப்படும் அமைப்பியல் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான கொள்கை சீர்திருத்தல்களுடன் இணைந்து காணப்படுதல் அவசியமானதாகும். அமைப்பியல் சீர்திருத்தங்களால் மட்டுமே நாடு அதன் உற்பத்தி எல்லைகளை மேலும் விரிவுபடுத்துவதோடு பொருளாதாரத்தில் மிதமிஞ்சிய வளர்ச்சியை ஏற்படுத்தாமல் உயர்ந்த பொருளாதார வளர்ச்சியை நிலைநிறுத்திக் கொள்ளமுடியும்.

**கொவிட்-19 நோய்த் தொற்றுப்பரவலிலிருந்து சென்மதி நிலுவை மீதான குறுங்கால தாக்கமிருந்த போதிலும், வெளிநாட்டுத் துறைக்கான தோற்றப்பாடு நடுத்தரகாலத்தில் மேம்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.** வணிகப்பொருள் ஏற்றுமதிகளில், குறிப்பாக இலங்கைக்கான முக்கிய ஏற்றுமதி இடங்களான ஐரோப்பா மற்றும் ஐக்கிய அமெரிக்காவிற்கு, குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்படக்கூடும். குறிப்பாக, புடவை மற்றும் ஆடைகளின் ஏற்றுமதி, பிற கைத்தொழில் உற்பத்திகள் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் உள்ளடங்கலான பண்டங்களின் ஏற்றுமதிகள் குறுங்காலத்தில் வீழ்ச்சியொன்றை சந்திக்கக்கூடும். இருப்பினும், மசகெண்ணெய் இறக்குமதிகள் மீதான குறைக்கப்பட்ட செலவினத்துடன், முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிக் குறைப்பு, ஏற்றுமதியுடன் தொடர்பான மூலப் பொருட்களின் இறக்குமதிக் குறைப்பு, நடைமுறைக்கு வந்த கொள்கை நடவடிக்கைகள் காரணமாக உந்து ஊர்தி மற்றும் ஏனைய அத்தியாவசியமற்ற நுகர்வோர் பண்டங்கள் என்பவற்றின் குறைந்தளவான இறக்குமதிகள் போன்றவற்றினால் இறக்குமதிச் செலவினத்தில் குறிப்பிடத்தக்க குறைவொன்று எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தகைய அபிவிருத்திகள் பொருளாதாரச் செயற்பாடு வழமைக்குத் திரும்புவதுடன் அதன் பின்னர் விரிவடைவதற்கு முன்னர் 2020இல் வர்த்தக இடைவெளியில் குறைவை ஏற்படுத்த வாய்ப்புள்ளது. சாதகமான வெளிநாட்டு வர்த்தகக் கொள்கைகள், உறுதியான நிறுவன ஆதரவு, நெகிழ்ச்சித்தன்மை மற்றும் போட்டித்தன்மையான செலாவணி வீதம் மற்றும் புதிய வர்த்தக பங்காளர்களுடனான வர்த்தக உறவுகளை மேம்படுத்தல் ஆகியவற்றுடன் வழமையான வர்த்தகப் போக்குகள் மீள்நிலைநாட்டப்படலானது நடுத்தர காலப்பகுதியில் ஏற்றுமதித் துறையின் வளர்ச்சி உத்வேகத்தை ஆதரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. நடுத்தரகால வளர்ச்சி வாய்ப்புக்களினால் ஆதரவளிக்கப்பட்டு இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகளின் முன்னேற்றத்துடன் நடுத்தர காலத்தில் இறக்குமதிகள் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கொவிட்-19 நோய்த் தொற்றுப்பரவலால், சுற்றுலாக் கைத்தொழில் மற்றும் அதன் விநியோகச் சங்கிலித் தொடர்களை பாதிக்கும் குறைந்தளவான உலக பயணங்களுடன், குறுங்காலத்தில் சுற்றுலாத் துறை கணிசமானளவு பாதிப்படையக்கூடும். இது குறைக்கப்பட்ட விமான மற்றும் சரக்குப் போக்குவரத்துப் பணிகளுடன் இணைந்து, குறுங்காலத்தில் பணிகள் கணக்கு மிகையை மிதப்படுத்தக்கூடும். இருப்பினும், நடுத்தரகாலப் பகுதியில் பணிகள் கணக்கின் மிகைகளின் மேம்பாடானது நடைமுறைக் கணக்கை வலுப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. குறிப்பாக, சுற்றுலா, தகவல் தொழில்நுட்பம், வியாபாரச் செயன்முறைகளை வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளல் மற்றும் போக்குவரத்துப் பணிகள் ஆகியவற்றின் மூலம் பணிகள் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதிகாரசபைகளின் தீவிரமான மற்றும் ஒருங்கிணைந்த சுற்றுலா ஊக்குவிப்பு முயற்சிகள், சுற்றுலா விடுதித் துறைக்கான புதிய வெளிநாட்டு நேரடி முதலீடுகள், அத்துடன் கொழும்புத் துறைமுக நகரத்தின் சுற்றுலா தொடர்பான அபிவிருத்திகள் என்பவற்றுடன் இணைந்து நடுத்தரகாலத்தில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதிர்பார்க்கப்படுகின்றது. முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறையானது வெளிநாட்டு மூலங்களிலிருந்தான அரச கடன்பாடுகளினால் ஏற்படும் வட்டிக் கொடுப்பனவுகள் அதிகரிக்கின்றதன் காரணமாக விரிவடையக்கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது. குறைந்த பன்னாட்டு எண்ணெய் விலைகள் அத்துடன் தென்கொரியா மற்றும் இத்தாலி போன்று இலங்கைக்கு தொழிலாளர்கள் பணவனுப்பல்களில் முக்கிய இடம்வகிக்கும் இடங்களில் கொவிட்-19 நோய்த் தொற்றுப்பரவலின் நேரடித் தாக்கம் மூலம் தொழிலாளர் பணவனுப்பல்கள் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. மேம்படுத்தப்பட்ட உள்நாட்டு வேலைவாய்ப்புக்கள், மத்திய கிழக்கின் புவிசார் அரசியல் அபிவிருத்திகள், பகுதியளவு தேர்ச்சியற்ற மற்றும் தேர்ச்சியற்ற இடம்பெயர்வினை அரசாங்கம் புறக்கணித்தல் ஆகியவற்றுடன் நடுத்தர காலப்பகுதியில் தொழிலாளர்களின் பணவனுப்பல்களின் வளர்ச்சி தொடர்ந்து மந்தமாகவே காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இம்முன்னேற்றங்கள்

1

குறுங்காலத்தில் வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையை விரிவுபடுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. இது பரவலின் காரணமாக உலகளாவிய நிதியியல் சந்தைகளும் குழப்பத்தில் இருக்கும் நேரத்தில் வெளிநாட்டு நிதியிடல் எதிர்பார்த்ததைவிட அதிகமாக தேவைப்படுவதைக் குறிக்கின்றது. இதன்படி, ஒதுக்குப் போதுமை திருப்திகரமான மட்டத்தில் பேணப்படுமென எதிர்பார்க்கப்பட்டாலும், நிதியியல் கணக்கு பாதிப்படையக்கூடிய வாய்ப்புள்ளதோடு, குறுங்காலத்தில் பன்னாட்டு ஒதுக்குகளை ஓரளவிற்கு பாதிப்படைய வைக்கும். நடுத்தரகால அளவில் வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை நிலைத்திருக்கக்கூடிய மட்டங்களை நோக்கி படிப்படியாக சீர்செய்யப்படும் என்பதுடன் நிதியியல் கணக்கு கணிசமான பாய்ச்சல்களைப் பெற்றுக்கொள்ளுமென எதிர்பார்க்கப்படுகின்றது. நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையின் எதிர்பார்க்கப்படும் சீர்செய்தலுக்கு மத்தியில் நெகிழ்ச்சித் தன்மை மற்றும் போட்டித்தன்மையான செலாவணி வீதம் பேணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தகைய அபிவிருத்திகள் நடுத்தரகாலத்தில் பன்னாட்டு ஒதுக்குகளை வலுப்படுத்தக்கூடும். இருப்பினும், பாரிய மீள்நிதியிடல் தேவைப்பாடுகள் அத்துடன் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு மற்றும் அரசாங்க வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை என்பவற்றின் எதிர்கால பற்றாக்குறைகள் என்பவற்றிற்கு மத்தியில் பெயரளவு நியதிகளில், இலங்கையின் வெளிநாட்டு படுகடன் நிலை அதிகரிக்கக்கூடும் என எறிவுசெய்யப்படுகின்றது. எவ்வாறாயினும், நடுத்தரகாலத்தில் பொருளாதாரத்தில் எதிர்பார்க்கப்படும் விரிவாக்கமானது நாட்டின் வெளிநாட்டு படுகடன் நிலையை தளர்த்தக்கூடியதாகக் காணப்படும்.

**நடுத்தரகால இறைத் தோற்றப்பாடானது வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை மற்றும் பொதுப்படுகடன் என்பவற்றை நிலையான மட்டங்களிற்கு குறைப்பதன் மூலம் இறைத் திரட்சியை மேலும் வலுப்படுத்தும் அதேவேளையில் நடுத்தரகால அபிவிருத்தி நோக்கங்களுக்கு ஆதரவளித்தல் மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல் என்பவற்றின் மீது கவனம் செலுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது.** உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் தாக்கத்தால் குழப்பமடைந்த பொருளாதார செயற்பாட்டிற்கு புத்துயிரூட்டும் நோக்குடன் 2019இல் அரசாங்கம் பல தொடர்ச்சியான வரிச் சலுகைகளை அறிவித்திருந்தது. இத்தகைய வரிச் சலுகைககள் குறுகிய காலத்தில் அரசாங்கத்தின் அரசிறை சேகரிப்பில் எதிர்மறையான தாக்கமொன்றை கொண்டிருக்கும் என்றாலும் முதலீடு மற்றும் நுகர்விலிருந்து எதிர்பார்க்கப்படும் உத்வேகத்தின் விளைவால் கூட்டுக் கேள்வியின் நேர்மறையான கசிவுத்தாக்கங்கள் நடுத்தரகாலத்தில் அரசின் அரசிறையை அதிகரிக்கும். மேலும், நடுத்தரகாலப்பகுதியில் சிறந்த அரச முதலீட்டை இலக்கிடும் வேளையில் உற்பத்தித்திறனற்ற செலவினங்களை நீக்குவதன் மூலம் செலவினங்களை நெறிப்படுத்துவதனை அரசாங்கம் நோக்காகக் கொண்டுள்ளது. இதன் விளைவாக, நடுத்தரகாலத்தில் ஆரம்ப நிலுவையின் மிகையொன்றைப் பதிவுசெய்வதற்கான மேம்பாடொன்றின் மூலமும் ஆதரவளிக்கப்பட்டு, நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையை படிப்படியாக குறைப்பதன் மூலமும் வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையானது 2024ஆம் ஆண்டளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5.0 சதவீதத்திற்குக் கீழ் குறையுமென எறிவு செய்யப்படுகின்றது. பிரதான இறை நிலுவைகளில் இத்தகைய முன்னேற்றங்களுடன், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வெளிநின்ற மத்திய அரசாங்கப் படுகடன் விகிதமானது நடுத்தரகாலத்தில் குறைவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதேவேளை, தீவிர பொறுப்பு முகாமைத்துவத் தொழிற்பாடுகளின் காத்திரமான பயன்படுத்துகை நடுத்தர காலத்தில் படுகடன் பணிகள் பொறுப்புக்களை சீராக்க உதவுவதோடு படுகடனின் மாறும் தன்மைகள் நிலையற்ற மட்டங்களினுள் வீழ்வதைத் தடுக்கும். அதேவேளையில் நடுத்தரகால படுகடன் முகாமைத்துவ உபாயம் மத்திய அரசின் படுகடனைக் குறிப்பாக நடுத்தரகாலத்தில் வெளிநாட்டு படுகடனிற்கான அதன் இடர்நேர்வுகளிற்குள்ளாகும் தன்மையைக் குறைப்பதற்கு வழிகாட்டும். இருப்பினும், கொவிட்-19 நோய்த் தொற்றுப்பரவலுக்கு மத்தியில் சுகாதார வசதிகளை வலுப்படுத்துவதற்கும் பொருளாதாரத்திற்கு ஏனைய நிவாரண நடவடிக்கைகளை வழங்குவதற்கும் அரசாங்கம் அதிக செலவுகளைச் செய்யக்கூடுமென்பதால் உள்நாட்டு மற்றும் உலகளாவிய ரீதியில் செயற்பாட்டில் எதிர்பார்க்கப்படும் மெதுவடைவு குறுகிய காலத்தில் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைவதில் சவால்களை ஏற்படுத்தக்கூடும். இத்தகைய குறுங்காலச் சவால்களுக்கு அப்பால் நோக்குகையில், எதிர்பார்க்கப்பட்ட இறைத் திரட்சி நடுத்தரகாலத்தில் கடுமையான மற்றும் பிணைந்த இறை விதிகளை பின்பற்றுவதற்கான அரசாங்கத்தின் கடப்பாட்டில் பெருமளவில் தங்கியிருக்கும்.

**நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் கீழ் மத்திய வங்கியினால் எடுக்கப்படும் எடுக்கப்படும் முன்மதியுடைய நாணயக் கொள்கை வழிமுறைகளால் ஆதரிக்கப்பட்டு நன்கு கட்டுப்படுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்ப்புகளுடன் நடுத்தரகாலத்தில் பணவீக்கம் 4 - 6 சதவீத எல்லையினுள் பேணப்படுமென எதிர்பார்க்கப்படுகினறது.** கொவிட் - 19இன் பரவலின் தாக்கமானது குறுங்காலத்தின் கூட்டுக் கேள்வியை மோசமாகப் பாதிக்கக்கூடுமென்பதுடன் இதனால் பணவீக்கத்தில் கீழ்நோக்கிய அழுத்தம் தோற்றுவிக்கப்படும். மேலும், உலகளாவிய பரவல் மற்றும் புவிசார் அரசியல் பதட்டங்களின் தாக்கத்தின் காரணமாக பண்டங்களின் விலைகள், குறிப்பாக பன்னாட்டு

எண்ணெய் விலைகளின், வீழ்ச்சியானது உற்பத்திச் செலவை குறைக்கக்கூடுவதோடு, இதனால் நடுத்தரகாலத்தில் பணவீக்க அழுத்தங்கள் தளர்த்தப்படக்கூடும். மறுபுறம், கொவிட்-19இன் உலகளாவிய பரவலின் காரணமாக உள்நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் சாத்தியமான நிரம்பல் தடைகள் குறுங்காலத்தில் உள்நாட்டு விலைகள் மீது அழுத்தத்தை தோற்றுவிக்கக்கூடும். சமநிலையில், நடுத்தரகாலத்தில் பொருத்தமான கொள்கைச் சீராக்கங்களுடன் பணவீக்கமானது விரும்பத்தக்க நடு ஒற்றை இலக்க வீச்சினுள் தொடர்ந்துமிருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. தனியார் துறை பணவீக்க எதிர்பார்ப்புக்களை விரும்பத்தக்க மட்டங்களில் தொடர்ந்து உறுதிப்பாடாக வைத்திருக்க நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல்களின் கீழான முன்மதியுடைய கொள்கை வழிமுறைகள் எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளையில், வெளிநாட்டு அதிர்வுகளுக்கான பொருளாதாரத்தின் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையை அதிகரிப்பதற்கு செலாவணி வீத நெகிழ்ச்சித்தன்மை பேணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. பணவீக்கம் மற்றும் பணவீக்க எதிர்பார்க்கைகளையும் வெற்றிகரமாக பேணுவதற்கு இறைத்தரட்சி செயன்முறையின் தொடர்ச்சியானது இன்றியமையாததாகும். அதேவேளை நிரம்பல்பக்க காரணிகளிலிருந்து தோன்றும் பணவீக்கத்தின் தற்காலிகத் தளம்பல்களைக் குறைப்பதற்கும் அரசாங்கத்தின் ஆதரவு தேவைப்படுகின்றது. நடுத்தர காலத்தில் எதிர்பார்த்த வளர்ச்சிப் பாதைக்கு ஆதரவளிப்பதற்காக பொருளாதாரத்திற்குப் போதுமான பணம் மற்றும் கொடுகடன் பாய்ச்சலை மத்திய வங்கி உறுதிசெய்யும். கொவிட்-19 பரவுகைக்கு மத்தியில், பொருளாதார நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க இடையூறுகள் காணப்படுவதால் தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சியானது குறுங்காலத்தில் குறைந்த நிலையிலேயே தொடர்ந்து காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும், கொவிட்-19 பரவலிலிருந்து நாடு மீட்சியடைவதால், குறைந்த சந்தைக் கடன்வழங்கல் வீதங்கள், இறை மற்றும் நாணயத் தூண்டல்களின் மூலம் பொருளாதார நடவடிக்கைகள் எதிர்பார்க்கப்படும் விரிவாக்கம், படுகடனின் சட்ட ரீதியான இசைவுத்தாமதம் மற்றும் வியாபாரங்களுக்கு குறிப்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான, விசேட கொடுகடன் ஆதரவுத் திட்டங்கள் என்பவற்றால் ஆதரவளிக்கப்பட்டு தனியார் துறையினருக்கான கொடுகடனின் வளர்ச்சியானது விரைவுபடுத்தப்படுமென எறிவுசெய்யப்படுகின்றது. இதேவேளை, கொவிட்-19இன் உலகளாவிய பரவலிற்கு மத்தியில், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சூழலின் சாதகமற்ற அபிவிருத்திகளின் காரணமாக ஏற்படும் குறுங்கால சவால்களுக்கு மத்தியில், நடுத்தரகாலத்தில் நிதியியல் துறையானது தொடர்ந்து தாக்குப்பிடிக்கக் கூடியவாறு காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## 1.5 பிரச்சனைகள் மற்றும் கொள்கைகள்

**உலகின் ஏனைய அனைத்து நாடுகளைப் போன்று இலங்கையும், இந்த அறிக்கை தயாரிக்கப்படும் காலத்தில், கொவிட்-19 உலகளாவிய நோய்த் தொற்றின் சமூகப் பொருளாதார தாக்கத்தினை முகாமை செய்வதற்கிடையிலுள்ளது.** நோய்த் தொற்றுப்பரவலானது உலகளாவிய பொருளாதாரத்திலும் உள்நாட்டிலும் முன்னெப்பொழுதுமில்லாத மட்டத்திலான நிச்சயமற்றதன்மைக்கு வழிவகுத்துள்ளது. இதையொத்த உலகளாவிய நோய்த் தொற்றுப்பரவலினை உலகம் வரலாற்றில் சந்தித்திருந்த போதிலும் இந்தளவிலான மனிதாபிமான மற்றும் பொருளாதார நெருக்கடியினைக் கையாளுகின்ற இந்தச் சூழ்நிலையானது பெரும்பாலான தற்போதுள்ள தேசிய மற்றும் பல்புடை நிறுவனங்களுக்கும் முதல் அனுபவமாகவிருக்கின்றது. 1930ஆம் ஆண்டின் பாரிய பொருளாதார மந்தநிலை உட்பட ஏனைய ஏதாவதொரு உலகளாவிய பொருளாதார நெருக்கடியினைப் போலல்லாது கொவிட்-19 உலகளாவிய நோய்த் தொற்றுப்பரவலினால் உருவாகிய நெருக்கடியானது மட்டுப்படுத்தப்பட்ட உள்நாட்டு மற்றும் சிறிதளவிலான உலக வர்த்தகம் மற்றும் ஏனைய கொடுக்கல்வாங்கல்களுடன் உலக முழுவதிலும் ஏறத்தாழ அனைத்து நாடுகளும் முடக்குதல் நிலையிலிருத்தலும் சமூக ரீதியான விலகலை பரிந்துரைத்தலுமான ஒரு சூழ்நிலையில் கையாளப்பட வேண்டியுள்ளது. தற்பொழுது இலங்கை உட்பட தேசிய அதிகாரசபைகளின் முன்னுரிமை நலன் சார்ந்த நெருக்கடியினை மட்டுப்படுத்துவதாகும். எனினும், முகாமை செய்யப்படக்கூடிய மட்டங்களுக்கு சூழ்நிலை கட்டுப்படுத்தப்பட்டதும் அவர்கள் தற்பொழுது அனுவிக்கின்ற கடுமையான சரிவிலிருந்து பொருளாதாரங்களை மீட்டெடுப்பதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்படுவது இன்றியமையாதது. இலங்கை பல ஆண்டுகளாக மந்தமான பொருளாதார வளர்ச்சிக்குட்பட்டிருப்பதனாலும் மேலும் அதிர்வுகளுக்குத் தாக்குப்பிடிப்பதற்கான நாட்டின் இயலளவு விரைவாக இல்லாதொழிந்து வருவதனாலும் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான அவசரமான வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவது குறிப்பாக முக்கியமானதாகும். கொவிட்-19 உலகளாவிய நோய்த் தொற்றுப்பரவலின் தாக்கத்தின் விளைவுகளிலிருந்து ஒரு விரைவான மீட்சிக்கு ஆதரவளிப்பதற்கான குறுங்கால வழிமுறைகள் அரசாங்கம், மத்திய வங்கி மற்றும் நாட்டின் ஏனைய கொள்கை உருவாக்கும் நிறுவனங்களால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற வேளையில் இந்தப் பகுதியானது சமத்துவமான உயர்ந்த பொருளாதார வளர்ச்சியினைத் தக்க வைத்துக் கொள்வதற்கும் மற்றும் சனத்தொகையின் ஒட்டுமொத்த நல்வாழ்வினை மேம்படுத்துவதற்கும் தீர்க்கப்பட வேண்டிய பொருளாதாரத்தினால் முகங்கொடுக்கப்படும் நீடித்திருக்கின்ற அமைப்பியல் பிரச்சனைகளைக் கோடிட்டுக் காட்டுவதனை நாடுகின்றது.

1

**அதிகரித்துவரும் வெளிநாட்டுப் படுகடன் பணிக் கடப்பாடுகள் நடுத்தர காலத்தில் இலங்கையின் பேரண்டப் பொருளாதார உறுதித்தன்மைக்கு இடர்நேர்வுகளைத் தோற்றுவிக்கக் கூடுமென்பதனால் நாட்டின் வெளிநாட்டுச் செலாவணி உழைப்புக்களை உயர்த்திக் கொள்வதற்கானதும் அத்தியாவசியமற்ற இறக்குமதிகள் மீதான மிதமிஞ்சிய செலவினத்தை ஊக்கமிழக்கச் செய்வதற்குமான அவசர வழிமுறைகளை வேண்டிநிற்கின்றது.** பன்னாட்டு நாணய நிதியத்தின் வகைப்படுத்தலின்படி 2010இல் தாழ்ந்த நடுத்தர வருமானப் பொருளாதார அந்தஸ்திற்கு இலங்கையின் படிமுறை உயர்வினைத் தொடர்ந்து சலுவை அடிப்படையிலான வெளிநாட்டு நிதியிடலின் கிடைப்பனவு விரைவாக வீழ்ச்சியடைந்துள்ளது. மேலும், உயர் நடுத்தர வருமானப் பொருளாதார நிலைக்கு இலங்கையின் அண்மைக்கால முன்னேற்றம் சலுகை அடிப்படையிலான நிதியிடலின் அணுகுவழியினை மேலும் மட்டுப்படுத்தக்கூடும். சலுகை அடிப்படையிலான கடன்பாடுகளிலிருந்து செலவுமிக்க வர்த்தகக் கடன்பாடுகளை நோக்கிய நகர்வுடன் இலங்கையின் வெளிநாட்டுப் படுகடன் தோற்றத்தின் உள்ளடக்கத்தின் மாற்றம் வெளிநாட்டுப் படுகடனின் நிலைத்திருக்கும் தன்மையை உறுதிப்படுத்துவதற்குப் படுகடன் தோற்றத்தின் முன்மதியுடை முகாமைத்துவத்தினைத் தேவைப்படுத்துகின்றது. மேலும், நடுத்தர காலத்தில் வருடாந்தம் செலுத்தப்பட வேண்டிய வெளிநாட்டுப் படுகடன் மீள்கொடுப்பனவுக் கடப்பாடுகள் சராசரியாக ஏறத்தாழ ஐ.அ.டொலர் 5 இலிருந்து 6 பில்லியனாக எறிவு செய்யப்பட்டுள்ளன. இப்பின்னணியில் இலங்கை தற்போதுள்ள படுகடனை நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மற்றும் கூட்டுக்கடன் வசதிகளை பன்னாட்டு நிதியியல் சந்தைகளில் வழங்குவதன் மூலம் மீளப்புதுப்பிக்கப்பட வேண்டிய தேவையினை எதிர்பார்த்து நிற்கின்றது. இத்தகைய வர்த்தகக் கடன்பாடுகள் சலுகை அடிப்படையிலான மூலங்களை விட உயர்ந்த வட்டிச் செலவுகளுடன் ஒப்பீட்டளவில் குறுங்கால முதிர்ச்சிகளைக் கொண்டிருப்பதாக வகைப்படுத்தப்படுகின்றன. உயர்வடைந்துவரும் வெளிநாட்டுப் படுகடன் கடப்பாடுகள் பன்னாட்டு ஒதுக்குகள், செலாவணி வீதம் மற்றும் இறைத் தொழிற்பாடுகள் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கக்கூடும். இப்பின்னணியில் தீவிர பொறுப்பு முகாமைத்துவக் கட்டமைப்புடன் மேம்பட்ட அரசிறைத் திரட்டல் மற்றும் காத்திரமான செலவிடல் போன்றவற்றுடன் இறைத்திரட்சி முயற்சிகள் தொடர வேண்டிய அதேவேளை பொதுப்படுகடனின் நிலைத்திருக்கும் தன்மையினையும் வெளிநாட்டுப் படுகடனின் நிலைத்திருக்கும் தன்மையினையும் உறுதிப்படுத்துவதற்கு வலுவான இறை விதிகளைப் பின்பற்றுவது இன்றியமையாததாகும். இலங்கையின் நாட்டிற்கான தரமிடலின் மேலதிக திருத்தங்கள் எதிர்வரும் காலத்தில் அதிகரித்த வர்த்தகப் படுகடன் இருப்புடன் உயர்வடைந்து செல்லும் மீளப்புதுப்பிக்கும் செலவிற்கு வழிவகுக்கும்.

**கொவிட்-19 உலகளாவிய நோய்த் தொற்றுப்பரவலினால் குறுகிய காலத்தில் இறைச் சறுக்கல்கள் தவிர்க்க முடியாதிருப்பதனைத் தொடர்ந்து நடுத்தர காலத்தில் இறைத்திரட்சியினை வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள் இன்றியமையாதவை.** உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் பின்னரும் 2019 நவெம்பரில் சனாதிபதித் தேர்தலின் பின்னரும் கொவிட்-19 உலகளாவிய நோய்த் தொற்றுப்பரவலின் பின்னரும் அறிவிக்கப்பட்ட வழிமுறைகளை உள்ளடக்கிய இறை ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம் எதிர்பாராத நிகழ்வுகளினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிநபர்களுக்கும் ஆதரவளிக்கும் நோக்கில் ஏனையவற்றிற்கு மத்தியில் கணிசமான வரிச் சலுகைகளை வழங்கியது. அதேவேளை, இது குறுங்காலத்திலிருந்து நடுத்தர காலத்தில் அதிகரித்த தனியார் நுகர்வு மற்றும் முதலீட்டினூடான செயற்பாட்டினை மீட்சியடையச் செய்து அதன்மூலம் எதிர்வரும் காலத்தில் அரசிறையை உயர்த்துவதனையும் நோக்காகக் கொண்டிருந்தது. வரிச் சலுகைகள் மந்தமான பொருளாதாரச் செயற்பாடுகளை நடுத்தர காலத்தில் ஊக்குவிப்பதில் துணைபுரிகின்ற அதேவேளையில் வரி அரசிறை மீதான பாதகமான தாக்கம் பொருத்தமான வழிமுறைகளினால் ஈடுசெய்யப்பட வேண்டும். வரிக் கட்டமைப்பினை இலகுபடுத்துவதற்கும் வரி நிருவாக முறைமைகளை வலுப்படுத்துவதற்கும் காலத்திற்குக் காலம் பல்வேறு சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதற்குப் புறம்பாக இலங்கை தசாப்தங்களாக விடாப்பிடியாக அரச அரசிறையின் தாழ்ந்த மட்டங்களைக் கொண்டிருக்கின்றது. ஆகவே, குறுங்காலத்திலிருந்து நடுத்தர காலத்தில் செயற்பாடுகளை மீட்டெடுப்பதற்கு வரிச் சலுகைகளில் பெரிதும் ஒரு முனைப்படுத்தப்பட்டுள்ள இறை ஊக்குவிப்புக்களின் எதிர்பார்க்கப்பட்ட நன்மைகள் வினைத்திறனானதும் காத்திரமானதுமான முறையிலும் திட்டமிடப்பட்ட பொருளாதார பங்குபற்றுநர்களுக்குப் ஊடுகடத்தப்படுவது அவசியமாகும். மீண்டெழும் செலவினத்தின் விரைவான வளர்ச்சியை மட்டுப்படுத்துகின்ற அதேவேளையில் நடுத்தர காலத்தில் அரச முதலீட்டிற்குப் போதியளவு வளங்களை உறுதிப்படுத்துவதற்கு அரச செலவினத்தின் காத்திரமான முகாமைத்துவம் தவிர்க்க முடியாததாகின்றது. வட்டிக் கொடுப்பனவுகள், சம்பளங்களும் கூலிகளும் அத்துடன் மானியங்கள் மற்றும் மாற்றல்கள் மீதான விரைவாக வளர்ந்துவரும் செலவினங்களுக்கு மத்தியில் அரச செலவினங்கள், குறிப்பாக மீண்டெழும் தன்மையுடையவை, எதிர்வரும் காலத்தில் விரைவாக வளர்ச்சியடைக்கூடும். இளைஞர்களுக்கிடையிலான தொழிலின்மை, தீவிரமான வறுமை, பிரதேச ஏற்றத்தாழ்வு போன்ற பிரச்சனைகளைப் பகுதியளவில் தீர்ப்பதற்காக அரச துறையில் ஆட்சேர்ப்புக்களை அதிகரிப்பதற்காக அரசாங்கம் திட்டமிடுகின்ற அதேவேளையில் குறிப்பாக, அரச துறைக்காக பங்களிப்புச் செய்யும் ஓய்வூதியத் திட்டம் இல்லாத சூழலில் அரச துறைக்கான ஏதாவது

பாரியளவிலான ஆட்சேர்ப்பு சம்பளங்களும் கூலிகளும் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவின் நியதிகளிலான அரச செலவினங்கள் மீது இறுதியில் நீடித்த தாக்கத்திற்கு வழிவகுக்கக்கூடும். அரச துறையின் உற்பத்தித்திறன் மேம்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு அத்தகைய தொழிற்படையின் காத்திரமான பயன்பாட்டின் தேவையினையும் இது கோட்டிட்டுக் காட்டுகின்றது. இதேவேளையில், அதிகரித்துவரும் மீண்டெழும் செலவினங்கள் தாழ்ந்த அரசிறையுடன் சேர்ந்து நலம், கல்விப் பணிகள் மற்றும் பௌதீக உட்கட்டமைப்பு அபிவிருத்தி மீதான அதிகளவில் தேவைப்படும் முதலீட்டிற்காகக் கிடைக்கின்ற இறை இடைவெளியினைச் சுருக்கமடையச் செய்யக்கூடும். அரச முதலீட்டினை மட்டுப்படுத்துவது நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலத்தில் பொருளாதார வளர்ச்சியை மோசமடையச் செய்யும். ஆகவே, அரச செலவிடல் செலவு குறைந்ததாகவிருப்பதையும் செயற்றிறனற்ற மற்றும் உற்பத்தித்திறனற்ற ஏதாவது செலவிடலினை இல்லாதொழிப்பதற்கு அரச செலவினத்தின் ஆளுகை வழிமுறைகளை வலுப்படுத்துவதன் மூலம் நேர்க்கணிய வளர்ச்சி நன்மைகளை வழங்குவதனையும் உறுதிப்படுத்துவதற்கு அரச செலவின முகாமைத்துவத்தை உயர்த்துவதற்கு மேலும் வலியுறுத்தல் தேவைப்படுகின்றது.

**மூலப்பண்டங்களின் ஏற்றுமதிகளின் விலைகளிலான கணிசமான தளம்பலுக்கு மத்தியில் உள்நாட்டு உற்பத்தியினை உயர்த்திக் கொள்வதும் பிராந்திய மற்றும் உலகப் பெறுமதிச் சங்கிலிகளின் பங்குபற்றலை அதிகரிப்பதும் இலங்கையின் ஏற்றுமதித் துறையினை வலுப்படுத்துவதில் மிக முக்கியமானவையாகும்.** மூலப்பண்டங்கள் பல தோற்றம் பெற்றுவரும் சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களின் ஏற்றுமதிகளில் ஒரு கணிசமான பங்கொன்றாகத் தொடர்ந்துமிருக்கின்றன. இலங்கையும் மூலப்பண்டங்களில் ஒரு ஏற்றுமதியாளராகவும் இறக்குமதியாளராகவும் இருப்பதுடன் வேளாண்மை மற்றும் கனிப்பொருள் உற்பத்திகள் போன்ற பண்டங்கள் 2019இன் மொத்த ஏற்றுமதி வருவாய்களில் ஏறத்தாழ 21 சதவீதத்திற்கும் இறக்குமதிச் செலவினத்தில் ஏறத்தாழ 15 சதவீதத்திற்கும் வகைகூறின. கொவிட்-19 உலகளாவிய நோய்த் தொற்றுப்பரவலினால் மேலும் தூண்டப்பட்ட தாழ்ந்த மசகெண்ணெய் விலைகள் மற்றும் உலக வர்த்தகத்தினதும் ஒட்டுமொத்தப் பொருளாதார செயற்பாட்டினதும் மந்தமடைதல் போன்றவற்றின் தாக்கத்தினைப் பிரதிபலித்து அண்மைய கடந்த காலத்தில் உலகப் பண்ட விலைகளில் குறிப்பிடத்தக்கதொரு குறைவு அவதானிக்கப்பட்டது. மூலப்பண்டங்களின் விலைகளின் உயர்வடைந்த தளம்பல் ஏற்றுமதி வருவாய்களினையும் இறக்குமதிச் செலவினத்தினையும் பாதிக்கக்கூடுமென்பதனால் பல தோற்றம் பெற்றுவரும் சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்கள் தமது ஏற்றுமதி உற்பத்திகளையும் சந்தைகளையும் பன்முகப்படுத்துவதற்கு உலகப் பெறுமதிச் சங்கிலியில் இணைவதற்கு அதிகளவில் கவனம் செலுத்துகின்றன. இதேவேளையில், முக்கிய வர்த்தக நாடுகளிடையேயான வர்த்தகப் பதற்றங்கள் ஆசியா மற்றும் உலகம் முழுவதிலும் பெறுமதிச் சங்கிலிகளின் கணிசமான மீள்வடிவமைப்பினை தூண்டக்கூடுமென்பது சவால்களையும் சந்தர்ப்பங்களையும் உருவாக்குகின்றது. அண்மைய கடந்த காலத்தில், கொவிட்-19 உலகளாவிய நோய்த் தொற்றுப்பரவலுக்கு முன்னர், பல்வேறு முக்கிய பொருளாதாரங்களும் உலக வர்த்தகச் சம்மேளனத்தின் விதிகளினைப் பகுதியளவில் புறக்கணித்து பாதுகாப்பு வாதக் கொள்கைகளை நோக்கி நகர்ந்தன. வர்த்தகப் பிணக்குகளின் ஏதாவது விஸ்தரிப்பு எல்லைகள் கடந்த உற்பத்தி இணைப்புக்களுக்கு இடையூறு விளைவிப்பதோடு உலகளாவிய உற்பத்தி வலையமைப்புக்களையும் பெறுமதிச் சங்கிலிகளையும் மீள்வடிவமைக்கலாம். ஏற்றுமதிகளின் குறிப்பிடத்தக்களவான பங்கு இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருளில் தங்கியிருக்கும் இலங்கை போன்ற நாடுகளுக்கு இது சாத்தியமானளவு சவாலாகவிருக்கும். அதேநேரத்தில் குறிப்பிட்ட பெறுமதிச் சங்கிலிகள் தென்கிழக்கு ஆசியா மற்றும் தெற்காசியாவிற்கு இடமாற்றக்கூடுமென்பதால் குறிப்பாக, ஆசியாவிலுள்ள நாடுகளுக்கு இது சந்தர்ப்பங்களையும் உருவாக்கக்கூடும். அதிகமாக பிரிக்கப்பட்ட பெறுமதிச் சங்கிலிகள் மற்றும் உற்பத்தி பகிரும் வலையமைப்புக்களின் கிடைப்பனவிற்கும் புறம்பாக உயர்ந்த உற்பத்திச் செலவினம், அரச மற்றும் தனியார் துறையின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மீதான போதுமற்றதான செலவிடலின் காரணமாக தாழ்ந்த உற்பத்தி உருவாக்கம் போன்ற காரணிகளால் உலகப் பெறுமதிச் சங்கிலியில் இலங்கையின் பங்கேற்பு குறைந்தபட்சமாகவே தொடர்ந்துமிருக்கின்றது. ஆகவே, உலகப் பெறுமதிச் சங்கிலியிலிருந்து இலங்கை நன்மை பெறுவதற்கு இத்தகைய செயற்றிறனின்மைகளை வெற்றி கொள்வதற்கும் பெறுமதிகூட்டல் மற்றும் உற்பத்தித்திறன் மேம்பாடுகளை அதிகரிப்பதற்குமான வழிமுறைகள் தேவைப்படுகின்றன. நிலையான கொள்கைகள், நிறுவன ரீதியான ஆதரவு, உறுதியான பேரண்டப் பொருளாதாரச் சூழல், வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவருதல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியினால் உந்தப்பட்ட புத்துருவாக்கம், வியாபாரம் செய்வதன் இலகுத்தன்மையின் மேம்பாடு மற்றும் உற்பத்தி சார்ந்த நிதியியல் ஆதரவுத் திட்டங்கள் போன்றவை உலகப் பெறுமதிச் சங்கிலிகளில் வெற்றிகரமான நுழைவினைப் பெற்றுக்கொள்வதில் துணைபுரியக்கூடிய விடயப்பரப்புக்களாகும். நாட்டின் தயாரிப்புத் துறையிலுள்ள அமைப்பியல் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான பொருத்தமான வழிமுறைகளுடன் வணிகப்பொருட்கள் மீதான வர்த்தகமும் மேம்படுத்தப்பட்டு அதன் மூலம் தசாப்தங்களாக விடாப்பிடியாகவுள்ள வர்த்தகப் பற்றாக்குறைக்கு

1

ஆதரவளிக்கப்படும். மேலும், நன்கு பேரம்பேசப்பட்ட புதிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கைள் மற்றும் தற்பொழுதுள்ள மற்றும் புதிய வர்த்தகப் பங்காளர்களுடனான உயர்ந்தளவிலான பொருளாதாரக் கூட்டிணைப்பும் வர்த்தக ஊக்குவிப்பு மீது ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட சீர்திருத்தங்கள் மற்றும் உபாயங்களுக்கு இணையானதாகவிருக்கும்.

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மற்றும் கொவிட்-19 உலகளாவிய நோய்த் தொற்றுப்பரவலிலிருந்தான பின்னடைவுகளுக்கு அப்பால் நோக்கும் போது இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழில், நடுத்தர காலத்தில் கைத்தொழிலை ஊக்குவிப்பதற்கும் தக்கவைத்துக் கொள்வதற்கும் புதிய தொழில்நுட்பத்தினை தழுவ வேண்டிய தேவையுள்ளது.** சுற்றுலாக் கைத்தொழில் 2010இல் 0.7 மில்லியன் சுற்றுலாப் பயணிகளின் வருகையிலிருந்து 2018இல் உச்சமான 2.3 மில்லியன் வருகைக்கு போருக்குப் பின்னரான காலத்திலிருந்து குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியடைந்த போதிலும் அதன் உள்ளார்ந்த ஆற்றல் பெருமளவில் வெளிப்படுத்தப்படாமலே தொடர்ந்துமிருக்கின்றது. சுற்றுலாக் கைத்தொழில் அதன் முழுத் தாங்கக்கூடிய இயலளவை அடைந்து கொள்வதற்கு கொத்தணியான அளவுக்கு மீறிய நெரிசல், தாழ்ந்த தரமுடைய சுற்றுலா உட்கட்டமைப்பு மற்றும் எல்லா வயதுடைய சுற்றுலாப் பயணிகளுக்கும் பணியாற்றுவதற்கான கவருமிடங்கள் போதாமை போன்ற பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு வழிமுறைகள் தேவைப்படுகின்றன. சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்கும் தக்கவைத்துக் கொள்வதற்கும் பல்வேறு சமூக ஊடகத்தளங்களையும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஊடகப் பிரச்சாரத் தளங்களையும் பயன்படுத்துகின்ற அதேவேளையில் இப்பிரச்சனைகளில் சில திறன் தொழில்நுட்பங்கள் மற்றும் தரமிடல்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் தீர்க்கப்பட முடியும். மேலும், கவனத்தை ஈர்க்கும் செய்தியனுப்புதல், தன்னியக்க விசா வழங்கல் செய்முறையும் எல்லைக் கட்டுப்பாடும் அருகலை (வை-பை) அடிப்படையாகக் கொண்ட சுற்றுலா வழிகாட்டல் தொழில்நுட்பங்கள் மற்றும் அதேநேர சுற்றுலாப் பயணிகளின் நெரிசல் கண்காணிப்பு போன்ற திறன்வாய்ந்த தொழில்நுட்பம் போன்றவை கைத்தொழிலின் செயலாற்றத்தை உயர்த்தக்கூடிய சில அம்சங்களாகும். பொருத்தமான வழிகாட்டல், பாதுகாப்பை அதிகரித்தல் மற்றும் மிக முக்கியமான மோசடிகளைத் தடுப்பதற்கு முக்கிய சுற்றுலாப் பயணிகளின் கவருமிடங்கள் மற்றும் போக்குவரத்து மையங்களில் தகவல் பணிகள் மேம்படுத்தப்பட வேண்டும். வாடகைக்கார் பணிகளைத் தரமிடல், பொதுப் போக்குவரத்தை மேம்படுத்தல், சுற்றுலாப் பயணிகளுக்கு சிநேகபூர்வமான சுற்றுலா வழிகாட்டல், அனுமதிச்சீட்டு வழங்கல், முன்னரே பதிவுசெய்யும் முறைமை போன்றவற்றை அறிமுகப்படுத்தல் மற்றும் தூய்மையான சுகாதார வசதிகளை உறுதிப்படுத்தல் போன்ற வழிமுறைகள் பாதுகாப்பானதும் சுற்றுலாப் பயணிகளுக்குச் சிநேகபூர்வமானதுமான சேரிடமாக இலங்கையின் விம்பத்தை மேம்படுத்தக்கூடுமென்பதுடன் இது பணத்திற்கான சிறந்த பெறுமதியை வழங்கும்.

**போட்டித்தன்மையை மேம்படுத்துவதனை வலியுறுத்தி அனைத்தையுமுள்ளடக்கிய தேசிய கைத்தொழில் கொள்கையை நடைமுறைப்படுத்துவதும் தேசிய கொள்கைகளின் தொடர்ச்சியினை உறுதிப்படுத்துவதும் இலங்கை அதன் வளர்ச்சி உத்வேகத்தினை அதிகரிப்பதற்கு இன்றியமையாதவையாகும்.** ஹொங்கொங், சீனா, தென்கொரியா மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகள் அபிவிருத்திச் செய்முறையின் ஆரம்பத்தில் கைத்தொழில் கொள்கை வழிமுறைகளை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியதுடன் கைத்தொழில் துறையில் உயர்ந்த மொத்தப் பெறுமதிகூட்டலை உருவாக்குவதற்கும் அபிவிருத்தியின் முன்னேற்றகரமான மட்டத்தினை நோக்கி நகர்வதற்கும் தமது பொருளாதாரங்களை விரைவாக உருமாற்றிக் கொண்டன. எனினும், இலங்கையில் அடுத்தடுத்து வந்த அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கைத்தொழில் கொள்கை பரீட்சிப்புக்கள் நன்மைகள் அடையப்படுவதற்கு முன்னர் அத்தகைய முயற்சிகள் கைவிடப்பட்டமையின் பகுதியளவான காரணத்தினால் நேர்க்கணியமானதும் நீடித்துநிலைத்திருக்கும் விளைவுகளை உருவாக்குவதற்குத் தவறியுள்ளன. இலங்கையின் கைத்தொழில் செயற்பாடுகள் கட்டடவாக்கம் ,சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் உணவு குடிபானங்கள் மற்றும் புகையிலை தயாரிப்பு மற்றும் புடவைகளும் அணியும் ஆடைகளும் மற்றும் தோல் பொருட்களின் தயாரிப்பு போன்ற நான்கு துணைத் துறைகளினால் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. புடவைகளும் ஆடைகளும் மற்றும் ஒரு சில நுகர்வு மற்றும் இடைநிலைப்பொருட்கள் தவிர ஒரு பாரிய தொகையான இத்தகைய தயாரிக்கப்பட்ட பொருட்கள் உள்நாட்டுச் சந்தைக்காக திட்டமிடப்பட்டவை. தேயிலை, இறப்பர் மற்றும் புடவைகள் போன்ற கைத்தொழில்களிலுள்ள சில இலங்கையின் தயாரிப்பாளர்கள் பூகோள ரீதியாக சிறப்பான நியமங்களை அடைந்துகொள்ள முடிந்த போதிலும் வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் மந்தமான செயலாற்றத்தின் காரணமாக ஆசியாவின் சக நாடுகளினைவிட இலங்கை இன்னமும் பின்தங்கியுள்ளது. கைத்தொழில் உற்பத்திகள் மற்றும் கைத்தொழில் ஏற்றுமதிகளின் குறைந்தளவிலான பன்முகப்படுத்தல் உலகம் முழுவதிலுமான வெற்றிகரமான அனுபவங்களுடனும் ஒப்பிடுமிடத்து தயாரிப்புத் துறையின் மோசமான முன்னேற்றத்தினைக் கோட்டிட்டுக் காட்டுகின்றது. மூலதனப்பொருட்கள் துறை போன்ற கைத்தொழில்கள் இன்னமும் தீண்டப்படாதிருக்கின்றன. எனினும், இலங்கை குறைந்த செலவுடைய ஊழிய நன்மையை அதன் போட்டியாளர்களிடம் படிப்படியாக இழக்கக்கூடுமென்பதனால் உலகப் பெறுமதிச் சங்கிலியில் இணைந்து கொள்வதற்கு நாடு ஊழியம் செறிந்த உற்பத்திகளிலிருந்து அதிகளவு

பெறுமதிகூட்டல் மற்றும் தொழில்நுட்பத்தினால் வழிநடத்தப்படும் உற்பத்திகளுக்கு, சாத்தியமானளவு பெறுமதிமிக்க சிறிய சந்தைகளுக்கு பன்முகப்படுத்த வேண்டிய தேவையுள்ளது. இவை வியாபாரங்களுக்கு வசதியளிக்கின்றதும் முதலீட்டுச் சந்தர்ப்பங்களை ஊக்குவிக்கக் கூடியதுமான வர்த்தகச் சூழல் மற்றும் அடையாளம் காணப்பட்ட கைத்தொழில்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய காரணிச் சந்தைச் சீர்திருத்தங்களுடன் கூடிய ஒத்திசைவான கைத்தொழில் அபிவிருத்தி உபாயத்தினை உருவாக்குவதற்கான தேவையினைக் கோடிட்டுக் காட்டுகின்றன. நன்கு அபிவிருத்தியடைந்த கைத்தொழில் துறையைக் கொண்டுள்ள அநேக நாடுகள், உயர்ந்த பெறுமதிகூட்டல், ஏற்றுமதி வருவாய்களை அதிகரிப்பதற்கான உள்ளார்ந்த ஆற்றல், தொழில்நிலை உருவாக்கம் மற்றும் நாட்டில் வருமான ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல் போன்ற காரணிகளைக் கருத்திற் கொண்டு தமது கைத்தொழில் கொள்கை நிகழ்ச்சிநிரலில் முன்னுரிமையுள்ள கைத்தொழில்களை அடையாளம் காணத் தொடங்கின. இத்தகைய கொள்கைகள் நீண்ட உருவாக்கக் காலத்தினைக் கொண்டிருக்கக் கூடுமென்பதனால் கைத்தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலின் ஒத்திசைவு மற்றும் தொடர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கு அரசியல் பக்கத்திலான மாற்றங்களைப் பொருட்படுத்தாமல் அனைத்து ஆர்வலர்களிடையிலான கலந்தாலோசனையுடன் தேசிய கைத்தொழில் கொள்கை உருவாக்கப்பட வேண்டும்.

**இலங்கையில் தயாரிப்புத் துறை தாழ்ந்த உற்பத்தித்திறனினால் பாதிக்கப்பட்டு துறையின் மெதுவான வளர்ச்சிக்கும் உலகச் சந்தைகளில் இலங்கையின் ஏற்றுமதிகளின் குறைந்தளவான போட்டித்தன்மைக்கு வழிகோலி தொழிற்படையின் தரத்தினை மேம்படுத்துதல் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியினூடாக உற்பத்தித்திறனை அதிகரிக்க வேண்டிய தேவையினை வலியுறுத்துகின்றது. இலங்கையின் தயாரிப்புத் துறை ஊழியச் செறிவு மற்றும் குறைந்த பெறுமதிகூட்டல் உற்பத்திகளினால் முன்னிலைப்படுத்தப்படுவது உயர்ந்த உற்பத்தித்திறன் மட்டங்களை அடைவதை கடினமாக்குவதைத் தவிர்க்க முடியாததாகின்றது.** பொருளாதாரத்தில் உயர்வடைந்து செல்லும் கூலி மட்டங்கள் போட்டியாளர்களுக்கெதிராக செலவு குறைந்த ஊழிய நன்மையை தேய்வடையச் செய்வதற்கு இட்டுச்சென்றுள்ளது. போட்டியின் காரணமாக சந்தைப் பங்கினை இழக்காமல் ஏற்றுமதிப் பொருட்களின் விலைகளை அதிகரிப்பதற்கான இடைவெளி இலங்கைக்கு வரையறுக்கப்பட்டதாக இருப்பதனால் போட்டித்தன்மையை பேணிக் கொள்வதற்கும் தாக்குப்பிடிக்கக்கூடியதும் நீடித்துநிலைத்திருப்பதுமான பொருளாதார வளர்ச்சியுடன் பொருளாதாரத்தின் மேலெழுச்சிக்கு உந்து சக்தியை வழங்குவதற்கும் தயாரிப்புத் துறையின் உற்பத்தித்திறன் மேம்பாடு தவிர்க்க முடியாததாகும். சிக்கன உற்பத்திச் செய்முறைகள், மேம்பட்ட உற்பத்தி வடிவமைப்புக்கள், தரப்படுத்தல், கேள்வியினை ஊகிக்கக்கூடிய பட்டியலிடக்கூடிய மென்பொருளினூடாகவும் பகுதிநேர ஊழியத்தினைப் பயன்படுத்துவதனாலும் ஊழியத்தின் மேலதிகப் பட்டியலிடலினை இல்லாதொழித்தல் போன்றவற்றினைப் பின்பற்றுவதனூடாக உற்பத்திச் செய்முறைகளில் செயற்றிறனை அதிகரிப்பது தயாரிப்புத் துறையில் அலகொன்றிற்கான ஊழியச் செலவினைக் குறைப்பதில் துணைபுரியும். கல்வி முறைமையின் அனைத்து மட்டங்களிலும் தேவையான சீர்திருத்தங்களை அறிமுகம் செய்வதன் மூலம் தொழிற்படையின் தரத்தினை மேம்படுத்துவது தேவைப்படும் தொழில்நுட்பத்திறன்களை தொழிலாளர்கள் கொண்டிருப்பதற்கும் உற்பத்தித்திறனை உயர்த்துவதற்கும் துணைபுரியும். தற்பொழுது இலங்கையின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் மீதான செலவினம் புறக்கணிக்கத்தக்கதாகவிருப்பது பொருளாதாரத்தில் புத்துருவாக்கத்தின் தாழ்ந்த மட்டத்திற்கு இட்டுச்சென்றுள்ளது. எனவே, கண்டுபிடிப்புக்களை வர்த்தக மயப்படுத்துவதற்கு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், சிவில் சமூக நிறுவனங்கள் மற்றும் தனியார் துறைக்கிடையிலான இணைப்புக்களை வலுப்படுத்துகின்ற வேளையில் கைத்தொழில் துறையில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மீதான அரச மற்றும் தனியார் துறை இரண்டினதும் செலவிடலினூடாக ஆதரவளிக்கப்பட வேண்டும். பலயீனமான உட்கட்டமைப்பு மற்றும் அதிகார செயற்றிறனின்மைகள் பொதுவாக நிறுவனங்களின் உயர்ந்த செலவுகளுக்கு இட்டுச்சென்று இலாபத்தன்மையைக் குறைவடையச் செய்வதுடன் தனியார் முதலீட்டினை ஊக்கமிழக்கச் செய்கின்றன. ஆகவே, நடைமுறை சார்ந்த தடைகளை இல்லாதொழிக்கின்ற அதேவேளையில் தெரு வலையமைப்பு மற்றும் துறைமுகம் போன்ற உட்கட்டமைப்புக்களை மேம்படுத்துவதற்கான முயற்சிகளைத் தொடர வேண்டும். உள்நாட்டில் தயாரிக்கப்படும் பொருட்களின் சந்தையை விரிவாக்குவதற்கு தயாரிப்புத் துறையில் உற்பத்தித்திறன் மேம்பாடுகள் வர்த்தக சீர்திருத்தங்கள் அத்துடன் வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்வதற்கு முற்கூட்டிய கொள்கை வழிமுறைகளுடன் இணைக்கப்பட வேண்டும்.

**சமூக மற்றும் மனித மூலதன அபிவிருத்தி போன்ற விடயங்களில் இலங்கையின் கடந்த சாதனைகள் இருந்த போதிலும் பொருளாதாரத்தின் வருமான அந்தஸ்தின் உயர்வானது நவீன சவால்களின் தொகுப்பினைக் கொண்டு வந்து உயர்ந்த மற்றும் நீடித்துநிலைத்திருக்கும் வளர்ச்சிப் பாதைக்கு வசதியளிப்பதற்கு தொழிற்படை போதுமானளவு முன்னேற்பாடுகளுடனுள்ளமை பற்றிய மதிப்பீட்டினை வேண்டி நிற்கின்றது. உள்நாட்டுப் பொருளாதாரத்தின் விரைவான இயங்கு சக்தி மற்றும்**

1

**நான்காவது கைத்தொழில் புரட்சியினால் வழிநடத்தப்பட்ட பன்னாட்டு அபிவிருத்திகள் கொடுக்கப்பட்ட நிலையில் தொழிற்சந்தையில் முகம் கொடுக்கப்படும் பிரச்சனைகளுக்கான மையமாக கல்விமுறை இருக்கின்றது.** உள்நாட்டு மற்றும் உலக தொழிற்சந்தையின் திறனிற்கான கேள்விக்கமைவாக காலத்திற்குக் காலம் பாடவிதானம் இற்றைப்படுத்தப்படுவதையும் பொருந்தச் செய்வதையும் கல்விக் கொள்கை உறுதிப்படுத்த வேண்டும். இலங்கையில் இளைஞர்களின் பாரிய பிரிவினர் உயர் கல்வியையோ ஏதாவதொரு திறன் பயிற்சியையோ கொண்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக மென்திறன்கள், டிஜிட்டல் கல்வியறிவு மற்றும் ஆங்கிலக் கல்வியறிவு போன்ற ஏனைய சந்தைப்படுத்தக்கூடிய திறன்களையும் அவர்கள் கொண்டிருக்கவில்லை. இவை அவர்களின் ஆசைகளுக்கேற்ற வகையில் உயர்மட்ட தொழில்களை அடைந்து கொள்வதில் தடைகளை உருவாக்குகின்றது. தனியார் துறையில் ஏற்புடைய தொழில் சந்தர்ப்பங்களின் போதுமற்றதான அணுகுவழி இளைஞர்களைப் பெருமளவில் அரச துறை தொழில்நிலையில் தங்கியிருப்பதற்கு வழிவகுக்கின்றது. சந்தைப்படுத்தக்கூடிய திறன்களைக் கொண்டிராத பட்டதாரிகள் தொழிலற்றிருப்பதையும் தொழிலாளர்களதும் அவர்களில் தங்கியிருப்போரினதும் வாழ்க்கைக்காலம் முழுவதும் ஓய்வூதியங்களின் நியதிகளில் நீண்ட கால நன்மைகளான தொழில் பாதுகாப்பையும் நிதியியல் பாதுகாப்பையும் வழங்குகின்ற அரச துறையின் தொழிலுக்காக காத்திருப்பதனையும் பயனுள்ளதாகக் கருதுகின்றனர். அரச துறைத் தொழில்களுடன் தொடர்புபட்ட இந்த வெகுமதி கொள்கைச் சீர்திருத்தங்களினால் தீர்க்கப்பட்டாலொழிய, தொழிற்சந்தையில் தொடர்ந்தும் பிறழ்வினை உருவாக்கும். இத்தகைய கொள்கைச் சீர்திருத்தங்கள் அரச துறை தொழில்கள் 'இலவசப் பண்டமாக' கருதப்பாடாது என்பன உறுதிசெய்வதுடன் இத்துறையின் செயற்றிறனையும் உற்பத்தித்திறனையும் உறுதிசெய்கின்ற தகுதிவாய்ந்த தனியாட்களின் பொருத்தமான நியமனங்களுக்கு வழியமைத்துக் கொடுக்கும். மேலும், அரச பணிகள் ஓய்வூதிய திட்டத்தினை பங்களிப்புச் செய்யக்கூடியதாக மீளவடிவமைக்கின்ற வேளையில் நாடுபூராவுமான பங்களிப்புச் செய்யும் ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்துவது அரச துறைத் தொழில்களின் கவர்ச்சியினைக் குறைத்து தொழிற்சந்தையில் பெருமளவு நெகிழ்ச்சித்தன்மையை அனுமதிக்கும். அதிகளவு அதிகரித்துச் செல்லும் வயது முதிர்ந்தோர் சனத்தொகை மற்றும் அதனுடன் தொடர்புடைய எதிர்காலத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள மட்டுப்படுத்தப்பட்ட இறை இடைவெளி என்பவற்றின் நோக்கிலும் இது இன்றியமையாததாகின்றது. கல்வித் துறையின் இன்னுமொரு குறைபாடு விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதப்பாடங்களில் மாணவர்களின் மோசமான செயலாற்றமும் பல்கலைக்கழக முறைமையின் உள்ளீடுகள் மீதான இதன் அளவுகடந்த தாக்கமுமாகும். மென்மெருகிடல், பொறியியல், கணிதம் மற்றும் தொழில்நுட்ப திறன்களில் கவனம் செலுத்துகின்ற உயர்தரமுடைய கல்வியின் சமமான கிடைப்பனவு, மிகவும் உற்பத்தித்திறன் வாய்ந்த மனித மூலதன அடிப்படைக்கு வழியமைப்பது மட்டுமன்றி மாகாண ரீதியான ஏற்றத்தாழ்வுகளையும் தீர்க்க முடியும். பின்தங்கிய பிரதேசங்களில் டிஜிட்டல் பொருளாதாரம் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட தொழில்நுட்பங்களில் ஈடுபடுவதற்கும் அவற்றிலிருந்து நன்மைபெறக்கூடியதாகவும் இத்தகைய ஒழுங்கீனங்களை இல்லாதொழிப்பதற்கு இலக்கிடப்பட்ட கொள்கைத் தலையீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பெண்களின் தாழ்ந்த தொழிற்படைப் பங்கேற்பு வீதத்தினைப் பொறுத்தவரையில் கூலி வழங்கப்படாத நலக்கவனிப்பு வேலைகளுடன் தொடர்புபட்ட அழுத்தங்கள் பெண்களுக்கான மிக முக்கிய பிரச்சனையாகும். பிளற்போம் மற்றும் கிக் (பபை) பொருளாதாரங்களின் பெருக்கம் தொழிற்படையில் பெண்களின் பங்கேற்பினை அதிகரிப்பதில் பங்களிக்கக்கூடமெனினும் முறைசார்ந்த நலக்கவனிப்புப் பணிகள் கிடைக்காமை பெண்களை, குறிப்பாக உயர் கல்வித் தகைமை கொண்டோரை, பொருளாதார ரீதியாக தொழிற்படுவதிலிருந்து தடைசெய்யும். மேலும், பெரும்பாலான பெண்கள் ஏற்கனவே கூலி வழங்கப்படாத குடும்பத் தொழிலாளராக ஈடுபட்டிருப்பதனால் இலங்கைப் பொருளாதாரத்தில் உயர்ந்த மட்டத்திலான முறைசாராமையின் பிரசன்னமும் பெண்களை மேலும் பாதிப்பதுடன் கிக் பொருளாதாரம் இதனை மேலும் மோசமாக்கி அவர்களையும் அதேபோன்று ஒட்டுமொத்த முறைசாரா தொழிற்படையினையும் சமூகப் பாதுகாப்பு மற்றும் தொழிலாளர் பாதுகாப்பு உத்தரவாதங்களின் கிடைப்பனவிலிருந்து விலக்கக்கூடும். பெண்களின் தொழிற்படைப் பங்கேற்பு வீதத்தினை அதிகரிப்பதற்கு பல ஆண்டுகளாக கலந்துரையாடப்பட்டதனைத் போன்று நெகிழ்ச்சியான வேலை ஒழுங்குகள், உயர்திறனுடைய பெண்களினால் விரும்பப்படும் தொழில்களின் கிடைப்பனவை மேம்படுத்தல், நல்ல தரம் வாய்ந்ததும் செலவு குறைந்ததுமான குழந்தைப் பராமரிப்பு வசதிகளை வழங்குதல் மற்றும் பொதுப் போக்குவரத்து பணிகளை மேம்படுத்தல் போன்றவற்றை இயலச்செய்கின்ற முயற்சிகளையும் கொள்கைகளையும் கொள்கை வகுப்பாளர்கள் அவசரமாகப் பின்பற்ற வேண்டும்.

**வேளாண்மை உற்பத்திகளுக்கான போதுமானதற்ற களஞ்சியசாலை வசதிகள் மற்றும் வேளாண்மை பண்டங்களின் நிதியிடல் தெரிவுகள் போதாமை உணவு விலைகளின் கடுமையான தளம்பல்களுக்கும் உற்பத்தியாளர்களுக்கான தாழ்ந்த பண்ணை விலைகளுக்கும் இட்டுச்சென்றுள்ளன.** பணவீக்க மதிப்பீட்டிற்காக கருத்தில் கொள்ளப்படும் நுகர்வுக் கூடையின் கணிசமானதொரு பகுதி உணவு வகைகளைக் கொண்டிருக்கின்றது. அண்மைய ஆண்டுகளில் உணவு விலைகளின் அதிகரித்த தளம்பல் பிரதானமாக உற்பத்தியின் பருவகாலநிலை மற்றும் பாதகமான வானிலை நிலைமைகளினால் எழுகின்ற வழங்கல்களின் இடையூறுகள்

போன்றவற்றிலானதாகும். வேளாண்மையாளர்களுக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள மட்டுப்படுத்தப்பட்ட சேமிப்புக் கிடங்கு மற்றும் களஞ்சியசாலை வசதிகள் பருவகால அறுவடைகளைச் சேமித்து வைத்து அதன் மூலம் தாழ்ந்த வழங்கல் காலங்களில் வேளாண்மை உற்பத்தியாளர்களுக்குச் சிறந்த விலைகளைப் பெறுகின்ற சந்தர்ப்பங்களை அவர்களுக்கு இழக்கச் செய்கின்றன. அநேகமான வேளாண்மையாளர்களிடையிலான பொதுவான நடைமுறை தமது சொந்த நுகர்வுத் தேவைகளைப் பூர்த்திசெய்கின்ற அதேவேளை உற்பத்தியில் ஏற்பட்ட செலவுகளுக்கு நிதியிடுவதற்காகப் பெறப்பட்ட கடன்களைத் தீர்ப்பதற்கும் அடுத்த பயிர்ச்செய்கை சுழற்சிக்கான உள்ளீடுகளைக் கொள்வனவு செய்வதற்கும் தமது அறுவடையை உடனடியாக விற்பதாகும். முறைசார் நிதியியல் நிறுவனங்களிடமிருந்து கடன்களைப் பெற்றுக்கொள்வதற்குப் பிணைகள் போதாமையின் காரணமாக சிறிய மற்றும் நடுத்தர வேளாண்மை உற்பத்தியாளர்கள் தொழிற்பாட்டு மூலதனம் போதாமையின் பிடியிலிருக்கின்றனர். அறுவடைகளின் உடனடி விற்பனை அறுவடை பருவங்களில் மிதமிஞ்சிய உற்பத்திக்கும் ஏனைய நேரங்களில் பற்றாக்குறைக்கும் இட்டுச்சென்று நாட்டில் உணவு வழங்கலின் இடையூறுகளுக்கும் உணவு விலைகளின் கடுமையான தளம்பலுக்கும் காரணமாகின்றது. ஆகவே, விலைகளின் உறுதித்தன்மையை மேம்படுத்தும் அதேவேளை உணவு வழங்கலின் உறுதித்தன்மையையும் தரத்தினையும் முறையியல் ரீதியாக மேம்படுத்துவதற்கு தாங்கிக் கொள்ளக்கூடியதும் நல்ல தரம் வாய்ந்ததுமான, விசேடமாக குளிர் சங்கிலி ஏற்பாடுகள், சேமிப்புக்கிடங்கு மற்றும் களஞ்சியசாலை வசதிகளை விரிவாக்குவதற்கான பொறிமுறைகளை உருவாக்குவதற்கான அவசர தேவையுள்ளது. இத்தகைய முயற்சிகளுடன் களஞ்சியசாலை பற்றுச்சீட்டு முறைமை உள்ளடங்கலாக பண்ட நிதியிடல் தெரிவுகள் நிதியியல் பணிகளை அணுகுவதற்கான பிணைகளாக தமது உற்பத்திகளைப் பயன்படுத்துவதற்கானதொரு வழியாக வேளாண்மையாளர்களிடையே மேலும் பிரசித்தமாக்க வேண்டும். இந்தியா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், கென்யா மற்றும் சம்பியா போன்ற பல்வேறு நாடுகளில், விசேடமாக நெல் மற்றும் சோளம் போன்ற தானியங்களுக்காக, பண்ட நிதியிடல் திட்டங்கள் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. களஞ்சியசாலை பற்றுச்சீட்டு முறைமையின் கீழ் களஞ்சியசாலை தொழிற்படுத்துநர்கள் குறிப்பிட்ட பண்டங்கள் குறிக்கப்பட்ட தரம் மற்றும் தொகைகளில் களஞ்சியசாலையில் குறிக்கப்பட்ட வைப்பாளரால் வைத்திருக்கப்படுவதனையும் சேமிக்கப்பட்டுள்ள பண்டத்தைப் பாதுகாப்பான கட்டுக்காப்பில் வைத்திருப்பதனையும் உறுதிப்படுத்தி பற்றுச்சீட்டுக்களை வழங்குகின்ற வேளையில் வைப்பாளர் அந்தப் பற்றுச்சீட்டினை குறுங்கால தொழிற்பாட்டு மூலதனத் தேவைப்பாடுகளுக்கான பிணையாகப் பயன்படுத்துவர். ஒரு ஒழுங்குமுறைப்படுத்தல் முகவராண்மையூடாக களஞ்சியசாலைத் தொழிற்பாடுகளின் சிறந்த முகாமைத்துவம் மேற்பார்வை செய்யப்பட வேண்டும். பண்ட நிதியிடல், சிறந்த சேமிப்புக்கிடங்கு மற்றும் களஞ்சியசாலை வசதிகளுடன் இணைந்து ஆண்டு முழுவதும் வேளாண்மை உற்பத்திகள் கிடைப்பதனை உறுதிப்படுத்தி உணவு வகைகளின் சில்லறை விலைகளின் கடுமையான தளம்பல்களைக் குறைக்கின்ற அதேவேளை வேளாண்மையாளர்களுக்குச் சிறந்த பண்ணை விலைகள் கிடைக்கச் செய்வதனை இயலச்செய்யும். இதேவேளை, இத்தகைய பிணைய உயர்ந்தளவான திரவத்தன்மை வாய்ந்ததாகவிருந்து வேளாண்மைத் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் தொடர்பில் உயர் மட்டத்திலான காப்பினை வழங்குவதனால் களஞ்சியாலை பற்றுச்சீட்டுக்கள் நிதியியல் நிறுவனங்களுக்கும் நன்மையளிக்க முடியும்.

**போக்குவரத்து, நீர் மற்றும் மின்சாரம் போன்ற துறைகளின் பல உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் முன்னேற்றம், விரைவானதும் அனைத்தையுமுள்ளடக்கியதுமான வளர்ச்சியில் இவற்றின் முக்கியத்துவத்திற்குப் புறம்பாக அண்மிய ஆண்டுகளில் மெதுவடைந்தது. ஏனைய உற்பத்தித் துறைகளின் பெறுமதிச் சங்கிலிகளில் இத்தகைய உட்கட்டமைப்புக்கள் உள்ளீடுகளாக இன்றியமையாதவை.** போக்குவரத்து, துறைமுகம் மற்றும் விமானநிலைய வசதிகள் மற்றும் தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பங்கள் பொருளாதார மற்றும் சமூக ரீதியான சந்தர்ப்பங்களை பொருளாதார முகவர்களுக்கு வழங்கி சிறந்த தொழில்நிலை சந்தர்ப்பங்கள் மற்றும் சந்தைகள் மற்றும் நிதிகளுக்கான அதிகரித்த அணுகுவழி போன்றவற்றினூடாக நேர்க்கணியப் பெருக்கி விளைவுகளுக்கு இட்டுச்செல்லும். மின்சாரத்தின் தடங்கல்கள், மட்டுப்படுத்தப்பட்ட தூய்மையான நீர்வழங்கல், மோசமான நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு போன்ற பௌதீக உட்கட்டமைப்பின் குறைபாடுகள் அதன் மூலம் நலம் மற்றும் கல்வி மட்டங்கள் மற்றும் தொழிற்படையின் நீண்ட கால உற்பத்தித்திறனைப் பாதிக்கின்றன. செயற்றிறன் வாய்ந்ததும் போதுமானதுமான உட்கட்டமைப்பு கிடைக்காமை, கைத்தொழில் மயமாக்கலுக்கானதொரு தடையாக தொழிற்படுவதுடன் நாட்டின் போட்டித்தன்மையை படிப்படியாக இல்லாதொழிப்பதுடன் வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்குத் தடையாகவுள்ளது. வீட்டுடமையாளரின் அதிகரித்துச் செல்லும் வருமான மட்டங்களுடன் இணைத்து தரமான உட்கட்டமைப்பிற்கான தேவை உயர்வதனால் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கும் பொருளாதார வளர்ச்சிக்குமிடையில் இரு வழித்தொடர்பு காணப்படுகிறது. எனவே, உட்கட்டமைப்பினை வலுப்படுத்துவது அதன் தரத்திற்கான கேள்வியினைப் பூர்த்தி செய்கின்ற அதேவேளை பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கு இன்றியமையாததாகும். 2009இல் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்ததிலிருந்து அரசாங்கத்தினால் முன்னிலை வகிக்கப்பட்ட

உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான தூண்டுதல் போக்குவரத்து மற்றும் வசதிகளின் ஏற்பாடுகளை உயர்த்தி நாட்டிற்குள்ளேயும் உலகத்தின் ஏனைய பகுதிகளுடனானதுமான இணைப்புக்களை மேம்படுத்தியுள்ளது. எனினும், பல்வேறு பொருளாதார ரீதியான மற்றும் பொருளாதார ரீதியற்ற காரணங்களிற்கு மத்தியில் இறைத் தடைகள் மற்றும் உயர்ந்துசெல்லும் படுகடன் மட்டங்களினால் இந்த உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான தூண்டுதல் அண்மைய ஆண்டுகளில் மெதுவடைந்துள்ளது. இறை இடைவெளி போதாமையினைக் கருத்திற் கொண்டு நிலையான கொள்கைகள், பேரண்டப் பொருளாதார உறுதித்தன்மை, பொருத்தமான ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் தர உத்தரவாதக் கட்டமைப்பு மற்றும் அதிகார செயற்றிறனின்மையைக் குறைத்தல் போன்றவற்றினை உருவாக்குவதனூடாக முதலீட்டிற்குச் சாதகமான சூழலை உருவாக்கி உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் தனியார் துறையின் ஈடுபாட்டினை ஊக்குவிப்பதற்கான தேவையுள்ளது. அரச தனியார் பங்குடமைகள் மற்றும் முதலீட்டு நிதியம் போன்ற பல்வேறு நிதியிடல் ஒழுங்குகள் உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் தனியார் முதலீட்டினைக் கவர்வதற்கு கருத்தில் கொள்ளப்படக்கூடும். இத்தகைய செயற்றிட்டங்கள் பொதுவாக பாரிய ஆரம்ப முதலீட்டைத் தேவைப்படுத்தியதுடன் பொருளாதார நன்மைகளைப் பெறுவதற்கு நீண்ட உருவாக்கக் காலங்களைக் கொண்டிருப்பதனால் தனியார் துறை பங்கேற்புக்கான அக்கறையினை மட்டுப்படுத்தி அரச தலையீட்டினைத் தேவைப்படுத்துகின்றன. எனவே, அவற்றின் பொருளாதார ரீதியானதும் சமூக ரீதியானதுமான தாக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களை முன்னுரிமைப்படுத்துவது வரையறுக்கப்பட்ட அரச நிதியினை அதிகளவு செயற்றிறனுடன் பயன்படுத்துவதனை அரசாங்கத்திற்கு இயலச்செய்யும். சில உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்கள் சூழல் மாசடைதல் மற்றும் வரையறுக்கப்பட்ட வளங்களின் மிதமிஞ்சிய பயன்பாடு போன்ற எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகளைக் கொண்டிருக்கும் போக்குக் காணப்படுகிறது. பசுமை நிதியிடல் சந்தைகள் மற்றும் பொருத்தமான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்புக்களை வலுப்படுத்துவதன் மூலம் சூழலுக்கு சிநேகபூர்வமான உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களுக்கு பசுமை நிதியிடலுக்கான வழிகளைத் தேடுகின்ற அதேவேளையில் செயற்றிட்ட முன்னுரிமைப்படுத்தலில் உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களின் எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகளை இலங்கை கருத்திற்கொள்ள வேண்டும்.

**வலு உருவாக்கக் கலப்பு மீதான நிலையான கொள்கை மற்றும் நீண்ட கால உருவாக்க விரிவாக்கத் திட்டத்தின் நேரகாலத்துடனான நடைமுறைப்படுத்தல் போன்றவற்றினூடாக வலுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவது பொருளாதார வளர்ச்சியை நீடித்துநிலைத்திருக்கச் செய்யும் அதேவேளையில் வலு உருவாக்கச் செலவினைக் குறைப்பதற்கு அவசியமானது.** உற்பத்தித்திறனை தீர்மானிக்கின்ற முக்கிய கூறுகளிலொன்றாக இடையூறில்லாத மின்வலு வழங்கல் காணப்படுவதுடன் குறிப்பாக, வலு செயலிழப்பின் காரணமாக மின்வலு உட்கட்டமைப்பின் குறைபாடுகளினால் நிறுவனத்தின் செயலாற்றம் எதிர்க்கணியமாக பாதிக்கப்படுவதாக ஆய்வுகள் காட்டுகின்றன. மோசமான மின்வலு உட்கட்டமைப்பு முதலீட்டாளர்களை, விசேடமாக சாத்தியமான முதலீட்டாளர்களை, ஊக்கமிழக்கச் செய்கின்றது. வியாபாரம் செய்தல் இலகுத்தன்மைச் சுட்டெண்ணில் உட்கட்டமைப்பின் வலிமையை அளவிடுவதற்கு வலு செயலிழப்புக்கள் பயன்படுத்தப்படுவதனால் திட்டமிடப்பட்ட அல்லது திட்டமிடப்படாத அடிக்கடி இடம்பெறும் வலு இடையூறுகள் இச்சுட்டெண்ணின் தாழ்ந்த தரப்படுத்தலுக்கு இட்டுச்செல்லும். அடிக்கடி இடம்பெறுவதும் நீண்ட காலமானதுமான வரட்சியான வானிலை நிலைப்பாடுகள் இலங்கை மின்சார சபை அடிக்கடி சுமை குறைப்பதற்கான அட்டவணையை நாடுவதனை கட்டாயமாக்குகின்றது. கொள்கைத் தீர்மானங்களின் நிலையற்ற தன்மை மற்றும் இலங்கை மின்சார சபையின் உருவாக்க விரிவாக்கத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதிலான குறைபாடுகள் போன்றவற்றினால் 2014 இலிருந்து இலங்கை மின்சார சபையின் உருவாக்க இயலளவிற்கு முக்கிய சேர்க்கைகள் எதுவும் இடம்பெற்றிருக்கவில்லை. அண்மைய ஆண்டுகளில் இலங்கை மின்சார சபை தொடர்ந்து நட்டத்தை ஏற்படுத்தியதுடன் உருவாக்கத்தின் பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கு கணிசமானளவு உயர்ந்த அலகுக்கான செலவுகளுடன் தனியார் துறையிடமிருந்தான கிரமமான அவசர வலுக் கொள்வனவுகளினால் இலங்கை மின்சார சபையின் அத்தகைய பலயீனமான நிதியியல் செயலாற்றம் தீவிரமடைந்தது. உதாரணமாக விற்பனை மையத்தில் மின்வலுவின் கிவாட் ஒன்றிற்கான சராசரி உருவாக்கச் செலவு கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019 காலப்பகுதியில் 21.8 சதவீதத்தினால் அதிகரித்தது. தொடர்ச்சியாக பல ஆண்டுகளாக இலங்கை மின்சார சபை அவசர வலுக் கொள்வனவுகளில் தங்கியிருப்பது போட்டித்தன்மையற்ற கொள்வனவு விலைகளுக்கு இட்டுச்சென்றுள்ளதுடன் வலுத் துறையின் திட்டமிடல் மற்றும் கொள்வனவுச் செயன்முறைகளிலுள்ள குறைபாடுகளினைப் பிரதிபலிக்கின்றது. நிதியியல் துறை உட்பட பொருளாதாரத்தின் ஏனைய துறைகளில் கசிவுத்தாக்கத்தைக் கொண்டுள்ள மின்சார சபையின் நிதியியல் சுமையினைக் குறைப்பதற்கு மின்வலுவிற்கான கேள்வி மற்றும் உருவாக்கத்தின் துல்லியமான எறிவுகள் மற்றும் செலவுச் சிக்கனமான முறையில் கொள்வனவின் சிறந்த திட்டமிடல் போன்றவை இன்றியமையாதவை. இதேவேளையில், வலுத் துறையின் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையையும் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நிதியியல் விடயங்கள் அதேபோன்று ஏனைய சந்தை மற்றும் சமூகப் பொருளாதார மற்றும் சூழல் காரணிகளைக்

கருத்திற் கொண்டு நீண்ட காலத் தொலைநோக்குடன் கூடிய வலு உருவாக்கக் கலப்பு மீதான தேசிய கொள்கையை நடைமுறைப்படுத்துவது அவசியமாகும்.

**அரசாங்கத்திடமிருந்தான நிதியியல் ஆதரவில் பெருமளவில் தங்கியிருக்கின்ற குறைச் செயலாற்றுகின்ற அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகள் தேசிய வரவு செலவுத்திட்டத்திற்கு தொடர்ந்தும் சுமையாகவிருக்கின்றன. இலங்கையின் சுதந்தரத்திற்குப் பின்னரான பொருளாதாரத்தில் அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகள் கைத்தொழில் துறையின் வளர்ச்சி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் உள்ளடங்கலாக சமூகப் பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்குத் துணைபுரிந்து ஒரு முக்கிய பங்கினைப் புரிந்துள்ளன.** எனினும், அடுத்துவந்த அரசாங்கங்களின் கொள்கைச் சார்பிலான மாற்றங்கள், உள்நாட்டு மற்றும் பொருளாதாரத்தின் மாறுகின்ற இயக்கவாற்றலுக்கு மத்தியில் சில அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் மாறுகின்றதன்மை போதாதிருந்தமை, முகாமைத்துவப் பிரச்சனைகள் மற்றும் பல்வேறு மட்டங்களிலான ஏனைய தலையீடுகள் காலந்தோறும் பல அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் செயலாற்றத்தினைத் தடைசெய்து அரசாங்கத்திற்கான ஒரு மேலதிக அரசிறை மூலமாக மாறுகின்ற எதிர்பார்க்கைகளுக்கு மாறாக தமது தொழிற்பாடுகளை நீடித்துநிலைத்திருக்கும் அரசாங்கத்தின் உதவியினை வேண்டிநிற்கின்றன. இந்தப் பின்னணியில், அரச வரவு செலவுத்திட்டத்திற்கான மேலதிக அழுத்தங்களை இல்லாதொழிக்கின்ற அதேவேளையில் பொதுப் பண்டங்கள் மற்றும் பணிகளின் தடைப்படாத விநியோகத்தினை உறுதிப்படுத்துவதற்கு அத்தகைய அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளுக்கான சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவது தவிர்க்க முடியாதது. அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளை முகாமை செய்வதற்கு தொழில்சார் நிபுணர்களை நியமிக்கும் அரசாங்கத்தின் அண்மைய முயற்சிகள் பாராட்டத்தக்கதாகவுள்ள வேளையில் தெரிவுசெய்யப்பட்ட அடிப்படையில் பொதுப் பயன்பாடுகளை வழங்குவதில் செலவினைப் பிரதிபலிக்கும் விலையிடல் பொறிமுறைகளை அறிமுகம் செய்தல், கம்பனி ஆளுகையை மேம்படுத்தல் மற்றும் தொழிற்படையின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கு ஆட்சேர்ப்புக்களை நெறிப்படுத்தல் போன்று மேலதிக வழிமுறைகள் அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் நிதியியல் வரையறைகளின் ஆற்றலை மேம்படுத்துவதற்கு தேவையாகவுள்ளது. மேலும், இயற்கையான தனியுரிமை உள்ளமையின் காரணமாக அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளினூடாக சந்தையில் அரசு தலையிட வேண்டிய விடயப்பரப்புக்கள் தவிர போட்டியினூடாக பணி வழங்கலின் ஒட்டுமொத்த செயற்றிறனை மேம்படுத்துவதற்கு பொதுப் பயன்பாடு வழங்கலில் தனியார் துறை பங்குபற்றலினை உயர்த்துவது ஊக்குவிக்கப்பட வேண்டும்.

**ஒழுங்கற்ற வானிலை நிலைமைகள் மற்றும் நீருக்கான அதிகரித்த கேள்விக்கு மத்தியில் இலங்கையின் நீர்ப் பாதுகாப்பு ஒரு மிகுந்த கரிசனைக்குரியதாக மாறி சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் மழைநீர் அறுவடைத் தொழில்நுட்பங்கள் உள்ளடங்கலாக நீர் முகாமைத்துவ உபாயங்களை அவசரமாக நடைமுறைப்படுத்துவதற்கான தேவையைத் தூண்டுகின்றன.** நாட்டின் ஆண்டுச் சராசரி மழைவீழ்ச்சியின் இடையம் ஏறத்தாழ 2,000 மி.மீ ஆகக் காணப்பட்டு அநேகமான நீர்ப் பற்றாக்குறை கொண்ட நாடுகளினால் பெறப்படும் சராசரி மழைவீழ்ச்சியை விட உயர்வாகவுள்ளது. எவ்வாறாயினும் முக்கியமாக இரு பருவகால மழைவீழ்ச்சி நிலைமைகளினால் முக்கியமாக எழுகின்ற இடம்சார்ந்த மற்றும் தற்காலிகமான நீர்ப் பற்றாக்குறைப் பிரச்சனைகளை நாட்டின் சராசரி மழைவீச்சிப் புள்ளிவிபரங்கள் மறைக்கின்றன. நிலப்பரப்பின் 60 சதவீதத்திற்கு மேலானதை உள்ளடக்குகின்ற நாட்டின் வெப்பவலயம் 1,750 மி.மீ இனை விடக் குறைவான ஆண்டுச் சராசரி மழைவீழ்ச்சி இடையத்துடன் ஒவ்வொரு ஆண்டின் மே தொடக்கம் செத்தெம்பர் வரையில் நிலவுகின்ற தனித்துவமான வரட்சிக் காலத்துடன் நீர்ப் பற்றாக்குறைக்கு வாய்ப்புடையதாகவிருக்கின்றது. மேலும், காலநிலை மாற்றத்தினால் காரணம் கற்பிக்கக்கூடிய அசாதாரண வானிலை நிலைமைகள் ஆண்டின் அதே காலப்பகுதியில் ஏனைய சில பிரதேசங்களில் கடுமையான மழைவீழ்ச்சி வெள்ளத்திற்குக் காரணமாகின்ற அதேவேளையில் குறித்த சில பிரதேசங்களில் நீண்ட கால வரட்சிக்கு விட்டுச்சென்றுள்ளது. இத்தகைய மழைவீழ்ச்சியின் ஒழுங்கற்ற நிலைகள் இயற்கையான நீர் மூலங்களின் தொடர்ச்சியான வழங்கலுக்கு அடிக்கடி இடையூறு விளைவித்து குறிப்பாக எதிர்வரும் காலத்தில் நீருக்கான உயர்ந்து செல்லும் கேள்விக்கு மத்தியில் நேரகாலத்துடன் தீர்க்கப்பட்டாலன்றி நாட்டின் நீர்ப் பாதுகாப்பை சாத்தியமானளவு அச்சுறுத்துகின்றன. நகரமயமாக்கலின் விரைவான வேகத்தினால் பாதுகாப்பான குடிநீரின் பற்றாக்குறையான வழங்கல் வரண்ட வலயத்திற்கு மாத்திரம் வரையறுக்கப்பட்ட பிரச்சனையொன்றாக இருப்பது மட்டுமன்றி குறிப்பிட்ட ஈரவலயப் பிரதேசங்களிலும் பிரச்சனையொன்றாக இருக்கின்றது. நாட்டின் பாரியளவிலான நீரினை நுகர்வு செய்யும் செயற்பாடாக வேளாண்மை காணப்படுகின்ற வேளையில் வீட்டுடமையாளர் நுகர்வு, கைத்தொழில் செயற்பாடுகள் மற்றும் நீர்மின் உருவாக்கம் போன்ற ஏனைய செயற்பாடுகளின் நீருக்கான கேள்வியும் உயர்வடைந்து வருகின்றது. இதேவேளை, வேளாண்மை இரசாயனம் மற்றும் வளமாக்கிகளின் அதிகமான பாவனை நாட்டின் சில பிரதேசங்களில் நிலக்கீழ் நீர் மாசடைதலுக்கு இட்டுச்சென்றுள்ளது. இத்தகைய சூழ்நிலைகளில் நீர்வழங்கலின் வினைத்திறனான முகாமைத்துவம் அத்தியாவசியமாகின்றது. ஆண்டுச் சராசரி மழைவீழ்ச்சியின் இடையப் புள்ளிவிபரத்தினால் குறித்துக் காட்டப்பட்டவாறு நீர்ப் பற்றாக்குறைக்கான பிரதான காரணம் வரையறுக்கப்பட்ட வழங்கலல்லாது கிடைக்கத்தக்கதாகவுள்ள நீர் வளங்களின் உத்தமமானதல்லாத

1

முகாமைத்துவமாகும். உதாரணமாக, நாட்டினால் பெறப்படும் மழைவீழ்ச்சியில் ஏறத்தாழ அரைவாசி உற்பத்தித்திறன் வாய்ந்த செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படாமல் கடலினுள் பாய்கின்றது. ஜின், களனி மற்றும் களு போன்ற ஒப்பீட்டளவில் பாரியளவிலான ஆறுகள் அவற்றின் நீரில் ஏறத்தாழ 60 தொடக்கம் 70 சதவீதமானவற்றை கடலுக்கு வெளியிடுகின்ற அதேவேளையில் ஒப்பீட்டளவில் சிறு ஆறுகளான கலா ஓயா, யன் ஓயா மற்றும் மல்வத்தை ஓயா போன்றவை தமது நீரில் ஏறத்தாழ 20 சதவீதமானவற்றை கடலுக்கு வெளியிடுவதாக மதிப்பீடுகள் சுட்டிக்காட்டுகின்றன. ஆகவே, நீர்வழங்கல் நன்கு பத்திரப்படுத்தப்படுவதனையும் நாட்டின் நீர்ப் பாதுகாப்பு பாதுகாக்கப்படுவதனையும் உறுதிசெய்வதற்கு அனைத்து ஆர்வலர்களின் ஆதரவுடன் ஒருங்கிணைக்கப்பட்ட அனைத்தையுமுள்ளடக்கிய நீர் முகாமைத்துவக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். மேலும், நீரைத் தக்கவைத்துக் கொள்ளும் இயலளவை அதிகரிப்பதற்கு தற்போதுள்ள நீர்த்தேக்கங்களை தூர்வாருதல், சொட்டு நீர்ப்பாசனம் போன்ற நீர் செயற்றிறன் வாய்ந்த வேளாண்மைத் தொழில்நுட்பங்களை ஊக்குவித்தல், வேளாண்மை சமூகங்களிடையே சிறந்த வேளாண்மைப் பிரயோகங்களைப் பிரசித்தப்படுத்தல் மற்றும் மழைநீர் அறுவடைப் பிரயோகங்களை அறிமுகம் செய்தல் போன்ற வழிமுறைகள் பயனுள்ளதென உறுதி செய்யப்படக்கூடிய அதேவேளை மேற்பரப்பிற்கு மேலதிகமாக விசேடமாக ஆற்றின் நடுப்பகுதியை நோக்கி நீர்த்தேக்கங்களைக் கட்டுவதன் மூலம் ஆற்றுப்படுக்கைகளின் சிறந்த முகாமைத்துவத்திற்கான முன்னுரிமை விரிவுபடுத்தப்பட வேண்டும். மேலும், கூரை மீதான மழைநீர் அறுவடை தாங்கிகளின் வழிகளில் நீர் பற்றாக்குறையாகவுள்ள வரண்ட பிரதேசங்களில் மாத்திரமன்றி நகர்ப் பிரதேசங்களிலும் மழைநீர் அறுவடைக்கான தொழில்நுட்பங்கள் ஊக்குவிக்கப்பட முடியும். இத்தகைய முறைகள், போதுமானளவில் பின்பற்றப்பட்டால், குடிநீரல்லாத நோக்கங்களுக்காக சுத்திகரிக்கப்பட்ட நீர்ப்பாவனை கணிசமானளவு குறைக்கப்பட்டு அதன் மூலம் சுத்தமான குடிநீருக்காக மக்கள் வேண்டிநிற்கின்ற பிரதேசங்களுக்கு மேலதிக நீரினைத் திருப்புவதற்கு அனுமதிக்கின்றது. சுத்தமான குடிநீருக்காக மக்கள் வேண்டிநிற்கின்ற பிரதேசங்களுக்கு மேலதிக நீரினைத் திருப்புவதற்கு அனுமதிக்கின்றது.

**காலநிலை மாற்றத்தினால் இடர்நேர்வுகளுக்கு இலங்கையின் பாதிப்படையக்கூடிய தன்மை விரைவாக உயர்வடைவது போல் காணப்படுவது அரசாங்க வரவு செலவுத்திட்டத்தின் மீது கணிசமான சுமைக்குக் காரணமாகிறது.** இயற்கை அனர்த்தங்களின் அதிகரித்த நிகழ்வுகள் மீள்கட்டுமானம் மற்றும் புனர்வாழ்வு போன்றவற்றின் மீது அரசாங்கத்தின் நேரடியான நிதியியல் சுமைக்குக் காரணமாகின்ற வேளையில் வறுமை மட்டங்களை மோசமடையச் செய்தல் உள்ளடங்கலாக எண்ணற்ற சமூகப் பொருளாதார பிரச்சனைகளையும் உருவாக்கி மேலதிக இறைத் தலையீட்டினைத் தேவைப்படுத்துகின்றன. ஆகவே, காலநிலை மாற்றங்களின் இடர்நேர்வுகளுடன் தொடர்புபட்ட இத்தகைய விளைவுகள் சுற்றுச்சூழல் வரிச் சீர்திருத்தம் போன்ற சீர்திருத்தங்களை அறிமுகம் செய்வதன் மூலம் தீர்க்கப்பட வேண்டியதுடன் இவை மாசடைதலைக் குறைத்தல், பொதுமக்கள் சமூக நலனோம்புகையை உயர்த்துதல் அதேவேளை நேர்க்கணிய வெளிவாரி விளைவுகளை உருவாக்குதல் போன்ற மும்மடங்கு அநுகூலங்களை விளைவிக்கக்கூடும். இதேவேளை, நிதியியல் நிறுவனங்கள் சுற்றுச்சூழலுக்கு சிநேகபூர்வமான நீடித்துநிலைத்திருக்கும் வியாபார மாதிரியுருக்களுக்கு ஆதரவளிக்கின்ற பசுமை நிதியிடல் முயற்சிகளைத் தொடருகின்ற அதேவேளை நிதியியல் தோற்றத்திலிருந்து காலநிலை இடர்நேர்வுகளிலிருந்து பாதுகாப்பதற்கான கருவிகளை வியாபாரங்களுக்கும் தனிநபர்களுக்கும் வழங்குவதில் தீவிர கவனம் செலுத்த வேண்டும்.

**அடிக்கடி நிகழும் வழங்கல்பக்க இடையூறுகளின் காரணத்திலான விலை அழுத்தங்கள் தாழ்ந்ததும் உறுதியானதுமான பணவீக்கத்தைப் பேணுகின்ற மத்திய வங்கியின் முயற்சிகளைத் தடைப்படுத்தலாம்.** மத்திய வங்கியின் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடலினை அடிப்படையாகக் கொண்ட கட்டமைப்பு பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கின்ற அதேவேளை நடுத்தர காலத்தில் நடு ஒற்றை இலக்க மட்டங்களில் பணவீக்கத்தினை நிலைநிறுத்துவதனை இலக்காகக் கொண்டுள்ளது. பணவீக்க எதிர்பார்க்கைகளை உறுதிநிலைப்படுத்துவதற்கும் கேள்வி நிலைப்பாடுகளை முகாமை செய்வதற்குமான மத்திய வங்கியின் முயற்சிகள் நீடித்த ஒரு தசாப்தத்திற்கு மேலான காலப்பகுதியில் பணவீக்கத்தை ஒற்றை இலக்க மட்டங்களில் உறுதிப்படுத்துவதில் துணைபுரிந்துள்ள போதிலும் உள்நாட்டு வழங்கல்பக்க அதிர்வுகளின் தாக்கத்தினைப் பிரதிபலித்து முதன்மைப் பணவீக்கம் குறித்த காலப்பகுதிகளில் அதிகரித்த தளம்பலினை வெளிக்காட்டியது. பல தோற்றம் பெற்றுவரும் சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களிலுள்ளதனைப் போல இலங்கையின் நுகர்வுக்கூடை பாரிய பங்கினை உணவு மற்றும் குடிபானங்களில் கொண்டுள்ளது. அதன் விளைவாக உணவுப் பணவீக்கத்தின் தளம்பல்கள் முதன்மைப் பணவீக்கத்தின் அதிகளவான தளம்பலுக்குக் காரணமாக முடியும். பொதுவாக, வானிலையுடன் தொடர்புபட்ட மற்றும் ஏனைய இடையூறுகளினால் உந்தப்பட்ட நிரம்பல்பக்க அழுத்தங்களும் உலகளாவிய பண்ட மற்றும் உணவு விலைகளின் பாரிய ஊசலாட்டம் இலங்கையின் உணவுப் பணவீக்கத்தின் தளம்பலுக்குப் பங்களிப்புச் செய்கின்றன. உணவுப் பணவீக்கத்தினைச் சமாளிப்பதற்கான கருவிகளை மத்திய வங்கிகள் கொண்டிருக்காததுடன் நாணயக் கொள்கையினைப் பயன்படுத்தி உணவுப் பணவீக்கத்தின்

தற்காலிகத் தளம்பல்களை இல்லாதொழிப்பதற்கு முயற்சிப்பது பொருளாதாரத்தின் மீது பாதகமான விளைவுளைக் கொண்டிருக்கும். எனினும், அடிக்கடி நிகழும் உயர்ந்த உணவுப் பணவீக்கம், பணவீக்கத்தின் மீது இரண்டாம் கட்டத் தாக்கத்திற்கும் பணவீக்க எதிர்பார்க்கைகளின் உயர்விற்கும் வழிகோலக்கூடும். ஆகவே, பொருளாதாரமொன்றின் உணவுப் பணவீக்கத்தினை உறுதிப்படுத்துவதில் துணைபுரிவதற்கு இறைக் கொள்கையின் ஆதரவு தேவைப்படுத்தப்படுகின்றது. வரிகள் மற்றும் தீர்வைகள், விலை உச்சவரம்புகள் போன்றவற்றினூடான அரசாங்கத்தின் சந்தைகளிலான நேரடித் தலையீடு குறுங்கால நிரம்பல்பக்க கரிசனைகளைத் தீர்ப்பதற்கு துணைபுரிகின்ற அதேவேளையில் களஞ்சியப்படுத்தல், போக்குவரத்து, போன்றவற்றை உயர்த்துதல் மற்றும் சேதங்களைக் குறைத்தல் போன்றவற்றினூடாகச் செயற்றிறனை மேம்படுத்துவதற்கான கொள்கைச் சீர்திருத்தங்கள் நிரம்பல்பக்க இடையூறுகளின் தாக்கங்களை நீடித்துநிலைத்திருக்கும் வகையில் குறைப்பதற்கான நீண்ட காலத் தீர்வுகளுக்கு அனுமதிக்கின்றன. நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலத்தில் அதிர்வுகளுக்குத் தாக்குப்பிடிக்கும் தன்மையை அதிகரிப்பதற்காக புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதனை இறைக் கொள்கை ஊக்குவிக்க முடியும். உள்ளீடுகள் மற்றும் வளங்களைப் பகிர்ந்தளிப்பதன் செயற்றிறனை உயர்த்துகின்ற அதேவேளையில் காலநிலைக்குத் தாக்குப்பிடிக்கும் பயிர்களின் அறிமுகம், உணவு வழங்கல்களின் சேதங்களைக் குறைப்பதற்குத் துணைபுரியும். புதிய களஞ்சியப்படுத்தல் மற்றும் உணவு பதப்படுத்தல் முறைகளின் அறிமுகம், உணவு விலைத் தளம்பல்களைக் கட்டுப்படுத்துவதற்கு தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட விலை வெளிப்படுத்துகைகள் மற்றும் பயிர்ச்செய்கை தகவல் பரப்புதல் போன்றவற்றை இது அடிக்கடி உள்ளடக்குகின்றது.

**நாணயக் கொள்கை ஊடுகடத்தல் செய்முறையிலுள்ள தேவையற்ற தாமதங்கள் உண்மைப் பொருளாதாரத்திற்கு நாணயக் கொள்கை வழிமுறைகளை ஊடுகடத்துவதிலுள்ள செயற்றிறனைப் பாதிக்கின்றது.** நாணயக் கொள்கை நடவடிக்கைகள் வட்டி வீதம், கொடுகடன் அளவு, செலாவணி வீதம், சொத்து விலைகள் போன்ற வழிப்படுத்தல்களினூடாக ஒரு காலதாமதத்துடன் பொருளாதாரத்திற்கு ஊடுகடத்தப்படுகின்றன. மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்கள் குறுங்காலச் சந்தை வட்டி வீதங்களினூடாக நடுத்தர மற்றும் நீண்ட காலச் சந்தை வட்டி வீதங்களுக்கு ஊடுகடத்தப்படுகின்ற வட்டி வீத வழிப்படுத்தல் இலங்கையில் பிரதானமான நாணயக் கொள்கை ஊடுகடத்தல் வழிப்படுத்தலாக இருக்கின்றது. எனினும், நிதியியல் நிறுவனங்களின் ஐந்தொகையின் பொறுப்புப் பக்கத்தின் இறுக்கமான தன்மை, நிதியியல் துறையில் காணப்படும் ஆரோக்கியமற்ற போட்டி, கொடுகடன் தரம் தேய்வடைந்தமை, நிதியியல் துறையின் உயர்ந்த வரிகள் மற்றும் முறைசாராத் துறையின் ஒப்பீட்டளவில் உயர்ந்த பங்கு போன்ற பல்வேறு பிரச்சனைகளின் காரணமாக தேவையற்ற ஊடுகடத்தல் தாமதங்கள் ஊடுகடத்தல் பொறிமுறையின் குறைபாடுகளைப் பிரதிபலிக்கின்றன. வைப்புக்களின் பாரியளவு பகுதி நிலையான வட்டி வீதங்களில் விலையிடப்படுகின்ற பொழுது நிதியியல் நிறுவனங்களின் ஐந்தொகையின் பொறுப்புப்பக்கத்தின் இறுக்கமானதன்மை ஊடுகடத்தல் செய்முறையில் தாமதங்களை உருவாக்குகின்ற வேளையில் வைப்புக்களைத் திரட்டிக் கொள்வதில் நிதியியல் நிறுவனங்களுக்கிடையிலான ஆரோக்கியமற்ற பிரயோகங்கள் நாணயக் கொள்கை நடவடிக்கைகளின் ஊடுகடத்தலை மேலும் தாமதப்படுத்தக்கூடும். மேலும், கொடுகடனின் தரம் தேய்வடைவது ஒப்பீட்டளவில் உயர்ந்த மட்டத்திலுள்ள செயற்படாக் கடன்களைக் குறிப்பதுடன் அதிகரித்த ஒதுக்கிடல், நிதியியல் துறை கடனாகக் கொடுக்கக்கூடிய நிதிகளின் உயர்வடைந்து செல்லும் செலவுகளுக்கு இட்டுச்செல்லக் கூடுமென்பதுடன் இது நாணயக் கொள்கை வழிமுறைகளுக்கு எதிர்விளைவாகவிருக்கும். நிதியியல் இடையீட்டாளர்கள் மீதான ஒப்பீட்டளவில் உயர்ந்த வரிகள் ஒரு முக்கிய கரிசனையாக தொடர்ந்துமிருந்து நிதியியல் நிறுவனங்களின் வட்டி இடைவெளி மற்றும் நிதிக்கான செலவு போன்றவற்றைப் பாதித்து நிதியியல் துறையின் செயலாற்றத்தினைப் பாதிக்கின்றது. நிதியியல் துறை மீதான வரிகளைத் தளர்த்துவதற்கு அரசாங்கம் அண்மையில் அறிமுகப்படுத்திய வழிமுறைகள் இத்தகைய கரிசனைகளைப் பெருமளவில் தீர்ப்பதற்குத் துணைபுரிந்துள்ளன. இதேவேளையில், முறைசாரா நிதியியல் துறையின் ஒப்பீட்டளவில் உயர்ந்த பங்கு நாணயக் கொள்கையின் செயற்றிறனையும் பொருளாதாரத்திற்கு அதன் ஊடுகடத்தலையும் பலயீனமடையச் செய்யக்கூடும். மேலதிகமாக, அரசாங்கத்தின் நிதியியல் தேவைப்பாடுகள் பெருமளவில் வங்கித்தொழில் துறையினூடாகப் பூர்த்திசெய்யப்படுவதும் அரச பிணையங்களில் அதிகம் முதலிடுவதற்கான வங்கிகளின் விருப்பத்தேர்வும் நாணயக் கொள்கை வழிமுறைகளின் ஊடுகடத்தலின் செயற்றிறனைப் பாதிக்கக்கூடும். இத்தகைய அமைப்பியல் பிரச்சனைகளுக்கு மேலதிகமாக கொடுகடனுக்கான கேள்வியை மோசமடையச் செய்த மந்தமான பொருளாதாரச் செயற்பாடும் நாணயக் கொள்கை வழிமுறைகளின் ஊடுகடத்தலின் அளவினை வரையறுக்கக்கூடும். நாணயக் கொள்கை ஊடுகடத்தல் பொறிமுறையின் இத்தகைய குறைபாடுகள் குறிப்பாக, தொடர்ச்சியான மந்தமான மட்டங்களிலிருந்து பொருளாதாரத்தினை மீட்டெடுப்பதற்கு மத்திய வங்கி முனைகின்ற வேளையில் இழப்புமிக்கதாக இருக்கக்கூடும்.

**இலங்கை ஒரு தாழ்ந்த வட்டி வீதச் சூழலுக்கு நிலைமாறுவதனால் சேமிப்பாளர்களின், குறிப்பாக மூத்த பிரசைகளின், வாழ்க்கைத் தரங்களை உறுதிப்படுத்துவதற்கு நியாயமான வருவாயுடன் கூடிய புதிய நிதியியல் கருவிகளின்**

**அறிமுகம் அவசியமானது.** நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த இலக்கிடல் கட்டமைப்பிற்குள் உறுதியான அடிப்படையில் பணவீக்கமானது நடு ஒற்றை இலக்க மட்டங்களில் பேணப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுவது நேர்க்கணிய உண்மை வருவாய்கள் பாதுகாக்கப்படுமெனினும் எதிர்வரும் காலங்களில் சேமிப்புக்கள் மீதான தாழ்ந்த விளைவு வீதங்களைக் குறித்து நிற்கின்றது. இந்த அபிவிருத்திகள் ஆண்டுத் தொகை மற்றும் ஓய்வூதியக் கருவிகள் மற்றும் சாதாரணமான வைப்புக்களை ஏனைய நிதியியல் கருவிகளுடன் பிணைத்தல், உதாரணமாக மருத்துவக் காப்பறுதி, போன்ற புதிய நிதியியல் கருவிகளை அறிமுகப்படுத்தி அதன் மூலம் நியாயமான வருவாய்களைப் பெற்றுக்கொள்வதற்கான தேவையை கோடிட்டுக் காட்டுகின்றது. மேலும், நாட்டில் விரைவாக வயதடையும் சனத்தொகையுள்ள சூழலில் நாடுபூராவுக்கான பங்களிப்புச் செய்யும் ஓய்வூதியத் திட்டத்தினை நிறுவுகின்ற அதேவேளையில் வங்கி வைப்புக்கள் போன்ற வட்டி உழைக்கும் கருவிகளுடன் ஒப்பிடுமிடத்து உயர்ந்த வருவாய்களைப் பொதுவான விளைவிக்கின்ற பரஸ்பர நிதியங்கள் மற்றும் நம்பிக்கைக் கூறுகள் போன்ற மாற்றீட்டு நிதியியல் கருவிகளின் நன்மைகள் பற்றிய பொதுமக்களின் விழிப்பணர்வினை அதிகரிப்பது இன்றியமையாதது. அதேநேரம், அசாதாரணமான உயர்ந்த வருவாய்களை வழங்குவதாகக் கோருகின்ற அங்கீகரிக்கப்படாத நிறுவனங்கள் அல்லது நிதியியல் கருவிகள் இத்தகைய முதலீடுகள் பொதுமக்களினால் கடினமாக சம்பாதித்த சேமிப்புக்களின் படிப்படியான இழப்பிற்கு இட்டுச்செல்லுமென்பதனால் அவற்றைத் தவிர்ப்பதன் மீது பொதுமக்கள் அவதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

**தாக்குப்பிடிக்கும் தன்மையையும் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்கு நிதியியல் முறைமையின் திறனை உயர்த்துவதற்கும் நிதியியல் துறையின் திரட்சிப்படுத்தலை ஊக்குவிப்பதற்கான முன்மதியுடையதும் நேரகாலத்துடனுமான வழிமுறைகள் தேவைப்படுத்தப்படுகின்றன. பொருளாதாரமும் நிதியியல் துறையும் ஒன்றிலொன்று தங்கியிருப்பதனால் பொருளாதாரத்தின் தொடர்ச்சியான சராசரிக்கும் குறைவாக வளர்ச்சி நிதியியல் முறைமையில் கடுமையான தாக்கத்தினைக் கொண்டிருந்தது. கொடுகடன் வளர்ச்சியின் தாழ்ந்த மட்டங்கள், நிதியியல் இடையீட்டாளர்களின் இலாபத்தன்மையிலான இறுக்கமாக்கல், சொத்துப்பட்டியலில் இடர்நேர்வற்ற அரச பிணையங்களின் பங்கினை உயர்த்துவதற்கான வங்கிகளின் அதிகரித்த விருப்பத்தேர்வு மற்றும் செயற்படாக் கடன்களிலானதொரு உயர்வு போன்றவை நிதியியல் துறையின் உயர்வடைந்துவரும் அழுத்த மட்டங்களுக்கு வழிநடத்தக்கூடும்.** கொடுகடன் தரத்தின் குறிப்பிடத்தக்க தேய்வடைதலுடன், 2017இலிருந்து, குறிப்பாக 2019 காலப்பகுதியில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையில், செயற்படாக் கடன்கள் உயர்வடைந்து வருகின்றன. இத்தகைய அபிவிருத்திகளை உரிய கவனத்தில் கொண்டு கடன் வழங்கும் நிறுவனங்கள் கண்டிப்பான கொடுகடன் பரிசோதனை நிலைப்பாடுகளைச் சுமத்துவது சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகள் போன்ற இடர்நேர்வு கொண்ட கடன்பெறுநர் பிரிவுகளுக்கு கொடுகடன் பாய்ச்சலைத் தடைப்படுத்தக்கூடும். மறுபுறத்தில், ஒட்டுமொத்த உற்பத்தி வலையமைப்புக்கள் மற்றும் பொருளாதாரத்தின் உற்பத்தி இயலளவு போன்றவற்றிற்கு இவர்களின் பங்களிப்பினை கருத்திற் கொள்ளும் போது இத்தகைய கடன்பெறுநர்களுக்கு கொடுகடன் வழங்குவது மிகவும் இன்றியமையாதது. உயர்ந்த மற்றும் நீடித்துநிலைத்திருக்கும் வளர்ச்சிப்பாதைக்கு பொருளாதாரத்தின் நிலைமாற்றத்திற்கு வசதியளிப்பதற்கு உறுதியான, தாக்குப்பிடிக்கக்கூடிய மற்றும் மாறுகின்ற தன்மையுடைய நிதியியல் துறைக்கான தேவையை இது கோடிட்டுக்காட்டுகின்றது. இந்த நோக்கத்திற்காக, நிதியியல் முறைமை போதுமானளவு ஆழம், மூலதனக் தாங்கிருப்புக்கள், கொடுகடன் விரிவாக்கத்தின் காத்திரமான மட்டம் மற்றும் இடர்நேர்வுத் தணிப்பு இயலளவு போன்றவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும். நிதியியல் துறையின் தற்போதைய துண்டாக்கப்பட்ட தன்மை முறைமையை வெளிவாரி அதிர்வுகளுக்கு பாதிப்படையக் கூடியதாகவும் உற்பத்தித்திறன் வாய்ந்த துறைகளுக்குச் செலவு குறைந்த நிதியியல் பணிகளை வழங்குவதனை தடுப்பதாகவுமிருக்கிறது. பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளுக்கும் பணியாற்றுகின்றதும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அதிர்வுகளுக்கு தாக்குப்பிடிக்கும் தன்மையை வெளிப்படுத்தக்கூடியதாக ஒப்பீட்டளவில் சிறிய நிதியியல் நிறுவனங்களை இணைத்து உறுதியானதும் மாறுகின்ற தன்மை கொண்டதுமான நிறுவனங்களை உள்ளடக்கியதொரு துறையினை உருவாக்குவதற்கு நிதியியல் துறையின் திரட்சிப்படுத்தலினூடாக இது தீர்க்கப்பட வேண்டும். அளவுச் சிக்கனம், நோக்கங்களிலான சிக்கனம் மற்றும் வளங்களின் மேம்படுத்தப்பட்ட பகிர்ந்தளிப்பு போன்றவற்றிலிருந்து எழும் செலவுச் சிக்கனத்திற்கு இணைப்புக்களும் கையேற்புக்களும் வழிநடத்துமென்பதனை நிதியியல் துறை திரட்சிப்படுத்தலின் உலகளாவிய அனுபவங்கள் கோடிட்டுக்காட்டுகின்றன. இத்தகைய ஆற்றல் வாய்ந்ததும் மாறுகின்ற தன்மை கொண்டதுமான நிதியியல் நிறுவனங்கள் பிராந்தியத்தின் நிதியியல் மையமொன்றாக தோற்றம் பெறுவதிலிருந்து எழுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற சந்தர்ப்பங்களை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு முக்கியமானவையாகும். ஏனைய நன்மைகளுக்கிடையில், உலகத்தரம் வாய்ந்த நிறுவனங்களின் பிரசன்னம் இலகுவாக பன்னாட்டு மூலதனச் சந்தையை அணுகுவதற்கு வழியமைக்கக்கூடுமென்பதுடன் நிதியியல் புத்துருவாக்கத்திற்குத் தேவையான திறன்கள் மற்றும் மூலதனத்தின் உருவாக்கத்தினை வளர்த்தெடுப்பதற்கு துணைபுரியக்கூடிய ஏனைய தகவல்களின் பாய்ச்சல்களின் உருவாக்கத்தினை இயலச்செய்கின்ற வேளையில் பரந்த பொருளாதாரத்தில் நேர்க்கணியக் கசிவுத்தாக்கங்களுக்கு இட்டுச்செல்லும்.

'புதிய கொழும்பின்' அபிவிருத்தியுடன் உலகளாவிய நிதியியல் மையமொன்றாக வருவதற்கு இலங்கை **ஆசைப்படுவதனால் நிதியியல் துறையின் செயற்றிறன் மற்றும் ஆழத்தினை மேம்படுத்துவது இன்றியமையாததாகின்றது.** கடந்த தசாப்தத்தில் இலங்கையினுள் நிதியியல் நிறுவனங்களின் விரிவாக்கம் மற்றும் அடர்த்தி குறிப்பிடத்தக்களவில் அதிகரித்த வேளையில் சொத்துக்களின் பருமனின் நியதிகளில் இலங்கையின் நிதியியல் முறைமையில் ஒரு குறிப்பிடத்தக்களவிலான விரிவாக்கம் அவதானிக்கப்பட்டு நிதியியல் உள்ளடக்கத்தின் படிப்படியான அதிகரிப்பிற்கு வழிநடத்துகின்றது. மேலும், நிதியியல் பணிகளை வழங்குவதில் புதிய தொழில்நுட்பங்களின் அதிகரித்த பாவனை பாராட்டிற்குரியது. இத்தகைய அபிவிருத்திகளுக்குப் புறம்பாக, பன்னாட்டு நிதியியல் மையமொன்றின் சூழலில் அதிநவீனத்துவம் வாய்ந்த நிதியியல் பணி வழங்குநரொன்றாக தன்னை நிலைமாற்றிக் கொள்வதில் இலங்கை சவால்களை அனுபவிக்கக்கூடும். தற்போதுள்ள நிதியியல் கருவிகளின் வகைகள் போதாமை மற்றும் புதிய நிதியியல் கருவிகள் மற்றும் பணிகளின் மெதுவான அறிமுகம் போன்றவை உள்நாட்டு நிதியியல் சந்தையின் ஆழப்படுத்தலினை தடைசெய்யக்கூடும். மேலும், இலங்கையின் மூலதனச் சந்தை பாரம்பரியக் கருவிகளான பங்குகள் மற்றும் முறிகளுக்கு மேலாக பெறுதிகள் மற்றும் பண்டக் கருவிகள் போன்ற கருவிகளை இன்னமும் முயல வேண்டியுள்ளது. மேலும், செலவு குறைந்த நிதிகளுக்கான கிடைப்பனவு போதாமை ஒட்டுமொத்த கடன்பாடுகளுக்கு முட்டுக்கட்டையாகவிருந்து நிதியியல் நிறுவனங்களின் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையைப் பாதிக்கின்றது. மேலதிகமாக, தொழில்நுட்பம்சார் நிதியியல் கருவிகள் தொடர்பான அறிவு இலங்கையில் சராசரியை விடக் குறைவாகவுள்ளது. மேலும், பாரியளவிலான உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்கள் மற்றும் அரச தனியார் பங்குடமைகளின் நிதியியல் தேவைகளைப் பூர்த்திசெய்யும் இயலளவு இலங்கையிலுள்ள நிறுவனங்களுக்கு போதுமானதாகவிருக்கவில்லை. பின்டெக் கம்பனிகளுடன் ஒத்துழைத்து அவர்களது வாடிக்கையாளர்களுக்கு கல்வி மற்றும் ஓய்வூதியத் திட்டங்கள் போன்ற முதலீடு மற்றும் நிச்சயம் சார்ந்த நிதியியல் தீர்வுகள் மற்றும் பெறுதிகள் அத்துடன் மெய்நிகர் பணப்பை போன்ற தொழில்நுட்பம்சார் கருவிகள் போன்ற கருவிகளை வழங்குதல் போன்றவை நிதியியல் நிறுவனங்களுக்கான முன்னோக்காக இருக்கக்கூடும். பொருத்தமான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களினூடாக புதிய நிதியியல் தீர்வுகளின் நன்மைகள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட இடர்நேர்வுகள் வெளிக்காட்டப்படும் போது இவற்றை பொதுமக்கள் விரைவாக அரவணைத்துக் கொள்ளும் வாய்ப்புள்ளது. பின்டெக் ஒழுங்குமுறைப்படுத்தல் பரிசோதனைக் கட்டமைப்பு மற்றும் இலங்கைக்கு திறந்த வங்கித்தொழில் கட்டமைப்பொன்றினை அறிமுகம் செய்வதற்கான சாத்தியத்தினை மதிப்பீடு செய்வது போன்ற இலங்கை மத்திய வங்கியின் முயற்சிகள் உள்நாட்டு நிதியியல் துறையின் முன்னேற்றத்திற்கு ஆதரவளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதேவேளையில், பங்குப் பெறுதிகள் மற்றும் இல்லாத பங்குகளை விற்றல் போன்றவற்றை ஊக்குவிப்பதன் மூலம் பங்குச் சந்தைச் செயற்பாடு ஊக்குவிக்கப்பட முடியும். மேலும், பேரேட்டு தொழில்நுட்பத்தின் பயன்பாடு பாதுகாப்பான, விரைவான மற்றும் செலவுச் சிக்கனம் வாய்ந்த மறைகுறியாக்கப்பட்ட திறன் ஒப்பந்தங்களை உருவாக்குவதன் மூலம் மூலதனச் சந்தைகளை மேலும் செயற்றிறன்மிக்கதாக்கும். நிதியியல் துறை ஒழுங்குமுறைப்படுத்துநர் மற்றும் அரசாங்கத்தின் ஆதரவு வலுவான அரசியல் மற்றும் வியாபாரச் சூழலுடன் இணைந்து மிகவும் தேடப்படுகின்ற பன்னாட்டு நிதியியல் மையமொன்றாக இலங்கையை மாற்றுவதற்கான மேடையை அமைத்துக் கொடுக்கமுடியும்.

**மக்கள் மற்றும் பொருட்களின் நகர்வுகளினூடாக இலங்கை அதிகளவில் உலகின் ஏனைய பாகத்துடன் அதிகமானளவு இணைக்கப்பட்டதாக மாறிவருவதனால் கொவிட்-19 உலகளாவிய நோய்த் தொற்றுப்பரவலின் விரைவான தொற்றினால் தெளிவாகக் காட்டப்பட்டதனைப் போன்று கண்காணிப்பு மற்றும் தனிமைப்படுத்தலுக்கான ஒத்திசைவான கொள்கைக் கட்டமைப்பினை நடைமுறைப்படுத்துவது இன்றியமையாதது.** உலகளவில் விரிவடைந்துவரும் பயணம் மற்றும் வர்த்தகத்துடன் மக்கள், விலங்குகள் மற்றும் தாவரங்களைப் பாதிக்கக்கூடிய நோய்களின் எல்லையைக் கடந்த பரிமாற்றத்தினால் இலங்கை பாதுகாப்பற்ற நிலையிலுள்ளமை நாட்டின் சுற்றுச்சூழல் அமைப்பின் நலன் மற்றும் பாதுகாப்பினை அச்சுறுத்தலுக்குள்ளாக்குகின்றது. தொற்றுகின்ற நோய்களினைக் கட்டுப்படுத்தும் நியதிகளில் இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைக் மேற்கொண்டுள்ள போதிலும் மக்களின் அதிகரித்த உலகளவிலான நகர்வு கட்டுப்படுத்தப்பட்ட தொற்றுகின்ற நோய்கள் மீளநிகழ்வதற்கான சாத்தியத்தினை உயர்த்தியுள்ளது. இதேவேளை, கொவிட்-19, சார்ஸ், மேர்ஸ், இபோலா, பறவைக்காய்ச்சல் மற்றும் பன்றிக்காய்ச்சல் போன்றவற்றின் நோய்த் தொற்றுப்பரவல்கள், கண்காணிப்பு மற்றும் தனிமைப்படுத்தல் உள்ளடங்கலாக நலன் மற்றும் பாதுகாப்புப் பிரயோகங்களை வலுப்படுத்துவதற்கான வலுவான கொள்கைக் கட்டமைப்புக்களின் தேவையை வெளிக்காட்டுகின்றன. மேலும், எதிர்காலத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகையின் எதிர்பார்க்கப்பட்ட அதிகரிப்பினைக் கருத்திற் கொண்டு நாட்டின் நுழைவிடங்களில் நோய்க் கண்காணிப்பிற்கான பௌதீக மற்றும் மனிதவளங்களின் பயன்பாடு மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும். மேலும், ஏனைய நாடுகளிலிருந்து தாவரப்பொருட்களின் இறக்குமதியினூடாக அண்மைய ஆண்டுகளில் எல்லை கடந்த தாவரப்பீடை மற்றும் நோய்கள் கணிசமானளவு அதிகரித்துள்ளது. படைப்புழு மற்றும் பழஈ போன்ற மிகவும் இடையூறு விளைவிக்கும்

குடிபெயர்ந்த பீடைகள், தானியப் பயிர்ச்செய்கையின் கணிசமான நட்டங்களுக்குக் காரணமாகி பொருளாதார ரீதியில் பாதிப்படையக் கூடியதாகவுள்ள வேளாண்மையாளர்களின் வாழ்வாதாரத்தையும் நாட்டின் உணவு மற்றும் ஊட்டப் பாதுகாப்பினையும் ஆபத்திற்குள்ளாக்கும். கப்பல்கள் மற்றும் சரக்குக் கப்பல் அத்துடன் களஞ்சியசாலைகளில் தீர்வுகளுமே அனுமதி வழங்குவதில் போதுமானதற்ற தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிகள் பீடை மற்றும் நோய்த் தொற்றுப்பரவல்களின் நிகழ்வுகளை அதிகரிக்கக்கூடும். இதற்கு மேலதிகமாக, போவின் வைரஸ் வயிற்றுப் போக்கு போன்ற பாரிய நோய்கள் கால்நடை வர்த்தகத்தினூடாக, விசேடமாக வினைத்திறன் உயர்த்தல் மற்றும் இனப்பெருக்க நோக்கங்களுக்காக மிருகங்களின் இருப்புக்களை இறக்குமதி செய்வதனூடாக, பரிமாற்றப்படுவது உள்நாட்டு இனங்களை ஆபத்துக்குள்ளாக்கும். இத்தகைய நோய்கள் நடுத்தர மற்றும் சிறியளவிலான வேளாண்மையாளர்களின் முழுமையான கால்நடை உற்பத்தியினையும் ஆபத்திற்குள்ளாக்கும் சாத்தியமுள்ளது. நாட்டின் சுற்றுச்சூழலுக்கான இத்தகைய சாத்தியமான நலன் மற்றும் பாதுகாப்பு இடர்நேர்வுகள் ஒட்டுமொத்த முறைமையை நலப் பிரச்சனைகளிலிருந்து பாதுகாக்கின்ற அதேவேளையில் நோய்களின் நுழைவு, தாமதம் மற்றும் தொற்று போன்றவற்றைத் தடுப்பதற்கு தனிமைப்படுத்தல் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பை வலுப்படுத்த வேண்டிய தேவையினைப் பிரதிபலிக்கின்றன. காவிகளின் எல்லையைக் கடந்த பரிமாற்றத்தினைத் தடுப்பதற்கு தனிமைப்படுத்தல் கொள்கைகள், ஒழுங்குவிதிகளின் பன்னாட்டு நியமங்களுக்கமைவாக இருக்க வேண்டும். அண்மைய ஆண்டுகளில் அவதானிக்கப்பட்டதனைப் போன்று ஏற்றுமதி செய்யப்பட்ட பண்டங்களில் பீடைகள் மற்றும் நோய்க்குக் காரணமாக்கும் உயிரினங்களின் பிரசன்னம் இறக்குமதி செய்யும் நாட்டினால் ஒட்டுமொத்த சரக்கும் அத்துடன் இலங்கை ஏற்றுமதிகளின் ஏதாவது மேலதிக ஏற்றுமதிகளும் நிராகரிக்கப்படக் கூடியளவிற்கு இட்டுச்செல்லக் கூடுமென்பதனால் வேளாண்மை உற்பத்திகளின் ஏற்றுமதியாளர்களும் பொருட்களில் இத்தகைய உயிரினங்கள் இல்லாதிருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு உலகளவிலான சிறந்த பிரயோகங்களைப் பின்பற்ற வேண்டும்.

**கொவிட்-19 உலகளாவிய நோய்த் தொற்றுப்பரவல் மற்றும் ஏனைய நெருக்கடிகள் பரவல் போன்ற ஆபத்துக்களிலிருந்து எழுகின்ற சமூகப் பொருளாதாரத் தாக்கங்களை சமாளிப்பதற்கு அனர்த்த முகாமைத்துவத் திட்டங்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவற்றை வலுப்படுத்துவதற்கான முக்கியத்துவம் கோடிட்டுக் காட்டுகின்றது.** வெள்ளங்கள், நிலச்சரிவுகள் மற்றும் பரவலான நோய்த் தொற்றல்கள் வீட்டுடமையாளர் மீது நேரடித் தாக்கத்தைக் கொண்டுள்ள வேளையில் இறைச் செலவுகள் மற்றும் எண்ணற்ற சமூகப் பொருளாதாரச் செலவுகள் உள்ளடங்கலாக பரந்த பொருளாதாரத்தின் மீது நேரடியற்ற செலவுகளைக் கொண்டிருக்கும். ஆகவே, மூத்தோர், அங்கவீனர்கள், பெண்கள் மற்றும் சிறுவர்கள் போன்ற வறிய மற்றும் பாதிப்படையக்கூடிய குழுக்களில் சமமற்றளவில் உயர்ந்த தாக்கத்தைக் கொண்டுள்ள இத்தகைய பாதிப்புக்களை தீர்த்துக கொள்வதற்கு நாட்டின் அனர்த்த முகாமைத்துவத் திட்டம் வலுப்படுத்தப்பட வேண்டிய தேவையுள்ளது. கொவிட்-19 நோய்த் தொற்றுப்பரவல் மற்றும் பௌதீக விலகல் வழிமுறைகள் போன்றவை அனர்த்தமொன்றின் தீவிர நிலையாக இருக்கக்கூடுமெனினும் அனர்த்த முகாமைத்துவத் திட்டம் அத்தகைய தீவிரமான சூழ்நிலையையும் கவனத்தில் எடுக்க வேண்டியது அவசியம். இத்தகைய நெருக்கடிகளினால் வறியோரும் பாதிப்படையக்கூடிய குழுக்களும் நீண்ட மீட்சிக் காலத்தினை அனுபவிப்பதனால் சனத்தொகையிடையே வறுமை மட்டங்களின் கூர்மையான அதிகரிப்புக்களைத் தூண்டுகின்ற வேளையில் உற்பத்தி மற்றும் நுகர்வின் இடையூறுகளினால் பொருளாதாரச் செயற்பாடு பாதிக்கப்படுகின்றது. தற்போதைய சூழ்நிலையில், முடக்குதல் அல்லது வழங்கல் சங்கிலியின் இடையூறுகளினால் தாழ்ந்த வருமானமுடைய, நாளாந்த கூலி உழைப்பாளர்கள், விசேடமாக முறைசாராத் துறை வேலையாட்களின் வருமானம் உழைக்கும் சந்தர்ப்பங்கள் மட்டுப்படுத்தப்பட்டமையினால் உயர்ந்த பாதிப்படையக்கூடிய தன்மையைக் காட்டியுள்ளனர். மேலும், சந்தைக்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகுவழி, போக்குவரத்து மற்றும் வசதிகளின் ஏற்பாட்டு முறைமைகளிலான தடங்கல்கள் மற்றும் தொழிலாளர் பற்றாக்குறை போன்றவற்றின் காரணமாக வேளாண்மை மற்றும் மீன்பிடிச் சமூகங்களும் அத்துடன் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளும் கணிசமானளவு பாதிக்கப்பட்டுள்ளன. தாழ்ந்த வருமானமுடைய வீட்டுடமையாளர் பொதுவாக மாற்றீடான வாழ்வாதார சந்தர்ப்பங்களையோ சேமிப்புக்களையோ கொண்டுள்ளாததுடன் சமூகப் பாதுகாப்பிற்கு வரையறுக்கப்பட்ட அணுகுவழியைக் கொண்டிருக்கலாம். இத்தகைய சூழ்நிலைகளில் நேரடியான மற்றும் நேரடியற்ற பொருளாதார அழுத்தங்களிலிருந்து காப்பீடு வழங்குவதற்கும் சுழற்சியான வறுமை மட்டங்களுக்கெதிராகப் போரிடுவதற்கும் சமூகப் பாதுகாப்பினை விரிவுபடுத்துவதில் சில நெகிழ்ச்சித்தன்மை அனர்த்த முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தில் அவசியமானதாக மாறுகின்றது. இந்த நோக்கத்திற்காக, இத்தகைய நிகழத்தக்கவைகளுக்காக அரசாங்கம் தேவைப்படும் இறை இடைவெளியினைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவையுள்ளது.

**கொவிட்-19 உலகளாவிய நோய்த் தொற்றுப்பரவலும் அதனைத் தொடர்ந்த உலகளாவிய பதிலிறுத்தலும் கடந்த காலத்தில் அனுபவித்த நெருக்கடிச் சூழ்நிலைகளில் அவதானிக்கப்பட்டதிலிருந்து கணிசமானளவு வேறுபாடுகளைக் கொண்ட கொள்கைப் பதிலிறுத்தல்களைத் தேவைப்படுத்திய உள்ளார்ந்த பலயீனங்களின் பிரசன்னத்தினை**

**வெளிக்காட்டுகின்றது.** சீனாவில் ஒரு தனிப்பட்ட சம்பவமான நோய்த் தொற்றுப்பரவலிலிருந்து மூன்று மாதங்களுக்கிடையில் உலகளாவிய கொவிட்-19 நோய்த் தொற்றுப்பரவலின் விரைவு கொள்கைப் பதிலிறுத்தல்கள் முன்னெப்பொழுதுமில்லாதவாறு நிரம்பி வழிவதற்கு வழிவகுத்துள்ளது. வைரஸின் விரைவான பரவல் உலக மயமாக்கலின் முக்கிய அடித்தளங்களான குறைக்கப்பட்ட கட்டுப்பாடுகள் மற்றும் அதன் மூலமான வெளிநாட்டு பயணத்தின் இலகுத்தன்மை போன்றவற்றிற்கு சுமத்தப்பட்டிருக்கின்றது. பன்னாட்டுக் கொள்கைப் பதிலிறுத்தலின் மைல்கல்லாக மக்கள் மற்றும் வர்த்தகம் இரண்டினதும் நகர்வில் தடைகளை விதித்தமை காணப்பட்டு அரசினால் முன்னெடுக்கப்பட்ட பொருளாதாரத்தில் அதிகமாக தங்கியிருப்பதற்கு வழிகோலியுள்ளது. மறுபுறத்தில், இலங்கை உட்பட பல நாடுகளில் பொருளாதாரப் பாதுகாப்புப் கவசமாக உள்ளூர் மயமாக்கப்பட்ட உற்பத்தி மற்றும் பாதுகாப்பு வாதம் போன்றவற்றைப் பரிந்துரைப்பதற்கு வழிகோலியுள்ளது. அத்தியாவசியப் பொருட்களை, விசேடமாக தனியாள் பாதுகாப்புக் கருவி மற்றும் செயற்கைச் சுவாசக் கருவிகளை உற்பத்தி செய்வதற்கு விரைவான புத்துருவாக்கம், புதிய தொழில்நுட்பங்களைப் பின்பற்றல் மற்றும் அமைப்பியலைப் புரிந்து மீள்தயாரித்தல் போன்றவை பயன்படுத்தப்பட்டுள்ளன. தன்னிறைவினை அடைவதற்காக 1 மில்லியன் வீட்டுத்தோட்டத்தை உருவாக்குவதனை நோக்காகக் கொண்ட ‘அறுவடை செய்தல் மற்றும் பயிர்ச்செய்கைக்கான சௌபாக்கியா தேசிய நிகழ்ச்சித்திட்டம்’ போன்ற ஏனைய முயற்சிகள் காலப்போக்கில் மகத்தான நன்மைகளை வழங்கமுடியும். பொது நலக் கவனிப்பில் மாத்திரமன்றி ஏனைய இன்றியமையாத பணிகளான வங்கித்தொழில் மற்றும் சில்லறை வர்த்தகத்தில் கூட நவீன பணி வழங்கல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆகவே, சாதாரண காலப்பகுதியில் சாத்தியமற்றதாக அல்லது பிரசித்தமற்றதாகக் காணப்படக்கூடிய புத்துருவாக்கமானதும் செயற்றிறன் மிக்கதுமான உபாயங்களைக் கருத்தில் கொள்வதற்கும் பின்பற்றுவதற்கும் இத்தகைய நெருக்கடிகள் கொள்கை வகுப்பாளருக்கும் பொதுமக்களுக்கும் அனுமதியளிக்கும். எனினும், இறக்குமதிகளை விட ஏற்றுமதிகளைக் கட்டுப்படுத்துகின்ற ‘நேர்மாறான பாதுகாப்புவாதத்தினையும்’ நாடுகள் பின்பற்றுகின்றன. அனைத்துப் பொருளாதாரங்களும் தோற்றம் பெற்றுவரும் சவால்களைச் சமாளிப்பதற்கான வளங்களைக் கொண்டிருக்காததனால் இத்தகைய புதிய பாதுகாப்பு வாதம் உலகளாவிய நோய்த் தொற்றுப்பரவலை நீடிக்கச் செய்யக்கூடும். பாதுகாப்பு மற்றும் குணப்படுத்தும் வழிமுறைகள் ‘உலகளாவிய பொதுப் பண்டங்கள்’ என அங்கீகரிக்கப்படுவது அவசியமாகவிருப்பதுடன் அனைத்துக் குடித்தொகையும் ஏனையவர்களுக்குத் தீங்கு ஏற்படுத்தாமல் மாத்திரமே இவற்றிலிருந்து நன்மையடையக் கூடுமென்பதனால் இவற்றின் பரவலான கிடைப்பனவு இந்த நெருக்கடியை மழுங்கச் செய்வதில் துணைபுரிய முடியும். எனினும், முக்கிய மருத்துவ வழங்கல்களின் தட்டுப்பாடுகள், முகக்கவசம் மற்றும் ஏனைய பாதுகாப்புக் கருவிகளின் ஏற்றுமதியைத் தடைசெய்வதற்கு நாடுகளை வழிநடத்தின. நாட்டின் தனிப்பட்ட தேவைகளைக் குறுங்காலத்தில் இது பூர்த்தி செய்யக்கூடிய அதேவேளையில் ஏனைய அரசாங்கங்களும் ஏற்றுமதிகளைத் தடைசெய்வதன் மூலம் தம்மைப் பாதுகாக்கும் அல்லது பழிவாங்குமென்பதால் இது பழிவாங்கல் மற்றும் பயத்தின் சுழற்சிக்கு வழிகோலி பிரசைகளையும் வியாபாரங்களையும் புண்படுத்தும். மேலும், வரையறுக்கப்பட்ட வளங்கள், உற்பத்தித்திறன் மற்றும் போட்டித்தன்மை போன்றவற்றின் சூழலில் இத்தகைய அழுத்தங்களுடன் கூடிய உள்நாட்டுச் சந்தையின் முன்னுரிமையளித்தல் ஒவ்வொரு அரசாங்கமும் தாமாகவே தொற்றிற்கெதிராக போராடுவது சவால்மிக்கதென கண்டுகொள்வதனால் நாடுகள் மோசமான நிலையிலுள்ள சூழ்நிலையை இது உருவாக்கக்கூடும். குறுங்காலத்தில் இத்தகைய கொள்கை வழிமுறைகள் கொவிட்-19 உலகளாவிய நோய்த் தொற்றுப்பரவலுக்கெதிராக மிகவும் வேண்டப்படும் உலகளாவிய ஒத்துழைப்பினைத் தடைப்படச் செய்து அதன் மூலம் பல்வேறு மனித உயிரிழப்புக்களுக்கும் பொருளாதார இடையூறுகளின் நீண்ட காலச் சாத்தியத்திற்கும் வழிவகுக்கும். நீண்ட காலப்பகுதியில் உலகளாவிய வழங்கல் சங்கிலி வலையமைப்புக்களின் கணிசமான தேய்வடைதலுக்கு இது வழிவகுக்கும். தற்போதைய முறிவுநிலை உள்நாட்டு உற்பத்தியில் கவனத்தினைச் செலுத்துகின்ற சந்தர்ப்பங்களைப் பொருளாதாரங்களுக்கு வழங்குகின்ற அதேவேளை பொருளாதாரம் உலக மயமாக்கலிலிருந்து முன்னேற்றமடைந்து வெளியேறிய துறைகளிற்குள் மீண்டும் நுழைவது பெரியளவில் நன்மைகளை உருவாக்கப் போவதில்லை. உதாரணமாக, தாழ்ந்த பெறுமதிகூட்டல் கொண்ட தயாரிப்புக் கைத்தொழில்களில் மீளநுழைவது, இத்தகைய கைத்தொழில்கள் அண்மைய ஆண்டுகளில் தன்னியக்கச் செய்முறைக்குட்பட்டிருப்பதனால், தற்பொழுது அதிக வேலை வாய்ப்புக்களை உருவாக்காது போகலாம். இத்தகைய தன்னியக்கமாக்கல் போட்டி நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்கு இன்றியமையாதது. இத்தகைய உள்ளார்ந்த பலயீனங்களுக்குப் புறம்பாக, அடிப்படை இயக்கிகள் தொடர்ந்தும் மாற்றமின்றி இருக்குமென்பதனால் அனைத்துப் பொருளாதாரங்களும் உலகமயமாக்கலை ஒரு திருத்தியமைக்கப்பட்ட வடிவிலிருந்த போதிலும் மீளத்தழுவிக் கொள்ளக்கூடும். இவை பண்டங்கள் மற்றும் பணிகளின் வர்த்தகத்திற்கான தேவை, குறைந்த செலவுடைய ஊழியத்தினதும் வெளிநாட்டு மூலதனத்தினதும் அணுகுவழிக்கான தேவை போன்றவற்றை உள்ளடக்குகின்றன. வலுவான, நீடித்துநிலைத்திருக்கக்கூடிய மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய மீட்சியினை பேணி வளர்ப்பதற்கு உலகளாவிய ஒத்துழைப்பு அவசியமாகும். பாதிப்படையக்கூடிய பொருளாதாரங்களின் செலவில் தனிப்பட்ட நாடுகளுக்கு மாத்திரம் நன்மையளிக்கக்கூடிய பரவலானதும் தனியானதுமான

வழிமுறைகளைவிட ஒருமித்ததும் ஒருங்கிணைக்கப்பட்டதுமான உலகளாவிய பதிலிறுத்தலானது 'உலகக் கிராமத்தின்' மிக விரைவான மீட்சிக்கு வழியமைக்கும். கொவிட்-19 உலகளாவிய நோய்த் தொற்றுப்பரவல் போன்ற நிகழ்வுகள் இலங்கை உட்பட பொருளாதாரங்கள் உள்நாட்டு ரீதியிலும் உலகளாவிய ரீதியிலும் வியாபாரத்தை நடத்துகின்ற செயற்பாட்டு முறையில் கணிசமானளவு செல்வாக்குச் செலுத்தக்கூடும். நடுத்தர காலத்தில் நீடித்துநிலைத்திருக்கும் அபிவிருத்தியை உறுதிசெய்வதில் இத்தகைய நிகழ்வுகளுக்கு முகங்கொடுப்பதற்கான இலங்கையின் தயார்நிலையும் பொருளாதாரத்தின் மீதான ஏதாவதொரு பாதக விளைவினைத் தடுப்பதற்கு பொருத்தமான வழிமுறைகளை எடுப்பதும் தொடர்ந்தும் முக்கியமானதாகும். மாற்றமடைகின்ற இயங்குவிசைகளுக்கு நாட்டின் பொருந்தச் செய்யும் தன்மை உலகளாவிய வியாபாரச் சங்கிலியின் அடுத்த உயர்வில் புதிய உயரங்களுக்கு அதன் மேலெழுச்சியினை இயலச்செய்யும்.

**எதிர்பார்க்கப்பட்டதனைப் போன்று நீடித்துநிலைத்திருக்கின்றதும் சமமானதுமான வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியினை அடைந்து கொள்வதற்கு தீர்க்கப்பட வேண்டிய இலங்கையினால் முகங்கொடுக்கப்படும் எண்ணிலடங்காத பிரச்சனைகளையும் சவால்களையும் வெளிக்காட்டுவதற்கு முன்னைய கலந்துரையாடல் முனைகின்றது.** இத்தகைய கரிசனைகளும், மேலும் பலவும், இப்பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான சாத்தியமான தீர்வுகளுடன் மத்திய வங்கியின் முன்னைய ஆண்டறிக்கைகளில் எழுப்பப்பட்டிருப்பதோடு பல்வேறு கொள்கைக் கலந்துரையாடல்களிலும் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன. வருந்தத்தக்க வகையில், காலந்தோறும் பிரச்சனைகள் மற்றும் சவால்களின் பட்டியல் தொடர்ந்தும் நீண்டு வருகின்றது. பொதுத் தேர்தலின் பின்னர் எதிர்பார்க்கப்படும் அரசியல் உறுதித்தன்மையினைப் பயன்படுத்தி இத்தகைய பிரச்சனைகளையும் சவால்களையும் தீர்ப்பதற்கு அனைத்துப் பொருத்தமான ஆர்வலர்களுடனான கலந்துரையாடல்களுடன் உருவாக்கப்பட்ட தேசிய கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அழுத்தம் கொடுத்து முன்மதியுடையதொரு சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டத்தினை அரசாங்கம் பின்பற்றுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இது ஒரு நீடித்துநிலைத்திருக்கக்கூடிய வகையில் இலங்கையின் பொருளாதாரம் மேலெழுச்சியடைந்து கடந்த காலத்தில் கைநழுவிப்போன சுபீட்சத்தை அனைத்து இலங்கையர்களும் அனுபவிப்பதனையும் இயலச்செய்யும்.

சிறப்புக்குறிப்பு 3


## இலங்கையின் பொருளாதார மேலெழுச்சி - தேவையும் அதற்கான தயார்நிலையும்

**பின்னணி**

இலங்கை 1948இல் சுய ஆளுகை கொண்டதொரு நாடாக மாறிய பொழுது அது முனைப்புப் பெற்ற வேளாண்மைப் பொருளாதாரத்தினையும் மற்றைய அபிவிருத்தியடைந்த நாடுகளுடன் ஒப்பிடுகையில் ஓரளவு உயர்ந்த தலைக்குரிய வருமானத்தினையும் கொண்டிருந்தது. அதிகாரத்திற்கு தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் வளர்ச்சியை தூண்டுவதனையும் நலன்புரிகளை அதிகரிப்பதனையும் இலக்காகக் கொண்ட அநேக கொள்கைகளைப் பின்பற்றின. ஈடாட்டமான கொள்கைகளுக்குப் புறம்பாக, உள்ளக மோதல்கள் மற்றும் இளைஞர் அமைதியின்மை என்பன பொருளாதாரத்திற்கு, மனித மூலதனம் மற்றும் மூலவளங்களின் இழப்புக்கள் உட்பட மிகக் கடுமையான சேதங்களை ஏற்படுத்திய வேளையில் அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் முதலீடுகள் மீதான இறை இடைவெளி கட்டுப்படுத்தியதுடன் காலத்திற்குக் காலம் அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறுபட்ட கொள்கைச் சீர்திருத்தங்களின் எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளைப் பெற்றுக்கொள்வதிலிருந்தும் பொருளாதாரம் தடுக்கப்பட்டது. 2009இல் உள்நாட்டு மோதல் முடிவடைந்ததும் பொருளாதாரம் பாரிய உட்கட்டமைப்பு அபிவிருத்திகளுடன் சேர்ந்து அதன் உள்ளார்ந்த வளத்தினைப் பயன்படுத்திக் கொண்டு உயர்வடையத் தொடங்கியதுடன், மீண்டும் உத்வேகமடைந்த முதலீட்டாளர் நம்பிக்கையுடன் இணைந்து அடுத்துவந்த மூன்றாண்டு காலப்பகுதியில் சராசரியாக 8 சதவீதத்திற்கும் கூடுதலான வளர்ச்சியைப் பதிவுசெய்தது. உயர் நடுத்தர வருமான நாடென்ற அந்தஸ்தினை நோக்கி இலங்கை முன்னேற்றமடைந்ததெனினும், பல்வேறுபட்ட காரணிகளின் விளைவாக, தொடர்ந்துவந்த ஆண்டுகளில் பொருளாதார வளர்ச்சி குறைவடைந்தமையின் காரணமாக முன்னேற்றம் மெதுவடைந்தது (வரைபடம் சி.கு.3.1).

உயர் நடுத்தர வருமான நாடாக இலங்கை தற்பொழுது வகைப்படுத்தப்பட்ட வேளையில் நாடு 'நடுத்தர வருமானப் பொறி' இனைத் தவிர்த்துக் கொள்ளும் பொருட்டும் சமமானதும் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய வளர்ச்சியுடன் உயர் வருமான நாடொன்றாக மாற்றமடையும் விதத்தில் மேலெழுச்சியடைவதற்கும் நாடு ஆற்றல் வாய்ந்த பொருளாதாரக் கொள்கைகளைப் பின்பற்றுவது இன்றியமையாததாகும்.

வரைபடம் சி.கு. 3.1
இலங்கையின் வளர்ச்சிப் போக்கு




* ஜனதா விமுக்திப் பெருமுனை – ஜேவிபி

** தனியார்மயப்படுத்தல் தொடர்பான சனாதிபதி ஆணைக்குழு

மூலங்கள்: லக்ஷ்மன், 1997
இலங்கை மத்திய வங்கி, ஆண்டறிக்கைகள்

1

**இலங்கையின் பலம்**

இலங்கை மானிட அபிவிருத்தியில் இப்பிராந்தியத்திலுள்ள அயல் நாடுகளினை விட முன்னணியில் இருப்பதனை பதிவுசெய்துள்ளதுடன் உயர் மானிட அபிவிருத்தி குழுவிலுள்ள 189 நாடுகளிடையே 71 ஆவது இடத்தினையும் பெற்றிருக்கிறது. கல்வியறிவு வீத நியதிகளில் இலங்கை 92.5 சதவீதத்துடன்[1] பிராந்திய மற்றும் உலகளாவிய சராசரியினைக் விஞ்சியிருக்கிறது. மேலும், இலங்கையின் சமூக குறிகாட்டிகள் தென்னாசிய நாடுகளிடையே உயர்ந்த தரமொன்றில் காணப்படுவதுடன் நாடு முழுவதிலுமுள்ள மொத்த வீட்டுத்துறையினரில் 88.8 சதவீதத்தினர் பாதுகாப்பான குடிநீரைப் பெறக்கூடிய நிலையில் இருப்பதுடன் நலத் துறையும் அனைவருக்குமான இலவச நலக்கவனிப்பு வசதிகளினால் [2]ஆதரவளிக்கப்பட்டு மிகச் சிறந்த நிலையில் காணப்படுகின்றது. கடுமையான வறுமை என்பது பொதுவானதாக இல்லாததுடன் தலைக்குரிய வறுமை விகிதத்தினால் அளவிடப்பட்டவாறான வறுமை 1996இல் பதிவுசெய்யப்பட்ட 26.1 சதவீதத்திலிருந்து 2016இல் 4.1 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. [3]மேலும், பெரும்பாலும், முழுமையாக மின்னூட்டப்பட்ட நாடாக மாறியிருக்கும் தன்மை, தொலைத்தொடர்பூட்டல் இணைப்புக்கள் குறிப்பிடத்தக்க மட்டத்தில் காணப்படுகின்றமை, வர்த்தக தலைநகரத்தினைப் பிராந்திய தலைநகரங்களுடன் இணைக்கின்ற விரைவுப்பாதை வலையமைப்பு தொடர்ச்சியாக அதிகரிக்கப்பட்டு வருகின்றமை மற்றும் கொழும்பு பன்னாட்டு நிதியியல் நகரத்துடன் தொடர்பான நில மீட்பு வேலைகள் நிறைவடைந்துள்ளமை என்பன உட்பட பல்வேறு துறைகளிலும், அண்மைய ஆண்டுகளில் பௌதீக உட்கட்டமைப்பு அபிவிருத்தி பல்வேறு முன்னேற்றங்களுடன் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது. இவ்வபிவிருத்திகள் 2019இன் உலகளாவிய போட்டித்தன்மைச் சுட்டெண்ணின் உட்கட்டமைப்புத் துறையிலுள்ள தரமிடலில் 4 நிலைகளினால் 61ஆவது இடத்திற்கு அதிகரித்தமையின் மூலம் பிரதிபலிக்கப்பட்டதுடன், ஒட்டுமொத்தச் சுட்டெண்ணில் தென்னாசிய பிராந்தியத்தில் மிக முன்னேற்றம் கண்ட பொருளாதாரமாக இலங்கை மாறியுள்ளமை அங்கீகரிக்கப்பட்டுள்ளது.[4] நாடு சுதந்திரம் பெற்றதிலிருந்து அதனால் பின்பற்றப்பட்ட சிநேகபூர்வமான, அணிசேரா வெளிநாட்டுக் கொள்கைகளின் மூலம் பேணிப் பாதுகாக்கப்பட்ட சீரிய இராசதந்திர உறவுகளை, வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்ந்து கொள்ளவும் அதேபோன்று நாட்டின் பன்னாட்டு வர்த்தகச் செயலாற்றத்தினை பேணி வளர்த்துக் கொள்ளவும் பயன்படுத்திக் கொள்ள முடியும். மேலும், தீவிரமான தொழிற்படையில் பெண்களின் பங்கேற்பினை மேம்படுத்துவதற்கு அண்மையில் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட வழிமுறைகள் அனைத்தையுமுள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும்.

1 தற்காலிக விபரங்களை அடிப்படையாகக் கொண்ட தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தின் காலாண்டு தொழிற்படை அளவீட்டுத் தரவுகள் (2018)

2 கூடுதலான விபரங்களுக்குப் பார்க்க https://www.worldbank.org/en/country/srilanka/overview


3 தொகைமதிப்புப் மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட வீட்டுத்துறையின் வருமானம் மற்றும் செலவின அளவீடு - 2016

4 141 பொருளாதாரங்களில் இலங்கை 84ஆவது நிலையில் உள்ளதுடன் 1.1 சுட்டெண் புள்ளி வளர்ச்சியினைப் பதிவுசெய்து 2018இன் 56 புள்ளிகளுடன் ஒப்பிடுகையில் 2019இல் 57.1 புள்ளியை அடைந்தது.

தீவொன்றாக அது அமைந்திருக்கும் கேந்திர முக்கியத்துவம் பெற்ற அமைவிடத்தின் மூலம் சிறப்புப்பெறும் இலங்கை பண்டைய கடல்பட்டுப்பாதை போக்குவரத்தின் மையத்தில் அமைந்திருப்பதுடன் வரலாற்றுக் காலம் முழுவதிலும் கிழக்கு மற்றும் மேற்கு வணிகர்களின் கவனத்தினை ஈர்க்கும் குவிமையமாகவும் இருந்து வந்திருக்கிறது. ஆசியாவிற்கும் உலகின் ஏனைய பகுதிகளுக்குமிடையிலான வளர்ந்துவரும் வர்த்தகத்தின் காரணமாக இலங்கையின் புவியியல் அமைவிடம் இன்று மேலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறி பன்னாட்டு கடற்பாதையினதும் வசதிகளின் ஏற்பாடுகளினதும் மையமாகவும் பரிணாமமடைவதற்கான வாய்ப்புக்களை அது கொண்டிருப்பதனை எடுத்துக்காட்டுகிறது. தவிர, வரலாற்றிற்கு முற்பட்ட காலம் தொட்டே தனித்துவமான புவியியல் மற்றும் காலநிலைக் காரணிகளின் செல்வாக்கிற்குட்பட்டிருந்த நீரியல் சூழ்ந்த பிரதேசங்களைக் கொண்ட சூழல் முறைமையானது சூழல் சுற்றுலா மற்றும் நலனோம்புச் சுற்றுலாவிற்கான மிகப் பெரிய உள்ளார்ந்த வளத்தினை நாட்டிற்கு வழங்கி ஆசீர்வதித்திருக்கிறது. மேலும், கிழக்குக் கரையோரத்தில் காணப்படும் கனிம மூலங்கள் உள்ளிட்ட கணிசமான இயற்கை மூலவளங்களின் பொருத்தமானதும் நீடித்துநிலைக்கக்கூடியதுமான பயன்பாடு என்பன பொருளாதார அபிவிருத்தியை உத்வேகப்படுத்தும்.

முன்மதியுடையதும் முன்னோக்கியதுமான நாணயக் கொள்கை பின்பற்றப்பட்டமையின் விளைவாக ஒரு தசாப்தத்திற்கும் மேலாக இலங்கை ஒற்றை இலக்கப் பணவீக்கத்தினை தொடர்ச்சியாக அனுபவித்து வருகின்றது. தாழ்ந்ததும் உறுதியானதுமான மட்டங்களில் பணவீக்கத்தினைப் பேணுவது, ஒட்டுமொத்தப் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினை உருவாக்குவதற்கும் நாட்டின் போட்டித்தன்மைக்கு வசதியளிக்கும் வளர்ச்சி முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கும் மிக இன்றியமையாத கூறாகக் கருதப்படுகின்ற அதேவேளையில் குடித்தொகையின் பாதிக்கப்படக்கூடிய பிரிவினரைப் பாதுகாப்பதிலும் தொழில் வாய்ப்பினை உருவாக்குகின்ற உற்பத்தி வளர்ச்சியை

**வரைபடம் சி.கு 3.2**
**இலங்கையின் குடித்தொகை வளர்ச்சி எறிவுகள்**




மூலம்: ஐக்கிய நாடுகள் குடித்தொகை எறிவுகள், நடுத்தர கருவள தோற்றப்பாடு (உலக வங்கி, 2015)

ஊக்குவிப்பதிலும் உதவியளிக்கிறது. இரட்டை இலக்க பணவீக்கத்தினைக் கொண்ட பொருளாதாரமொன்றாக முன்னர் எழுதப்பட்ட இலங்கை பொருளாதாரத்தின் அமைப்பில் காணப்படும் இக்குறிப்பிடத்தக்க மாற்றம் எதிர்வரும் காலத்தில் மேலெழுச்சிக்குத் தயாராகும் அதன் முயற்சிகளுக்கு ஒரு ஊக்கியாகத் தொடர்ந்தும் இருக்கும்.


### பிரச்சினைகளும் சவால்களும்

உயர்ந்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை, உயர்ந்த வர்த்தக மற்றும் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைகள், காணி தொடர்பான பிரச்சனைகள், தொழிலாளர் மற்றும் மூலதனச் சந்தைகள், பாரம்பரியம் மற்றும் பணித்துறை ஆட்களைக் கொண்ட நிறுவனங்கள், கலாச்சாரக் காரணிகள், பலவீனமான ஆளுகை அமைப்புக்கள், அரசியல் உறுதிப்பாடின்மை மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட காரணிகளுக்குப் புறம்பான காரணிகள் என்பனவற்றை உள்ளடக்கிய பல்வேறு காரணங்களின் காரணமாக பரந்த காலப்பகுதியொன்றிற்குள் உயர்ந்த வளர்ச்சியைப் பேண இலங்கையினால் முடியாமலுள்ளது..

ஆசியாவின் வெற்றிபெற்ற பல பொருளாதாரங்களின் வளர்ச்சிக்கான முக்கிய தூண்டுதல்களாக ஏற்றுமதிகளும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளுமே விளங்கின என்பதனைக் கவனிப்பது நன்மைபயக்கும். எனினும், ஏற்றுமதி மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் நியதிகளில் இலங்கையின் முன்னேற்றம் இப்பிராந்தியத்திலுள்ள இணைத்தரப்பினர்களுடன் ஒப்பிடுகையில் சராசரிக்கும் குறைவாகவே காணப்படுகிறது. இலங்கை அதன் ஏற்றுமதிகளை பன்முகப்படுத்த முடியாமலிருப்பதுடன் அயல் ஆசிய நாடுகளைப் போலன்றி கடந்த காலத்தில் உலகளாவிய வர்த்தகத்தில் அதன் பங்கும் வீழ்ச்சியடைந்திருக்கிறது. 1990 களிலிருந்து அதன் ஏற்றுமதி அமைப்பு ஆடைகள், தேயிலை, இறப்பர் உற்பத்திகளுக்கு அப்பால் பரிணாமமடையாத வேளையில் ஏற்றுமதிக்கெதிரான பக்கச்சார்புகள் வர்த்தகப்படுத்தத்தக்கவற்றில், குறிப்பாக, கைத்தொழில் துறையில் தனியார் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் போதுமானளவில்லாமை, புத்தாக்கம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி போதுமானளவில் இல்லாமை என்பன ஏற்றுமதித் துறையின் கரிசனைகளை மேலும் ஆழப்படுத்தியிருக்கிறன. இதேவேளையில், தளம்பலடையும் பொருளாதார மற்றும் அரசியல் சூழல், அதிகாரப்பூர்வமானதும் கட்டுப்பாட்டுடன் கூடியதுமான முதலீட்டுச் சூழல் இலங்கைக்கான வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சலினைத் தடைப்படுத்தியுள்ளன.

வரைபடம் சி.கு 3.3

உலகளாவிய ஆளுகைக் குறிகாட்டிகள் - சதவீத நிலைகள் (அ)




(அ) சதவீத தரமானது, கூட்டுக் குறிகாட்டியினால் உள்ளடக்கப்பட்ட அனைத்து நாடுகளுக்கிடையேயுமான நாட்டின் தரத்தினைக் குறிக்கின்றது. 0 குறைந்த தரத்தினையும் 100 உயர் தரத்தினையும் குறிக்கின்றது.

மூலம்: உலக வங்கி

1

இந்நிகழ்வுகள் வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை விரிவடைவதற்கு வழிவகுத்து அத்தகைய பற்றாக்குறைகளுக்கு நிதியிடுவதற்கு வெளிநாட்டு கடன்பாடுகளில் அதிகளவில் தங்கியிருப்பதற்கு நிர்ப்பந்தித்தன.

நீடித்து நிலைத்திருக்கக்கூடியதும் அனைத்தையும் உள்ளடக்கியதுமான வளர்ச்சியை எய்துவதற்கு தொழிற்படை இருபத்தியோராம் நூற்றாண்டின் சவால்களை எதிர்நோக்கத் தயாராக இருத்தல் வேண்டும். மானிட அபிவிருத்தி தொடர்பான விடயங்களில் இலங்கையின் செயலாற்றம் பாராட்டத்தக்கதாக இருக்கின்ற போதும், தோற்றம் பெற்றுவரும் சந்தைகளுடன் ஒப்பிடுகையில் கல்விகற்ற இளைஞர்களிடையே காணப்படும் உயர்ந்தமட்ட தொழிலின்மையும் குறைந்தமட்ட பெண் தொழிலாளர்களின் பங்கேற்பும் அவதானிக்கப்பட்டிருக்கிறது. இலங்கையிலும் அதன் பிராந்தியத்திலும் பெண்களின் தொழிற்படைப் பங்கேற்பு சீனா மற்றும் ஆசியான் பிராந்தியத்திலுள்ள மற்றைய நாடுகளின் பொருளாதாரங்களுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவிற்கு குறைவாகவே காணப்படுகிறது. தொழிலின்றி அல்லது தொழில் எதிர்பார்த்திராத உயர் கல்வியைப் பெற்றுள்ள பாரிய பெண் தொகுதியினரைக் கவனத்தில் கொள்கையில் இலங்கைக்கு இது மிகப்பெரும் கரிசனைக்குரிய விடயமாகவே காணப்படுகிறது. மேலும், இரண்டாந்தர, உயர் கல்வி மற்றும் பல்கலைக்கழக மட்டங்களில் விஞ்ஞானம், தொழில்நுட்பவியல், பொறியியல் மற்றும் கணித கல்வியில் போதுமான வெளிப்படுத்துகை இல்லாமை இன்று தொழில்நர்களுக்கு பணியாற்றவும் தொழில்முயற்சியாளர்களை உருவாக்குவதற்கும் தேவைப்படும் பணிகளை வழங்குவதற்குப் பொருத்தமற்ற தேர்ச்சியற்ற தொழிற்படையினை உருவாக்கக் காரணமாகிறது.

மேலும், இலங்கை அதன் குடித்தொகையில் வயது முதிர்ந்தவர்கள் அதிகரித்துவரும் தன்மையொன்றிற்கு உட்பட்டிருப்பதுடன் இதன் அயல்நாடுகளுடன் ஒப்பிடுகையில் இதன் மக்கள் குடித்தொகைப் பரிமாற்றத்தில் முதிர்ச்சிக் கட்டமொன்றினையும் அடைந்திருக்கின்றனர். ஐக்கிய நாடுகளின் எறிவுகளின்படி, 2015 இலிருந்து 2060 வரையான காலப்பகுதியில் வயது வந்தோரின் தங்கியிருக்கும் வீதம் கடுமையாக உயர்வடையும் வேளையில் இளம் வயதினர் வீழ்ச்சியடைவர் என்பதனை எறிவு செய்துள்ளது. மேலும், இலங்கையின் குடித்தொகை 2040இன் நடுப்பகுதியில் (வரைபடம் சி.கு.3.2) உச்சமட்டத்தினை அடையுமென எறிவு செய்யப்பட்டுள்ளது. 2050இன் மொத்த குடித்தொகையில் வயது முதிர்ந்தோரின் பங்கு 2015இன் 13.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 25.7 சதவீதத்திற்கு அதிகரிக்குமென எறிவு செய்யப்பட்டுள்ளது. இது, தொழிற்படை சுருக்கமடைதல், குறைந்த உற்பத்தித்திறன், நலக்கவனிப்பு மற்றும் முதியோர் கவனிப்பு ஆகிய வடிவங்களில் ஏற்படக்கூடிய பாரிய இறைச் சுமை மற்றும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய உயர்ந்த ஓய்வூதிய நன்மைகள் தொடர்பான செலவு என்பனவற்றைச் சுட்டுகிறது. உண்மையில், இலங்கையின் குடித்தொகையில் மூன்றிலொரு பகுதிக்கும் குறைவானவர்கள் ஏதாவதொரு சமூகப் பாதுகாப்பு நன்மைகள் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் வயது முதிர்ந்த பிரசைகளில் ஏறத்தாழ 25 சதவீதத்தினர் மட்டுமே ஓய்வூதியமொன்றினைப் பெறுகின்றனர்.

அநேக ஆண்டுகளாக இலங்கையில் பொருளாதார உறுதிப்பாடின்மைக்கான முக்கிய மூலம் அணிப்படுத்தப்படாத இறைத் தொழிற்பாடுகளிலிருந்தே தோன்றியிருக்கிறது. தோற்றம் பெற்றுவரும் சந்தை சகாடுகளுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்து வருகின்ற அரசின் அரசிறை மற்றும் உயர்வடைந்துவரும் மீண்டெழும் செலவினம் என்பனவற்றின் காரணமாக இலங்கையின் இறைப் பற்றாக்குறை தொடர்ந்தும் உயர்வாகவே காணப்படுகின்றது. பன்னாட்டு நியமங்களுடன் ஒப்பிடுகையில் மொ.உ.உற்பத்திக்கான வரி அரசிறை விகிதம் மிகக் குறைவாக இருப்பது உறைக்கத்தக்கதொரு விடயமாகும். மேலும், செலவினங்களைச் சிக்கனப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதும் கடந்த பல ஆண்டுகளாக அரச செலவினம் தொடர்ந்தும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. நிலைத்திருக்கும் பாரிய வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைகளின் தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில், இலங்கையின் படுகடன் மட்டம் தொடர்ந்தும் உயர்ந்த மட்டத்தில் காணப்படுகிறது. வெளிநாட்டு வர்த்தகப் படுகடனின் உயர்வடைந்து செல்லும் மட்டம் அரச நிதியின் மீது மேலும் சுமையினை உருவாக்கியிருக்கிறது. இது இடர்நேர்வினையும் அத்துடன் இணைந்த கட்டணங்களையும் உயர்வடையச் செய்து, வட்டிச் செலவுகள் அதிகரிக்கக் காரணமாக அமைந்திருக்கிறது. இலங்கை பாரியதும் தொடர்ச்சியானதுமான இறைத் தூண்டுதலினூடாக வளர்ச்சியைப் பெறுவதற்கும் பாரிய உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களைத் தொடர்வதற்கும் சிறிதளவு இறை இடைவெளியினையே கொண்டிருப்பது, இலங்கை உயர் வளர்ச்சி வேகத்துடன் செல்ல வேண்டுமாயின் தீவிரமான இறைச் சீர்திருத்தங்கள் அவசியம் என்பதனை எடுத்துக்காட்டுகிறது.

அரசியல் உறுதிப்பாடின்மை மற்றும் நிச்சயமற்ற கொள்கை என்பன நிச்சமயற்ற தன்மைகளுடன் பின்னிப்பிணைந்து முதலீட்டுத் தீர்மானங்களின் மீதும் வியாபார நம்பிக்கைகளிலும் எதிர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்துவதனால் அது உறுதியான பொருளாதார வளர்ச்சியின் மீது குறிப்பிடத்தக்க சவால்களைத் தோற்றுவிக்கிறது. ஏய்சன் மற்றும் வெய்கா (2011) ஆகியோர் அரசியல் ரீதியான உறுதிப்பாடற்ற தன்மையானது கொள்கை வகுக்கும் அதிகாரிகளின் காலத்தினை குறுகச் செய்து உத்தமமற்ற குறுங்கால பொருளாதாரக் கொள்கைகளுக்கு வழிவகுப்பதுடன் அது 'கொள்கைகளை அடிக்கடி மாற்றவும் தளம்பல்களை உருவாக்கவும் அதன் மூலம் எதிர்க்கணியமான தாக்கத்தினைப் பேரண்டப் பொருளாதாரச் செயலாற்றத்தில் ஏற்படுத்தவும் காரணமாகின்றது' என வாதிக்கின்றனர். அரசியல் உறுதிப்பாடு, சிறந்த ஆளுகையின் பிரசன்னம், காத்திரமான அரசாங்கம், சட்டத்தின் ஆட்சி மற்றும் ஊழல்களை ஒழித்துவிடல் என்பன பொருளாதாரமொன்றினை நீடித்துநிலைத்திருக்கும் வளர்ச்சிக்கு நேர்க்கணியமாகப் பங்களிக்கும். இலங்கை வலுவான சனநாயகத்தினைத் தொடர்ந்தும் கொண்டிருந்து அடிக்கடி அரசாங்கத்தினை மாற்றிவிடுவதுடன் சுயாதீனமான குடியியல் பணிகள் இல்லாமையும் தேசிய கொள்கைகள் போதுமானளவில் இல்லாமையும் நிலையற்ற கொள்கைகளுக்கு வழிவகுப்பதுடன் முதலீடு மற்றும் நீண்ட கால நடவடிக்கைகளுக்கான ஊகிக்கத்தக்க நாடு என்ற இலங்கையின் நன்மதிப்புத் தோற்றப்பட்டையும் பாதித்திருக்கிறது.

**இலங்கையின் பொருளாதாரம் மேலெழுச்சிக்கு உதவக்கூடிய உபாயங்கள்**

மேலே ஆராயப்பட்டவாறு, அநேக இன்றியமையாத நிபந்தனைகள் ஏற்கனவே நடைமுறையிலுள்ள வேளையில், இலங்கையின் பொருளாதார மேலெழுச்சிக்கு உதவுவதற்கு, தொடர்ந்து காணப்படும் தடைகளை கொள்கை சீர்திருத்தங்களூடாகக் கட்டுப்பட்டுத்தும் தேவை காணப்படுகின்றது. அடுத்த தசாப்த காலத்தில் உயர் வருமான பொருளாதாரமாக மாறுகின்ற விதத்தில் அடுத்த முன்னோக்கிய பாய்ச்சலை இலங்கை மேற்கொள்வதற்கு உதவக்கூடிய அத்தகைய சீர்திருத்தங்களில் சில கீழே வெளிக்காட்டப்பட்டுள்ளன.


இலங்கையின் ஏற்றுமதி உபாயத்தில் அடையப்படும் மிகப்பெரும் முன்னேற்றம் உயர் வருமானப் பொருளாதாரமாக நாடு மாறுவதற்கான விசைப்பலகையாக பணியாற்றும். இலங்கையின் வணிகப்பொருள் ஏற்றுமதி உபாயமானது ஆடைகள் மற்றும் தேயிலை போன்ற பாரம்பரியமான தாழ்ந்த தொழில்நுட்பத்தினைக் கொண்ட உற்பத்திகளிலிருந்து பொறி மற்றும் கருவிகள், இலத்திரனியல், ஊர்திகள் மற்றும் மருந்தாக்கற் பொருட்கள் மற்றும் பெறுமதிகூட்டப்பட்ட கனிப்பொருள் உற்பத்திகள் போன்ற நடுத்தரத்திலிருந்து உயர்ந்த தொழில்நுட்ப உற்பத்திகளின் ஏற்றுமதிக்கு பன்முகப்படுத்துவதன் மூலம் புரட்சிகரமானதாக்கப்படல் வேண்டும். ஆசியாவில் சாதனையாளராக நன்கறியப்படும் வியட்நாம் அதன் ஏற்றுமதிகளை வேளாண்மை மற்றும் இயற்கை மூலவளங்களை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளிலிருந்து 1990களில் ஆடைக்கு மாற்றிக் கொண்டதுடன் அதன் பின்னர் 2000 களின் பிற்பகுதியில் இலத்திரனியல் உற்பத்திகளுக்கு மாற்றிக் கொண்டு இன்று உலகளாவிய உற்பத்தி வலையமைப்பில் முன்னணி ஏற்றுமதியாளர்களிடையே ஒன்றாகக் காணப்படுகிறது.

இலங்கை அதன் பாரம்பரிய ஏற்றுமதிச் சந்தைகளுக்கு அப்பாலும் தனது பார்வையினைச் செலுத்துதல் வேண்டும். மேற்கிற்கான ஏற்றுமதிகள் மொத்த ஏற்றுமதிகளில் அரைப்பங்கிற்கும் கூடுதலானளவிற்கு வகைகூறுவதுடன் இச்சந்தைகளின் முன்னுரிமையளிக்கப்பட்ட அணுகுவழி இதற்கு ஓரளவிற்கு உதவியது. பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைத் திட்டம் மற்றும் பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைத் திட்டம் + என்பன கடந்த காலத்தில் இலங்கை அதன் ஏற்றுமதிகளை உத்வேகப்படுத்துவதற்கு உதவியாகவிருந்த வேளையில் அத்தகைய நன்மைகள் குறுகிய காலங்களுக்கானவையாக இருந்ததுடன் இவை உயர் நடுத்தர வருமான பொருளாதாரத்தில் கிடைக்கத்தக்கதாகவிருக்காது. ஆகவே, இலங்கை தோற்றம் பெற்றுவரும் ஆசியச் சந்தைகளுக்கும் பாரம்பரியமற்ற சந்தைகளுக்கும் அதன் ஏற்றுமதிகளை மேற்கொள்வது தொடர்பில அதன் கவனத்தினை படிப்படியாக திருப்புதல் வேண்டும்.

வணிகப்பொருள் ஏற்றுமதிகளை பன்முகப்படுத்துவதற்குப் புறம்பாக, இலங்கை பணிகளின் ஏற்றுமதிகளை மேலும் மேம்படுத்துவதன் மீது கவனத்தினைச் செலுத்தல் வேண்டும். சுற்றுலா மற்றும் தகவல் தொழில்நுட்பம் வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்ளுதல் போன்ற ஏற்கனவேயுள்ள பணிகள் துறைகளுக்குப் புறம்பாக, ஏற்பாட்டு வசதிகள் மற்றும் நிதியியல் பணிகள் போன்ற ஏனைய முக்கிய பணிகளின் ஏற்றுமதிகளை மேம்படுத்துவதற்கும் வழிமுறைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். கொழும்பு வர்த்தக மற்றும் நிதியியல் மையம் தொழிற்படத் தொடங்கியதும், இலங்கை, இப்பணிகளின் ஏற்றுமதியூடாக மேலதிக வெளிநாட்டுச் செலாவணியினை ஈட்டக்கூடியதாக இருக்கும்.


இலங்கை அதன் ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதற்கும் மூலதன மற்றும் மனித மூலவளங்களின் அசைவுகளிலிருந்தான நன்மைகளை உச்சப்படுத்திக் கொள்வதற்கும் மற்றைய நாடுகளுடன், குறிப்பாக பிராந்திய நாடுகளுடன், உபாயம் மிக்க பொருளாதார பங்குடமைகளை உருவாக்கிக் கொள்ளுதல் அவசியமாகும். ஏற்றுமதி வளர்ச்சியினால் தூண்டப்பட்ட ஆசிய பொருளாதாரத்தில் தோற்றம் பெற்றுவரும் முன்னணி நாடாக மாறியுள்ள வியட்நாமின் அனுபவங்களிலிருந்து இன்னமும் பாடங்களைக் கற்றுக் கொள்ளமுடியும். 1995இலிருந்து வியட்நாம் பல்புடை சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களில் கையொப்பமிடுவதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தது. இதன் மூலம் வியட்நாமின் ஏற்றுமதிகள் மீதான தீர்வைகளில் குறைப்பு ஏற்பட்டதுடன் இதன் மூலம் அதன் ஏற்றுமதித் துறையும் அதேபோன்று பொருளாதாரமும் விரிவடைய வழியமைக்கப்பட்டது. ஏற்கனவேயுள்ள சுதந்திர உடன்படிக்கையிலிருந்து பெருமளவு நன்மைகளைப் பெறுவதற்கு வழிமுறைகள் எடுக்கப்பட்ட வேளையில் நாட்டின் இறைமையையும்

**வரைபடம் சி.கு 3.4**
**வெளிநாட்டு நேரடி முதலீடு, தேறிய உட்பாய்ச்சல்கள் (சென்மதி நிலுவை, நடைமுறைக் கணக்கு ஐ.அ.டொலர்)**




மூலம்: உலக அபிவிருத்தி குறிகாட்டிகள்

**வரைபடம் சி.கு 3.5**
**கல்விகற்ற குடித்தொகையினரிடையே தொழிலின்மை வீதங்களின் ஒப்பீடு – 2009-2016 சராசரி (அ)**





(அ) தரவுகள் எல்லா நாடுகளுக்கும் எல்லாக் காலத்திற்கும் கிடைக்கத்தக்கதாகவில்லை. அத்தகைய சந்தர்ப்பத்தில் கிடைக்கத்தக்க காலங்கள் மாத்திரமே சராசரிக்காக கருத்திலெடுப்பட்டன

(ஆ) வேலையின்றி இருக்கும் ஆனால் வேலை கிடைக்கத்தக்கதாக இருக்கும், தொழிலை எதிர்பார்த்திருக்கும் தொழிற்படையின் சதவீதம். தொழிலின்மைக்கும் தொழிற்படைக்குமான வரைவிலக்கணம் நாட்டிற்கு நாடு வேறுபடும்.

(இ) முன்னேற்றகரமான கல்வியுடன் தொழிற்படையின் சதவீதமொன்றாக கல்வி தொடர்பான பன்னாட்டு நியம வகைப்படுத்தல் பகுப்பாய்வு 2011இன்படி உயர்தரக் கல்வியானது குறுகியகால சுழற்சிக்கொண்ட மூன்றாம் நிலைக் கல்வி, இளமானியப் பட்டம் அல்லது அதற்குச் சமனான கல்வி மட்டம், முதுமானிப் பட்டம் அல்லது அதற்குச் சமனான கல்வி மட்டம், அல்லது கலாநிதிப் பட்டம் அல்லது அதற்குச் சமனான கல்வி மட்டம் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

மூலம்: உலக வங்கி

வரைபடம் சி.கு. 3.6
இணைய மற்றும் செல்லிடத் தொலைபேசிகளின் நுழைவு





மூலம்: உலக வங்கி

சுதந்திரத்தினையும் பேணிக்காக்கின்ற வேளையில் மற்றைய வர்த்தக ஜம்பாவான்களுடனும் புதிய வர்த்தக உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளுதல் வேண்டும். அத்தகைய வர்த்தக உடன்படிக்கைகள் உள்நாட்டு ஏற்றுமதியாளர்கள் உலகளாவிய பெறுமதிச் சங்கிலியுடன் ஒருங்கிணைக்கப்படுவதற்கு உதவியதுடன் அதன் மூலம் சந்தைகளை அணுகும் வசதியை மேம்படுத்தவும் வினைத்திறனையும் புத்தாக்கத்திற்கான ஆதரவினை முன்னேற்றவும் முடியும்.

மிக முக்கியமாக, அதிகரித்த உள்நாட்டு உற்பத்திகளூடாக உயர்ந்த வளர்ச்சி உத்வேகத்தினை அடைந்து கொள்வதற்கு உதவும் விதத்தில், படுகடனை உருவாக்காத நிதியியல் பாய்ச்சல்களைக் கவர்ந்து கொள்வதன் மீது அதிகளவு கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும். கடந்த தசாப்த காலத்தில் இலங்கைக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகள் படிப்படியாக உயர்வடைந்த போதும் அதன் மட்டம் இப்பிராந்தியத்திலுள்ள நாடுகள் கொண்டிருக்கும் மட்டத்தினை விட மிகக் குறைவாகவே காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக கடந்த ஆண்டுகளில், வியட்நாம் சிநேகபூர்வ முதலீட்டாளர் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலமும் சீர்திருத்தங்களை மேற்கொண்டமையின் மூலம் உற்பத்தி மற்றும் வர்த்தகப்படுத்தல் துறைகளுக்குக் கணிசமானளவிற்கு உயர்ந்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளை வெற்றிகரமாக கவரக்கூடியதாக இருந்ததுடன், தற்பொழுது இந்நாடு இன்ரெல், சாம்சுங், மிற்சுபிசி, ஜிஈ, எல்ஜி மற்றும் பனசோனிக் போன்ற உலகின் முன்னணி இலத்திரனியல் வர்த்தக நாமங்களின் உறைவிடமாகவும் விளங்குகிறது. அவ்வனுபவங்களிலிருந்து பாடங்களைக் கற்றுக் கொண்டு, இலங்கை வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்ந்து கொள்வதிலும் கவனம் செலுத்துதல் வேண்டும். இது உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக வெளிநாட்டு மூலதனங்களைக் கவர்ந்து கொள்வது மட்டுமன்றி தொழில்நுட்பம் மற்றும் நிபுணத்துவத்தினையும் பகிர்ந்து கொள்வதனை ஊக்குவிக்கக்கூடிய உற்பத்திகளையும் பெற்றுக்கொள்வதில் கவனம் செலுத்துதல் வேண்டும். வெளிநாட்டு நேரடி முதலீடுகளுக்கெதிரான தடைகளைக் கட்டுப்படுத்தும் விதத்தில் உரிய நேரத்தில் தேவையான சட்டங்களையும் நிறுவன ரீதியான மற்றும் தொழில் சந்தைச் சீர்திருத்தங்களையும் அறிமுகப்படுத்தல் வேண்டும். இது வியாபாரம் செய்யுங்கள் இலகுபடுத்தும் தரமிடலை மேம்படுத்தவும் இலங்கை தொடர்பான முதலீட்டாளர் நம்பிக்கையினை உயர்த்தவும் உதவும். அதிகரித்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளுடன், உற்பத்தியாளர்கள் உலகளாவிய பெறுமதிச் சங்கிலியினை அணுகக்கூடியதாக இருக்குமென்பதுடன் இதன் மூலம் புதிய உற்பத்திகளை உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்புக்களை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளவும் புதிய சந்தைகளை விரிவுபடுத்தவும் பன்முகப்படுத்தவும் முடிகின்ற வேளையில் தொழில் உருவாக்கத்திற்கும் வழிவகுக்கிறது. இதன் மூலம் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலுக்கும் உதவமுடியும். வெளிநாட்டு நேரடி முதலீடுகள் செலாவணி வீதத்தின் உறுதிப்பாட்டிற்கு ஆதரவளிக்கின்ற அதேவேளையில், உயர்ந்தளவு வெளிநாட்டு நேரடி முதலீடுகள், ஏற்றுமதி வருவாய்கள் என்ற வடிவில் அதிகரித்த வெளிநாட்டு வருமானத்தையும் உருவாக்குவதன் மூலம் வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைகளை நிதியிடுவதற்குப் படுகடனை உருவாக்குகின்ற வெளிநாட்டு நிதியிடலுக்கான தேவையைக் குறைப்பதுடன், நீண்ட காலததில் அரச அரசிறையினையும் மேம்படுத்துகிறது.

˙. அசெனா், கனுடோ மற்றும் ஜெலெனிக் (2012), அசெனா் (2017)இல் வெளிக்காட்டப்பட்டதனைப் போன்று 21ஆம் நூற்றாண்டின் தொழிலாளர் சந்தையின் சவால்களைப் பூர்த்தி செய்வதற்குத் தகைமை வாய்ந்த மனித மூலதனம் போதாமல் இருப்பது மற்றைய நாடுகளிலிருந்து கடனாகப் பெறப்பட்ட தொழில்நுட்பங்களின் மூலம் பெறத்தக்க நன்மைகளையும் நாட்டில் பொருத்தமான தொழில்நுட்பங்களை அபிவிருத்தி செய்வதிலும் வரையறைகளை ஏற்படுத்துமென்பதனால் இது நாடுகள் நடுத்தர வருமான மட்டங்களில் தேக்கமடைவதற்கான காரணிகளிலொன்றாகக் காணப்படுகின்றது. இத்தடைகளை எதிர்கொள்வதற்கு உயர் தேர்ச்சிக் கல்வியில் முதலீடுகளை மேற்கொள்வதும் தொழில் சந்தைச் சீர்திருத்தங்களும் அவசியமானவையாகும். இலங்கையின் பட்டதாரிகளின் உள்ளமைப்பினைப் பரிசீலனையில்

வரைபடம் சி.கு 3.7
வியாபார செய்துகாட்டல் செய்யுங்கள் குறிகாட்டிகள் - 2019 இல் இலங்கைக்கானது




மூலம்: உலக வங்கி

கொள்ளும் போது பெரும்பாலானவர்கள் மானிட விடயங்களிலும் அழகியற் கற்கைகளிலும் சிறப்புப் பெற்றவர்களாகவே காணப்படுகின்றனர். எவ்வாறெனினும் நடுத்தர வருமான மட்டங்களிலிருந்து உயர் வருமான வகைக்கு மாறிச் சென்ற சிங்கப்பூர் மற்றும் தென்கொரியா போன்ற நாடுகள் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்துடன் தொடர்பான துறைகளில் பட்டம் பெற்றவர்களை உயர்ந்தளவு விகிதத்தில் உற்பத்தி செய்திருப்பதனால் அவற்றின் புத்தாக்க இயலாற்றல் அதிகரித்துச் செல்கிறது. உயர்ந்த தேர்ச்சியைக் கொண்ட தொழிலாளர்களைத் தேவைப்படுத்தும் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கு உதவியளிப்பது சமமானளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். எனவே, அத்தகைய பட்டதாரிகளுக்கான கேள்வி உயர்வாகவே இருக்கம் எனவே, இலங்கையின் பின்னணியில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியலுடன் தொடர்பான துறைகளின் உயர் கல்விக்கு ஆதரவளிப்பதன் மூலம் நிபுணர்களின் வழங்கலில் மாத்திரம் கவனம் செலுத்தாமல் அத்தகைய நிபுணர்களுக்கான கேள்வியையும் அதிகரிப்பது அவசியமாகும். பட்டதாரிகள் பலர் தமது கல்வியை நிறைவு செய்து கொண்டமையினைத் தொடர்ந்து, நாட்டில் இலவசக் கல்வி முறைமைக்கு பாரிய இறைச் சுமையினை ஏற்படுத்திவிட்டு புலம்பெயர்ந்து சென்றமையினைக் கடந்த அண்மைக்கால அனுபவங்கள் எடுத்துக்காட்டுகின்றன. அத்துடன் தனியார் துறையில், குறிப்பாக, உயர்ந்த தேர்ச்சி தேவைப்படுகின்ற தனியார் துறையில் உயர்ந்த கூலி மட்டங்கள் காணப்படுகின்ற போதும் பல பட்டதாரிகள் உயர்ந்த தொழில் பாதுகாப்பினைத் தேடும் விதத்தில் தனியார் துறை தொழில் வாய்ப்புக்களை விட அரச தொழில் வாய்ப்புக்களை விரும்பும் தன்மை காணப்படுகின்றது. இதன் காரணமாகவே தனியார் துறையில் அத்தகைய நிபுணத்துவத்திற்கான பற்றாக்குறை தொடர்ந்தும் காணப்படுகின்றது. ஆகவே, நெடெல்தொமல்கா, ஓபிரேயின் மற்றும் ஸ்றொக் (2018) குறிப்பிடுவதைப் போன்று பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களை உள்வாங்குவதனை விரிவுபடுத்தும் அரசாங்கத்தின் முன்னெடுப்பில் தொழில் சந்தையின் கேள்வியுடன் பொருந்தத்தக்க விதத்தில் மூன்றாந்தரக் கல்வியைப் பெறுவதற்கான வசதிகளை விரிவுபடுத்துவது அவசியமாகும். அதேநேரம், ஆரம்ப குழந்தைப்பராயத்திலிருந்தான கல்வித் தரம் தொழிலாளர் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்குப் பங்களிக்கும் என்பதற்கு டெலலிபெற மற்றும் வெறெய்றா (2019) உட்பட ஆய்வுகளில் கண்டறியபட்ட விடயங்கள் சான்றுபகர்வதுடன், கல்வி முறைமையின் ஆரம்ப மற்றும் இரண்டாந்தரப் பிரிவுகளின் தரத்தினை மேம்படுத்துவது இலங்கைக்கும் அவசியமாகவுள்ளது. அத்தகைய வழிமுறைகளினூடாக பெறத்தக்க தொழிற்படைத் தரத்தின் மேம்பாடுகளும் நாட்டில் தோன்றிவரும் குடித்தொகையியல் சவால்களை எதிர்கொள்வதில் நன்மையளிக்கும்.

நடுத்தர வருமானப் பொறி நிகழ்வதற்கு புத்தாக்கத்திற்கான ஆற்றலின்மையே காரணமாகும் எனப் பொதுவாக வாதிடப்படுகிறது. அநேக அபிவிருத்தியடைந்துவரும் ஆசிய நாடுகளில் புலமைச் சொத்துரிமைக்காக வழங்கப்படும் முக்கியத்துவம் மேற்குலக இணைத்தரப்பினர்களுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைவாகும். இலங்கையைப் பொறுத்தவரை தற்போதுள்ள சட்டங்களும் ஒழுங்குவிதிகளும் வெளிநாட்டு நிறுவனங்களினால் நிறுவப்பட்ட புலமைச் சொத்துரிமைகளைப் பாதுகாப்பதற்கு போதுமானவையாக இருக்கின்ற போதும் உள்நாட்டிலுள்ள புத்தாக்கங்களை கண்டுபிடிப்போருக்கும் புத்தாக்கங்களுக்குமான புலமைச் சொத்துரிமைகளை நிறுவுவதற்கான முயற்சிகள் மெதுவானவையாகவும் நீண்ட சலிப்பூட்டும் செயற்கிரமங்களைக் கொண்டனவாகவும் காணப்படுகின்றன. இது கண்டுபிடிப்பாளர் தமது முயற்சிகளிலிருந்து பொருளாதார ரீதியான நன்மைகளைப் பெறுவதனைக் கடினமாக்குவதன் மூலம் புத்தாக்கங்களை ஊக்கம் குன்றச் செய்கிறது. எனவே, கொள்கைப் பக்கத்திலிருந்து நோக்குகையில், புலமைச் சொத்துரிமை தொடர்பான விழிப்புணர்வினை மேம்படுத்துவதற்கும் அத்தகைய விதிகளும் ஒழுங்குவிதிகளும் நடைமுறைக்கிடப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கும் வழிமுறைகளை மேற்கொள்வது முக்கியமானதாகும். அதேவேளை, உள்ளூர் கண்டுபிடிப்பாளர்கள் அத்தகைய உரிமைகளை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நிலைநாட்டுவதற்குத் தீவிரமான ஆதரவும் வழங்கப்படுதல் வேண்டும்.

தென்கிழக்காசியாவின் வெற்றிகரமான கதைக்குரிய நாடுகளான சிங்கப்பூரினதும் தென்கொரியாவினதும் அனுபவங்கள் தொலைத்தொடர்பூட்டல் மற்றும் அகலப்பட்டை வசதி போன்ற முன்னேற்றம் கண்ட உட்கட்டமைப்பிற்கான மேம்பட்ட அணுகுமுறைகள் நீடித்துநிலைத்திருக்கும் வளர்ச்சிக்குப் பங்களித்தமைக்கு உதாரணங்களாகவுள்ளன. இது தொடர்பில் பாராட்டத்தக்க முன்னேற்றங்களை இலங்கை அடைந்துள்ள போதும், பிராந்தியத்திலுள்ள அயல் நாடுகளுடன் ஒப்பிடுகையில் அகலப்பட்டைக்கான உயர்ந்த காத்திரமான செலவு மற்றும் ஒப்பீட்டு ரீதியில் தாழ்ந்த இணையத்தள நுழைவு வீதம் (செல்லிடத் தொலைபேசி நுழைவு வீதம் ஒப்பிடத்தக்க மட்டங்களில் காணப்பட்ட போதும்) போன்ற குறிகாட்டிகளினால் எடுத்துக்காட்டப்பட்டவாறு இலங்கை இன்னமும் மேம்பாடடைவதற்கான ஏராளமான வாய்ப்புக்களைக் கொண்டேயிருக்கிறது. போக்குவரத்து உட்கட்டமைப்பினைப் பொறுத்தவரையிலும் கூட, நாடு பொதுப் போக்குவரத்திலும் புகைவண்டி வலையமைப்பிலும் ஏற்பட்ட மேம்பாடுகளின் மூலம் வீதி வலையமைப்பில் ஏற்பட்ட மேம்பாடுகளின் பயன் காரணமாக உயர்ந்த பொருளாதார மற்றும் சமூக நன்மைகளை அடையக்கூடியதாக இருக்கும்.

உயர்வடைந்த தொழில்முயற்சியாண்மை நாட்டில் உயர்ந்தமட்ட வெளியீட்டினையும் உற்பத்தித்திறனையும் உருவாக்குவதற்கு

வழியமைத்துக் கொடுப்பதுடன் மேம்பட்ட தொழில் வாய்ப்புடன் சேர்ந்த உயர்ந்த வருவாய்களினூடாக தேசிய வருமானமும் வருமானப் பங்கீடும் அதிகரிக்கப்படும். நாட்டின் நன்கு அபிவிருத்தியடைந்த தொழில்முயற்சியாண்மைக் கலாச்சாரத்திற்கு வியாபாரத்தினை மேற்கொள்வதற்கும், முதலீடுகளைக் கவர்வதற்கான நியதிகளில் பொருளாதாரம் முன்னோக்கி நகர்வதற்கும் தூண்டுதலளிக்கும் சூழ்நிலை பக்கபலமாக விளங்கும். இதன் மூலம் ஒட்டுமொத்த பொருளாதார நடவடிக்கையும் உத்வேகம் பெறும். வியாபாரம் செய்யுங்கள் சுட்டெண் 2020[5] இன்படி, வியாபாரம் செய்வதனை இலகுபடுத்துவதில் 190 பொருளாதாரங்களில் இலங்கை 99ஆவது இடத்தினைப் பெற்று அதன் பிராந்திய நாடுகளை விடத் தொடர்ந்தும் கீழேயே காணப்படுகிறது. இந்தியா வியாபாரம் செய்யுங்கள் குறிகாட்டிகளுக்கு முன்னுரிமை வழங்குகின்ற அதன் சீர்திருதத உபாயங்களை ஒழுங்குமுறைப்படுத்தியதனூடாக அதன் நிலையினை உயர்த்திக் கொண்டது. வியட்னாம் போன்ற நாடுகள் அவற்றின் தகவல் தொழில்நுட்பவியல் கட்டமைப்பின் வரிகளைச் சுலபமாக செலுத்தத்தக்க விதத்தில் தரமுயர்த்திக் கொண்டுள்ளன. அண்மையில் இலங்கையும் கூட, வரிகளைக் கோப்பிடல், கட்டடவாக்க அனுமதிப்பத்திரங்களைச் செய்முறைப்படுத்தல் மற்றும் வியாபாரப் பதிவு என்பனவற்றின் பொருட்டு அதேநேரக் கணனிவழி முறைகளை அறிமுகப்படுத்தியதன் மூலம் தகவல் தொழில்நுட்பவியல் உட்கட்டமைப்பினைத் தரமுயர்த்துவதற்கு சில முயற்சிகளை மேற்கொண்டது. வெளிநாட்டு முதலீடுகளுக்கு வசதியளித்துக் கவரும் நோக்குடன் முதலீட்டுச் சபை கணினிவழியில் விண்ணப்பங்களைச் செயன்முறைப்படுத்தும் முறையினை அறிமுகப்படுத்தியது. இலங்கையில் வியாபாரம் செய்யுங்கள் சுட்டெண் ஒப்பீட்டு ரீதியில் குறைந்த புள்ளிகளைக் கொண்டிருக்கின்றமை மேலும் முன்னேற்றமடைவதற்குப் போதுமான வாய்ப்புக்கள் காணப்படுவதனை எடுத்துக்காட்டுகின்றது. இலங்கையில் கடன்கள் பெற்றுக்கொள்ளுதல், ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்தல், வர்த்தகப் பிணக்குகளுக்குத் தீர்வு காண்பதற்கான நேரத்திலும் செலவிலும் கவனம் செலுத்துதல் மற்றும் நியாயாதிக்கச் செய்முறையின் தரம் அதேபோன்று மீட்பு விகிதம் மற்றும் கடன்தீராற்றலுக்கான சட்டக் கட்டமைப்பினை மீளவலிமைப்படுத்தல் ஆகிய துறைகளில் போதுமானளவிற்கு முன்னேற்றமடையாத தன்மையினை அவதானிக்க முடிந்தது. தொழில்முயற்சியாண்மையாளர்களுக்கு வாய்ப்புக்களை வழங்குகின்ற விதத்தில் பரந்த மனப்பான்மையுடன் கூடிய நீண்ட காலக் கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் நடைமுறைக்கிடுவதன் மூலம் நாட்டின் தொழில்முயற்சியாண்மையினை வளர்க்கின்ற அரசின் ஈடுபாட்டினூடாக மேலும் அபிவிருத்திக்களை அடைய முடியும்.

பல தசாப்தங்களாக இலங்கை இரட்டைப் பற்றாக்குறை நாடாக விளங்கி பற்றாக்குறையினை நிதியிடுவதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்பாடுகளின் மீது தங்கியிருக்கிறது. இறை நிலைமையினை வலுப்படுத்தும் நோக்குடனும் அரச படுகடனை வலுவான மட்டமொன்றில் பேணும் பொருட்டும் தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் வரித் தளத்தினை விரிவாக்கியமை, வரி நிருவாகத்தினையும் இணங்குவிப்புக்களையும் மேம்படுத்தியமை என்பனவற்றின் மூலம் இறைத்திரட்சி உபாயங்களைப் பின்பற்றிய வேளையில் செலவினங்களையும் சிக்கனப்படுத்தும் உபாயங்களைப் பின்பற்றின. அண்மைய வரிச் சீர்திருத்த முன்னெடுப்புக்கள் வரி நிருவாகத்தினை மேம்படுத்துவதனை நோக்கமாகக் கொண்ட விடயங்களை உள்ளடக்கியிருந்ததுடன் அவை நாட்டின் வரி முறைமையினை எளிமைப்படுத்தும் அதேவேளையில் வியாபார நம்பிக்கையினை மேம்படுத்துமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. அரச செலவினம் உயர்வாகக் காணப்பட்டமையினால் இன்றியமையாத அரச முதலீடுகளை விட்டுக்கொடுக்காமல் அரச செலவினத்தின் பொருத்தமான கண்காணிப்புச் செயன்முறையுடன் இறைத்திரட்சி வழிமுறைகளுடன் சேர்த்து செலவினத்தினைச் சிக்கனப்படுத்துவதன் மீது அரசாங்கம் அதிகளவு கவனத்தினைச் செலுத்துவது முக்கியமானதாகும். வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை மட்டங்களும் படுகடன் மட்டங்களும் உறுதியற்றதொரு மட்டத்தில் காணப்படுவது பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டின்மைக்கு வழிவகுத்து அதன் மூலம் வளர்ச்சிக்கு தடங்கலாக விளங்குமென்பதனால் உயர் வருமான நாடொன்று முன்னோக்கி நகர்வதற்கான முயற்சியில் இவ்வழிமுறைகள் முக்கியமானவையாகும். மேலும், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் சீர்திருத்தம் மற்றும் மீள்கட்டமைப்பின் முயற்சிகளை அரசாங்கம் வலுப்படுத்துவதும் அதன் மூலம் அவற்றின் நிதியியல் ஆற்றல் வாய்ந்த தன்மையினை அதிகரிப்பதும் மத்திய அரசாங்கத்தின் செலவினத்தினைக் குறைப்பதற்கு உதவுவதும் அவசியமாகவுள்ள அதேவேளையில் இறை அலுவல்களில் பெருமளவான ஒழுங்குகளைத் தூண்டவும் வேண்டும்.

பொருளாதார உறுதிப்பாட்டிற்கு அரசியல் உறுதிப்பாடு முற்தேவைப்பாடாக இருக்கும் என்பது பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. எனினும், நீண்ட காலப் பொருளாதார இலக்குகள் மீதான அரசியல் ரீதியான இணக்கப்பாடுகள் நீடித்துநிலைத்திருக்கும் வளர்ச்சிக்கு அதை விடவும் முக்கியமானதாகும். பொக்லோ மற்றும் சொஸ்டோப் (2011) மற்றும் சுவா (2011) போன்றவற்றில் குறிப்பிடப்பட்டதைப் போன்று பின்லாந்து மற்றும் சிங்கப்பூர் என்பனவற்றின் அனுபவங்கள், நீண்ட கால பொருளாதார முன்னுரிமைகள் மீதான சமூக மற்றும் பொருளாதார இணக்கப்பாடு பல ஆண்டுகளில் உறுதியான வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்பதனைக் காட்டுகிறது. இது அரசியல் ரீதியான ஆட்சிகள் மாறும் பொழுது பொருளாதார முன்னுரிமைகள் அடிக்கடி மாறுகின்றமை இலங்கைக்கு வரலாற்று ரீதியாகவே பலயீனமானதொரு விடயமாகும். எனவே, முன்னோக்கிப் பார்க்கையில் சமத்துவமானதும் நீடித்துநிலைத்திருக்கக்கூடியதுமான வளர்ச்சியுடன் நாடு உயர் வருமான மட்டத்தினை நோக்கி முன்னேற வேண்டுமாயின், நாட்டின் நீண்ட காலப் பொருளாதார இலக்குகள் தொடர்பில் ஒரு இணக்கப்பாட்டிற்கு வருவதனையும் இவ்விலக்குகளை அடைவதற்கு நிலையான கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்குக் கூட்டான கடப்பாடொன்றினை அரசியல் அதிகாரிகள் பின்பற்றுவதனையும் இலங்கை மக்கள் அழுத்தமாகக் கோருவது இன்றியமையாதது.

---

5 வியாபாரம் செய்யுங்கள் - 2020 உலக வங்கியின் 17ஆவது வருடாந்த ஆய்வாகும். இது 190 நாடுகளின் தரவுகளுடன் வியாபார ஒழுங்குவிதிகள் மற்றும் சொத்துரிமைப் பாதுகாப்பு போன்றவற்றின் கணியம்சார் குறிகாட்டிகளைப் பிரசன்னப்படுத்துகிறது. 2019 மே 1இல் உள்ளவாறு

## முடிவுரை

நம்பிக்கையூட்டுகின்ற தோற்றம்பெற்று வருகின்றதும் அபிவிருத்தியடைந்து வருகின்றதுமான பொருளாதாரமாகவும் 2009இல் இடம்பெற்ற சமாதானத்தின் விடியலுடன் 'ஆசியாவின் அதிசயம்' எனப் பிரபல்யமாகக் குறிப்பிடப்பட்டதுமான இலங்கை, கடந்த பல ஆண்டுகளாக, அது கடந்து வந்த கடினமான பயணங்களின் விளைவாக மோசமான பேரண்டப் பொருளாதாரச் செயலாற்றத்திற்கு, குறிப்பாக சராசரிக்கும் குறைவான வளர்ச்சி மற்றும் அதிகரித்துவரும் வெளிநாட்டு மற்றும் இறைத் துறைகளின் நியதிகளில் பாதிக்கப்படும் தன்மையினைக் கொண்டிருந்தது. உள்நாட்டின் நிச்சயமற்ற அரசியல் நிலைமை, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் மற்றும் அடிக்கடி ஏற்படும் இயற்கை அனர்த்தம் என்பனவற்றிற்கு மத்தியில் தேசிய பொருளாதாரக் கொள்கைகள் இல்லாமை, தேவையான அமைப்பியல் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதில் காணப்பட்ட தாமதம் மற்றும் போதுமான கொள்கை இடைவெளிகளைக் கட்டியெழுப்ப இயலாமல் போனமை என்பன இப்பிராந்தியத்தில் விரைவான பொருளாதார வளர்ச்சியைக் கொண்ட நாடு என்ற நிலையினை அடைவதற்கான ஊக்கத்தினை இழக்கச் செய்துவிட்டன. மேலும், உலகளாவிய ரீதியில் காணப்பட்ட நிச்சயமற்ற தன்மைகளும் உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கையில் குறிப்பிடத்தக்க சவால்களைத் தோற்றுவித்தன. இத்தகைய பின்னடைவுகளுக்கு மத்தியிலும் இலங்கை வறுமைக் குறைப்பு, மனித மூலதனத்தினை தரமுயர்த்தியமை, சிறந்த ஆளுகை ஊக்குவிக்கப்பட்டமை, ஆரோக்கியமான பன்னாட்டு இராசதந்திர முறைகள் பேணி வளர்க்கப்படாமை மற்றும் முக்கிய அபிவிருத்திப் பங்காளர்களுடன் பொருளாதார உறவுகளைப் பேணியமை மற்றும் ஒரு தசாப்தத்திற்கும் மேலாக பணவீக்கம் ஒற்றை இலக்கத்தில் பேணப்பட்டமை போன்ற இன்னும் பல நியதிகளில் இலங்கை நிலையான முன்னேற்றத்தினை அடையக்கூடியதாக இருந்திருக்கிறது. இக்காரணிகள் இலங்கையின் இயல்பான வலிமை, பொருத்தமான கொள்கைச் சீர்திருத்தங்கள், குறிப்பாக மேலே குறிப்பிடப்பட்ட குறைபாடுகளைக் கட்டுப்படுத்தல், என்பனவற்றுடன் சேர்ந்து இலங்கை மேலெழுச்சியடைவதற்கும் ஆசியாவின் பொருளாதார ஆச்சரியம் என்ற அதன் தோற்றப்பாட்டினை மீளநிலைநிறுத்திக் கொள்வதற்குமான மேடையினை நிருமாணித்துக் கொடுக்கும்.

## உசாத்துணைகள்


1. Agénor, P.R. (2017). "Caught in the Middle? The economics of Middle-income traps".*Journal of Economic Surveys,* 31(3), pp.771-791.
2. Agénor, P.R., Canuto, O. and Jelenic, M. (2012). "Avoiding middle-income growth traps". *Economic Premise, Poverty Reduction and Economic Management (PREM) Network Vice-Presidency of the World Bank.*
3. Aisen, A. and Veiga, F, J. (2011). "How Does Political Instability Affect Economic Growth". *IMF working paper*
4. Chua, B.H. (2011). "Singapore as model: Planning innovations, knowledge experts". *Worlding cities: Asian experiments and the art of being global*, 31, pp.29-54.
5. Delalibera, B.R. and Ferreira, P.C. (2019). "Early childhood education and economic growth". *Journal of Economic Dynamics and Control*, 98, pp.82-104.
6. Foxley, A. and Sossdorf, F. (2011). "Making the transition: from middle-income to advanced economies". *The Carnegie Papers.*
7. Lakshman, W.D. (ed.) (1997). "Dilemmas of development: fifty years of economic change in Sri Lanka". Colombo: *Sri Lanka Association of Economists.*
8. Nedelkoska, L., O'Brien T. and Stock, D. (2018). "Does the Sri Lankan economy need more university graduates?" *Center for International Development at Harvard University.*
9. United Nations Development Programme, (2019). *Human Development Report.*
10. World Bank Report. (2015). Sri Lanka Ending Poverty and Promoting Shared Prosperity, A Systematic Country Diagnostic, 100226.
11. World Social Protection Report 2017-19. (2017). International Labour Office, Geneva